# இலங்கை துறைமுக அதிகாரசபை



# ஆண்டறிக்கை

# 2013

## எமது தொலை நோக்கு

### "பட்டுப்பாதையின் கடல்சார் சேவை வழங்கலின் தலை சிறந்தவர் எனும் நிலையனை பெறுதல்"

இலங்கை துறைமுகங்களின் எதிர்கால யுகம் தொடர்பில் கவனித்துப் பார்க்கையில் வர்த்தக உருவாக்கம் எதிர்பாக்கப்பட்டு இலங்கை துறைமுக அதிகாரசபை அதன் உன்னத கொள்கலன் கேந்திரத்தளம் எனும் கருத்திலிருந்து விசேட உலக சேவை வழங்கலின் கேந்திரத் தளமாக நகர்த்திச் செல்லப்படுகின்றது. இலங்கையின் ஒட்டுமொத்த பொருளாதாரம் அபிவிருத்தி செய்யப்படுதலில் தேசிய மற்றும் சர்வதேச சிறந்த தேர்ச்சியினை மேலும் முன்னெடுத்துச் செல்வதுடன் சகல தகவலும் உடனுக்குடன் பெற்றுக்கொள்ளும் சிக்கலான வழங்கல் சேவை வலுப்படுத்தப்படுவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை எதிர்பார்க்கின்றது.

## எமது பணிக்கூற்று

### "உறுதியான சூழலினுள் சர்வதேச மட்டத்திலான கடல்சார் சேவைகளை வழங்குதல்"

இலங்கையில் உலக வினியோக கேந்திரத் துறைமுகம் உருவாக்கும் எண்ணம் வலியுறுத்தப்பட்டு விசேட கடலக பிரவேசம் கொண்ட ஆழமான கடல் துறைமுகமொன்று ஏற்படுத்தப்படுவதோடு வழங்கல் சேவைகளை ஒன்றிணைக்கும் பல்பரிமாண வழங்கல் தொகுதியொன்றினை ஏற்படுத்துவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை எதிர்பார்க்கின்றது. இக்கடல் துறைமுகமானது பாரியளவிலான கப்பல்கள் உட்புகக் கூடிய முறையின் விசேட முனையங்களைக் கொண்ட கையாளல்களின் இலகுவான இடமாக இருக்கும். துறைமுகத்தின் எதிர்கால வளர்ச்சி மற்றும் பிராந்திய அபிவிருத்தியில் கவனம் செலுத்தி நகர வரையறைகளிலிருந்து விடுபட்ட நவீன துறைமுகமொன்றின் மூலம் நீண்டகால பரிமாணம் உறுதிப்படுத்தலின் மூலம் உலக பிரபல்ய கைத்தொழில் மற்றும் வழங்கல் வலயம் உருவாக்கப்படுவதன் ஊடாக துறைமுக கடல்சார் கைத்தொழில் மற்றும் வழங்கல் தொகுதிகளின் பிரதான இயக்குநர்களைக் கொண்ட செயற்பாட்டு முறையொன்று ஏற்படுத்தப்படுவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. உன்னத தர நிலைகளை அனுசரித்து பொருளாதார ரீதியாக வினைத்திறன் மிகுந்த சிறந்த விரிவான அனுகூலங்கள் மேலும் உறுதிப்படுத்தப்படுதலின் மூலம் துறைமுக பாவனையாளர்கள் போன்று பங்காளர்களுக்கும் துறைமுக சேவைகள் வழங்குதல் உறுதி செய்யப்படும்.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| நோக்கங்கள் | 3 |
| நிறுவனத்தினூடான நோக்கங்கள் | 4 |
| இயக்க முக்கிய விடயங்கள் | 6 |
| நிதிசார் முக்கிய விடயங்கள் | 9 |
| எங்கள் அமைச்சர்கள் | 10 |
| தலைவரின் மீளாய்வு | 11 |
| பணிப்பாளர் சபை | 15 |
| முகாமைக் குழுவும் கணக்காய்வுக் குழுவும் | 20 |
| வர்த்தக அபிவிருத்தி | 22 |
| நிர்வாக தொழிற்பாடு | 23 |
| இயக்க மீளாய்வு | 27 |
| நிதி மீளாய்வு | 75 |
| ஒன்றிணைந்த சமூகப் பொறுப்புக்கள் | 79 |
| மனித மூலதனம் | 80 |
| ஒன்றிணைந்த நிர்வாக அறிக்கை | 82 |
| துறைமுக புள்ளி விபரங்கள் | 87 |
| முக்கிய நிகழ்வுகள் | 92 |
| நிதி அறிக்கைகள் | 97 |
| பணிப்பாளர் சபையின் அறிக்கை | 98 |
| நிதி அறிக்கை வெளியிடல் தொடர்பான பணிப்பாளர் சபையின் அறிக்கை | 100 |
| கணக்காய்வுக் குழுவின் அறிக்கை | 101 |
| சட்டபூர்வ இணக்கப்பாட்டு அறிக்கை | 102 |
| இயக்க முக்கிய விடயங்கள் | 103 |
| நிதி நிலைமை தொடர்பான அறிக்கை | 104 |
| விபரமான வருமான அறிக்கை | 105 |
| திணிவு மாற்றம் மீதான அறிக்கை | 106 |
| காசுப் பாய்ச்சல் அறிக்கை | 107 |
| நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள் | 108 |
| வரைபட மீளாய்வு | 141 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 144 |
| அமைப்பு விதி தொடர்பான தகவல்கள் | 163 |

## நோக்கங்கள்

**2020 இல்**

1. தலைசிறந்த கடல்சார் சேவைகள் வழங்கும் மத்திய நிலையம்.
2. 200 மில்லியன் தொன் கப்பற்சரக்குகளைக் கையாளல்.
3. அமெரிக்க டொலர் 01 பில்லியன் வருமானம்.
4. துறைமுகங்களினுள் அமெரிக் டொலர் 10 பில்லியனுக்கான முதலீடுகள்.
5. தேசிய வருமானத்தின் பிரதான பங்காளியாகுதல்.
6. பசுமை மிகு சூழல் நேய துறைமுக இயக்குனராகுதல்.

## அடைந்து கொள்ளலிலான மூலோபாயங்கள்

1. கொழும்பு துறைமுகத்தின் உட்கட்டமைப்பு மற்றும் சிறப்பு அமைப்புகளினது வசதிகளை அபிவிருத்தி செய்தல்.
2. கடல்சார் சிறப்பு மத்திய நிலையமெனும் கொழும்புத் துறைமுகத்தின் நிலைபாட்டினை உறுதிப்படுத்துதல்.
3. குறித்த பிரிவுசார்ந்த விசேட சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.
4. மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தை சர்வதேச நிலையிலான சேவைகள், கைத்தொழில் மற்றும் கொள்கலன் கையாளல் துறைமுகமாக அபிவிருத்தி செய்தல்.
5. கப்பற்சரக்குகள் போன்று துறைமுக பாவனையாளர்களின் ஆபத்தின்மை மற்றும் பாதுகாப்பு பலப்படுத்தப்படுதல்.
6. முக்கிய மூலோபாய அமைவிடமாக உலகில் பிரபல்யம் பெறுதல்.
7. திட்டமிடப்பட்ட மீளமைப்பு மற்றும் நிருவாக நடைமுறைகளை மீள் திட்டமிடுதல்.
8. உயர் நிலையிலான நிதி முகாமைத் தொகுதிகளை நடைமுறைப்படுத்துதல்.
9. காபன் பரிமாணம் குறைக்கப்படுதல்.
10. கொண்டுள்ள வளம் மற்றும் போட்டி மிகுந்த பயன்தகு நிலைமைகளுக்கேற்ப ஏனைய பிராந்திய துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல்.
11. வர்த்தக நடவடிக்கைகளை பன்முகப்படுத்துதல்.
12. எண்ணெய் மற்றும் வாயு வசதிகளுக்கான ஏற்பாடுகள்.
13. கப்பலோட்டம் நோக்கமாகக் கொண்ட செயற்றிறன் மிகு சேவைகள்.
14. கூட்டிணைந்த சமூகப் பொறுப்புக்கள்.

- இலங்கையின் வர்த்தக துறைமுகங்களில் உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய உபகரணங்களினாலான இயக்க வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லப்படுதல்.

- உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறனுடன் துறைமுக சேவைகளைப் பேணுதல்.

- ஆகுசெலவு பயனளிக்கக் கூடிய வினைத்திறனுடன் நம்பிக்கை மிகு சேவைகள் வழங்குவதன் மூலம் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியாளர்களுக்கு போட்டித்தன்மையூடான மிகவும் சிறந்த நற்பயன்களை பெற்றுக்கொடுத்தல்.

- கப்பல்கள், கப்பல் சரக்குகள், துறைமுக பாவனையாளர்கள் போன்று துறைமுக உட்கட்டமைப்பு வசதிகளின் ஆபத்தின்மையையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துதல்.

- துறைமுக வர்த்தக நடவடிக்கைகளுடன் தொடர்புடைய பங்காளர்கள் அனைவருக்கும் உற்சாகமூட்டும் சிறந்த சூழலை உருவாக்குதல்.

- அரசாங்கத்தின் நடைமுறை மற்றும் மூலதன செலவினங்கள் தொடர்பில் பொது திறைசேரியின் ஒன்றிணைந்த நிதியத்துக்கு பங்களிப்பு செய்தல்.

- கப்பல்களை தாமதப்படுத்தாது மாற்றியேற்றல் மற்றும் தரையிறக்கல் நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொண்டு, உயர் வினைத்திறன் பேணல்.

- அதிகளவிலான தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் பொருட்டு கடல்சார் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய துணைச் சேவைகளை மேம்படுத்துதல்.

- துறைமுக பாவனையாளர்களுக்கு உயர் சேவைகளை வழங்கி வர்த்தக துறைமுகங்களில் இலாபகரமான இயக்கச் செயற்பாட்டு முறையை முன்னெடுத்துச் செல்லுதல் இதனூடாக நம்பிக்கைமிகு வினைத்திறனுடன் கூடிய இயக்குனர் என்ற நற்பெயரை வளர்த்துக் கொள்தல்.

- துறைமுக வர்த்தகம் மற்றும் சுங்கப் பிணை நடவடிக்கைகள் உட்பட மீள் கப்பல் ஏற்றும் சந்தர்ப்பங்களை மேலும் அதிகரித்துக் கொள்ளும் பொருட்டு கொள்கலன் கையாளுதல் தொடர்பிலான போட்டித்தன்மையுடன் கூடிய உயர் சேவைகளை வழங்குதல்.

- இலங்கையின் பிரதேச அபிவிருத்திப் பங்களிப்பின் உந்து சக்தியாக தேவைப்படும் துறைமுக வசதிகளை கடலை அண்மித்த பிரதேசங்களில் ஏற்படுத்துவதன் ஊடாக இலங்கையின் பிராந்திய அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

- மனித வலு தேவைப்பாடுகளை மதிப்பிடுதல் ,ஆளணி மீளாய்வு உட்பட இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிர்வாக மற்றும் அமைப்பு ரீதியான விடயங்களை உயர் நிலைக்கு கொண்டு வருதல், சம்பளமற்ற விடுமுறையில் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளில் பணிபுரியும் ஊழியர்கள் தேசிய பொருளாதாரத்திற்கு பெற்றுக் கொடுக்கும் பங்களிப்பை கவனத்திற் கொண்டு சம்பளமற்ற விடுமுறையில் வெளிநாட்டு வேலைகளில் ஈடுபடுவதற்கு ஊழியர்களை ஊக்குவித்தல் இதனால் எழும் பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்களின் தட்டுப்பாடு பூர்த்தி செய்யப்படுவதற்கு மஹபொல பயிற்சி நிலையம் மேலதிக பயிற்சிகளையும், மீள் பயிற்சியளித்தலையும் மேற்கொள்ளல்.

- நீரில் மேற்கொள்ளப்படும் சேவைகள், எண்ணெய் பாய்ச்சும் நடவடிக்கைகள், நன்னீர் வழங்குதல் மற்றும் கொள்கலன் புதுப்பித்தல் போன்ற துறைமுக செயற்பாடுகளுடன் தொடர்புடைய பணிகளை வழங்குவதன் ஊடாக பன்முகப்படுத்துதல்.

- வினைத்திறன் மிகு வரி, சிறப்பான நிறுவக முதலீட்டு முகாமைத்துவம் மற்றும் உறுதியான மூலோபாய ஆகுசெலவின் கட்டுப்பாடு போன்றவற்றுடனான முகாமைத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட நிதி சீர்திருத்த செயற்பாட்டினை நடைமுறைப்படுத்துதல்.

**வருகை தந்த கப்பல்களின் எண்ணிக்கை (சகல துறைமுகங்களினதும்)**

| விபரம் | 2012 | 2013 | வித்தியாசம்(%) |
|---|---|---|---|
| கொழும்பு துறைமுகம் | 3,870 | 3,667 | -5.2 |
| திருகோணமலை துறைமுகம் | 161 | 134 | -16.8 |
| காலி துறைமுகம் | 69 | 36 | -47.8 |
| காங்கேசன்துறை,மயிலிட்டி, பருத்தித்துறை, காரைநகர் | 44 | 48 | 9.1 |
| மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம் | 34 | 139 | 308.8 |
| **மொத்தம்** | **4,178** | **4,024** | **-3.7** |

**கொள்கலன் கையாளல் (இருபது சம அலகுகள்) கொழும்பு துறைமுகம்**

| விபரம் | 2012 | 2013 | வித்தியாசம்(%) |
|---|---|---|---|
| **இலங்கை துறைமுக அதிகாரசபை (SLPA)** | | | |
| இறக்குமதி | 324,509 | 337,357 | 4.0 |
| ஏற்றுமதி | 340,782 | 339,580 | -0.4 |
| மாற்றியேற்றல் | 1,584,985 | 1,779,882 | 12.3 |
| மீள் அடுக்குதல் | 66,573 | 45,044 | -32.3 |
| **மொத்தம்** | **2,316,849** | **2,501,863** | **8.0** |
| **சவுத் ஏசியா கேட்வே ரேர்மினல்ஸ் (SAGT)** | | | |
| இறக்குமதி | 183,537 | 171,552 | -6.5 |
| ஏற்றுமதி | 171,427 | 169,958 | -0.9 |
| மாற்றியேற்றல் | 1,479,782 | 1,385,552 | -6.4 |
| மீள் அடுக்குதல் | 35,525 | 19,740 | -44.4 |
| **மொத்தம்** | **1,870,271** | **1,746,802** | **-6.6** |
| **கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையம் (CICT)** | | | |
| இறக்குமதி | 0 | 7,193 | - |
| ஏற்றுமதி | 0 | 6,337 | - |
| மாற்றியேற்றல் | 0 | 42,683 | - |
| மீள் அடுக்குதல் | 0 | 1,328 | - |
| **மொத்தம்** | **0** | **57,541** | **-** |
| **கொழும்பு துறைமுகம்** | | | |
| இறக்குமதி | 508,046 | 516,102 | 1.6 |
| ஏற்றுமதி | 512,209 | 515,875 | 0.7 |
| மாற்றியேற்றல் | 3,064,767 | 3,208,117 | 4.7 |
| மீள் அடுக்குதல் | 102,098 | 66,112 | -35.2 |
| **மொத்தம்** | **4,187,120** | **4,306,206** | **2.8** |

**கப்பற் சரக்கு கையாளல் (சகல துறைமுகங்களினதும்)**

| விபரம் | 2012 | 2013 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| மொத்த கப்பற் சரக்குகள் கையாளல் (மெற்றிக் தொன் மில்லியன்) | 65.0 | 66.3 | 2.0 |

**கொழும்புத் துறைமுகத்தில் இறக்கப்பட்ட கப்பற் சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)**

| விபரம் | 2012 | 2013 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| கொள்கலனிலிடப்பட்டவை | 15,460 | 16,787 | 8.6 |
| பிரித்த மொத்தம் | 608 | 354 | -41.8 |
| உலர் மொத்தம் | 2,709 | 2,657 | -1.9 |
| திரவ மொத்தம் | 4,835 | 4,084 | -15.5 |
| **மொத்தம்** | **23,612** | **23,882** | **1.1** |

**கொழும்புத் துறைமுகத்தில் ஏற்றப்பட்ட கப்பற் சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)**

| விபரம் | 2012 | 2013 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| கொள்கலனிலிடப்பட்டவை | 13,242 | 15,113 | 14.1 |
| பிரித்த மொத்தம் | 10 | 10 | 0.0 |
| உலர் மொத்தம் | 0 | 0 | - |
| திரவ மொத்தம் | 3 | 181 | 5,933.3 |
| **மொத்தம்** | **13,255** | **15,304** | **15.5** |

**கொழும்புத் துறைமுகத்தில் கையாளப்பட்ட மொத்த கப்பற் சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)**

| விபரம் | 2012 | 2013 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| கொள்கலனிலிடப்பட்டவை | 28,702 | 31,900 | 11.1 |
| பிரித்த மொத்தம் | 618 | 364 | -41.1 |
| உலர் மொத்தம் | 2,709 | 2,657 | -1.9 |
| திரவ மொத்தம் | 4,838 | 4,265 | -11.8 |
| **மொத்தம்** | **36,867** | **39,186** | **6.3** |

**திருகோணமலை துறைமுகத்தில் கையாளப்பட்ட மொத்த கப்பற் சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)**

| விபரம் | 2012 | 2013 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| **இறக்கப்பட்டது** | 2,646 | 2,276 | -14.0 |
| **ஏற்றப்பட்டது** | 213 | 159 | -25.4 |
| **மொத்தம்** | **2,859** | **2,435** | **-14.8** |

காலி துறைமுகத்தில் கையாளப்பட்ட மொத்த கப்பற் சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)

| விபரம் | 2012 | 2013 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| இறக்கப்பட்டது | 422 | 200 | -52.6 |
| ஏற்றப்பட்டது | 0 | 7 | - |
| மொத்தம் | **422** | **207** | **-50.9** |

காங்கேசன்துறை, மயிலிட்டி , பருத்தித்துறை மற்றும் காரைநகர் துறைமுகங்களில் கையாளப்பட்ட மொத்த கப்பற் சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)

| விபரம் | 2012 | 2013 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| இறக்கப்பட்டது | 60 | 49 | -18.3 |
| ஏற்றப்பட்டது | 0 | 0 | - |
| மொத்தம் | **60** | **49** | **-18.3** |

மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தில் கையாளப்பட்ட மொத்த கப்பற் சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)

| விபரம் | 2012 | 2013 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| இறக்கப்பட்டது | 17 | 90 | 429.4 |
| ஏற்றப்பட்டது | 3 | 29 | 866.7 |
| மொத்தம் | **20** | **119** | **495.0** |

மொத்த ஊழியர் தொகை

| விபரம் | 2012 | 2013 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| கொழும்புத் துறைமுகம் | 9,373 | 8,988 | -4.1 |
| திருகோணமலைத் துறைமுகம் | 436 | 426 | -2.3 |
| காலி துறைமுகம் | 391 | 378 | -3.3 |
| மொத்தம் | **10,200** | **9,792** | **-4.0** |

**சகல துறைமுகங்களும்**

(ரூபா மில்லியன்)

| விபரம் | 2012 மீள் - குறி.பட்ட | 2013 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| **வருமானம் மற்றும் செலவினம்** | | | |
| மொத்த வருமானம் | 36,408.5 | 36,177.7 | (0.6) |
| மொத்த செலவினம் (அந்நிய செலாவனி இலாபம் / (நட்டம்) மற்றும் வெளிநாட்டு கடன் மீதான வட்டிக்கு முன்னர்) | (26,610.3) | (28,166.7) | (5.8) |
| **அந்நிய செலாவனி இலாபம் / (நட்டம்) மற்றும் வெளிநாட்டு கடன் மீதான வட்டிக்கு முன்னரான இலாபம் / (நட்டம்)** | **9,798.2** | **8,011.0** | **(18.2)** |
| வெளிநாட்டுக் கடன் மீதான வட்டி | (1,709.7) | (3,921.4) | (129.4) |
| அந்நிய செலாவணி இலாபம் / (நட்டம்) | (4,566.9) | (2,517.5) | 44.9 |
| **வரிக்கு முன்னதாக மற்றும் அந்நிய செலாவனி** இலாபம் / (நட்டத்துக்கு பின்னரான இலாபம் / (நட்டம்) | **3,521.7** | **1,572.0** | **(55.4)** |
| **வரிகள்** | | | |
| வருமான வரி | (1,124.7) | 1,197.0 | (206.4) |
| கருதும் பங்கிலாப வரி | (0.6) | (0.8) | (37.2) |
| **தேறிய இலாபம் / (நட்டம்) வரிகளுக்கான ஏற்பாடுகளுக்குப் பின்** | **2,396.3** | **2,768.16** | **15.5** |
| **ஐந்தொகை** | | | |
| ஒப்புரவு மற்றும் ஏனைய மூலதனம் | 7,591.4 | 7,591.4 | (0.0) |
| ஒதுக்கீடுகள் மற்றும் ஏற்பாடுகள் | 70,252.8 | 72,488.1 | 3.2 |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | 214,264.5 | 248,628.1 | 16.0 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 35,218.3 | 51,118.6 | 45.1 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 15,644.2 | 20,396.0 | (30.4) |
| நடைமுறையற்ற பொறுப்புக்கள் | 155,994.3 | 199,270.5 | (27.7) |
| **விகிதாசாரங்கள்** | | | |
| வருமானத்திற்கான இயக்க இலாபம் | 11.4 | 12.5 | |
| வருடாந்த வருமான வளர்ச்சி | 17.1 | (0.6) | |
| மூலதன முதலீடுகளின் வருமானம் | 5.3 | 5.7 | |

**அதிமேதகு மஹிந்த ராஜபக்ஷ**
**இலங்கை ஜனாதிபதி**
**மற்றும்**
**நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர்**

**கௌரவ ரோஹித்த அபேகுணவர்தன**
**நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை கருத்திட்ட அமைச்சர்**

**கௌரவ நிர்மல கொத்தலாவல**
**நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை கருத்திட்ட அமைச்சர்**

இயக்கம், நிதி, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனிதவள அபிவிருத்தி போன்ற துறைகளில் குறிப்பிடத்தக்க செயலாற்றுகை நிலைமை அடையப் பெற்றதன் காரணமாக, 2013 ஆம் வருடம் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு அதி உன்னத வெற்றிகள் அடையப்பெற்ற வருடமென்பதை பெருமையுடன் குறிப்பிட விரும்புகின்றேன். ஒன்றிணைந்த திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு வளங்கள் உச்ச நிலையில் பயன்படுத்தப்படுவதற்கும் பரிமாணம் விரிவாக்கப்படுதலுடன் தொடர்புபடும் குறுகியகால, இடைக்கால மற்றும் நீண்டகால அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்படுவதற்கு இந்த ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2020 இன் இலங்கை துறைமுக அதிகாரசபையின் வர்த்தக இலக்குகளை அடைந்து கொள்வதற்கு மீளாய்வுக்குட்படும் ஆண்டினுள் மிகவும் அர்ப்பணிப்புடனும் பொறுப்புடனோடும் புதிய படைப்புக்கள் எமக்கு உருவாக்கக் கூடியதாக இருந்தன. எமது நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு "2020 முன்னோக்கு" எனும் ஒன்றிணைந்த ஏழு வருடத் திட்டம் எம்மால் 2013 ஆண்டில் செயற்படுத்தப்பட்டது.

- தலைசிறந்த கடல்சார் சேவைகள் வழங்கும் மத்திய நிலையம்.
- 200 மில்லியன் தொன் கப்பற்சரக்குகளைக் கையாளல்.
- அமெரிக்க டொலர் 01 பில்லியன் வருமானம்.
- துறைமுகங்களினுள் அமெரிக் டொலர் 10 பில்லியனுக்கான முதலீடுகள்.
- தேசிய வருமானத்தின் பிரதான பங்காளியாகுதல்.
- பசுமை மிகு சூழல் நேய துறைமுக இயக்குனராகுதல்.

"மஹிந்த சிந்தனை - முன்னோக்கு" தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்டுள்ளவாறு வலயத்தினுள் கடல்சார் மற்றும் சேவைகள் வழங்கும் மத்திய நிலையமாக இலங்கை மாற்றப்படுவதற்கான உச்ச பங்களிப்பினை வழங்குவதற்கு நிறுவனத்தினுள்ளான தரத்தினைப் பேணும் கலாசாரமொன்றினை ஏற்படுத்த முடிந்துள்ளது. இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஒட்டுமொத்த செயலாற்றுகைக்கு நிரந்தர தொகுதிகள், மூலோபாயங்கள் மற்றும் விசேட தலைமைத்துவம் காரணமாகியதென்பதனை நான் மிகவும் மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகின்றேன்

## செயலாற்றுகை

இலங்கை துறைமுக அதிகாரசபையின் இயக்க செயற்றிறன் உயர் நிலைக்கு கொண்டுவர இவ்வாண்டினுள் முடிந்துள்ளது.சேவைகளின் தரம் ,செயலாற்றுகை, தரக் கட்டுப்பாடுகள் தயாரிக்கப்பட்டதன் மூலம் திறனாகவும், சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தப்படுவதற்கும், சேவைகளின் நிலைமைகள் உயர்த்தப்படுவதற்குமான பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எமது வாடிக்கையாளர்களுக்கு உயர் நிலையிலான சேவைகள் வழங்குவதற்காக அவர்களுடன் மிகவும் நெருக்கமாக பணியாற்றப்படுவதோடு அதனால் பிரதான கப்பல்கள் மற்றும் ஊட்டக் கப்பல் சேவைகள் எமது துறைமுகம் நோக்கி கவரப்பட முடிந்துள்ளது. 2013 ஆண்டினுள் முனைய சேவை ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டதோடு அனைத்து பங்காளர்களினதும் நலன்கள் தொடர்பில் தகுந்த காலங்களில் சரியான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை இங்கு தென்படுகின்றது. வாடிக்கையாளர்களோடு சிறந்த தொடர்பினைப் பேணுவதற்கு இயக்கம், பொறியியல், கப்பலோட்டம் போன்ற செயற்பாட்டுப் பகுதிகள் ஒருமுனைப்படுத்துவதற்கான நேரடித் திட்டம் ஆரம்பிக்கப்படுதல் வளங்கள் பயனான வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளமையினை தெளிவாக்குகின்றது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் 2013 ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் முகாமைத்துவம் செய்யப்பட்ட மொத்த கையாளல் பரிமாணத்தில் 8.0% வளர்ச்சி பதிவாகியுள்ளது. 2012 ஆண்டில் கையாளப்பட்டுள்ள பரிமாணத்துடன் ஒப்பிடப்படுகையில் முறையே 10.5% மற்றும் 2.8% வளர்ச்சியோடு 2013 ஆண்டில் மீள் ஏற்றுமதி கொள்கலன் பரிமாணம்

(மீள் அடுக்குதல் அடங்கலாக) 1,824,926 இருபது சம அலகுகளும் உள்நாட்டு கொள்கலன் பரிமாணம் 676,937 இருபது சம அலகுகளும் கையாளப்பட்டுள்ளன. இலங்கை துறைமுக அதிகாரசபையினால் முகாமைத்துவம் செய்யப்பட்ட கொள்கலன் முனையங்களில் 2,501,863 இருபது சம அலகுகளின் கையாளல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவானது கொழும்பு துறைமுகத்தினால் கையாளப்பட்ட ஒட்டுமொத்த கொள்கலன் பரிமாணத்தில் 58.1% ஆகும். இது 2012 ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் 2.8% வளர்ச்சி தென்படுகின்றது.

## நிதி

உயர் நிதி முகாமைத்துவ தொகுதியொன்று அறிமுகப்படுத்தப்பட்டதன் ஊடாக செலவினக் கட்டுப்பாடு,செயற்றிறன் மற்றும் நம்பகத்தன்மை வாய்ந்த பாவனையாளர் சேவைகள் பேணிச் செல்வதற்கு உறுதி செய்யப்பட்டுள்ளது. வணிகத் துறைமுகங்களினுள் இலாபகரமான கையாளல்கள் உறுதி செய்யப்பட்டு 2013 ஆண்டிலும் மேற்கொண்டு செயற்றிறன் மற்றும் பயன்மிகுந்த பாவனையாளர் சேவைகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டன 2013 ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருமானம் 36.4 பில்லியன் ரூபாவிலிருந்து 0.6% வரை வீழ்ச்சியடைந்துள்ளது. எமது எதிர்கால முன்னேற்ற நோக்கங்கள் அடைந்து கொள்கையின் நல்லாட்சிக்கான சட்ட திட்டங்கள், அடிப்படை கோட்பாடுகள் மற்றும் சிறந்த செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவதற்காக வலுமிக்க அடித்தளம் அமைக்கப்பட்டதன் மூலம் அநேக உட்கட்டமைப்புகளின் அபிவிருத்திகளுக்கான முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

ஊழியர்களை ஊக்குவிக்கும் நிறுவனம்சார் முறையொன்றை அறிமுகப்படுத்தப்பட வேண்டியதன் தேவைப்பாட்டை இலங்கை துறைமுக அதிகாரசபை உணர்ந்துள்ளது. வெளிப்படையான தொடர்பாடல் ஊடகம் வாயிலாக புதிய படைப்புகள் மற்றும் புதிய கருத்துக்களை விருத்தி செய்து கொள்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது. ஊழியர்களின் அர்ப்பணிப்பு வர்த்தக நியமங்ளைப் பின்பற்றுதல் மற்றும் துறைமுக பணிகளில் உயர் உற்பத்தித்திறனைப் பேணுவதில் அர்ப்பணிப்பின் தேவைப்பாடும்இனம் காணப்பட்டுள்ளது. அலுவலர்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் அடங்கலாக ஊழியர்கள் தேவைப்படும் செயற்றிறன் மற்றும் உற்பத்தித்திறன் அடைந்து கொள்வதற்காக முகாமைத்துவத்துடன் குழு உணர்வோடு செயலாற்றப்பட்டன. நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் வர்த்தக முறைகளைப் பயன்படுத்தப்படக்கூடிய பல்தேர்ச்சி வாய்ந்த உயர் தொழில்நுட்ப அறிவு கொண்ட ஊழியர்களின் 12தேர்ச்சி விருத்தி செய்யும் பணிகள் 2013 ஆண்டிலும் பேணிச் செல்லப்பட்டன இலங்கை துறைமுக அதிகாரசபையினதும் அதன் வாடிக்கையாளர்களினதும் நலன் கருதி உயர் பெறுபேறுகளை அடையும் பொருட்டு ஊழியர்களுக்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டு அவர்களை வழிநடத்திச் செல்லவும் முடிந்தது.

## உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்

இலங்கையை மூலோபாய கடல்சார் மைய நிலையமாக அபிவிருத்தி செய்யும் நோக்கத்தினை அடைந்து கொள்ளும் பொருட்டு இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு முக்கிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே மீளாய்வுக்குட்படும் ஆண்டினுள் அனைத்து கடல் துறைமுகங்களினதும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படுவதற்கான தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கொழும்புத் துறைமுக விரிவாக்கல் திட்டத்தின் கீழ் 2013 ஆண்டு ஆகஸ்ட் மாதம் தென் கொள்கலன் முனையத்தின் முதலாவது நங்கூரத்தளத்தின் கையாளல் மேற்கொள்ளப்பட்டது.

இந்த புதிய முனையத்தில் TRIPLE E வகையின் கப்பல்களுக்கான சேவைகள் வழங்கும் ஆற்றல் உண்டு. அரசாங்க மற்றும் தனியார் பங்குரிமை அடிப்படையின் மீது கொள்கலன் முனையத்தின் ஏனைய நங்கூரத்தளங்களின் நிர்மாண நடவடிக்கைகள் ஆண்டினுள் நடைபெற்றன. தென் துறைமுக செய் திட்டத்தின் 6.8 கி. மீட்டர் நீளமான முழு அலைதாங்கியும் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்டது.

1200 மீட்டர் நீளம் மற்றும் 18 மீட்டர் ஆழமான மேடைச் சுவர் கொண்ட கிழக்கு கொள்கலன் முனையத்தின் நிர்மாண நடவடிக்கைகள் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு 2014 ஆண்டின் இரண்டாம் பகுதியினுள் முதலாவது நங்கூரத்தளத்தின் கையாளல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கான முதலாவது கட்டத்தின் நிர்மாணப் பணிகள் வருடம் பூராகவும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.

துறைமுக உள்ளக பாதைகளின் விரிவாக்கல் தொடர்பான பணிகளில் 70% முடிவுபெற்றுள்ளதோடு அதில் கொழும்பு துறைமுகத்தினுள் பாதைகளின் நெரிசல்களின்றி வாகனங்களுக்கு இலகுவாகவும் விரைவாகவும் செல்வதற்கு 06 வழிகளுடனான பாதையின் நிர்மாணம் முடிவடைந்துள்ளது.

எண்ணெய்த் தாங்கிகளின் திறனான எண்ணெய்ப் பரிமாற்றம் பேணிச் செல்லப்படுவதற்காக துறைமுகத்திலிருந்து புளுமெண்டலில் அமைந்திருக்கும் எண்ணெய்க் களஞ்சியத் தொகுதி வரையிலான புதிய குழாய் வழி பதிக்கும் பணிகளில் 80% நிறைவு பெற்றுள்ளது.

துறைமுக பாவனையாளர்களின் இறக்குமதி ஏற்றுமதி நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக பேலியகொடையில் கப்பற்சரக்கு கிராமம் அமைக்கப்படுதலின் பூர்வாங்க வேலைகளும் நடைபெற்றன.

எந்தவொரு வகையிலான கொள்கலன் கையாளல் மேற்கொள்வதற்கான வசதிகள் வழங்கப்படுவதற்கும் நவீன துறைமுகங்களினுள் பிரதான நிலையின் கடல் துறைமுகமொன்றாக முதலீட்டாளர்களின் கேள்விகள் நிறைவேற்றப்படும் நோக்கில் ஹம்பாந்தோட்டை மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தின் இரண்டாம் கட்டத்தின் நிர்மாணப் பணிகள் 2013 ஆண்டில் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லப்பட்டன. மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுக வசதிகளின் பயன்பாட்டில் வர்த்தகங்கள் நிறுவப்படுவதற்கான பல உடன்பாடுகள் ஏற்படுத்தப்பட்டன.

நிதிச் சட்டத்தின் கீழ் கொழும்பு மற்றும் மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகங்கள் சுதந்திர துறைமுகங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதோடு துறைமுக பாவனையாளர்களுக்கு பல்வேறு நலன்கள் வழங்கி துறைமுகத்தினுள் குறிப்பிட்ட சில அடையாளம் காணப்பட்ட விசேட வரத்தக நடவடிக்கைகள் இந்த துறைமுகங்களினுள் மேற்கொள்வதற்கான அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

துறைமுக நகரமானது “கொழும்பை சுவர்க்க புரியாக” நிர்மாணிக்கும் பூர்வாங்க வேலைகள் அதாவது நீர்ப்பிரதேசம் நிரப்புதல் போன்றவை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்துக்கு அண்மித்ததாக உல்லாசப் படகுகளுக்கான வசதிகளும் பயணிகள் கப்பல்களுக்கான முனைய வசதிகளும் கொண்டதாக “லோட்டஸ் தீவு” அபிவிருத்தி செய்யும் பணிகளும் இலங்கை துறைமுக அதிகார சபையினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன

## மனிதவள அபிவிருத்தி

ஊழியர்ளை ஊக்குவிக்கும் நிறுவனம்சார் முறையொன்றை அறிமுகப்படுத்தப்பட வேண்டியதன் தேவைப்பாட்டை இலங்கை துறைமுக அதிகாரசபை உணர்ந்துள்ளது. வெளிப்படையான தொடர்பாடல் ஊடகம் வாயிலாக புதிய படைப்புகள் மற்றும் புதிய கருத்துக்களை விருத்தி செய்து கொள்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. ஊழியர்களின் அர்ப்பணிப்பு வர்த்தக நியமங்களைப் பின்பற்றுதல் மற்றும் துறைமுக பணிகளில் உயர் உற்பத்தித்திறனைப் 13பேணுவதில் அர்ப்பணிப்பின் தேவைப்பாடும் இனம் காணப்பட்டுள்ளது. அலுவலர்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் அடங்கலாக ஊழியர்கள் 13தேவைப்படும் செயற்திறன் மற்றும் உற்பத்தித்திறன் அடைந்து கொள்வதற்காக முகாமைத்துவத்துடன் குழு உணர்வோடு செயலாற்றப்பட்டன. நவீன

தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் வர்த்தக முறைகளைப் பயன்படுத்தக் கூடிய பல்தேர்ச்சி வாய்ந்த உயர் தொழில்நுட்ப அறிவு கொண்ட ஊழியர்களின் தேர்ச்சி விருத்தி செய்யும் பணிகள் 2013 ஆண்டிலும் பேணிச் செல்லப்பட்டன. இலங்கை துறைமுக அதிகாரசபையினதும் அதன் வாடிக்கயாளர்களினதும் நலன் கருதி உயர் பெறுபேறுகளை அடையும் பொருட்டு ஊழியர்களுக்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டு அவர்களை வழி நடாத்திச் செல்லவும் முடிந்தது.

**முடிவு**

துறைமுக அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் இருக்கும் வசதிகள் செயற்படுத்தப்படுகையின் அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் வழங்கப்பட்ட உன்னத ஆலோசனைகள் இல்லாதிருப்பின் இந்த அனைத்து விசேட வெற்றிகளையும் அடைய முடியாது போயிருக்கும். அவர்கள் வழங்கிய ஒத்துழைப்பு மற்றும் வழிகாட்டல் தொடர்பில் எனது மனமார்ந்த நன்றியினை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். மேலும் 2013 ஆண்டினை வெற்றிகொள்வதற்கு முன் வந்து அறிவுறுத்தல்களை வழங்கிய நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை கௌரவ கருத்திட்ட அமைச்சருக்கும், அமைச்சின் செயலாளருக்கும் ,எனது அலுவலர்களுக்கும், ஊழியர் குழாமிற்கும், தொழிற்சங்கங்களுக்கும் எமது பெறுமதியான வாடிக்கையாளர்களுக்கும் ஏனைய சகல துறைமுக நடவடிக்கைகளுடன் தொடர்புடையோருக்கும் எனது நன்றியினை தெரிவித்துச் கொள்கின்றேன்.

முடிவாக தலைமைத்துவம், குழு/அமைப்புகளினது இலக்குகளை அதன் நோக்கு மற்றும் பணிக்கூற்று அடையப் பெறுதலில் முக்கிய பங்கினை வகிக்கின்றதென்பதை நான் நம்மபுகின்றேன்.



**கலாநிதி பிரியத் பீ விக்ரம**
**தலைவர்**

**கலாநிதி பிரியத் பீ விக்ரம**
**தலைவர்**

**பீஎச்டி(ஐ.இ), பட்டப் பின்படிப்பு (டிப்ளோமா), பொறியியல் பீ.எஸ்.சீ. (சிறப்பு), பட்டயம் பெற்ற பொறியியலாளர், இலங்கை பொறியியலாளர்கள் நிறுவன அங்கத்தவர்**

கலாநிதி பிரியத் பீ விக்ரம 2008 ஆண்டிலிருந்து இலங்கை துறைமுக அதிகாரசபையின் தலைவராக கடமையாற்றி வருகின்றார். இலங்கையில் கடல் துறைமுகங்கள் அபிவிருத்தி செய்தல், பராமரித்தல், இயக்கம் மேற்கொள்ளல் மற்றும் துறைமுகங்கள் சம்பந்தப்பட்ட சேவைகள் வழங்கப்படும் நோக்கில் 1979 இன் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் இலங்கை துறைமுக அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவர் என்ற வகையில் இலங்கையின் கடல் துறைமுகங்களை நிருவகிக்கும் பொறுப்பு இவரிடம் வழங்கப்பட்டுள்ளதோடு பிரதான கடல் சார் தேசியமாக இலங்கையின் தோற்றம் மேம்படுத்தப்படுகையின் போது ஒவ்வொரு துறைமுகமும் தன்நிறைவு பெற்ற வர்த்தகங்களாகவும் நிறுவனத்தின் வர்த்தக நடவடிக்கைகள் முன்னெடுத்து செல்வதனை உறுதிப்படுத்துவதும் இவரின் பொறுப்பாகும்.

கலாநிதி விக்ரம மொறட்டுவ பல்கலைக்கழத்தில் இயந்திரவியல் தொடர்பில் சிறப்புப் பட்டம் பெற்றுள்ளார். ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச அமெரிக்க பல்கலைக்கழகத்தினால் இயக்க முகாமைத்துவம் தொடர்பிலான கலாநிதிப்பட்டம் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவராக இந்நாட்டில் இரண்டு பாரிய துறைமுக அபிவிருத்தி திட்டங்களை நிர்மாணிப்பதில் தலைமை வகித்து செயற்படுகின்றார். இதில் முதலாவது பசுமை துறைமுகமாக தென் மாகாணத்தில் மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தின் இயக்க நடவடிக்கைகள் 2010 நவம்பர் 08 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டன. இரண்டாவது 2013 ஆகஸ்ட் 05 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கொழும்புத் துறைமுகம் விரிவாக்கும் திட்டமாகும்.

கலாநிதி விக்ரம, ஜய கொள்கலன் முனைய தனியார் கம்பனி மற்றும் வ/ப இலங்கை துறைமுக முகாமைத்துவ ஆலோசனைச் சேவை கம்பனியின் தலைவராகவும் ஏனைய சில நிறுவனங்களின் பணிப்பாளராகவும் கடமையாற்றுகின்றார்.

பொருளாதார அபிவிருத்தி தொடர்பிலான சகல துறைகளினதும் இவரின் செயலாற்றல் திறன் ஏற்றுக்கொள்ளப்பட்டு 2010 ஆம் ஆண்டில் ஹொங்கொங் அன்ட் சங்ஹய் கம்பனியினால் (HSBC) இவர் இலங்கையின் மிகவும் சிறந்த இளைஞராக தெரிவு செய்யப்பட்டார். இலங்கையின் நிர்மாணத் துறையின் வளர்ச்சி மற்றும் மேம்பாடு தொடர்பிலான இவரின் பங்களிப்பிற்காக 2011 ஆம் ஆண்டில் சர்வதேச லயன் கழகத்தினால் மிகவும் சிறந்த பிரஜை யாக தெரிவு செய்யப்பட்டார். 2011 ஆம் ஆண்டில் மத்திய கிழக்கு மற்றும் இந்திய உபகண்டத்தில் கடல்சார் வர்த்தகத்தின் இளம் நபருக்கான விருதினையும் பெற்றுக் கொண்டார். அத்தோடு ஐக்கிய அமெரிக்காவில் நடை பெற்ற கப்பலோட்ட சேவையின் கடல்சார் வர்த்தகத்தின் இளம் நபருக்கான “விருதும் 2013 ஆம் ஆண்டில் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

கலாநிதி விக்ரம, 2013 இல் இருந்து 2015 காலப்பகுதியினுள் துறைமுகங்களுக்கான சர்வதேச சங்கத்தின் 3 ஆவது தலைவராக ஏகமானதாக தெரிவு செய்யப்பட்டு அமெரிக்காவின் லொஸ் என்ஜலிசில் நடைபெற்ற துறைமுகங்களுக்கான சர்வதேச சங்கத்தின் உலக மகாநாட்டின் போது இவர் உத்தியோகபூர்வமாக இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். துறைமுகங்களுக்கான சர்வதேச சங்கத்தின் உப தலைவராக நியமிகப்பட்ட முதலாவது இலங்கையர் கலாநிதி விக்ரம ஆவார்.

**திரு. இந்திக கருணாஜீவ**
**உப தலைவர்**

**சொலிசிட்டர் (ஐ.இ) சட்ட முதுமாணி (வேர்விக்)**
**சட்டத்தரணி**

திரு கருணாஜீவ, 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் இலங்கை துறைமுக அதிகாரசபையின் உப தலைவராக நியமிக்கப்பட்டார். அதேபோன்று இவர் இலங்கையின் அதிமேதகு ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளராகவும் கடமையாற்றுகின்றார்.

திரு கருணாஜீவ, கொழும்பு 07, றோயல் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியினைப் பயின்றார். சட்டக் கல்லூரியில் தனது கல்வியினைப் பூர்த்தி செய்து 2000 ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றின் சட்டத்தரணியாக இவர் தனது பணியினைத் தொடர்ந்தார்.

திரு கருணாஜீவ சர்வதேச சட்டம் தொடர்பான முதுமாணிப் பட்டப் படிப்பினை ஐக்கிய இராச்சியத்தின் வேர்விக் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு 2003 ஆம் ஆண்டில் அதில் சிறப்புப் பட்டதாரியானார். இவர் விசேடமாக குற்றவியல் மற்றும் ஆக்கவுரிமைச் சொத்துக்கள் தொடர்பிலான வழக்குகளின் போது இலங்கை நீதிமன்றங்களில் சட்டத்தரணியாகக் கடமையாற்றியுள்ளார்.

இவர் இங்கிலாந்து மற்றும் வேல்ஸின் சொலிசிட்டருமாவார்.

2006 யூலை மாதத்திலிருந்து 2010 மே மாதம் வரை ஐக்கிய இராச்சியத்தின் இலங்கைக்கான தூதுவராலயத்தின் அமைச்சர் ஆலோசகராகவும் இவர் நியமிக்கப்பட்டார்.

**கெப்டன் நிஹால் கெப்பெட்டிபொல**
**முகாமைப் பணிப்பாளர்**

**கடலக அதிபர், எம்பீஏ, எம்என்ஐ, எம்சீஐஎல்ரீ**

1975 ஆண்டில் கெப்டன் கெப்பிட்டிபொல கடெட் அலுவலராக இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தில் இணைந்து கொள்கலன், பொதுவான கப்பற் சரக்குகள், தொகை பிரிப்பு சரக்குக் கப்பல்கள், எண்ணெய் மற்றும் வாயு தாங்கிகள் உட்பட பல்வேறு வகையான கப்பல்களை செலுத்தியுள்ளார்.

1985 ஆம் ஆண்டில் இவர் கடலக விஞ்ஞானம் மற்றும் கப்பலோட்டம் தொடர்பிலான தனது முதுமாணிப் பட்டத்தினை அவுஸ்திரேலியாவின் மெல்போன் பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்டார். ஐக்கிய இராஜ்ஜியத்தின் செப்ஸ்டோவ் ஷிப்பிங் (Chepstow & Shipping) மொன்டிகாலொ, வீ சிப்ஸ் ஜேர்மனியின் அரென்கீல், கொரியாவின் பேன் ஓசன் போன்ற பல்வேறு கப்பல் சேவைகளிலும் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தில் கெப்டனாகவும் கப்பல் போக்குவரத்தில் ஈடுபட்டதன் பின்னர் 1990 ஆம் ஆண்டில் இவர் மாலுமியாக இலங்கை துறைமுக அதிகாரசபையில் இணைந்து கொண்டார்.

கொழும்பு, திருகோணமலை மற்றும் காலி ஆகிய சகல துறைமுகங்களில் மாலுமியாக கடமையாற்றியதன் பின்னர் 1999 ஆம் ஆண்டில் சகல துறைமுகங்களினதும் ஹாபர் மாஸ்டராக இவர் பதவியுயர்வு பெற்றார்.

சிரேஷ்ட முகாமைத்துவத்தின் வேண்டுகோளின் மீது பல்வேறு கால கட்டங்களில் தனது ஹாபர் மாஸ்டர் பதவிக்கு மேலதிகமாக கடலக துறையுடன் தொடர்புபட்ட பாதுகாப்பு மற்றும் சேவை வழங்கல் செயற்பாட்டினுள் குறிப்பிடத்தக்க பணிகளையும் ஆற்றினார்.

2005 ஆண்டில் இவர் பணிப்பாளராக (துறைமுக இயக்கம் )நியமிக்கப்பட்டு 2006 ஆண்டில் மேலதிக முகாமைப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட இவர் தற்போது இலங்கை துறைமுக அதிகாரசபையின் முகாமைப் பணிப்பாளராக கடமையாற்றுகின்றார்.

கெப்டன் கெப்பெட்டிபொல, வ/ப ஜய கொள்கலன் முனையம், வ/ப கொழும்பு சர்வதேச கொள்கலன் முனைய, கம்பெனி, (CICT) சவுத் ஏசியா கேட்வே ரெமினல்ஸ் (SAGT), வ/ப மாகம்புர துறைமுக முகாமைத்துவ (தனியார்) கம்பனி போன்றவற்றில் , பணிப்பாளராக இருப்பதோடு ஐக்கிய இராஜ்ஜியத்தின் கடல் மைல் நிறுவனத்தின் (இலங்கைக் கிளை) முன்னாள் தலைவருமாவார். மேலும் சேவைகள் வழங்கல் மற்றும் பட்டய போக்குவரத்து நிறுவனத்தின் அங்கத்தவரொருவருமான இவர் பெற்றோலிய கூட்டுத்தாபன பணிப்பாளர் சபையின் உறுப்பினரொருவராக 2007/2010 ஆண்டுகளில் கடமையாற்றியுள்ளார்.

கெப்டன் கெப்பிட்டிபொல நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் டெக் அலுவலர்களின் பரிசோதகராகவும் கடமையாற்றுகின்றார்.

**டாக்டர் சஞ்ஞய சேதர செனரத்**
**நிறைவேற்றுப் பணிப்பாளர்**

டாக்டர் சஞ்ஞய சேதர செனரத் மாத்தறை ராஹூல வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியினைப் பயின்றார். பாடசாலை பருவத்தினுள் சனாதிபதி சாரணராகவும், பாடசாலை நிற வெற்றியாளராகவும், தேசிய நிற வெற்றியாளராகவும் பாடசாலையின் பிரதான மாணவத் தலைவராகவும் பெற்ற பயிற்சியானது இவரின் வயது வந்த வாழ்க்கைக்கு மிகவும் துணை புரிந்தது. அதன் பின்னணியில் மாத்தறை ராஹூல வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் தலைவராக இவர் நியமிக்கப்படுவதற்கு அவகாசம் கிடைத்தது.

உயர்தரப் பரீட்சையின் பின்னர் சட்டக் கல்லூரியில் இணைந்தார். சட்டக் கல்லூரியில் பயின்று கொண்டிருக்கையில் ரஷ்யாவின் மொஸ்கவ் நகர பீபல்ஸ் பிரென்ஷிப் பல்கலைக்கழகத்தின் புலமைப் பரிசில் கிடைக்கப்பெற்ற இவர் அங்கு வைத்தியப் பட்டத்தினையும் ரஷ்ய மொழி கற்பித்தல் தொடர்பான பட்டத்தினையும் பெற்றுக்கொண்டார்.

வைத்தியப் பட்டம் பெற்றுக் கொண்டதன் பின்னர் இவர் மாத்தறை பெரிய ஆஸ்பத்திரியில் வைத்திய அலுவலராகக் கடமையாற்றினார்.

அதன் பின்னர் ரஷ்யாவின் மொஸ்கவ் நகர வர்த்தக முகாமைத்துவ கல்வி நிலையத்தில் வர்த்தக முகாமைத்துவம் மற்றும் நிதி நிர்வாகம் பற்றியதிலான பட்டப் பின் படிப்பு டிப்ளோமாவையும் பெற்றுக் கொண்டார்.

**ஏனைய சாதனைகள்**

ரஷ்யாவின் மொஸ்கவ் நகர பீபல்ஸ் பிரென்ஷிப் பல்கலைக்கழகத்தின் சர்வதேச மாணவர் சங்க செயலாளராக நியமிக்கப்படுதல் மற்றும் மிகவும் பிரபல்யமான மாணவராக இருத்தல் (வெளிநாட்டு மாணவர் பிரிவு - 1995)

வர்த்தக முகாமைத்துவம் பற்றியதில் பரந்த சர்வதேச விளக்காற்றல் கொண்ட இவர் இலங்கையில் பல வெளிநாட்டு செலாவணி முதலீட்டு வர்த்தகங்களை நிறுவியுள்ளார். பல் கூட்டு வர்த்தகங்களை வெற்றிகரமாக நடாத்தி வருவதுடன் பிரதானமாக இலங்கையின் தென் பிரதேசத்தில் பல சமூக நலன்புரி திட்டங்களையும் மேற்கொண்டுள்ளார்.

இவர் 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர்களில் ஒருவராகவும் பின்னர் அதிகாரசபையின் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

அதன் பின்னர் காலித் துறைமுக கண்காணிப்பு பணிப்பாளராகவும், கொழும்பு துறைமுக ஒன்றிணைந்த காணி கூட்டு அபிவிருத்தித் திட்டத்தின் தலைவராகவும் பணியாற்றி வருகின்றார்.

இலங்கையின் பூகோளரீதியாக இருக்கும் அனுகூலமிகு அமைவினைப் பயன்படுத்தி இலங்கை துறைமுக அதிகாரசபையின் முன்னேற்றத்திற்காக உலகம் பூராகவுமுள்ள வர்த்தக சந்தர்ப்பங்களை இலங்கை நோக்கி வரவழைப்பதற்கான ஆய்வு ரீதியான பணிகளிலும் ஈடுபட்டுள்ளார்.

### திரு அனுராத விஜயக்கோன்
### பணிப்பாளர்

**நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் மேலதிகச் செயலாளர்**

திரு அனுராத விஜேகோன் 1990 ஆண்டில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டு இலங்கை நிர்வாக சேவையில் (1 ஆம் தரம்) அங்கத்துவம் பெற்றார். இவர் 2009 ஆண்டில் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து வர்த்தகக் கல்வி தொடர்பான முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

திரு விஜேகோன் உற்பத்தித்திறன் விருத்தி செய்தல், மனிதவள முகாமைத்துவம், சமூக ஒருங்கிணைப்பு, அபிவிருத்தியின் பங்களிப்பு செயற்பாடு, பாலினம் மற்றும் அபிவிருத்தி கிராமிய அபிவிருத்தி முகாமைத்துவம் மற்றும் வீடுசார்ந்த செயற்பாடுகளின் குடும்ப அபிவிருத்தி, தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் மீள் நிறுவும் செயற்பாடு போன்ற துறைகளின் பயிற்றுவிப்பாளராகவும் போதனாசிரியராகவும் 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் பணியாற்றியுள்ளார்.

திரு அனுராத விஜேகோன் 2013.04.01 ஆம் திகதி இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவரொருவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

### திரு ஆர் சேமசிங்க
### பணிப்பாளர்

**பணிப்பாளர் நாயகம் - வர்த்தக முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம், நிதி திட்டமிடல் அமைச்சு**

ஸ்ரீ ஜயவர்தன பல்கலைக்கழகத்திலிருந்து அபிவிருத்தி கற்கைகள் பற்றியதான இளமாணி பட்டத்தினையும் நோர்வேயின் விவசாய பல்கலைக்கழகத்திலிருந்து வளங்கள் முகாமைத்துவம் பற்றியதான இளமாணி பட்டத்தையும் இவர் பெற்றுள்ளார். மேலும் இவர் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிலையத்தின் நான்கு வருட மோட்டார் வாகன பொறியியல் பாடநெறியினையும் பின்பற்றியுள்ளார்.

இவர் 1984 இல் இலங்கை நிர்வாக சேவையில் இணைந்து சிரேஷ்ட மட்டங்களில் பதவிகளை வகித்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் கடமையாற்றியுள்ளார். இவர் நிதி திட்டமிடல் அமைச்சின் பணிப்பாளர் நாயகமாகவும் வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்படுவதற்கு முன்னர் சுங்க திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாகவும் பணியாற்றியுள்ளார். இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தெங்கு அபிவிருத்தி சபை உட்பட பல நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகளின் அங்கத்தவராகவும் சில காலம் பணியாற்றியுள்ளார்.

இவர் சுற்றாடல் முகாமைத்துவத் துறையில் தேர்ச்சி பெற்றுள்ளதால் இலங்கையின் நிலம் அழிவடைதலுக்கெதிரான ஐக்கிய நாடுகளின் பிரகடனத்தின் மீதான சுற்றாடல் மற்றும் மீளெழும் வலு சக்தி அமைச்சினால் (MOE & RE) ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிலம் அழிவடைதல் தொடர்பில் நியமிக்கப்பட்ட நிபுணத்துவ குழுவின் அங்கத்தவரொருவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

**திரு ஜகத் பீ விஜேவீர**
**பணிப்பாளர்**

**சுங்க பணிப்பாளர் நாயகம்**

திரு.ஜகத் பீ. விஜேவீர 2012 ஆண்டில் பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். தற்போது இவர் சுங்க பணிப்பாளர் நாயகமாகக் கடமையாற்றுவதோடு இதற்கு முன்னர் ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகமாகவும் கடமையாற்றியுள்ளார்.

களனிய பல்கலைக்கழக நுண்கலை சிறப்புப் பட்டதாரியான இவர், கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொருளியல் மற்றும் சர்வதேச உறவுகள் தொடர்பிலான இரு பட்டங்களையும் பெற்றுள்ளார்.

2006 இருந்து 2010 ஆண்டு வரை இவர் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளராக சேவையில் ஈடுபட்டுள்ளதோடு 1987 ஆண்டிலிருந்து இலங்கை நிர்வாக சேவையில் கடமையாற்றி வருகின்றார்.

**திரு. கபில லியனகமகே**
**பணிப்பாளர் சபை செயலாளர்**

**சட்ட ஆலோசகர் - இலங்கை துறைமுக அதிகாரசபை**

**முகாமைக் குழு**

கலாநிதி பிரியத் பீ விக்ரம
**தலைவர்**

திரு இந்திக கருணாஜீவ
**உப தலைவர்**

கெப்டன் நிஹால் கெப்பெட்டிபொல
**முகாமைப் பணிப்பாளர்**

டாக்டர் சஞ்ஞய சேதர செனரத்
**நிறைவேற்றுப் பணிப்பாளர்**

திரு ஜே கே பீ குருகுலசூரிய
**மேலதிக முகாமைப் பணிப்பாளர்**

திருமதி ஷிராணி வன்னியாராச்சி
**பணிப்பாளர் (நிதி)**

திரு ஏ டி ரீ குணசேகர
**பணிப்பாளர் (தொழில்நுட்பம்)**

திரு டீ டப்ளியூ அத்தபத்து
**பணிப்பாளர் (சேவை வழங்கல்)**

மேஜர் ஜெனரல் எஸ் ஜீ கருணாரத்ன
**பணிப்பாளர் (பாதுகாப்பு)**

திரு டீ யூ டப்ளியூ டி சொய்ஸா
**பணிப்பாளர் (துறைமுக இயக்கம்)**

திரு பீ ஏ ஏ ஹேவாகீகன
**பணிப்பாளர் (தென் துறைமுக அபிவிருத்தி)**

திரு கே ஏ அன்சார்
**பிரதான பயிற்சி முகாமையாளர்**

திருமதி டி ஜீ ஐ சீ லொகுஹேவகே
**பிரதான பொறியியலாளர் (ஒப்பந்தம் மற்றும் வடிவமைப்பு)**

கெப்டன் ஆர் ஏ ஜயவிக்ரம
**ஹாபர் மாஸ்டர்**

திரு எல் பிரேமசிறி டி சில்வா
**பிரதான உள்ளக கணக்காய்வாளர்**

டாக்டர் (திருமதி) டி ராஜகாந்தன்
**பிரதான மருத்துவ அலுவலர்**

திரு எல் எச் ஆர் சேபால
**பிரதான மனிதவள முகாமையாளர்**

திரு ஈ ஏ ரீ எதிரிசூரிய
**பிரதான பொறியியலாளர் (இயந்திர பொறி)**

திரு ஏ ஏ எஸ் ஆர் அபேசிறிவர்தன
**பிரதான பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி)**

திரு டப்ளியூ என் அல்சன்
**பிரதான முகாமையாளர் (நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள்)**

திரு டி ஏ ஜே ஐ பேரேரா
**பிரதான முகாமையாளர் (சேவை வழங்கல்)**

திரு உபுல் ஜயதிஸ்ஸ
**பிரதான முகாமையாளர் (சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக அபிவிருத்தி)**

திரு ஆர் எம் ஏ எஸ் ரத்னாயக்க
**பிரதான முகாமையாளர் (நிர்வாகம்)**

திரு டப்ளியூ. எம். டீ. பி. விஜேகோன்
**பிரதான பொறியியலாளர் (மின்சாரம்-I)**

திரு எச் ஏ என் எஸ் பெர்னாந்து
**பிரதான பொறியியலாளர் (மின்சாரம்-II)**

திரு எச் எம் யூ பி கலகொட
**பிரதான முகாமையாளர் (தகவல் முறைமை)**

திரு விஜித அபேசுந்தர
**பிரதான முகமையாளர் (வழங்கல் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்)**

திரு பி எம் எஸ் சோமரத்ன
**(பிரதான பொறியியலாளர் (சிவில்)**

திரு டப்ளியூ என் ஜயதிஸ்ஸ
**பதில் பிரதான முகாமையாளர் (கொள்கலன் கையாளல்)**

திரு ஜீ எச் டீ தர்மரத்ன
**பதில் பிரதான பொறியியலாளர் (இயந்திர சேவைகள்)**

திரு ஜீ வி ரி நாணாயக்கார
**பதில் பிரதான பொறியியலாளர் (கடலகம்)**

**கணக்காய்வுக் குழு**

திரு ஆர் சேமசிங்க
**தலைவர்**

திரு ஜகத் பீ விஜேவீர
**அங்கத்தவர்**

திருமதி ஷிராணி வன்னியாராச்சி
**அங்கத்தவர்**

திரு ஏ டி ரீ குணசேகர
**அங்கத்தவர்**

திரு டீ யூ டப்ளியூ டி சொய்சா
**அங்கத்தவர்**

திரு எல் பிரேமசிறி டி சில்வா
**செயலாளர்**

2013 ஆண்டின் செயற்பாடுகள் மற்றும் பிரதான அடையப் பெறுதல்கள் பின்வருமாறு.

2013 ஆண்டில் பின்வரும் புதிய பிரதான கப்பல் சேவைகள் கவரப்பட்டன.

**பிரதான ஒன்பது கப்பல் சேவைகள்**

- G- 6 Loop 6 Europe Service – APL/MOL/Hyundai/OOCL/NYK/Hapag Lloyd
- G- 6 AZX- W/B (Suex Express) – APL/MOL/Hyundai/OOCL/NYK/ Hapag Lloyd
- IMMA W/B– India Mauritius Madagascar Mozambique Africa Evergreen & UAFL (United Africa Feeder Line)
- SRS-2 W/B – (Red Sea Service) - Evergreen / CMA-CGM
- SRS-2 E/B – (Red Sea Service) - Evergreen / CMA-CGM
- G-6 SVX- E/B (Singapore Vietnam Express)
- PIL – AMI E/B (Africa Middle East India)
- IBS –W/B – (India Bangladesh Service) – Evergreen /NYK/ Simatec
- IBS –E/B – (India Bangladesh Service) Evergreen/ NYK/ Simatec

2013 ஆண்டில் ஒரு பிரதான கப்பல் சேவை கவரப்பட்டது - **UAFL (United Africa Feeder Line)**

மூன்று முனைய சேவை ஒப்பந்தங்கள் (TSA) புதுப்பிக்கப்பட்டன.

**இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்பட்ட முனையங்களில் பின்வரும் பெறுபேறுகள் பதிவாகின.**

- உள்நாட்டு கொள்கலன் கையாளல் பரிமாணம் 1.8% ஆல் அதிகரித்துள்ளது.
- மீள் ஏற்றுமதி கொள்கலன் கையாளல் பரிமாணம் 12.3% ஆல் அதிகரித்துள்ளது.
- இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்பட்ட முனையங்களின் பரிமாணம் 8.0% ஆல் அதிகரித்துள்ளது
- இலங்கை துறைமுக அதிகாரசபையின் சந்தைப் பங்கு 58.1% வரை அதிகரித்துள்ளது. (2012- 55.3%).
- இலங்கை துறைமுக அதிகாரசபையினால் இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ள ஆகக் கூடிய கொள்கலன் பரிமாணம் 2,501,863 இருபது சம அலகுகளாகும்.

**கொழும்பு துறைமுகத்தில் பின்வரும் பெறுபேறுகள் பதிவாகின**

- உள்நாட்டு கொள்கலன் கையாளல் பரிமாணம் 1.1%. ஆல் அதிகரித்துள்ளது.
- மீள் ஏற்றுமதி கொள்கலன் கையாளல் பரிமாணம் 4.7% ஆல் அதிகரித்துள்ளது.
- கொழும்பு துறைமுகத்தில் 2.8% ஒட்டுமொத்த வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

**மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தில் பின்வரும் பெறுபேறுகள் பதிவாகின**

- கையாளப்பட்ட ஒட்டுமொத்த ரோ ரோ கப்பல்களின் எண்ணிக்கை 134 ஆகும். (2012 - 31 கப்பல்கள்).
- உள்நாட்டு வாகனக் கையாளல் அலகுகள் 26,458 ஆகும். (2012 - 6,411அலகுகள்).
- மீள் ஏற்றுமதி வாகனக் கையாளல் 38,064 அலகுகளாகும். (2012 - 4,338 அலகுகள்).
- சந்தைப்பங்கு (மீள் ஏற்றுமதி 59 % மற்றும் உள்நாட்டு 41%).

இலங்கை துறைமுக அதிகாரசபை, 1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் ஏற்பாடுகளின் மீது 1979.08.01 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டு, பின்னர் 1984 இன் இல. 07 மற்றும் 35 ஆம் சட்டங்களின் ஊடாக திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் 6 (1) பிரிவில் அதன் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றன.

- கப்பல் சுமை நடவடிக்கைகள், கப்பல்களில் ஏற்றல் இறக்கல் மற்றும் மீள் ஏற்றல் பணிகள், தரையிறக்கல், குதங்களிடுதல், வாப்பு நடவடிக்கைகள், கலங்களுக்குத் தேவையான நீர், எரிபொருள் மற்றும் மின்சாரம் வழங்கல், பெற்றோலியம்,பெற்றோலிய எண்ணெய் உற்பத்திகள், உராய்வு நீக்கிகள், கலங்களுக்கும் கலங்களில் இருந்து வத்தைகளுக்கும், களஞ்சியங்களுக்கும் இடையில் போக்குவரத்து செய்தல், கலங்களின் வழிகாட்டிப் பணிகள், நங்கூரமிடப்படுதல், நீர் மூழ்குதல் மற்றும் நீருக்கடியிலான கப்பல் பழுதுபார்த்தல் தொடர்பில் திறன்மிகு தொடர்ச்சியான சேவை மற்றும் அதற்கான துணை சேவைகளை வழங்கல்.

- திறன்மிகு நிலையான ஒத்துப்பார்த்தல் மற்றும் பாதுகாப்பு சேவை வழங்கல்.

- துறைமுக எல்லைகளினுள்ளும் துறைமுகங்களினது உட்புகு வழிகளிலும் கப்பலோட்டம் ஒழுங்குபடுத்தல் மற்றும் நிர்வாகம்.

- துறைமுக நிறுவுதல்களைப் பராமரித்தல் மற்றும் அவைகளின் பாவனை குறிப்பிட்ட துறைமுகங்களினுள் மேம்படுத்தலும் முறைப்படுத்தலும்.

- ஏதாவது விசேட துறைமுகங்களினுள் சுங்க திணைக்களப் பணிகள் தவிர்ந்த ஏனைய சகல நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தலும் முறைப்படுத்தலும்

- விசேட துறைமுகங்களினுள்ளும் அதன் வெளியேயும் கப்பலோட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கலங்களுக்கு வழிகாட்டலும் பாதுகாப்புக்குத் தேவையான வெளிச்சங்கள் மற்றும் வேறு தேவைப்பாடுகளை இலங்கை கடற்கரையில் மற்றும் அதற்கப்பால் நிறுவுதலும் பராமரித்தலும்.

- துறைமுக அதிகாரசபை சட்டத்தின் மீது ஒப்படைக்கப்படும் வேறேதாவது அலுவல்களை நிறைவேற்றுதல்.

- சொத்துக்கள் மீள் முதலீடு செய்யப்படுவதற்கும், புதிய முதலீடுகள் ஏற்படுத்தப்படுவதற்கும் போதுமான பொது சேமிப்பு நிதியமொன்றை ஏற்படுத்தி பராமரித்து செல்லப்படுவதற்காகவும் அதிகாரசபையின் வருமானத்திற்கு கொடுக்கப்படுவதற்கான தகுந்த கட்டணம் செலுத்தப்படுவதற்கும் போதுமான வருமானத்துக்கு குறையாத வருமானம் அதிகாரசபைக்கு கிடைக்கும் வண்ணம் அதிகாரசபையின் பணிகளை நடாத்திச் செல்லல், மேற்கூறப்பட்டுள்ளவாறு அதிகாரசபையினால் வழங்கப்படும் சேவை தொடர்பிலான, கட்டணங்கள் சம்பந்தப்பட்ட சட்டத்திற்கேற்றவாறு அறவிட்டுக்கொள்ளுதல்,

- சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக விசேட துறைமுகங்கள் மற்றும் ஒவ்வொரு துறைமுகமும் நிதி அடிப்படையில் தன்நிறைவான திட்டமொன்றை முகாமைத்துவம் செய்வதற்கு முயற்சித்தல்.

இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் 5 (1) பிரிவின் பிரகாரம் கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்படும் 9 பணிப்பாளர்கள் துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபையில் உள்ளடங்கப்பட்டிருப்பர்.

தலைவர், பிரதான நிறைவேற்றுனராக இருப்பதுடன் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முழு நிர்வாகத்திற்கும் பொறுப்பாக இருப்பார்.

### 2013 இல் சிரேஷ்ட முகாமைத்துவத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்

**திரு ஜே கே பீ குருகுலசூரிய** மேலதிக முகாமைப்பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

**திரு டி யூ டப்ளியூ த சொய்ஸா** பணிப்பாளர் (துறைமுக கையாளல்) நியமிக்கப்பட்டார்.

**திரு பீ ஏ ஏ ஹேவாகீகண பணிப்பாளராக** (தென் துறைமுக அபிவிருத்தி) நியமிக்கப்பட்டார்.

**திரு டீ ஏ ஜே ஐ பெரேரா** பிரதான முகாமையாளராக (சேவை வழங்கல்) நியமிக்கப்பட்டார்.

**திரு டபியூ என் ஜயதிஸ்ஸ** பதில் பிரதான முகாமையாளராக (கொள்கலன் கையாளல்) நியமிக்கப்பட்டார்.

**திரு ஜீ எச் டீ தர்மரதன** பதில் பிரதான பொறியியலாளராக (இயந்திர வேலைகள்) நியமிக்கப்பட்டார்.

**திரு ஜீ வீ ரி நாணாயக்கார** பதில் பிரதான பொறியியலாளராக (கடலகம்) நியமிக்கப்பட்டார் .

### 2013 இல் சிரேஷ்ட முகாமைத்துவத்தில் ஓய்வுபெறுதல்கள்

மேலதிக முகாமைப்பணிப்பாளரான **திரு நோமன் வீரரத்ன** இலங்கை துறைமுக அதிகார சபையில் இருந்து ஓய்வு பெற்றார்.

பிரதான பொறியியலாளரான **திரு எம் பீ எஸ் எஸ் பீரிஸ்** இலங்கை துறைமுக அதிகார சபையில் இருந்து ஓய்வு பெற்றார்.

பிரதான பொறியியலாளரான **திரு எச் டீ எச் சமரசிங்க** இலங்கை துறைமுக அதிகார சபையில் இருந்து ஓய்வு பெற்றார்.

பிரதான பொறியியலாளரான (இயந்திர வேலைகள்) **திரு பீ டப்லியூ வடுகே** இலங்கை துறைமுக அதிகார சபையில் இருந்து ஓய்வு பெற்றார்.

பிரதான சட்ட அலுவலரான **திரு பீ ஆர் சிரிவன்ஸ** இலங்கை துறைமுக அதிகார சபையில் இருந்து விலகியுள்ளார்

### இலங்கை கப்பல் முகவர்களின் சங்கம்

கப்பல் முகவர்களினது சங்கத்தினால் (CASA) துறைமுகம் சம்பந்தப்பட்ட விடயங்கள் மற்றும் தமது உறுப்பினர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சிக்கல்கள் தொடர்பில் கலந்துரையாடப்படும் பொருட்டு இலங்கை துறைமுக அதிகாரசபையின் முகாமைத்துவக் குழுவுடன் பல கூட்டங்கள் நடாத்தப்பட்டன. துறைமுக பாவனையாளர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களைத் தீர்த்துக் கொள்வதற்கும், புரிந்துணர்வு, சுமூக உறவு பேணப்படுவதற்கும், அதன் ஊடாக வினைத்திறன் மேம்படுத்தப்படுவதற்கும் அக்கலந்துரையாடல்கள் வழி வகுத்துள்ளன.

### ஒழுக்காற்று விதிமுறைகளுக்கெதிரான மேன்முறையீட்டுக் குழுக்கள்

தங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு எதிராக ஊழியர்களினால் தலைவர்/ பணிப்பாளர் சபையிடம் 25 மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் இலங்கை துறைமுக அதிகாரசபையின் சட்டதிட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கமைவாக ஏற்படுத்தப்பட்ட 05 மேன்முறையீட்டுச் சபைகளின் கவனத்திற்கு அவை கொண்டு வரப்பட்டன. இந்த மேன்முறையீடுகளில் 03 அங்கீகரிக்கப்பட்டதோடு 21 மேன்முறையீடுகள் நிராகரிக்கப்பட்டன. 01 மேன்முறையீடுகளின் பணிகள் முடிவு செய்யப்பட வேண்டியுள்ளன.

### வெளிநாட்டுப் பயிற்சி மற்றும் புலமைப் பரிசில் சந்தர்ப்பங்கள்

மீளாய்வுக்குட்படும் வருடத்தினுள் அதிகாரசபையின் சிரேஷ்ட மற்றும் நடுத்தர முகாமைத்துவப் பதவிகள் வகிக்கும் 80 அலுவலர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டு பயிற்சிப் பாடநெறிகள் பின்பற்றப்படுவதற்கும், இலங்கைக்கு வெளியேயுள்ள சர்வதேச அமைப்புகளினால் நடாத்தப்பட்ட சம்மேளனங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் தொடர்பில் கலந்து கொள்ளப்படுவதற்கும் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன. இதற்குப் புறம்பாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் 33 ஊழியர்கள் விளையாட்டுப் போட்டிகளில் இலங்கையைப் பிரதிநிதிப்படுத்துவதற்காக வெளிநாடு சென்றனர்.

### தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள்

முகாமைத்துவம் மற்றும் ஊழியர்கள் போன்று துறைமுகத்துடன் தொடர்புபட்ட வெளித் தரப்பினர்களுக்கிடையில் சிறந்த தொடர்பினை ஏற்படுத்துவதற்கு தொடர்பாடல் பொதுசன உறவுகள் பகுதி 2004 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள துறைமுக அபிவிருத்தித் திட்டங்களை கவனத்திற்கொண்டு அதற்காக உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாக பிரபல்யப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முகாமைத்துவம் மற்றும் ஊழியர்களுக்கிடையில் சிறந்த தொடர்பாடல் விருத்தி செய்யப்படும் பிரதான நோக்கம் வெற்றிகொள்ளப்படுவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களுக்கிடையில் “தீர்த்த” எனும் மாதாந்த பத்திரிகையின் இலவச வினியோகம் தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதியினால் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்பட்டது. விளையாட்டுக்கள், நுன்கலைகள், தத்துவம் போன்ற சமூக ஆர்வம் கொண்ட விடயங்களினுள் துறைமுக ஊழியர்களின் விசேட திறன்கள் இனங்காணப்பட உதவுவதோடு செயற்றிறன் மற்றும் வினைத்திறன் மேற்கொண்டு மேம்படுத்தப்படுவதற்காக இலங்கை துறைமுக அதிகாரசபையின் காலத்துக்கேற்ற நடைமுறைச் சட்டங்கள் மற்றும் விதிகள் தொடர்பில் துறைமுக ஊழியர்கள் அறிவுறுத்தப்படுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் பாவனைக்காக பதிப்பு மற்றும் இலத்திரனியல் ஆகிய இரண்டு தரவுகளிலான ஆவண காப்பகமொன்று, தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதியினால் நடாத்திச் செல்லப்படுகின்றது. இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்பான உள்நாட்டு பத்திரிகைகளிலும் அநேகமான சஞ்சிகைகளின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியாகிய சகல விடயங்கள் கணனிமயப்படுத்தப்பட்டும் மூலப் பிரதிகளாகவும் இப்பகுதியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதோடு இலங்கை துறைமுக அதிகாரசபையின் பல்வேறு ஒளிப்பதிவு நிகழ்ச்சிகளுக்குத் தேவைப்படும் அதேபோன்று இலங்கை துறைமுக அதிகாரசபையின் கடந்த மற்றும் நிகழ்கால சகல ஒளிப்பதிவு நிகழ்ச்சிகள் எதிர்கால பாவனைகளுக்காக நவீன இலத்திரனியல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு கலைக்கூடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இலங்கை துறைமுக அதிகாரசபை சார்பிலான சகல ஆவண ரீதியான அறிக்கைகளின் மென் மற்றும் வன் பிரதிகள் (கணனிமயப்படுத்தப்பட்ட) நூல் நிலையமொன்றும் இப்பிரிவில் உள்ளது.

உலகில் முக்கியமான வர்த்தக நடவடிக்கைளான கப்பலோட்டம், சேவைவழங்கல், தொலைத்தொடர்பு, சேவைகள் மற்றும் கைத்தொழில் துறைகளில்முன்னணிவகிக்கும் நிறுவனங்கள் கலந்து கொள்ளும் பொதுநலவாயநொடுகளின் அரச தலைவர்களின் மாகாநாட்டிற்கு இணையாக இலங்கையில் நடை பெற்ற 2013 CHOGM வர்த்தக ஒன்றியத்தின் போது கொழும்பு துறைமுகமானது தெற்காசியாவில் முன்ண்ணியிலிருக்கும் கடல்சார் கேந்திர்தளமாக மேம்படுத்தப்படுவதந்காக சந்தர்ப்பம் இலங்கை துறைமுக அதிகார சபைக்கு கிடைத்துள்ளது. சர்வதேச துறைமுகங்கள் மற்றும் கப்பல் தளங்கள் அமைப்பின் (IAPH) உலகத் தறைமுகம், வர்த்தக்க கண்காட்சி மற்றும் மகாநாட்டிலும் ஐக்கிய அரபு எமிறேற் இராச்சியத்தில் நடைபெற்ற கடல் சார் வர்த்தகம் பற்றியதான மாநாட்டிலும் இலங்கை துறைமுக அதிகார சபை பங்குபற்றியது. வண்டார நாயக்க நாப கார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற (ரெக்னோ 2013

எனும் தேசிய பொறிறியல் தொழில் நுட்பக் கண்காட்சி, வென்தோட்ட காமினி மத்திய கல்லுரியில் நடைபெற்ற 2013 காமினி அபிமன் கண்காட்சி, கொழும்பு கில்ன் கோட்டலில் நடைபெற்ற இலங்கை துறைமுக வர்த்தகம் மற்றும் சேவைவழங்கல் பற்றியதான மகாநாடு, வர்த்தக்க் கண்காட்சி மற்றும் விருதுவழங்கும் விழா,கட்டு நேரிய சென்செபந்தியன் அத்திய கல்லுரியில் நடைபெற்ற "2013 எச்பான் கல்வி விஞ்ஞான தொழில்நுட்பக் கண்காட்சி, துறைமுக வசதிகள் மற்றும் சேவைவள், எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் தெடர்பில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்களின் அறிவூட்டப்படுவதற்காக நடாத்தப்பட்ட தேசிய முக்கியத்துவம் கொண்ட அனேக விழாக்கள்,கண்காட்சிகளில் தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதியின் ஊடாக இலங்கை துறைமுக அதிகார சபை பங்குபற்றி உள்ளது. பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடை பெற்ற ரேக்னோ 2013 எனும் தேசிய பொறியியல் தெழில்நுட்பக் கண்காட்சி, வென்தோட்டை காமினி மத்திய கல்லுரியில் நடைபெற்ற "2014 காமினி அவிமன்" கண்காட்சி, கொழும்பு கில்டன் ஹோட்டலில் நடைபெற்ற இலங்கை துறைமுக வர்த்தகம் மற்றும் சேவை வழங்கல் பற்றியதான மகாநாடு, வர்த்க்க் கண்காட்சிகள், வருது வழங்கும் விழா, கட்டு நேரிய சென் செபச்தியன் மத்திய கல்லூரியில் நடைபெற்ற "2014 எக்ஸ் பேன்" கல்வி, விஞ்ஞான தெழில்நுட்ப கண்ட்சி, துறைமுக வசதிகள் மற்றும் சேவைகள், எதிர் கால அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்களின் அறிவூட்ப்படுவதற்காக நடத்தப்பட்ட தேசிய முக்கித்துவம் வாய்ந்த அனேகவிழாக்கள், கண்காட்சிகளில் தெடர்பாடல் மற்றும் பொதுசன உறவுக் பகுதியின் ஊடாக இலங்கை துறைமுக அதிகார சபை பங்கேற்றது. இப்பகுதியினால் பிரசார அட்டைகள், பிரசுரங்கள் அச்சிடப்படுவதற்கும் பொறுப்பேற்கப்பட்டன. கொழும்பு துறைமுகம் விரிவாக்கல் திட்டத்தின் திறப்பு விழாவிற்கு உள்நாட்டு மற்றும் வெளி நாடுகளிலும் பிரசார நடவடிக்கைள் இப்புதியினால் வெற்றி கரமாக முன்னேடுக்கப்பட்டன. "2020 முன்னொக்கு" வெளிகோணரப்படுகையின் பொது தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுப்பகுதியினால் சிறப்பான பணியாற்றப்பட்டது.

இலங்கை துறைமுக அதிகார சபையின் விழா நிகழ்ச்சி ஏற்பாடுகளின் முக்கிய பணிகழும் தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுப்பகுதியினால் நிறைவேற்றப்பட்டன. பல்வேறு சம்பவங்கள் தொடர்பில் மேலதிக பிரசுரங்கள் அச்சிடும் பணிகளின் திட்டமிடல், ஒருங்கமைப்பு வேலைகளும் இப்பகுதியினால் மேற் கொள்ளப்பட்டன. காலத்திற்கு காலம் இலங்கை துறைமுக அதிகார சபை பற்றியதான பத்திரிகைகள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் வெளியிடப்பட்ட பாதிப்பான அறிக்கைகளை தவிர்த்தல் மற்றும் மீழாவிற்குட்படும் ஆண்டினுள் நடைபெற்ற அனைத்து முக்கிய சம்பவங்கள் தொடர்பிலும் இலத்திரனியல் மற்றும் அச்சக ஊடயங்கள் மூலம் பிரசாரம் செய்யப்படுவதற்கு நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது.

பல்வேறு பத்திரிகைகள் ஊடாக கருத்துக்கள் தெரிவிப்பதற்கும் இலங்கை துறைமுக அதிகார சபையின் தோற்றப்பாடு மற்றும் உற்பத்தித்திறன் மேன் படுத்துதலில் பிரசாரம் தெடர்பில் படமாக்கப்பட்ட பதிப்புத் தகவல்கள் மற்றும் சகல வெளி ஊடக நிறுவனங்களுக்கு ஊடக அறிவித்தல்களை வழங்குவதற்கான இலங்கை துறைமுக அதிகார சபையின் அதிகாரமுள்ள ஒரேயோரு பகுதி தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுபகுதியாகும்.

தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதிக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகளுக்கமைய இலங்கை துறைமுக அதிகார சபையினால் ஆரம்பிக்கப்ட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் மற்றும் சந்தர்ப்பங்கள் வெற்றி கொள்வதற்கும் தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதியின் பணிகள் இலகு படுத்துவதற்கும் இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு உதவுவதற்கும், மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபஷ துறைமுகம் மற்றும் அதன் பயன்கள் தொடர்பில் பொதுமக்கள் அறிவுறுத்தப்படுவதற்கான விஷேட நிகழ்ச்சித்திட்ங்களும் நேர் காணல்களும் சடத்தப்படுகின்றன.

தாய் நாட்டிற்கு எதிர் காலத்தில் சுபிட்சத்தை ஏற்படுத்துவதற்கு பிராந்திய செய்தியாளர்களுக்கு குறுத்த பாரிய திட்ம் பற்றி அறிவுறுத்தப்படுவதில் இத்திட்த்தின் வெற்றிக்கான விரிவான பிரசாரம் வழங்கப்படுவதற்காக தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுப்பகுதியினால் பல வேலை நிகழ்ச்சிகளின் ஒருங்கிணைப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

# இயக்க மீளாய்வு

## இயக்கம்

2013 ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் முகாமைத்துவம் செய்யப்படும் ஜய கொள்கலன் முனையத்தினதும் ஐக்கிய கொள்கலன் முனையத்தினதும் வருடாந்த கொள்கலன் இயக்க பரிமாணம் 8% ஆல் அதிகரிக்கப்பட முடிந்துள்ளதோடு இதுவானது 2012 ஆண்டின் பரிமாணத்துடன் ஒப்பிடுகையில் 185,014 இருபது சம அலகுகளின் வளர்ச்சியாகும். உள்நாட்டு கொள்கலன் கையாளல் பரிமாணம் 11,646 இருபது சம அலகுகளினாலும் மீள் ஏற்றுமதி கொள்கலன் கையாளல் பரிமாணமாக 173,368 இருபது சம அலகுகளினாலும் வளர்ச்சியடைந்துள்ளது. 2013 ஆண்டின் யூலை மாதத்தில் 235,750 இருபது சம அலகுகளில் இதுவரை ஆகக் கூடிய மாதாந்த கொள்கலன் கையாளல் பரிமாணமாக பதிவாகியதோடு 2013 நவம்பர் மாதம் 02 ஆம் திகதி இதுவரை பதிவாகிய ஆகக் கூடிய நாளாந்த கொள்கலன் கையாளல் பரிமாணமாக 9,884 இருபது சம அலகுகளை அடையக் கூடியதாக இருந்தன.

கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன்களைக் கொண்ட கப்பல்களின் எண்ணிக்கை 3092 (2012 ஆண்டில்) இருந்து 3,142 (2013 ஆண்டில்) வரை வளர்ச்சியடைந்துள்ளதுடன் இது 1.9% அதிகரிப்பாகும்.

வண்டிகள் நிறுத்தி வைக்கப்படுவதற்கு அதிக வசதிகளுள்ள மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம் நோக்கி ரோ ரோ கப்பல்கள் அனுப்பி வைக்கப்பட்டன இதன் பயனாக கையாளப்பட்ட 60,721 மொத்த வண்டிகளில் 60% மீள் ஏற்றுமதி வாகனக் கையாளல் பரிமாணமாக இலங்கை துறைமுக அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட முடிந்தது.

2013 ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் கீழ் கொழும்பு துறைமுகத்தின் வருடாந்த கையாளல் அளவு தொன் மில்லியன் 36.86 இருந்து 39.18 தொன் வரை அதாவது 6.3% அதிகரிப்பு பதிவாகியது.

NAVIS/SPARCS துரித கொள்கலன் முகாமைத்துவ தொகுதி மற்றும் 2012 ஆண்டில் புதிதாக பெறப்பட்ட உபகரணங்களின் உச்ச பயனை பெறும் வகையில் சிறந்த சேவை பரீட்சயம் பெறப்படுவதற்கு ஊழியர்கள் அறிவுறுத்தப்பட்டனர். இதன் பயனாக இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்படும் முனையங்களினது உற்பத்தித் திறன் பிரதான நிலையின் மற்றும் ஊட்டக் கப்பல் சேவைகளுக்கும் மணித்தியாலமொன்றுக்கு 24 மற்றும் 20 பார முயர்த்தி நகர்வுகள் வரை பேணப்பட முடிந்துள்ளது.

பாவனையாளர்களின் நோக்கங்கள் நிறைவேற்றப்படுதலின் போது சேவைகளின் செயற்றிறன், உற்பத்தித் திறன் மற்றும் தரம் மேம்படுத்துவது தொடர்பில் இயக்கப்பகுதி ஊழியர்களினது திறன், அறிவு, உளப்பாங்கு விருத்தி செய்தல், பயிற்சியளித்தல் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

2013 ஆண்டில் முறையே பிரதான நிலையின் 07 கப்பல் சேவைகள் மற்றும் 02 ஊட்டக் கப்பல் சேவைகளும் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்படும் முனையங்கள் நோக்கி கவரப்பட முடிந்தன.

## சேவைகள் வழங்கல்

துறைமுகத்துக்கு கொண்டு வரப்படும் நிறைவான கொள்கலன் மற்றும் குறை கொள்கலன் தரையிறக்கல், தொகை பிரிப்பு, பொதிகளில் அடங்கிய மற்றும் மோட்டார் வாகனங்களைக் கொண்ட தரையிறக்கப்பட்ட அனைத்து கப்பற் சரக்குகள் ஒப்படைத்தலும் வாடிக்கையாளர்களுக்குரிய ஏனைய கப்பற் சரக்குகள் சார்ந்த சேவைகளை நிறைவேற்றுதல் சேவைகள் வழங்கும் பகுதியின் பிரதான பணியாகும்.

நாளின் 24 மணித்தியாலங்கள் பூராகவும் சேவைகள் வழங்கப்படுதலின் மூலம் 2013 ஆண்டினுள் நிறைவான 294,561 இருபது சம அலகுகளின் கொள்கலன் கப்பற் சரக்கு நேரடியாக முன்னர் போன்று விநியோகிக்கப்பட்டுள்ளன. நிறைவான கொள்கலன் கப்பற் சரக்குகளுக்காக

பாவனையாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகள் அதிகரிக்கப்படுவதற்கும் ஆவணங்களுக்காக செலவிடப்படும் காலம் குறைக்கப்படுவதற்கும் நேவீஸ் கப்பற் சரக்கு மொடியூல் திட்டம் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு, மீள் ஏற்றுமதி, பல்வேறு நாடுகளுக்கு அனுப்பும் கப்பற் சரக்குகளின் ஒன்று திரட்டல் மற்றும் விசேட வகையின் கப்பற் சரக்குகளுக்கு துறைமுகத்தினுள்ள களஞ்சியசாலைகளில் இடவசதிகள் வழங்கப்படுவதோடு குறை கொள்கலன்கள் ஏற்றும் பரிமாணத்தில் 7,690 இருபது சம அலகுகள் (பொதுவான/ஆபத்தானசரக்குகள்) வேறாக பேலியகொட கொள்கலன் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறை கப்பற் சரக்குகள் வேறாக அடுக்கி வைக்கப்பட்டதனால் 170.4 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. பல்வேறு நாடுகளுக்கு அனுப்பும் கப்பற் சரக்குகளின் ஒன்றுதிரட்டலினால் 141.1 மில்லியன் ரூபா பெறப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக வெற்று கொள்கலன்களுக்கான தாமதக் கட்டணமாக 5.3 மில்லியன் ரூபா வருமானமும் பெறப்பட்டுள்ளது.

இந்த ஆண்டினுள் கப்பற் சரக்கு அகற்றும் நிறுவனங்களுக்கு 93 புதிய அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதோடு 881 அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டதன் மூலம் ஒட்டுமொத்தமாக 974 அனுமதிப்பத்திரங்கள் தொடர்பில் 14.6 மில்லியன் ரூபா வருமானம் பெறப்பட்டுள்ளது. “ஏ” மற்றும் “பீ” வகையின் வாப்பு இலிகிதர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கியதனாலும் புதுப்பிக்கப்பட்டதனாலும் 7.1 மில்லியன் ரூபா ஒன்றுசேர்க்கப்பட்டுள்ளது. ஆண்டினுள் வழங்கப்பட்ட மற்றும் புதுப்பிக்கப்பட்ட “ஏ” மற்றும் “பீ” வகையின் அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கைகள் முறையே 2,244 மற்றும் 305.

கொள்கலன் நிலைய இல. V கொண்ட களஞ்சியசாலை புதுப்பிக்கப்பட்டதனால் வாடகை செலுத்தப்பட்ட களஞ்சியசாலை மற்றும் துறைமுக கப்பற் சரக்கு வர்த்தகங்களுக்கான களஞ்சியசாலையின் வசதிகள் அதிகரிக்கப்பட்டு வாடகை செலுத்தப்பட்ட களஞ்சியசாலை மற்றும் துறைமுக கப்பற் சரக்கு வர்த்தகங்களுக்கான கிராக்கி அதிகரிக்கப்பெற்றதன் ஊடாக 38.9 மில்லியன் ரூபா பூரண வருமானம் பெறப்பட்டுள்ளது. ஆண்டினுள் சேவை வழங்கும் பகுதியினால் மேற்கொள்ளப்பட்ட சேவைகளுடாக ஈட்டப்பட்ட மொத்த வருமானம் ரூபா 377.6 மில்லியன் ஆகும்.

கைவிடப்பட்டிருந்த கப்பற் சரக்குகள் அகற்றப்படுவதற்கான பகிரங்க விலைகோரல் மற்றும் ஏலவிற்பனை மூலம் 81.1 மில்லியன் ரூபா ஒன்றுசேர்க்கப்பட்டுள்ளது. அத்தோடு வ/ப இலங்கை துறைமுக முகாமைத்துவ ஆலோசனை சேவைக் கம்பனியினால் கழிவு இரும்பு, பயன்படுத்தப்பட்ட எண்ணெய் மற்றும் பழைய டயர்கள் விற்கப்பட்டதனால் 23.5 மில்லியன் ரூபா மேலதிக வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. இலங்கை துறைமுக அதிகாரசபையினால் அகற்றப்பட்ட மேலதிகப் பொருட்கள் பகிரங்க விலைகோரலில் விற்கப்பட்டதனாலும் 9.3 மில்லியன் ரூபா ஈட்டப்பட்டுள்ளது. மேலும் இதற்கு மேலதிகமாக சில நபர்களிடம் ஒப்படைக்கப்பட்டு அகற்றிச் செல்லப்படாத பொருட்கள் அரசுடமையாக்கப்பட்டதனாலும் ரூபா 1,530,000/= வருமானம் கிடைத்துள்ளது.

2013 ஆண்டினுள் துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள், அமைச்சிடம் கப்பற்சரக்கு பெறுபவர்களின் கைவிடப்பட்ட வாடகைக் கட்டணங்கள் தொடர்பிலான 39 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருந்தன. இதில் 19 விண்ணப்பங்கள் பரிந்துரைக்கப்பட்டதோடு 12 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. எஞ்சிய விண்ணப்பங்கள் தொடர்பில் துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் தீர்மானிக்கப்பட வேண்டியுள்ளன.

சேவைகள் வழங்கும் பிரிவினால் ஆற்றப்படும் சேவையின் தரம் விருத்தி செய்யும் நோக்கில் எமது வாடிக்கையாளர்களுக்கு 2012 ஆண்டினுள் திறனான மற்றும் பயன்மிகுந்த சேவை உறுதிப்படுத்தப்படும் பொருட்டு நேவீஸ் கப்பற் சரக்கு வினியோக மொடியூல் தொகுதி அறிமுகப்படுத்தப்பட்டது. நிறைவான கொள்கலன் வினியோகிப்பதற்கான அனைத்து செயற்பாடுகளும் குறைப் பொருட்கள் கொண்ட கப்பற் சரக்குகள் களஞ்சியசாலைகளில் தரையிறக்கப்படுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## நிதி

இலங்கை துறைமுக அதிகார சபையின் பிரதான பங்கினை வகிக்கும் பகுதியாக 2013 ஆம் ஆண்டில் முக்கிய பணியினை ஆற்றியுள்ளது. 2013 ஆண்டினுள் நிதிப்பகுதியினால் அடையப்பெற்ற வெற்றிகள் பின்வருமாறு.

யூலை மாத நடுப்பகுதியில் பாரிய முன் நடவடிக்கையாக நேரடியாக பொருட் பட்டியல் ஆவணங்கள், மின்னஞ்சல் மூலம் முகவர்களுக்கு அனுப்பும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது.நபர்கள் மூலம் பொருட் பட்டியல் வினியோகிப்பதில் ஏற்படும் தாமதம் நீங்குவதோடு முனைய முகாமைத்துவ தொகுதியூடாக தயாரிக்கப்படும் பொருட் பட்டியல்களின் 95% நாளாந்தம் மின்னஞ்சல் மூலம் முகவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

ஒன்றுசேர்த்தலின் முகாமைத்துவம் காரணமாக கப்பல் முகவர்களிடமிருந்து கிடைக்கப்பெறவேண்டிய செலுத்தப்படாதிருந்த கடன்களின் பெரும் பகுதி மீள் அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

மீளாவிற்குட்படும் ஆண்டினுள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளின் பூரண ஏற்றல் கொள்கலன்களின் சிட்டைகள் வழங்கல் மற்றும் இணையத்தளமூடாக கொடுப்பனவு மேற்கொள்ளல் நடைமுறைப்படுத்தலின் மூலம் பாவனையாளர்களுக்கு வங்கிகள் ஊடாக சிட்டைகளின் கொடுப்பனவு மேற்கொள்வதற்கும் இடமளிக்கப்பட்டன.

இந்த ஆண்டினுள் கப்பல் முகவர்களுக்கான சேவைகள் வழங்குவதற்கு கப்பல் முகவர் கணக்குகளும் பல்நாட்டு கப்பற்சரக்குகள் திரட்டுவதற்கான கணக்குகளும் பாரியளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன .பதிவு செய்யப்பட்ட புறக்கணித்த செலுத்துதல்கள் தொடர்பில் முன்வைக்கப்பட்ட 2,195 விண்ணப்பங்களினுள் 1,646 விண்ணப்பங்கள் தீர்க்கப்டுவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## கப்பலோட்டம்

### வழிகாட்டிச் சேவை

மீளாய்வாண்டினுள் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்த சகல வகையிலான கப்பல்களுக்கும் (24 மணித்தியாலங்கள் பூராகவும் கிழமையில் 07 நாட்களிலும்) தொடர்ச்சியான வழிகாட்டிச் சேவைகள் வழங்கப்பட்டன.

முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட கொழும்பு துறைமுகம் விரிவாக்கல் திட்டம் இலங்கை குடியரசின் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் 2013 ஆகஸ்ட் 5 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டமை மீளாவிற்குட்படும் ஆண்டில் நடைபெற்ற முக்கிய நிகழ்வாகும்.அன்றைய அங்குரார்ப்பண நிகழ்விற்கு CMA-CGM இன் கப்பலான "CMA-CGM Pegasus" கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையத்தில் (CICT) நங்கூரமிடப்பட்டிருந்தது.

கப்பலோட்டிகள், கடல்கல போக்குவரத்து ஒருங்கிணைப்பாளர்கள், நங்கூரமிடலின் பணியாளர்கள் குழு அடங்கலான வழிகாட்டி நிலையம், தென்மேற்கு அலைதாங்கி பிரதேசத்திலிருந்த பழைய கட்டிடங்களிலிருந்து முற்றாக அகன்று இரண்டாவது அலைதாங்கிக்கு அண்மித்த புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது. இந்த மாறுதலின் முக்கிய விடயம் யாதெனில் துறைமுக கட்டுப்பாட்டின் இயக்கம் புதிய கட்டுப்பாட்டுக் கோபுரத்தின் மூலம் ஆரம்பிக்கப்படுவதலாகும்.

அடையாளச் சின்னமான பழைய வழிகாட்டி நிலையம் புனரமைக்கப்படுவதற்கான மரபுரிமைக் கட்டிடமாக வேறாக்கப்பட்டு கப்பலோட்ட பணியாளர் குழு தங்கிருந்த பழைய கட்டிடங்கள் உடைக்கப்பட்டன.

| கப்பல்களின் வகை | கப்பல்களின் எண்ணிக்கை | வருகை தந்த நோக்கம் | கப்பல்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| கொள்கலன் | 3,142 | எண்ணெய் பெறுதல் | 50 |
| மரபு முறையான | 38 | பழுதுபார்த்தல் | 36 |
| உலர் மொத்தம் | 177 | பயணிகள் | 32 |
| எண்ணெய் தாங்கி | 133 | ஏனைய சேவைகள் | 15 |
| றோல் ஒன் றோல் ஒப் | 28 | | |
| ஏனைய சரக்குகள் | 16 | | |
| **மொத்தம்** | | | 3,667 |

**பிரதான இழுவைக் கல அதிபர் பிரிவு**

பிரதான இழுவைக் கல அதிபர் பிரிவினால் மீளாய்வாண்டினுள் நங்கூரமிடுதல், கப்பலோட்டத்துக்கான தொடர்ச்சியான மற்றும் திறனான இழுவைக் கல சேவைகள் வழங்கப்பட்டதன் ஊடாக சிறப்பான பணியாற்றப்பட்டது. அப்பணிகளுக்குப் பதிலாக பின்வரும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

- இழுவைக் கலங்களின் தட்டுக்களை (DECK) புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் வேலைகளை நிறைவேற்றுதல்.

- கப்பல்கள் கட்டி வைக்கப் பயன்படுத்தப்பட்டு அகற்றப்பட்ட பாரிய கயிறுகளினால் இழுவைக் கலங்களுக்கான கயிறுகளும் விரிப்புகளும் செய்தல், இழுவைக் கலங்களுக்கும் வேறு பிரிவுகளுக்கும் கென்வஸிலான திரைகள் தயாரிக்கும் நடவடிக்கைகள்.

கப்பல்களின் நகர்த்தல்களுக்காக போதுமானளவு இழுவைக் கலங்கள் நாளாந்தம் ஈடுபடுத்தப்பட்டதோடு அவசர சந்தர்ப்பங்களுக்காக ஒரு இழுவைக் கலம் எதிர்பார்ப்பு சேவையில் வைக்கப்பட்டது.

**இழுவைக் கலங்களின் உதவியூடான கப்பல்களின் மொத்த நகர்வுகள்**

| கலத்தின் பெயர் | மொத்தம் |
|---|---|
| எம்ரீ ராஜா | 124 |
| எம்ரீ நந்தமித்ர | 3,615 |
| எம்ரீ சுரணிமல | 2,872 |
| எம்ரீ கோடயிம்பர | 3,938 |
| எம்ரீ விஜயபாகு | 3,219 |
| எம்ரீ பரண - II | 2,820 |

**வெளித் துறைமுகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இழுவைக் கலங்கள்**

**திருகோணமலை**

- எம்ரீ.சிங்கபாகு
- எம்ரீ நீலமஹ

**காலி**

- எம்ரீ தேரபுத்தாபய
- எம்ரீ கஞ்சதேவ

**காங்கேசன்துறை**

- எம்ரீ தீர

**மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம்**

- எம்ரீ வேலுசுமன

**கடற் பயணங்கள்**

- எம்ரீ சிங்கபாகு (கொழும்பிலிருந்து திருகோணமலை துறைமுகம் வரை)
- எம்ரீ மஹாசென் (கொழும்பிலிருந்து திருகோணமலை துறைமுகம் வரை)
- எம்ரீ கஞ்சதேவ (காங்கேசன் துறை துறைமுகத்திலிருந்து காலித்துறைமுகம் வரை)

**பயிற்சி நடவடிக்கைகள்**

மஹபொல பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட உயர் தீயணைத்தல் பாடநெறி, உயர் ஆங்கிலம், ஆரம்ப தீயணைப்பு, ஆரம்ப முதலுதவி பயிற்சி, தனிநபர் பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்பு,தனிநபர் உயிர் காப்பு நுட்பங்கள், மைக்றோசோப்ட் ஒபீஸ் ஆகிய பயிற்சிகளைப் பின்பற்றி தமது அறிவை வளர்த்துக் கொள்வதற்காக அலுவலர்களும் சகல பணியாளர்களும் ஊக்குவிக்கப்பட்டனர்.

**ஈட்டப்பெற்ற வருமானம்**

| ஆண்டு | | ரூபா மில்லியன் |
|---|---|---|
| 2012 உண்மையான | - | 350,810 |
| 2013 திருத்தப்பட்ட | - | 445,526 |
| 2014 திட்டமிடப்பட்ட | - | 526,787 |

**பிரதான பொறியியல் அலுவலர் பிரிவு**

**ஆளணியினர்**

2013 ஆம் ஆண்டினுள் சகல வகையிலான இழுவைக் கலங்கள், வழிகாட்டி மற்றும் நங்கூரக் கலங்களின் இயக்கம், பழுதுபார்த்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு போதுமான ஆளணியினர் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இப்பிரிவின் ஆளணியினரால் மேற்கொள்ளப்படும் சகல பொதுவான பராமரித்தல் பணிகளுக்கு மேலதிகமாக நாளாந்த ஓட்ட நகர்வுகளுக்கான இழுவைக் கலங்களின் வழிகாட்டல் மற்றும் இயக்க சேவைகளும் வழங்கப்பட்டன.

முகாமைத்துவத்தின் பரிந்துரைக்கமைய கருவிகளைக் கொண்ட வேலைத்தளத்தோடு பிரதான பொறியியல் அலுவலர் பிரிவினால் அன்றாட பராமரிப்புகளும் கல ஓட்டத்துக்கான வழிகாட்டி மற்றும் இயக்கம் மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

**துறைமுக தீயணைப்பு படைப் பிரிவு (PFB)**

துறைமுக தீயணைப்பு படைப் பிரிவு 2013 ஆம் ஆண்டினுள் தீ மற்றும் வேறு அவசர சந்தர்ப்பங்களில் ஏற்படும் ஆபத்து நிலைமைகளைக் கட்டுப்படுத்தி அவசர நிலைமைகளைக் கவனிப்பதற்கு மேலதிகமாக, உள்ளக தீ காப்பு தரம் பேணப்படுவதிலும் அமுல்படுத்துவதிலும் ஈடுபட்டது.இலங்கை துறைமுக தீயணைப்பு படைப் பிரிவானது எண்ணெய்களினால் கடல் மாசடைதல், ஆபத்தான கப்பற் சரக்குகளின் சிதறல் போன்ற அவசர நிலைமைகளில் பொறுப்பாக செயற்படும் குழுவாகும்.

**துறைமுக தீயணைப்புப் பிரிவு பின்வரும் சந்தர்ப்பங்களில் தனது உரிய ஒத்துழைப்பினை வழங்கியுள்ளது.**

| | |
|---|---|
| தீயணைப்பு அழைப்புக்கள் | 14 |
| அவசர அழைப்புக்கள் | 29 |
| எண்ணெய் தாங்கிக் கப்பல்களுக்கான காத்திருத்தல் சேவை | 111 |
| வாயு தாங்கிக் கப்பல்களுக்கான காத்திருத்தல் சேவை | 21 |
| கப்பல்களிd; வெப்ப வேலைகளுக்கான காத்திருத்தல் சேவை | 1,309 |
| ஆபத்தான கப்பற் சரக்குகள் கையாளல்களுக்கான காத்திருத்தல் சேவை | 07 |
| பாலங்கள்/ குதங்கள் போன்றவை கழுவுவதற்கான நீர் வினியோகம் | 42 |
| தண்ணீரை வெளியேற்றுதல் | 12 |
| எண்ணெய் மாசடைவு கட்டுப்பாட்டுப் பணிகள் | 07 |
| தாங்கிகளுக்கான பரீட்சிப்பு விஜயங்கள் எண்ணெய் | 621 |
| ஒன்றிணைந்த தீயணைப்பு நடவடிக்கைகள் | 02 |

**தீ காப்பு நடவடிக்கைகள்**

சகல துறைமுங்களிலும் தீகாப்பு பரீட்சிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**பயிற்சி நடவடிக்கைகள்**

| | |
|---|---|
| ஆளணி பயிற்சிப் பட்டறைகள் | 21 |
| வெளிநபர்கள் பரீட்சயமாக்கப்படும் விஜயங்கள் | 04 |
| கொக்ஸன் பயிற்சிப் பாடநெறிகள் | 05 |
| டெக் தரப்படுத்தல் பயிலுநர்களுக்கான தீயணைப்புப் பயிற்சி | 02 |
| எஞ்ஜீன் அறை தரப்படுத்தும் பயிற்சி நிகழ்ச்சிக்கான தீயணைப்புப் பயிற்சி | 02 |
| தீயணைப்புப் படையின் ஆளணியினருக்கான மீள் தீயணைப்புப் பயிற்சி | 05 |
| கொழும்பு எண்ணெய் களஞ்சியத்துடனான தீயணைப்பு ஒத்திகைகள் | 02 |
| வலு வத்தைகளுக்கான ஒன்றிணைந்த தீயணைப்பு ஒத்திகைகள் | 02 |
| மா.ரு.ம.ரா துறைமுகத்திற்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட தீயணைப்பாளருக்கான பயிற்சி | 01 |
| மா.ரு.ம.ரா. து.ஆளணியினர் பயிற்று விக்கும் பயிற்சிப்பட்டறைகள் | 11 |
| PFB பணியாளர்களுக்கான தீயணைப்பு பயிற்சி | 01 |

இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம், கொழும்பு கப்பல் கட்டும் தளம் மற்றும் கொழும்பு வலு நிலையம் ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து தீயணைப்பு ஒத்திகைகள் நடாத்தப்பட்டன.

**வருமானம்**

2013 ஆம் ஆண்டில் துறைமுக தீயணைப்பு படைப் பிரிவினால் ஈட்டப்பட்ட வருமானம்.

| விபரம் | அ.டொலர் | ரூபா |
|---|---|---|
| எண்ணெய் தாங்கிக் கப்பல்களுக்கான காத்திருத்தல் சேவை | 178,148 | |
| வாயு தாங்கிக் கப்பல்களுக்கான காத்திருத்தல் சேவை | 27,520 | |
| ஆபத்தான கப்பற்சரக்குகளுக்கான காத்திருத்தல் சேவை | 37,440 | 222,250 |
| பரீட்சிப்பு விஜயங்களுக்கான கட்டணங்கள் | 7,340 | |
| வெப்ப வேலைக்கான கட்டணங்கள் | 17,817 | |
| தீ அனைப்பு | 1,520 | 590,000 |
| எண்ணெய் மாசடைவு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் கட்டணங்கள் | 1,080 | 412,500 |
| **மொத்தம்** | **270,865** | **1,224,750** |

**துறைமுக காப்பு பிரிவு**

சகல துறைமுகங்களிலும் மேற்கொள்ளப்படும் ஆபத்தான கப்பற்சரக்குகள் கையாளப்படுகையிலான பாதுகாப்பு அணுகு முறைகள் சகல நேரங்களிலும் அவதானித்து உரிய முறையில் பேணுவது இப்பிரிவின் பணியாகும்.

துறைமுக தீயணைப்புப் படையின் உதவியோடு சில இரசாயன சிதறல்கள் மற்றும் தீ விபத்துக்கள் கட்டுப்படுத்தப்பட்டன. ஆபத்தான சரக்குக் குதங்கள் மற்றும் கொள்கலன் அடங்கலான குதங்களின் பரீட்சிப்புகள் பருவ காலங்களில் முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

வெப்ப வேலைகளுக்கான அனுமதி வழங்கப்படுவதற்கு முன் சம்பந்தப்பட்ட தளங்களில் பரீட்சிப்புகள் நடாத்தப்பட்டு அனுமதி வழங்கப்படாத வெப்ப வேலைகள் தடுத்து நிறுத்தப்பட்டன.கடல் மாசடைதல் தொடர்பிலான பரீட்சிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன. தனிநபர் மற்றும் கடல்சார் விபத்துகள் தொடர்பில் ஆராயப்பட்டு பகுப்பாய்வுகளும் செய்யப்பட்டன.

- 2013 ஆண்டில் கொழும்புத் துறைமுகத்தினால் 278,592.968 மெட்ரிக் தொன் ஆபத்தான கப்பற்சரக்குகள் கையாளப்பட்டன.
- ஆபத்தான கப்பற் சரக்குகளைக் கொண்ட 23,911 கொள்கலன்களின் மாற்றியேற்றல்கள் மேற்கொள்ளப்பட்டன.
- இயக்கப் பகுதியின் ஊழியர்களுக்கு துறைமுகத்தினுள் ஆபத்தான கப்பல் சரக்குகளின் கையாளல், களஞ்சியப்படுத்தல்,போக்குவரத்து செய்தல் ஆகியவற்றுடன் தொடர்புபட்ட பாதுகாப்பு முறைகளிலான விரிவுரைகள் நடாத்தப்பட்டன.
- எளிதில் வெடிக்கக்கூடிய (GPIE) 217,510 மெட்ரிக் தொன் பொருட்களும், வெடிக்கக் கூடிய (GPIAE/IIE) 9,532.062 மெட்ரிக் தொன் பொருட்களும் கையாளப்பட்டன.
- ஜய கொள்கலன் முனைய ஊழியர்கள் மற்றும் கப்பலோட்டப் பகுதியின் நங்கூரமிடல் குழுவினரினதும் தனிப்பட்ட பாதுகாப்பு தொடர்பில் உதவி துறைமுக காப்பு பரீட்சகர்களின் உதவியோடு தனிநபர் பாதுகாப்பு உபகரணங்கள் பயன்படுத்தப்படுதல் விசேடமாக அவதானிக்கப்பட்டது.

கொழும்புத் துறைமுகத்திற்கு 184 எண்ணெய் தாங்கிக் கப்பல்கள் வருகை தந்ததோடு இறக்கப்பட்ட கப்பற் சரக்குகள் பின்வருமாறு.

| சரக்கு வகை | அளவு மெ.தொ |
|---|---|
| திரவ பெற்றோலிய வாயு | 198,907.416 |
| வாயு எண்ணெய்/ஜெட்A1/ கெஸொலைன்/ கெரொசின் | 2,192,736.589 |
| மசகு எண்ணெய் | 1,660,192.840 |
| எரிபொருள் எண்ணெய் | 377,706.612 |
| பேஸ் ஒயில் | 18,074.968 |

**கரையோர வெளிச்ச வீட்டு சேவைப் பிரிவு**

சர்வதேச கப்பல் பாதைகளுக்கு வசதிகள் வழங்கும் தென் மற்றும் மேற்கு கரையோர வெளிச்ச வீடுகளினது பராமரித்தல்கள் மற்றும் பழுதுபார்த்தல்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.

**கால்வாய்களில் அமைந்துள்ள வெளிச்ச மிதப்பிகள்**

வெளிச்ச மிதப்பிகளின் வழமையான பரீட்சிப்புகள் மற்றும் பராமரிப்புகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டன. தோண்டுவதற்கான வசதிகள் வழங்கப்படுவதற்கும் கொழும்புத் துறைமுக விரிவாக்கல் திட்டத்திற்கு அருகாமையில் எண்ணெய் குழாய்கள் மீள் பதிக்கப்படுவதற்கும். பிரதான தென்மேற்கின் பிரவேசமானது அடிக்கடி மாற்ற வேண்டியேற்பட்டது. கடல்சார் துறையின் CASA, SLAVO, LASO மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் நீரியல் ஆய்வுப் பகுதியினால் கிடைக்கப்பெறும் சுற்றுநிருபங்களுக்கேற்ப கடலகவியலாளர்கள் தகுந்தவாறு எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

**வருமானம் - 2012/ 2013 வெளிச்சவீட்டுக் கட்டணம்**

**ரூபா மில்லியன்**

| | 2011 | 2012 மதிப்பிடப்பட்ட | 2013 திட்டமிடப்பட்ட |
|---|---|---|---|
| ஒன்று சேர்ந்த மொத்தம் | 319.735 | 544.877 | 741.541 |

**துறைமுக கலப் பிரிவு**

கொழும்புத் துறைமுகத்துக்கு வருகை தரும் கப்பல்களுக்கான வழிகாட்டி மற்றும் நங்கூரக் கலங்கள் வழங்கல், கப்பல்களைக் கட்டி வைக்கும் பணியில் குழுக்களை ஈடுபடுத்துதல் துறைமுக கலப் பிரிவின் முக்கிய பணியாகும்.மேலும் பல்வேறு வேலைக் குழுக்களை தீவு மற்றும் தென் மேற்கு அலைதாங்கிகளுக்கு போக்குவரத்து செய்தல், துறைமுக நீர்ப் பகுதி சுத்தமாக வைத்திருத்தல், ஜிராப் மிதவை பாரமுயர்த்திகளினால் அதிக பாரம் தூக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. வழிகாட்டி மற்றும் நங்கூரக் கலங்களின் வழமையான பராமரித்தல்களும் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டன.

**நீரியல் அளவைப் பிரிவு**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் தேவைக்கேற்பவாறு சகல துறைமுகங்களிலும் அளவையாளர்கள் நிலம் மற்றும் நீரில் அளவை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

- உட்புகு கால்வாயின் ஆழம் அளவீடு செய்தல்
- தென் துறைமுக காணி அளவிடுதல் மற்றும் ஆழம் அளவீடு செய்தல்
- துறைமுக நகர பிரதேசத்தின் ஆழம் அளவீடு செய்தல்
- உட்புகு கால்வாயின் மிதப்பி அமைவிடங்களை ஆய்வு செய்தல்
- கொழும்பு துறைமுக படத்தின் மீளாய்வுப் பணிகள்
- கட்டுப்பாட்டு முனையின் ஆய்வு செய்தல் (தொடர்ச்சியாக)
- துறைமுக உள்ளக பாதை விரிவாக்கல் திட்டத்தின் ஆய்வு மற்றும் மட்ட நோக்குதல்
- துறைமுக அணுகு பாதை விரிவாக்கலின் மத்திய கோடு அடையாளமிடுதல் மற்றும் மட்ட நோக்குதல்
- ஐக்கிய கொள்கலன் முனைய மீளமைப்பின் நீரியல் மற்றும் காணி அளவீடு செய்தல்
- குத்தகை உடன்பாட்டின் ஆய்வுப் பணிகள்

**காலி துறைமுகம்**

- உத்தேச புதிய பாதையின் குறுக்குப் பகுதி மற்றும் அடையாளமிடுதல்
- ரூமஸ்ஸல துறைமுக காணி கைப்பற்றலின் அளவீடு நடவடிக்கைகள்
- உல்லாச படகுத் திட்டம் தொடர்பிலான பணிகளை ஆரம்பித்தல் மற்றும் விபரமான அளவீடு செய்தல்
- காலித் திட்டம் மேம்படுத்தும் ஆய்வுகள்
- காலித் துறைமுக வழக்கு தொடர்பான ஆய்வு மற்றும் எல்லைகளை நிர்ணயித்தல்

**திருகோணமலை துறைமுகம்**

- சிங்க புரையில் கைப்பற்றப்பட்ட காணிகளின் நில அளவைகள்
- டோக்கியோ சீமேந்து துறைமேடை மீதான நீரியல் அளவிடு
- குத்தகை திட்டம் தயார் செய்தலிலான ஆய்வுகள்

**ஒலுவில் துறைமுகம்**

- திட்டப் பகுதியின் காணி அளவீடுகள் மற்றும் கட்டுப்பாட்டு முனைகளினது பரீட்சிப்புகள்
- உள்ளக மற்றும் உட்புகு கால்வாய் பிரதேசத்தின் ஹய்றோலிக் ஆய்வுகள்
- குத்தகை உடன்பாட்டிற்கான நில ஆய்வு பணிகள்

**காங்கேசன்துறை துறைமுகம்**

- DGPSபாவனையின் மூலம் தேசிய வலு நிலைய இணைப்புக்கான கட்டுப்பாட்டு அளவீடுகள்
- ஓத அளவீடு நிர்மாணிப்பதற்கான நில மட்ட நோக்குதல் பணிகள்
- காங்கேசன்துறை துறைமுக செய்திட்டம் தொடர்பிலான இந்தியன் டிறேஜிங் கம்பனியுடன் இணைந்து ஆய்வு மேற்கொள்ளல்
- உள்ளக மற்றும் உட்புகு காலவாய்ப்பகுதியின் நிரியல் ஆய்வுயகள்
- இந்தியன் டிறேஜிங் கம்பனியுடன் இணைந்து தோண்டுவதற்கு முன்னரும் அதற்குப்பின்னரான கூட்டு நீரியல் ஆய்வுகள்

**மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம்**

- இலங்கை துறைமுக அதிகாரசபையின் 1 கட்டத்திற்கான நில அளவை திணைக்களத்தின் மேற்பார்வையில் திட்டப்பணிகள் மற்றும் குத்தகை பட்டியலின் அவசர வேலைகள்/
- நீர்த் தடாகம், பிரவேச கால்வாய் மீதான நீரியல் அளவீடுகள் மற்றும் மிதப்பிகளின் அமைவிடங்களை அடையாளமிடுதல்
- புதிய செயற்கை தீவின் மண் நிரப்புவதற்கு முன்னரான நீரியல் ஆய்வு

- முதலீட்டாளர்களுக்கான காணி தொடர்பிலான குத்தகை திட்டம் தயார் செய்தலின் ஆய்வுகள்
- மீள் குடியேற்றுவதற்கான “மணாஜீயாவ” காணியின் DGPS ஆய்வுகள்
- நில அளவை திணைக்களத்தின் மேற்பார்வையுடனான அளவீட்டுப்பணிகள்
- நிர்வாக கட்டிடத் தொகுதிக்கு அண்மித்த புதிய கட்டிடத்தின் அளவை மற்றும் அதற்கான பணிகள்
- துறைமுக செயற்பாடுகளுக்கான மணாஜீயாவ காணியின் ஆய்வுப்பணிகள்
- எண்ணெய்த் தாங்கித் தொகுதியின் உப பிரிவுகளின் அளவீட்டுப்பணிகள்
- துறைமுக வர்த்தக வலயம் தொடர்பில் DGPS பயன்பாட்டில் முழுப்பிரதேசத்திற்குமான மாதிரிப்படம் தயாரித்தல்
- திட்ட பொறியியலாளர்களினால் வழங்கப்பட்ட ஏனைய தொடர்புபட்ட ஆய்வு வேலைகள்

**கடல் மைல் பிரிவு**

கப்பல்களுக்கு பொருள் வழங்குவோர், லாஞ்ச் இயக்குபவர்கள், கடலக அளவையாளர்கள், சிறிய மற்றும் பாரிய பழுதுபார்த்தல் வேலைத்தளங்கள், எண்ணெய் மற்றும் எண்ணெய் தோய்ந்த நீர், குப்பைகள் அகற்றுவதற்கான வசதி மேற்கொள்பவர்களின் வருடாந்த பதிவும், அனுமதிப்பத்திரங்கள் வழங்கலும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

| அனுமதிப்பத்திரத்தின் பெயர் | வழங்கப்பட்ட தொகை | வருமானம் ரூபா |
|---|---|---|
| கப்பல்களை பழுதுபார்க்கும் அனுமதிப்பத்திரம் | 138 | 4,273,508.32 |
| டொக்யார்ட் அனுமதிப்பத்திரம் | 76 | 1,359,129.76 |
| அளவை அனுமதிப்பத்திரம் | 38 | 789,059.81 |
| கப்பல்களுக்கான பொருள்கள் வழங்குவோரின் அனுமதிப்பத்திரம் | 78 | 2,893,588.19 |
| படகு அனுமதிப்பத்திரம் | 42 | 1,384,491.83 |
| எஸ்.ஏ.ஜீ.ரீ மற்றும் ஏனைய அனுமதிப்பத்திரம் | 19 | 368,353.90 |
| **மொத்தம்** | | **11,068,131.81** |

## திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி

**கொழும்பு தெற்கு துறைமுக அபிவிருத்தி திட்டம்**

சர்வதேச கப்பல் துறையில் அதிகரித்து வரும் சேவைகளின் கேள்வித் தேவைப்பாடுகள் வழங்கப்படுவதற்கு கொழும்புத் துறைமுகம் விரிவாக்கப்படுதலின் அவசியப்பாடு இலங்கை அரசாங்கத்தினால் உணரப்பட்டுள்ளது.கொழும்புத் துறைமுக விரிவாக்கல் திட்டம் பின்வரும் இரண்டு கட்டங்களைக் கொண்டதாக இருக்கும்.

- புதிய துறைமுகத் தடாகம் மற்றும் கப்பலோட்ட கால்வாய் தோண்டுதல், மசகு எண்ணெய்க் குழாய் வழி மீள் பதித்தல் போன்ற துறைமுக உட்கட்டமைப்பு வசதிகள்.
- முனையங்கள் நிர்மாணித்தல் மற்றும் ஏனைய தொடர்புபடும் சேவைகள்.

**துறைமுக உட்கட்டமைப்பு வசதிகளின் வேலைகள்**

கொழும்பு துறைமுகம் விரிவாக்கல் செய்திட்டத்தின் கீழ் அமெரிக்க டொலர் 330 மில்லியன் மொத்த மதிப்பிடப்பட்ட நிர்மாண ஆகுசெலவில் துறைமுக உட்கட்டமைப்பு வசதிகளின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யும் திட்டம் தொடர்பில் இலங்கை துறைமுக அதிகாரசபை ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து 81.7% ஆசிய அபிவிருத்தி வங்கியினாலும் மீதி தொகையான 18.3% இலங்கை துறைமுக அதிகாரசபையினாலும் நிதி பங்களிப்பு செய்யப்படுகின்றது.

கொழும்பு துறைமுக விரிவாக்கல் செய் திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 2008 ஏப்ரல் 11 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு 48 மாதங்களுக்குள் நிறைவு செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. கொழும்பு துறைமுகம் விரிவாக்கும் செய்திட்டத்தின் பிரதான ஒப்பந்தக்காரர் வ/ப ஹய்யுண்டாய் இன்ஜினியரிங் கன்ரக்ஸன் அன்ட் கோபரேசன் கம்பனி ஆகும். இதற்கான ஆலோசகர் வ/ப ஸ்கொட் வில்சன் கம்பனி ஆகும் .

**துறைமுக உட்கட்டமைப்பு வசதிகளின் பிரதான பாகங்கள்**

- பிரதான அலைதாங்கி நிர்மாணித்தல்
- இரண்டாம் நிலையின் அலைதாங்கி நிர்மாணித்தல்
- பிரதான கால்வாய் வழி தோண்டுதல்
- நீருக்கடியிலான மசகு எண்ணெய் குழாய் வழி மீள் பதித்தல்
- வழிகாட்டி நிலையம் மற்றும் ஏனைய தொடர்புபடும் கட்டிடங்கள்
- பாதைகள் மற்றும் சேவை வசதிகளின் நிர்மாணங்கள்

**பிரதான பாகங்களினது முன்னேற்றம் பற்றிய சாராம்சம்**

இந்த செய்திட்டத்தின் திட்டமிடல்களுக்கேற்பவாறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு தரம், தன்மை, சுற்றாடல் மற்றும் சமூக விடயங்கள் தீர்க்கப்பட்டு ஆகுசெலவு மற்றும் கால வரையினுள் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

**முனையங்கள் நிர்மாணித்தல்**

**கிழக்கு கொள்கலன் முனையம் (ECT) - கட்டம் I**

கொழும்பு தெற்கு துறைமுக பிரதான அபிவிருத்தி திட்டத்தில் 18 மீட்டர் ஆழமான 03 கொள்கலன் நங்கூரத்தளங்களையுடைய 1200 மீட்டர் நீளமான துறைமேடையை கிழக்கு கொள்கலன் முனையம் கொண்டிருக்கும். கொழும்பு துறைமுகத்திலுள்ள கொள்கலன் கையாளல் பரிமாணத்தின் குறைபாடு நிவர்த்தி செய்யப்படும் பொருட்டு கிழக்கு கொள்கலன் முனைய அபிவிருத்தி திட்டத்தின் முதலாவது கட்டத்தில் தனி நங்கூரத்தளமொன்று நிர்மாணிக்கப்படுவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபையினால் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**உட்கட்டமைப்பு பணிகளின் பிரதான விடயங்கள்**

- பூர்வாங்க தோண்டுதல் மற்றும் நிரப்புவதற்கான தோண்டுதல்
- 30 மீட்டர் நீளமான பீலித் தொகுதி, 20 மீட்டர் அகலமாக பின்னோக்கி செல்லக் கூடிய பிரதேசம், 20 நிரல்களைக் கொண்ட பாதை, தடுப்புச் சுவர் மூடு சுவர் கொண்ட வெற்றிடமான பிரதேசத்தை உடைய 440 மீட்டர் நீளமான மேடைச் சுவர் அமைத்தல்
- பக்க பாரந்தூக்கிகளுக்கான பீலி மற்றும் சுவர்
- புனரமைக்கப்பட்ட நிலத்தில் கொள்கலன் முனையம்/ அடுக்கும் 12 உலர் வழிகள்,சுருட்டக் கூடிய பிரதேசம், முனையம் சுற்றில் அமைந்துள்ள 30 மீட்டர் அகலமான பாதை மற்றும் முனைய ட்ரக் வண்டிகள் நிறுத்துவதற்கான பகுதியையும் இது கொண்டிருக்கும்.
- வளைவான மூடு சுவர்
- சேவைகள் மற்றும் உபயோகங்கள் நுழையும் மற்றும் வெளியேறும் வாசல்கள், எரிபொருள் நிரப்பும் நிலையம், மின்சார வினியோக உப நிலையங்கள், கழிவு நீர் சுத்தகரிப்பு இயந்திர சாலை, தீயணைப்பு சேவையும் உள்ளடங்கும். நீர் சேமிப்பு மற்றும் மற்றும் வினியோக வலையமைப்பு, புயல் காற்று நீர் வெளியேறும் தொகுதியும் முனையத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**2013 ஆம் ஆண்டுகளின் போது முன்னேற்றம்**

பௌதீக ரீதியான முன்னேற்றம் - 22.4%
நிதிசார்ந்த முன்னேற்றம் - 17%

செய்திட்டம் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி (கட்டம் - I) 2014 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி ஆகும்.

**தென் கொள்கலன் முனையம் (SCT)**

நிர்மாணித்து, இயக்கி, ஒப்படைக்கும் அடிப்படையில் (BOT) கொழும்பு தெற்கு துறைமுகத்தின் முதலாவது முனையம் நிர்மாணிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| அபிவிருத்தியாளர் | - | CICT |
| ஆரம்பிக்கப்பட்ட திகதி | - | 2011.12.01 |
| நிர்மாணித்து தொழிற்படுத்தி பின்னர் கைமாற்றும் ஒப்பந்தத்தின் (BOT) நிபந்தனைக் காலம் | - | 35 வருடம் |
| திட்டத்தின் மதிப்பிடப்பட்டுள்ள ஆகு செலவு | - | அ.டொ. மில்லியன் 500 |
| துறைமேடைச் சுவரின் நீளம் | - | 1200 மீட்டர் |
| நங்கூரத்தளங்களின் எண்ணிக்கை | - | 3 - 4 |
| நீரின் ஆழம் | - | 18 மீட்டர் |
| கொள்ளளவு | - | 2.4 மில்லியன் இருபது சம அலகுகள் |
| நி.தொ.கைமாற்றல் ஒப்பந்தம்(BOT) கைச்சாத்திடப்படல் | - | 12.08. 2011 |
| நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்ட திகதி | - | 16.12. 2011 |
| கையாளல் ஆரம்பிக்கப்படும் திகதி | - | 05.08.2013 |
| மேடைச் சுவரின் முதல் 600 மீட்டர் | - | 2014 மே |
| முழு முனையமும் | - | 2016 டிசெம்பர் |

**தற்போதைய நிலைமை**

காணி சீர்திருத்தும் பணிகள், நிர்மாணங்கள் மற்றும் நீருக்கடியிலான நிர்மாணங்களுக்கு நீர் தடுப்புக் கூடம் அமைத்தல், நிர்வாகக் கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் முடிவடைந்துள்ளன துறைமேடை பாரந்தூக்கிகள் பொருத்தப்பட்டுள்ளன. புறப்பாதுகாப்புச் சுவர் மற்றும் 600 - 1200 மீட்டர் வரையிலான மேடைச் சுவரின் நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**உத்தேச கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தித் திட்டம்**

**அறிமுகம்**

கொழும்பு துறைமுகத்திற்கு அண்மித்ததாக உத்தேச துறைமுக நகரம் நிர்மாணிக்கப்படுவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை கவனத்தில் கொண்டுள்ளது உத்தேச துறைமுக நகரில் ஆரம்பர ஹோட்டல்கள், வீட்டுக் தொகுதிகள், கடைத் தொகுதிகள், தனியார் துறைக்கான நவீன அலுவலக இடவசதிகள், ஓய்வு நேர பொழுது போக்குவதற்கான உல்லாசப் படகுகள் மற்றும் வாகன ஓட்டப் பந்தய பாதைகள் போன்றவை இதில் அமையப் பெறும்.

செய்திட்டப் பிரேரிப்பாளரினால் திட்டத்தின் முதலாம் கட்டத்தின் செலவினம் பொறுப்பேற்கப்படுவதோடு இவரின் ஆரம்ப முதலீடு மற்றும் இலாபம் தொடர்பில் நிரப்பப்பட்ட காணியில் ஒரு பகுதி மாத்திரம் திட்டப் பிரேரிப்பாளரினால் எதிர்பார்க்கப்படுகின்றது.

**திட்டம் தொடர்பான சாராம்சம்**

**கட்டம் - I**

- அலைதாங்கி நிர்மாணித்தல்
- 233 ஹெக்டயார் நிலம் மீள் நிரப்புதல்

- பாதை வலையமைப்பு, நீர் வழங்கல், வடிகாலமைப்புத் தொகுதி, மின்சாரம், தொலைத்தொடர்பு மற்றும் தரவுத் தொடர்பாடல் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல்
- திட்டத்தின் காலம் ; 03 வருடங்கள்
- திட்டத்தின் ஆகுசெலவு அ.டொலர் 1,337 மில்லியன் ஆகும். திட்டப் பிரேரிப்பாளரினால் திட்டத்தின் ஆகுசெலவு பொறுப்பேற்கப்படும்.

**கட்டம் – II**

நவீன பல்மாடிகளைக் கொண்ட அலுவலகங்கள், வசிப்பிடக் கட்டிடங்கள், ஹோட்டல்கள், கடைத்தொகுதிகள், உண்டிச்சாலைகள், பொழுதுபோக்கு வசதிகளைக் கொண்ட உல்லாசப் படகுகள், படகு நிறுத்தும் இடங்கள் மற்றும் ஓட்டப் பந்தைய பாதைகள் உள்ளடங்கலாக நிரப்பப்பட்ட காணியில் அபிவிருத்தி மேற்கொள்ளல்.

**தற்போதைய நிலைமை**

- விபரமான திட்டப் பிரேரணை அறிக்கை பெற்றுக்கொள்ளப்படுவதற்காக அபிவிருத்தியாளருடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கும் நிபந்தனைகள் (TOR) தயார் செய்வதற்கும் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான மீளாய்வுக் குழு (SCARC) அனுமதி வழங்கியுள்ளது.

- மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் உதவியோடு சுற்றாடல் தாக்க மதிப்பீடு பூர்த்தி செய்யப்பட்டு கரையோர பாதுகாப்புத் திணைக்களத்தின் நிபந்தனைகளுக்குட்பட்டதாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- மண் அகழ்வதற்கான அனுமதிப் பத்திரம்

  குழிப்பிரதேசத்தில் மண் எடுக்கப்படுவது தொடர்பில் பூர்வாங்க சுற்றாடல் மதிப்பீடு மேற்கொள்ளப்படுவதற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபை விதிக் கட்டளை ஒன்றை வழங்கியது.சுற்றாடல் மதீப்பீட்டறிக்கை மத்திய சுற்றாடல் அதிகார சபையிடம் வழங்கப்பட்டது.பூகோள ஆய்வு மற்றும் சுரங்கப்பணியகத்தினால் மண் ஆய்வு அறிக்கை பெறப்படுவதற்காக மண் அகழ்வு அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்கப்பட்டது.அறிக்கையானது பூகோள ஆய்வு மற்றும் சுரங்கப்பணியகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.பூர்வாங்க சுற்றாடல் மதீப்பீட்டுக் குழுவினால் புறம்பான தோண்டும் குழிப் பிரதேசம் பெறுவதற்கு முன்மொழிந்ததோடு பூகோள ஆய்வு மற்றும் சுரங்கப்பணியகத்தின் நிபந்தனைக்குட்பட்டவாறு புறம்பான தோண்டும் குழிப்பிரதேசம் வழங்கப்படுவதற்கு இணக்கம் ஏற்பட்டது.புறம்பான தோண்டும் குழிப்பிரதேசம் பெறப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன,

- உத்தேச பிரதேசத்தில் தொல்பொருளியல் தாக்க மதிப்பீடு ஆய்வு செய்யப்பட்டு தொல் பொருள் திணைக்களத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

- பின்வரும் அதிகார சபைகளுக்கு செய்திட்டம் தொடர்பில் அறிவிக்கப்பட்டு அவற்றின் சேவைகளை பெறுவதற்கான பேச்சுவார்த்தைகளும் நடாத்தப்பட்டன.
  இலங்கை மின்சார சபை -மின்சார வினியோகம்
  வீதி அபிவிருத்தி அதிகார சபை-பாதை வலையமைப்பு மற்றும் வீதிப்போக்குவரத்து
  நீர் வழங்கல் அதிகார சபை-நீர் வினியோகம்
  கொ.மாநகர சபை மற்றும் பாரிய கொ நீ.மு.திட்டம்-கழிவகற்றல் முறை மற்றும் வடிகான்.

- இலங்கை துறைமுக அதிகார சபை மற்றும் திட்டப் பிரேரிப்பாளருக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

- திட்டப்பிரேரிப்பாளரினால் முன்வைக்கப்பட்ட விபரமான திட்டப்பிரேரணையானது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் (TEC) மதிப்பிடப்பட்டது. தொழில்நுட்ப மதிப்பீட்டறிக்கை

அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக்கான குழுவிடம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைக்கமைய அவர்களின் பிரேரணைக்கு ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய குறித்த பிரதேசம் தொடர்பில் திட்டப்பிரேரளிப்பாளருடனான கலந்துரையாடல்களை முன்னெடுக்குமாறு அமைச்சரமையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக்கான குழுவினால் அறிவுறுத்தப்பட்டது.

- தொழில்நுட்பம், வர்த்தகம், நிதி சார்ந்த மற்றும் சட்ட விடயங்களின் கீழ் திட்டப்பிரேரிப்பாளருடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் பல கலந்துரையாடல்களை மேற்கொண்டது. இரண்டாவது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அமைச்சரமையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக்கான குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டு தீர்மானங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

- விபரமான திட்டப்பிரேரணை தயாரித்தலானது இறுதியான நிதி சார்ந்த மற்றும் சட்ட தேவைப்பாடுகளுக்கமைய நடைபெறும்.

**காலி துறைமுக அபிவிருத்தித் திட்டம் (JICA நிதிய கடன் இல.SL-p-85)**

இதன் பூரண திட்டத்தில் அலைதாங்கிகள் நிர்மாணித்தல், பிரவேச கால்வாய் தோண்டுதல் மற்றும் முனையம் முன்னாலான திருப்பும் தடாகம் தோண்டுதல் உள்ளடங்கும். வடிவமைப்பு பணிகள் தொடர்பில் வ.ப ஒரியன்டல் கன்ஸல்டன் கம்பெனியுடன் புதிய ஒப்பந்தமொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அலைதாங்கியின் நிர்மாண நடவடிக்கைகள் தற்போதிருக்கும் JICA நிதியில் நிர்மாணிக்கப்படுவதோடு கட்டம் 11 இல் (அரச/தனியார் கூட்டு (PPP) அடிப்படையின் பல்வித பணி நங்கூரத்தளமொன்று அபிவிருத்தி செய்யப்படும்.

அங்கீகரிக்கப்பட்டுள்ள கடன் தொகை ஜப்பான் யென் மில்லியன் மில்லியன் 14,495 ஆகும்.

**தற்போதைய நிலைமை**

வ/ப ஒரியன்டல் கன்ஸல்டன் கம்பெனியினால் பிற்சேர்க்கையுடன் திட்ட அறிக்கையின் வரைவு மற்றும் திட்டப் பிரேரணையின் இறுதி அறிக்கை அடிப்படையாகக் கொண்டு கேள்விலை ஆவணங்கள் I,II,III,IV,மற்றும் IV பாகங்களை கொண்டதாக தயாரிக்கப்பட்டுள்ளன.

**இலங்கை துறைமுக அதிகாரசபைக்கான உத்தேச பிரதான அலுவலகம்**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் சேவைகள் ஒரே இடத்தில் மேற்கொள்ளப்படும் நோக்கில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பிரதான அலுவலக கட்டிடம் நிர்மாணிக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. முன்னர் தீர்மானிக்கப்பட்ட கனல் முனையத்தில் அமைந்துள்ள பிரதேசத்திற்குப் பதிலாக துறைமுக வளவினுள் புதிய இடமொன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது. நிலப் பிரதேசம் 31,000 சதுர மீட்டர்களாகும்..

**தற்போதைய நிலைமை**

புதிய இடத்தின் மண் பரிசோதனைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 2014 ஆண்டின் சனவரி மாதம் பணிகள் நிறைவு பெறும்

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி நிதி வழங்குவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதோடு இது தொடர்பில் இலங்கை துறைமுக அதிகாரசபை மீளாய்வு செய்து வருகின்றது.

**திருகோணமலை துறைமுக அபிவிருத்தி திட்டம்**

இதுவரை உரிய முறையில் பயன்படுத்தப்படாதுள்ள இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சொந்தமான 3000 ஏக்கர் நிலம் பொருளாதார வளங்களின் வலுப்படுதலின் மூலம் இலங்கையின் கிழக்கு பிரதேசம் திருகோணமலை நகர அபிவிருத்தி மத்திய நிலையமாக அபிவிருத்திசெய்தல்.

வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை 40 மில்லியன் ரூபா ஆகும்.

**தற்போதைய நிலைமை**

கைத்தொழில் வலயத்துக்கான பிரேரணைகள் கோரல் முடிவடைந்துள்ளது. 09 பிரேரணைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இதில் எட்டு பிரேரணைகள் மாத்திரம் பூர்வாங்க மதிப்பீடுகளான தகைமைகளைப் பூர்த்தி செய்திருந்தன. பூர்வாங்க மதிப்பீடுகள் நிறைவுபெற்று இறுதியான மதிப்பிடல்களுக்கு ஐந்து பிரேரணைகள் தகுதி பெற்றிருந்தன. நிதிசார் மதிப்பிடலின் செயற்பாடு நடைபெற்று வருகின்றன.

**உத்தேச பேலியகொட களஞ்சியம் மற்றும் முனையத் தொகுதி**

கொழும்பு பாதைகளின் நெருக்கடி குறைக்கப்படுவதற்காகவும் பங்காளர்களுக்கு திறனான சேவைகள் வழங்கப்படுவதற்காகவும் களஞ்சியத்தொகுதி மற்றும் முனையத் தொகுதி பேலியகொடையில் அமைக்கப்படும்.

பூரண கொள்கலன் கையாளலின் ஒரு பகுதி பெலியகொடைக்கும் குறை கொள்கலன் கையாளல் உத்தேச புதிய களஞ்சியத் தொகுதிக்கும் மாற்றப்படும்.

உத்தேச களஞ்சியம் மற்றும் முனையத் தொகுதி தொடர்பில் பேலியகொடையில் அமைந்துள்ள 28 ஏக்கர் நிலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. களஞ்சிய முனையம் புகையிரத பாதையூடாக துறைமுகத்துடன் தொடர்புபடுத்தப்படும்.

**தற்போதைய நிலைமை**

மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிலத்தின் மண் பரிசோதனை 2012 நவம்பர் 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு நிலத்தின் மேற்றளம் மேம்படுத்தும் திட்டத்தின் இறுதி அறிக்கை மொரட்டுவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் எச்.எஸ். திலகசிறியினால் முன்வைக்கப்பட்டது. இறுதி அறிக்கையின் மதிப்பீட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## தென் துறைமுக அபிவிருத்தி

2006 ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட இப்பகுதியினால் பல பிரதான செய்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்தின் முதலாம் மற்றும் இரண்டாம் கட்டங்களில், கப்பல்களுக்கான எரிபொருள் வழங்கும் மற்றும் எண்ணெய்த் தாங்குத் தொகுதி திட்டம், மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்திற்கான காணிகள் பெறுதல், வர்த்தகங்களுக்கான பிரேரணைகள் கோரல் போன்றவை அடங்கும். பிரதான திட்டங்களில் வெற்றிகர முன்னேற்றங்கள் அடையப்பெற்று மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுக முதலாம் கட்ட நிர்மாணங்களின் பின்னர் தற்போது கையாளல் மேற்கொள்ளும் துறைமுகமாக செயற்படுகின்றது. புதிதாக நிர்மாணிக்கப்பட்ட “சயுருபாய” நிர்வாகக் கட்டிடத்தொகுதி அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் இவ்வருடத்தில் திறந்து வைக்கப்பட்டது.

நிர்மாணப் பணிகள் 2012 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2013 ஆண்டினுள் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி அடையப் பெற்றுள்ளது. நிர்மாணப் பணிகள் முடிவடைந்ததன் பின்னர் 1300 மீட்டர் நீளமான கொள்கலன் முனையம், 460 மீட்டர் நீளமான சேவை முனையம் 1300 மீட்டர் நீளம் கொண்ட பொது முனையம் போன்றவற்றை துறைமுக கையாளல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தக் கூடியதாக இருக்கும். மேலும் இரண்டாம் கட்டத்தில் குறித்த எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளும் பிரதேசத்தினுள் 42 ஹெக்டயார் கொண்ட செயற்கை தீவொன்றும் அயைப்பெறவுள்ளன.

2012 ஆண்டில் கப்பல்களுக்கான எரிபொருள் மற்றும் எண்ணெய்த் தாங்கித் தொகுதியின் நிர்மாணப் பணிகள் நிறைவு பெற்று பூர்வாங்க செயற்படுத்தல் 2013 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. வ/ப லிட்றோ காஸ் ட்ர்மினஸ் லங்கா தனியார் கம்பனி மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கிடையிலான திரவ வாயு சேவையின் கையாளல்களுக்கான குத்தகை

உடன்படிக்கையொன்றும் இவ்வருடத்தில் கைச்சாத்திடப்பட்டது. இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துடன் விமானங்களுக்கான எரிபொருள் வழங்குதல் தொடர்பிலான உடன்படிக்கை ஏற்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இலங்கை துறைமுக அதிகாரசபையினால் எரிபொருள் வழங்குதலின் கையாளல் மேற்கொள்ளப்படுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

புதிய நிறுவனம் ஸ்தாபிக்கப்படும் வரை மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்தின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் தெற்கு துறைமுக அபிவிருத்தி பகுதியினால் முகாமைத்துவம் செய்யப்பட்டன. இக்காலப் பகுதியினுள் ரோ ரோ கப்பல்கள் அடங்கலாக குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான கப்பல்கள் இத்துறைமுகத்தை வந்தடைந்துள்ளன. முன்னைய ஆண்டின் பிரேரணை கோரல் செயற்பாட்டின் மீது முதலீட்டாளர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகளுக்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளல் போன்றவையும் தெற்கு துறைமுக அபிவிருத்தி பகுதியினால் மேற்கொள்ளப்படுகின்றன. அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட 07 பிரேரணைகளும் துறைமுக துறைமுக அதிகாரசபையுடன் முன்னர் கைச்சாத்திடப்பட்ட 03 உடன்பாடுகளும் இதனுள்ளடங்கும்.

இரண்டாவது பிரேரணை கோரல் செயற்பாட்டில் சுமார் 1000 அமெரிக்க டொலர் மில்லியன் தொகை முதலீடு செய்யக்கூடிய 06 முதலீட்டாளர்கள் தெரிவு செய்யப்பட்டு அதற்கான அங்கீகாரமும் பெறப்பட்டது. தெற்கு துறைமுக அபிவிருத்தி பகுதியினால் இந்த முதலீட்டாளர்களோடு தடைநீக்கல் வசதிகள்/சேவைகள் பெறப்படுவதற்கு இவ்வாண்டினுள் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மிக விரைவில் முதலீட்டாளர்களோடு ஒப்பந்த உடன்பாடுகள் கைச்சாத்திடப்படும்.

## சிவில்

துறைமுக பாவனையாளர்களுக்கு நட்பு ரீதியான சூழல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கட்டடங்கள் திருப்திகரமான நிலையில் பேணிச் செல்லப்படுவதில் சிவில் பராமரிப்பு பகுதி ஈடுபட்டுள்ளது. இந்த நோக்கம் அடைந்துகொள்ளப்படுவதற்காக வருடம் பூராகவும் சிறந்த சேவைச் சுற்றாடல் பேணப்படுவதற்கு சிவில் பகுதியினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சிவில் பொறியியல் பகுதியின் உள்ளடக்க விடயங்கள் தவிர்ந்த இலங்கை துறைமுக அதிகாரசபையின் முகாமைத்துவத்தின் விருப்பத்திற்கேற்ப சிறிய அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பணிகளின் முன்னேற்றம் திருப்திகரமான நிலையிலுள்ளதோடு வெளி ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்த வேண்டியிருந்த குறிப்பிடத்தக்க நிதித் தொகை மீதப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு மேலதிகமாக "ஒண்றிணைந்த சமூக பொறுப்புக்கள்" கீழ் சில கருத்திட்டங்கள் சிவில் பொறியியல் பகுதியினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

**பராமரிப்பு நடவடிக்கைகள்**

மின்சாரம் மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகள் தவிர்ந்த அனைத்து துறைமுகங்களினது கட்டிடங்கள் துப்புரவு செயதலிலிருந்து பராமரிப்பு வரையிலான அதன் பொதுவான அன்றாட பராமரிப்புப் பணிகள் தெற்கு மற்றும் வடக்கு பிரிவுகளினால் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட முறைகளுக்கேற்ப நடைமுறைப்படுத்தப்பட்டதோடு ஏனைய பராமரிப்புப் பணிகள் சம்பந்தப்பட்ட பிரிவுகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

துறைமுக அமைவுகள் மற்றும் ஏனைய துறைமுகங்களினது அனைத்து வெளிச்சவீடுகளின் பராமரிப்புகள் கடல் சார்ந்த நிர்மாணப் பிரிவினாலும் தோண்டும் பிரிவினால் துறைமுகத்தின் ஆழமும் பராமரிக்கப்படுகின்றன. ஜய கொள்கலன் முனைய பராமரிப்புகள் ஜய கொள்கலன் பராமரிப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. ஏனைய பிரதான அமைவுகள் பிரதான வேலைக் கண்காணிப்பாளர் பிரிவினால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. துறைமுக அதிகாரசபையின் வீட்டுத் தொகுதியின் வசதிகள் வீட்டுப் பிரிவினால் பராமரிக்கப்பட்டு வருகின்றன

**சிறிய அபிவிருத்தி நடவடிக்கைகள்**

துறைமுக பாதை விரிவாக்கல் திட்டத்தில் சேவை வழங்கலுக்காக ஒதுக்கப்பட்ட நிலப் பிரதேசத்தின் ஒரு பகுதியின் பராமரிப்புகள் உள்ளக ஊழியர்களினால் மேற்கொள்ளப்பட்டன. பாதை ஒப்பந்தக்காரரின் தேவைப்பாடுகள் தொடர்பில் உத்தேச பாதை விரிவாக்கலுக்கு தேவையான அனைத்து வசதிகளும் பொறியியல் பகுதியினால் நிறைவேற்றப்பட்டன.

கொச்சிக்கடை உத்தேச புதிய சமையலறையின் புதுப்பித்தல் பணிகள் சர்வதேச தரத்திற்கேற்ப சிவில் பொறியியல் பகுதியினால் மேற்கொள்ளப்பட்டன.

பராமரிப்பு நடவடிக்கைகள் தவிர்ந்த கொழும்பு துறைமுகத்தினுள் அநேக நிர்மாணிப்புகள் சிவில் பொறியியல் பகுதியினால் செய்யப்பட்டுள்ளன.

ஜய கொள்கலன் முனைய மேம்படுத்துதல் சிவில் பொறியியல் பகுதியினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய பணியாகும். இதுவரை பணிகளின் 25% முடிவடைந்துள்ளன.

## மின்சாரம் மற்றும் இலத்திரனியல்

இலங்கை துறைமுக அதிகாரசபைக்குட்படும் சகல துறைமுகங்களினது அனைத்து பொறியியல் திட்டங்கள், மின்சார வலு மற்றும் தொடர்பாடல் பொறியியல் துறைகளின் வசதிகள் திட்டமிடுதல், முகாமைத்துவம், நடைமுறைப்படுத்தல், வசதிகள் பேணல் தொடர்பில் மின்சாரம் மற்றும் இலத்திரனியல் பகுதி பொறுப்பாகவுள்ளது.

உலகில் ஏனைய சர்வதேச கேந்திர நிலையிலான துறைமுகங்களுக்கு சமனான முறையில் துறைமுக நடவடிக்கைகள் மற்றும் தொடர்புபடும் சேவைகளில் 95% நிறைவேற்றும் பணியில் மின்சாரம் மற்றும் தொடர்பாடல் துறைகளின் அனைத்து முக்கிய சேவைகள் பேணிச் செல்லலில் பிரதான பொறியியலாளர் மற்றும் இரண்டு பிரதி பொறியியலாளர்களின் கீழ் தகைமைபெற்ற தொழில்சார் மின்சார தொடர்பாடல் பொறியியலாளர்கள் கொண்ட குழுவினால் 24 மணித்தியாலம் பூராகவும் சேவையில் ஈடுபட்டுள்ளது.

உத்தேச கிழக்கு கொள்கலன் முனையத்தின் திட்டமிடுதல் மற்றும் நிர்மாணங்களுக்கு மின்சார பொறியியலாளர்கள் அவர்களின் அறிவு மற்றும் அனுபவம் ஆகியவற்றில் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்

**மின்சார வலு பொறியியல் துறையினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**

- இலங்கை மின்சார சபையிலிருந்து பெறப்படும் 11 கி.வொட் மின்சாரம் வினியோகித்தல் நிறுவப்பட்டுள்ள மொத்த கொள்ளவு 18 மெகா வொட் ஆகும்.
- குறை விசை கொண்ட சகல வலு நிறுவுதல்களினதும் மின்சார உதிரிகளினதும் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புகள்.
- சேறுவாரி, இழுவைக் கலங்களினதும் ஏனைய மிதக்கும் கலங்களினதும் மின்சார உபகரணங்களின் பராமரித்தல்கள்.
- கரையோர நங்கூரத்தள முனைய பாரந்தூக்கிகளினது மின்சார உபகரணங்களின் பராமரித்தல்கள்.
- கப்பல்களின் தொகை பிரிப்பு சரக்குகளைக் கையாளும் பாரந்தூக்கிகளினது பராமரித்தல்கள்.
- மின்சார மோட்டார்கள் (AC& DC) மற்றும் கொள்கலன் பாரந்தூக்கிகளின் ஏனைய உபகரணங்களினது பழுதுபார்த்தல்கள்.
- 15.5 மெகா வொட் மொத்த கொள்ளளவினைக் கொண்ட எதிர்பார்ப்பு சேவையிலுள்ள மின்சார பிறப்பாக்கிகளின் பராமரிப்புகள்
- 11 கி.வொட் கொண்ட நிலத்திற்குக் கீழான மின்சாரக் கம்பி வலையமைப்பு நிறுவுதல், பராமரித்தல் மற்றும் அதன் பின்னரான பிழைகளை சீர் செய்தல்.

- குளிரூட்டல் தொகுதியின் திட்டமிடுதல், நிறுவுதல், பராமரித்தல்.
- 11 கி வொட் பெறும் மற்றும் 03 வினியோக நிலையங்களின் மேம்படுத்துதல்கள்.

**இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் பொறியியல் துறையினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**

- அதியுயர் வானொலி அலைவரிசை கொண்ட (WIFI) வலையமைப்பின் திட்டமிடல் மற்றும் பராமரித்தல்கள் (கடல் அலைவரிசை).
- கொள்கலன் முனையத்தில் 2.4 கெகா வொட் வை பை (2.4 GHZ WiFi) தரவு தொடர்பாடல் வலையமைப்பின் திட்டமிடல் மற்றும் பராமரித்தல்.
- கொள்கலன் முனையத்தில் வானொலி அலைவரிசை அடையாளம் காணும் தொகுதி (RFID) பராமரித்தல்.
- ஒளி நார் (optical fiber) வலையமைப்பு மற்றும் தரவு வலையமைப்பு செயற்பாட்டு நிலையத்தின் திட்டமிடல் மற்றும் பராமரித்தல்.
- 2000 தொலைபேசி வழிகளைக் கொண்ட துறைமுக தொலைபேசி PABX தொகுதியின் திட்டமிடல் மற்றும் பராமரித்தல்.
- ராடார், எதிரொலி மானி (Echo Sounder) ,செய்மதியூடான தொடர்பாடல் சாதனம், இடம் காணும் திசை காட்டும் முறைமை (DGPS) அடிப்படையிலான அளவீட்டுத் தொகுதி போன்றவை உள்ளடங்கலான கப்பலோட்டத் தொகுதிகளின் பராமரித்தல்.
- CCTV நடமாட்டத் தொகுதிகளின் திட்டமிடல் மற்றும் பராமரித்தல்.
- இருக்கும் ஒளியியல் பைபர் வலையமைப்பு நீடிக்கப்படுதல்.
- அதியுயர் அலைவரிசை (VHF) கொண்ட டுப்லெக்ஸ் (Duplex)கண்காணிப்பு வீடியோவுக்கு இடமளிக்கப்படுவதற்காக குரல் தொடர்பாடல் (Voice Communication) வசதிகளை அதிகரித்தல்.

## ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு

தேவைப்படும் நிர்மாண அமைப்பு தயாரித்தல் மற்றும் சம்பந்தப்பட்ட கருத்திட்டங்கள் முகாமைத்துவம் செய்தல் சிவில் பொறியியல் பகுதியின் பிரதான பொறுப்பாகும். பிரதான வர்த்தக நடவடிக்கைகளுக்கு வசதிகள் வழங்கும் நங்கூரத்தளங்கள், துறைமேடைகள், கட்டிட அமைப்புகள்,கட்டிடங்கள் மற்றும் பாதைகள் போன்ற துறைமுக உட்கட்டமைப்பு வசதிகள் வழங்குதல் போன்றவை இதற்கு உதாரணமாகக் காட்டமுடியும்.மேலும் அனைத்து பிராந்திய துறைமுகங்கள் உள்ளிட்டதாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் சகல பகுதிகளினதும் பராமரிப்பு மற்றும் அபிவிருத்திகளுக்குத் தேவையான அனைத்து வடிவமைப்பு மற்றும் வரைதல்கள், இப்பகுதியினால் ஆற்றப்படுகின்றன. விலைகோரல் செயற்பாடு, ஆலோசனைச் சேவைகள் நிர்மாண மேற்பார்வை மற்றும் அவ்வாறான கருத்திட்டங்களின் தரக் கட்டுப்பாடு மற்றும் ஒப்பந்த முகாமைத்துவம் கருத்திட்ட முகாமைத்துவத்தினுள் அடங்கும்.

மேற்குறிப்பிடப்பட்டவற்றை தவிர முன்வார்ப்பு முனையத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்த ஊழியர்களின் உதவி நேரடியாக பயன்படுத்தப்பட்டு செய்யக் கூடிய நிர்மாணத் திட்டங்களும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன.

**2013 வருடத்தில் இப்பகுதியினால் செயற்படுத்தப்பட்ட பிரதான பணிகள் பின்வருமாறு**

**ஐக்கிய கொள்கலன் முனையத்தின் பழுதுபார்ப்புப் பணிகள்**

முனையம் முற்றாக கையாளல் மேற்கொள்ளப்படுவதற்காக 127 மீட்டர் நீளமான மேடைச் சுவர், வட மேடைச் சுவரின் நிர்மாண அழிவடைதலை சீர்செய்தல், ஐக்கிய கொள்கலன் முனையத்தின் மேற்கு முனையிலிருந்து 50 மீட்டர் தூரத்திலுள்ள முனையத்தில் ஏற்பட்டுள்ள அழிவடைதலை புனரமைப்பதற்காக (127x50 மீட்டர்) அத்தியாவசிய பழுதுபார்ப்புப் பணிகள் பொறுப்பேற்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

ஐக்கிய கொள்கலன் முனையத்தின் பழுதுபார்த்தல் பணிகள் ரூபா 372 மில்லியன் மொத்த கிரயத்துக்கு வெற்றிகர ஒப்பந்தக்காரரொருவருக்கு வழங்கப்பட்டது. ஜப்பான் அரசின் திட்டங்கள் சாராத நிதியத்தின் கீழ் இக் கருத்திட்டத்துக்கு 400 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது. 2013 மார்ச் மாதத்தில் 357.2 மில்லியன் ரூபா செலவில் கருத்திட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

**துறைமுக உள்ளக பாதைகள் விரிவாக்குதல்**

கொழும்பு தெற்கு துறைமுக முனையம் முடிவடைதலுடன் ஏற்படும் பாதைகளின் நெரிசல்களுக்கான தீர்வாக கொழும்பு துறைமுக உள்ளக பாதை மற்றும் துறைமுக அணுகு வீதி விரிவுபடுத்தலின் திட்டமிடல்கள் மற்றும் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

0.6 கி. மீட்டர் கொண்ட மேற்றளம் பதித்தல், பாதையின் அடையாளமிடுதல்கள் மற்றும் 2.0 கி. மீட்டர் கொண்ட படலம் வரை பாதை நிறைவு செய்யப்பட்டுள்ளது.

**காலி துறைமுகத்தில் உல்லாச படகுத்தளம் நிர்மாணித்தல்**

காலியில் அமைந்துள்ள வரலாற்று ரீதியான இடங்களுக்கு பெறுமதி சேர்க்கும் வகையில் நாட்டினுள் சுற்றுலாத் துறை அபிவிருத்தி செய்வதன் மூலம் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் காலி சுற்றுலா துறைமுகமாக அபிவிருத்தி செய்யப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. துறைமுகம் நோக்கி பெருந்தொகையிலான உல்லாசப் படகுகளை கவருவதற்கும் சுற்றுலாத் துறையின் மேம்பாடு தொடர்பில் அங்கிருக்கும் துறைமுக நிலத்தினுள் சம்பந்தப்பட்ட துணைச் சேவைகள்/வசதிகளுடன் நிர்மாணிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. நிர்மாணப் பணிகள் பல கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ரூபா 84 மில்லியன் முழு ஆகுசெலவிற்கு மேடைச் சுவர் நிர்மாணிப்பதற்கு பூர்வாங்க நிர்மாணப் பணிகள் வெற்றிகர ஒப்பந்தக்காரரொருவருக்கு வழங்கப்பட்டு நிர்மாணப் பணிகளில் 60% பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

**காலி துறைமுகத்தில் வேலைத்தள கட்டடம் அமைத்தல்**

உல்லாசப் படகுத்தளம் அமைக்கப்படுவதன் காரணமாக வேறு இடத்திற்கு கொண்டு செல்லப்பட வேண்டியுள்ள இருக்கும் வசதிகள் கட்டடங்கள் அடங்கலான வேலைத்தள கட்டடம் வேறு இடத்துக்கு கொண்டு செல்லப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது, பிரதான உருக்கு இரண்டு மாடி கொங்கிறீட் அமைவுகளை இது கொண்டிருக்கும். ரூபா 52 மில்லியன் மொத்த கிரயத்தின் நிர்மாணம் வெற்றிகர ஒப்பந்தக்காரரொருவரிடம் வழங்கப்பட்டு பணிகளில் 10% நிறைவு செய்யப்பட்டுள்ளன.

**கொழும்பு துறைமுகத்தில் உத்தேச தீயணைப்புப் படைக் கட்டடம் அமைத்தல்**

துறைமுக உள்ளக பாதை விரிவாக்கும் செய்திட்டத்தின் கீழ் இருக்கும் தீயணைப்புப் படைக் கட்டடம் கப்பல் சரக்கு நிலைய இலக்கம் 01 க்கருகில் (CFS 01) அடையாளம் காணப்பட்டுள்ள இடத்துக்கு கொண்டு செல்லப்பட வேண்டியுள்ளது. ரூபா 50 மில்லியன் முழு ஆகுசெலவில் வெற்றிகர ஒப்பந்தக்காரரொருவரிடம் ஒப்படைக்கப்பட்டு பணிகளில் 40% நிறைவு செய்யப்பட்டுள்ளன.

**துறைமுக அணுகு பாதை விரிவாக்குதல்**

கொழும்பு துறைமுகத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக அதிகரித்த வாகன நெருக்கடியினைக் கவனத்திற் கொண்டு கொழும்பு தெற்கு துறைமுக அபிவிருத்தி செய்திட்டத்தினால் ஏற்படக் கூடிய பாதைகளின் நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு இருக்கும் துறைமுக அணுகு பாதை விரிவாக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. துறைமுக அணுகு பாதையின் மண் பரிசோதனைகள் நிறைவு பெற்றுள்ளன. மண் மேம்பாடு மற்றும் துறைமுக அணுகு பாதை விரிவாக்குதல் தொடர்பிலான திட்டங்கள் மற்றும் விலைகோரல் ஆவணங்கள் தயார் செய்யப்பட்டு வருகின்றன.

**புளூமெண்டல் பாதையின் பாலம் விரிவாக்குதல்**

துறைமுக அணுகு பாதை விரிவாக்குதலுக்கு இணையாக இருக்கும் பாலம் 06 நெறிகளாக விரிவாக்கப்பட வேண்டுமென அடையாளம் காணப்பட்டுள்ளது திட்டமானது, மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திடம் (CECB) ஒப்படைக்கப்பட்டு செய்திட்டத்தின் உள்ளடக்கங்களின் மீது விலைகோரல் ஆவணம் தயார் செய்யப்பட்டு வருகின்றது.

**பின்வரும் செய்திட்டத்தின் ஒப்படைப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன**

- கொழும்பு துறைமுகத்தின் உள்ளக பாதை விரிவாக்கும் திட்டம் கட்டம் 05-11, 06-11 மற்றும் 07, நடைபாதை, சேவைகள் வடிகான்.
- கொழும்பு துறைமுகத்தின் தீயணைப்புப் படைக்கான உத்தேச கட்டடத்தின் வடிவமைப்பு, கட்டட கணிப்பீட்டு அளவுப் பத்திரங்கள் மற்றும் விலைகோரல் ஆவணங்களைத் தயார் செய்தல்.
- சமர்ஹில் பிரதேசத்தின் உத்தேச புகையிரத பாதை மாற்றுவதற்கான வடிவமைப்பு.
- காலி துறைமுகத்தின் உத்தேச வேலைத்தள கட்டடத்தின் வடிவமைப்பு, கட்டட கணிப்பீட்டு அளவுப் பத்திரங்கள் மற்றும் விலைகோரல் ஆவணங்களைத் தயாரித்தல்.
- காலி துறைமுகத்தில் உத்தேச திருப்பும் மாற்றுப் பாதையின் வடிவமைப்பு.
- ஜய கொள்கலன் முனையத்தின் உப நிர்வாக கட்டடத்தின் வடிவமைப்பு.
- திருகோணமலை துறைமுகத்தின் பொறியியல் மற்றும் வினியோகப் பிரிவிற்கான உத்தேச பல்மாடிக் கட்டடத் தொகுதிக்கான பூர்வாங்க வடிவமைப்பு.
- கப்பற் சரக்கு நிலைய இல : 01 பகுதியில் (CFS 01) உத்தேச தீயணைப்புப் படைக் கட்டடத்தின் வடிவமைப்பு.
- கொழும்பு எண்ணெய் களஞ்சியத்தின் உத்தேச 3200 மெட்றிக் தொன் எண்ணெய் களஞ்சிய தாங்கிக்கான பூர்வாங்க வடிவமைப்பு மற்றும் மண் பரிசோதனைக்கான விலை மனுகோரல்.
- கப்பற்சரக்கு நிலைய இல : 01 இன் களஞ்சியசாலையின் வடிவமைப்பு மற்றும் மீள் தயார் செய்தல்.
- இலங்கை துறைமுக அதிகாரசபையின் கொழும்பு பேலியகொட முனையத்துக்கான முன்வார்ப்பு அலகுகள்/ சீமெந்து அச்சுக்கள் வழங்குதல், பதிக்கும் கல் உற்பத்தி செய்தல் மற்றும் வினியோகம்.

**வளவுகள் மற்றும் பூகோள தகவல் பிரிவு**

கொழும்பு, காலி, திருகோணமலை மற்றும் ஒலுவில் போன்ற இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான சகல அசையாத சொத்துக்கள்/காணிகள் மற்றும் கட்டிடங்கள் வளவுப் பிரிவினால் நிர்வகிக்கப்படுவதோடு சொத்துக்கள் கணனிமயப்படுத்தல் மற்றும் தகவல்கள் வழங்கல் பூகோள பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

நாடு பூராகவும் 8000 ஏக்கர் நிலம் இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமாகவுள்ளதுடன் இதில் 500 ஏக்கர் நிலம் கொழும்பு துறைமுகத்தினுள்ளும் சுற்றுப்புறத்திலும் அமைந்துள்ளது. சுமார் 75 வளவுகள் வெளி நிறுவனங்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டு அதன் மூலம் ரூபா 508..4 மில்லியன் வாடகையாக 2013 ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு கிடைக்கப்பெற்றது. இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான ஆதனங்களைப் பாதுகாக்கும் வகையில் கூடிய வாடகையுடனான 10 உடன்பாடுகள் வளவுப் பிரிவினால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2012 புதிய சுற்றுநிருபத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட நடைமுறைக்கேற்ப வெற்றிடமான இலங்கை துறைமுக அதிகாரசபையின் வீடுகளை ஊழியர்களுக்கு ஒதுக்கி கொடுக்க முடிந்தது.

## கடலகம்

இலங்கை துறைமுக அதிகாரசபையின் அனைத்து மிதக்கும் கலங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகள் இப்பகுதிக்குரிய பிரதான பொறுப்பாகும். கப்பலோட்டப் பணிகள், இயக்கம், சிவில் பொறியியல் பராமரிப்புகள் மற்றும் தமது கையாளல்களுக்கு பாதுகாப்புப் பிரிவிற்கு போதுமானளவு மிதவைக் கலங்கள் வழங்குவதும் பாதுகாப்புப் பகுதியில் பயன்படுத்தப்படும்

வெளியே பொருத்தப்படும் என்ஜின்களைக் கொண்ட படகுகளின் பராமரிப்பும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

அதேபோன்று மொத்தத்தொகை கப்பற் சரக்குகளைக் கையாள்வதற்கு இப்பகுதிக்குத் தேவைப்படும் உபகரணங்கள் வழங்குவதும் இப்பிரிவின் பொறுப்புக்களில் அடங்கும். கேஸ் மற்றும் சோறு சமைக்கும் அடுப்புகள், அலுமினியப் பாத்திரங்கள் போன்று இலங்கை துறைமுக அதிகாரசபையின் சமையலறையின் உபகரணங்கள் பராமரித்தலும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் சறுக்கு வழிகளின் பராமரிப்புகளும் செயற்பாடுகளும் இப்பகுதியினால் மேற்கொள்ளப்படுகின்றன.

கடலகப் பகுதி இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. இந்த ஆண்டினுள் இப்பிரிவுகளினால் அடையப்பெற்ற செயற்பாடுகள் பின்வருமாறு

**கடலகப் பிரிவு - I**

**மீளமைக்கும் பொறியியல் பிரிவு**

துறைமுகத்தில் அனைத்து நங்கூரமிடலின் இழுவைக் கலங்கள், "மேக" தீயணைப்புக் கலம், "சேருவில" பயணிகள் கலம் , இலங்கை துறைமுக அதிகாரசபையின் சேறுவாரிக் கலங்கள் மற்றும் வெளியே என்ஜின் பொருத்தப்படும் சகல கலங்களின் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் தொடர்பில் கடலகப் பிரிவு 01 கீழுள்ள மீளமைக்கும் பொறியியல் பிரிவு பொறுப்பாகவுள்ளது. கொழும்பு, திருகோணமலை, காலி மற்றும் காங்கேசன்துறை போன்ற துறைமுகங்களில் முறையே 05,01,02,01 நங்கூரமிடலின் இழுவைக் கலங்களின் இயக்கங்களுக்கான தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டதோடு இந்த மிதவைக் கலங்களுக்கான லொயிட் பதிவேட்டு வகையீட்டின் சோதனை தேவைப்பாடுகளுக்கேற்ப இயந்திர உபகரணங்களின் பழுதுபார்த்தல்களும் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாண்டினுள் நீரின் கீழ் சேறுவாரும் "ஹங்ஸகாவா" மற்றும் சேறு உறிஞ்சும் "தியகொவுல்லா" எனும் கலங்கள் இப்பிரிவினால் சிறந்த கையாளல் நிலையில் பேணிச் செல்லப்பட்டன. "தியகொவுல்லா கலம் துப்புரவு செய்வதற்கும் நீரின் கீழான பழுதுபார்ப்புகளுக்கும் உலர் தடாகத்திற்கு எடுக்கப்பட்டது. இலங்கை துறைமுக அதிகாரசபையின் பாதுகாப்பு, கடலகம் மற்றும் சிவில் பொறியியல் பகுதிகளினால் பயன்படுத்தப்படும் என்ஜின் வெளியே பொருத்தப்படும் அனைத்து படகுகளினதும் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிகளும் இப்பிரிவினால் நிறைவேற்றப்பட்டன.

இவ்வாண்டினுள் "சுரணிமல" மற்றும் "பரண" இழுவைக் கலங்கள் உலர் தடாகத்திற்கு எடுக்கப்படுதல் உள்ளடங்கலான பிரதான பழுதுபார்ப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. "கோடையிம்பர", "சுரணிமல", "நந்தமித்ர" மற்றும் "விஜயபாகு" போன்ற கலங்களுக்கான தடாக சோதனைக்குப் பதிலாக நீரியல் சோதனை நடாத்தப்பட்டு இந்த இழுவைக் கலங்களுக்கான அனைத்து பழுதுபார்ப்புகளும் செய்யப்பட்டன.

உலர் தடாகத்திற்குப் பதிலாக பேடன்ட் சறுக்கு வழி பாவனையின் மீது உயர் அழுத்தத்துடனான துப்புரவு செய்தல் மற்றும் முழுமையான மை பூசும் பணிகள் அடங்கலான பிரதான பழுதுபார்ப்புகள் "மேக" மிதக்கும் தீயணைப்புக் கலம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டன. தென் துறைமுகம் வைபவரீதியாக திறந்து வைக்கப்படும் நிகழ்வின் போது நீரின் மீதான கண்காட்சிக்காக கலம் தயார் நிலையில் வைக்கப்பட்டது.

நீண்டகாலமாக செய்யப்பட வேண்டியிருந்த "சிங்கபாகு" மற்றும் "ஐராவண" கலங்களின் பழுதுபார்த்தல் பணிகள் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணியாளர்களின் உதவியோடு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு இயக்கங்களின் போது ஈடுபடுத்தப்பட்டன.

**பொறியியல் துறைமுக கலப் பிரிவு**

வழிகாட்டி லான்ச்கள், நங்கூரமிடலின் கலங்கள் மற்றும் பொதுவாக பயன்படுத்தப்படும் லான்ச்களின் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புகளுக்கு இப்பிரிவு பொறுப்பாக இருப்பதோடு கடலகப்

பகுதியின் இயக்க தேவைப்பாடுகளை பொறியியல் துறைமுக கலப் பரிவிற்கு நிறைவேற்றக் கூடியதாக இருந்தன.

இவ்வாண்டினுள் "வழிகாட்டி 15" ,"வழிகாட்டி 12" மற்றும் நங்கூரமிடல் கலம் 01" போன்ற கலங்கள் பொறியியல் துறைமுக கலப் பிரிவினால் மீளமைக்கப்பட்டன. இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஏனைய அனைத்து வழிகாட்டி, நங்கூரமிடலின் கலங்கள் மற்றும் சறுக்கு வழி கலங்களின் அன்றாடம் செய்யப்பட வேண்டிய பராமரிப்புகள் மற்றும் பழுதுபார்ப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு "அசோக்க" கலத்துக்கான புதிய என்ஜின் மற்றும் உந்துகை தொகுதியும் பொருத்தப்பட்டன.

அத்தோடு வழிகாட்டி லான்ச்கள் 10,11,12,13,14,15 மற்றும் நங்கூரமிடல் லான்ச் 2, எக்கோ 3 ஆகிய கலங்களின் வகையீட்டு சோதனைப் பணிகளும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.

**கடலகப் பிரிவ - II**

**கடலக நிர்மாணப் பிரிவு**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் மிதவைக் கலங்களின் சகல மரத்திலான மற்றும் பைபர் கிலாஸிலான பழுதுபார்த்தல்களுக்கு பிரதானமாக இப்பிரிவு பொறுப்பாகவுள்ளது. இலங்கை துறைமுக அதிகாரசபையின் லான்ச்களினதும், நீர்மூழ்கிப் படகுகளின் மோதல் தடுப்புகளினதும் மர வேலைகள், கலங்களினது தண்டுப் பகுதிகளினதும் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. அனைத்து ஜீஆர்பீ படகுகளினதும் மரத்திலான தண்டுகளைக் கொண்ட லான்ச்களினது பைபரினால் மூடிய பாகங்களினதும் பழுதுபார்ப்புகளும் மேற்கொள்ள முடிந்தன. கடலகப் பகுதியினால் பயன்படுத்தப்படும் நங்கூரக் கலங்களின் மரத்திலான தளபாடங்களின் பழுதுபார்ப்புகள், அடைப்புப் பலகை (Paneling) வேலைகள், மோதல் தடுப்புகளின் பழுதுபார்ப்புப் பணிகளும் இப்பிரிவினால் நிறைவேற்றப்பட்டன.

ஆண்டினுள் 600 தொன் கொண்ட பாதுகாப்பான சறுக்கு வழியில் ஐந்து தடவைகள் சறுக்கு வழி செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டன. அத்தோடு சறுக்கு வழி 03 இருந்து 04 வரை 04 சறுக்கு வழி செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. 02 வழிகாட்டிக் கலங்கள் 04 நங்கூரமிடலின் கலங்கள் மற்றும் சிறு படகு பலவற்றினது பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளும் நிறைவேற்றப்பட்டன. 04 நங்கூரமிடலின் கலங்கள் மற்றும் 05 லான்ச்களினது பிரதான பழுதுபார்ப்பு நடவடிக்கைகள் இந்த ஆண்டினுள் இப்பிரிவினால் செய்து முடிக்கப்பட்டன.

**கப்பற்சரக்கு கலப் பிரிவு**

இயக்கப் பகுதியினால் பயன்படுத்தப்படும் இழுவைக் கலங்கள், மோட்டர் லான்ச்கள், தண்ணீர் வத்தைகள், தட்டு வத்தைகளின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் தொடர்பில் இம்முனையம் பொறுப்பு வகிக்கின்றது. அத்தோடு இக்கலங்களின் துருப்படிவுகள் அதிக விசையுடன் நீக்கப்பட்டு மை பூசும் வேலைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இயக்கப்பகுதியின் மேறகுறிப்பிடப்பட்டுள்ள கலங்களின் தேவைப்பாடுகளை இம்முனையத்தினால் பூர்த்தி செய்யக்கூடியதாகவிருந்தன.

ஆண்டினுள் இயக்கப் பகுதி, கடலகம், பாதுகாப்பு மற்றும் பொறியியல் பகுதிகள், காலி மற்றும் திருகோணமலை துறைமுகங்கள், ஏனைய வெளி நிறுவனங்களினால் வேண்டப்பட்ட பல்வேறு அளவிலான 394 கம்பி மற்றும் மனிலா சிலிங்கைகள், பல்வேறு அளவிலான 189 திரைச் சீலைகள், 22 கன்வஸ் மூடு சீலைகள் இப்பிரிவினால் செய்யப்பட்டன. கைவண்டி, குப்பை வண்டி, தள்ளுவண்டிகளும் மற்றும் பல்வேறு வகையிலான வண்டிகளின் பழுதுபார்ப்புகளும் செய்யப்பட்டதோடு இலங்கை துறைமுக அதிகாரசபையின் பல்வேறு பகுதிகளினால் வேண்டப்பட்ட சமையலறை உபகரணங்கள், அலுமினியப் பாத்திரங்கள், கைக் கருவிகளின் உற்பத்தி மற்றும் பழுதுபார்ப்புகளுக்கு மேலதிகமாக குழாய் உற்பத்தி மற்றும் பல பழுதுபார்ப்புகளும் இம்முனையத்தினால் நிறைவேற்றப்பட்டன.

இப்பிரிவினால் கொழும்பு துறைமுகத்தின் 06 சறுக்கு வழிகள் பராமரிக்கப்பட்டு இயக்கம் மேற்கொள்வதுடன் கலங்களின் பழுதுபார்ப்புப் பணிகளுக்காக 14 சறுக்கு வழி கையாளல்களும் செய்யப்பட்டன. (இலங்கை துறைமுக அதிகாரசபையின் 12 கலங்கள் மற்றும் தனியார் துறையின் 02 கலங்கள்) சறுக்கு வழி வாடகைக்கு தனியார் தரப்பினர்களுக்கு கம்பி, கயிறுகள், சிலிங்கைகள் வழங்கப்பட்டதன் ஊடாகவும் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு ரூபா 5,112,871.67 வருமானம் ஈட்டப்பட இப்பிரிவுக்கு முடிந்துள்ளது.

**பேரை முனையம்**

இயக்கப் பகுதியினால் பயன்படுத்தப்படும் உருக்கு கப்பற்சரக்கு வத்தைகளுக்கான பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புகள் இப்பிரிவின் பிரதான பொறுப்பாகும். கப்பற்சரக்கு மற்றும் தண்ணீர் வத்தைகளின் உருக்கிலான பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டன. ஜய கொள்கலன் முனையத்தின் 05 டேலர்களின் துருப்படிவுகள் நீக்கப்பட்டு மை பூசப்பட்டன. சைத்திய பாலத்தின் துருப்படிவுகளும் நீக்கி மை பூசப்பட்டு சம்பந்தப்பட்ட பகுதியிடம் ஒப்படைக்கப்பட்டது.

**புதிய அபிவிருத்தி பணிகள்**

ஏனைய கடலக ஆளணிகளுடன் மீளமைக்கும் பிரிவு வேறு இடத்துக்கு கொண்டு செல்லப்படும் பணி நடைபெற்று வருகின்றது. துறைமுகத்துக்கு அண்மையில் தென் துறைமுகத்தில் சிறிய படகுகள் மீளமைக்கும் பிரிவு மற்றும் பொறியியல் துறைமுக கலப் பிரிவிற்கான புதிய வேலைத்தளம் மற்றும் பணியாளர்களுக்கான வசதிகளின் நிர்மாணம் நடைபெற்று வருகின்றது. வேறு முக்கிய பணிகளுக்கு குறித்த பிரதேசம் பயன்படுத்தக்கூடியவாறு இட வசதிகள் வழங்கப்பட்டு பேரை படகு முனையம் உள் துறைமுகத்துக்கு மாற்றப்பட்டு வருகின்றது. தென் துறைமுகம் மற்றும் மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகங்களின் தேவைப்பாடுகளை நிறைவேற்றும் பொருட்டு புதிய நங்கூரமிடலின் கலங்கள் மற்றும் வழிகாட்டிக் கலங்கள் பெற்றுக் கொள்வதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கடலகப் பொறியியல் பகுதியானது அவர்களின் சேவைகளை எதிர்பார்த்திருக்கும் அனைத்து பகுதிகளுக்கும் தேவையான சேவைகளை சிறப்பாக வழங்கியுள்ளது. இருக்கும் வரையறுக்கப்பட்ட வசதிகளோடு சகல ஆளணியினர் மற்றும் ஊழியர்களின் அர்ப்பணிப்பு காரணமாக இப்பகுதியினால் இலங்கை துறைமுக அதிகாரசபையின் மிதவைக் கலங்களினது அனைத்து கையாளல் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்த வெற்றிகரமான ஆண்டாக இது அமைந்தது.

## இயந்திரப் பொறி

இயந்திரப் பகுதி இலங்கை துறைமுக அதிகார சபையின் பணிகள் தடையின்றி மேற்கொள்ளப்படுவதற்கு இயந்திர சாதனங்கள் மற்றும் வாகனங்களுக்குரிய ஏனைய துணைச் சேவைகளுடன் கப்பற் சரக்கு கையாளல் உபகரணங்கள், இலங்கை துறைமுக அதிகாரசபையின் மொத்த எண்ணெய்க் களஞ்சியத் தொகுதியின் கையாளத் திட்டமிடுதல்கள் மற்றும் உரிய பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் இயந்திரப் பகுதியின் பிரதான பொறுப்பாகும்.

பகுதியின் உள்ளடக்க பணிகளுள் அடங்கும் 07 பராமரிப்புப் பிரிவுகளில் 04 பிரிவுகள், கப்பற் சரக்குகள் கையாளல் உபகரணங்களின் பராமரிப்புக்களுக்காகவும் கொள்கலன்களினதும் அதற்கப்பாலான சேவைகளை வழங்கி கையாளல்களை தடையின்றி மேற்கொள்வதற்காக விசேடமாக நிறுவப்பட்டுள்ளன.

பிரதான பணிகளுள் துணை சேவைகளாக பொருள் பட்டியல் முகாமைத்துவம், உபகரணங்களின் தகுதியின்மை பிரகடனப்படுத்துதல், புதிய உபகரணங்களை கொள்வனவு செய்தல், வருடாந்த சாத்தியவள ஆய்வுத் திட்டங்களின் முகாமைத்துவம், வேறு பகுதிகள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப வழிகாட்டல்களை வழங்குவதிலும் இப்பகுதி பிரதானமாக ஈடுபட்டுள்ளது.

உபகரணங்கள் மற்றும் பராமரிப்பு தொகுதிகளின் மீளாய்வு, திருத்தங்கள் மற்றும் மேம்படுத்தல் தொடர்ச்சியான செயற்பாடாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் நோக்கு மற்றும் பணிக்கூற்றுக்கமைய பகுதியின் கொள்கைகளுடன் ஒருங்கிணைந்துள்ளது.

2013 ஆண்டில் உபகரணங்களின் சடுதியான அல்லது எதிர்பாராத தடங்கல்களுக்கு ஈடுகொடுப்பதற்கான அவசர தீர்வு வழங்கும் முறையுடனான திட்டமிடப்பட்ட சீர்செய்தல் பராமரிப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தலின் மூலம் பின்வரும் விடயங்கள் அடங்கலாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் கையாளல் உபகரணங்கள் வெற்றிகரமாக பேணிச்செல்லப்பட்டன.

- கப்பலிலிருந்து கரை வரையிலான 23 கொள்கலன் பாரமுயர்த்திகள் (STS)
- இறப்பர் டயர்கள் பொருத்தப்பட்ட 67 கன்ட்றி பாரமுயர்த்திகள் (RTG)
- பீலிகள் மீது நகரும் 04 கன்ட்றி பாரமுயர்த்திகள் (RMG)
- கொள்கலன் கையாளும் 20 போக்லிப்ட் வண்டிகள்
- 112 போக்லிப்ட் டிரக் வண்டிகள் (2.5 தென் இருந்து 10 தொன் வரை)
- 185 பிறைம்மூவர் வண்டிகள்
- 204 டிரேலர்கள்
- 07 டறோபார் டிரக்டர்கள்
- நடமாடும் பாரமுயர்த்திகள் வாப்பு மின்சார மிதவை மற்றும் மேலால் நகரும் பாரமுயர்த்திகள் மற்றும் 71 எலிவேடர்ஸ்
- கப்பற் சரக்கு கையாளல்களுக்கு தடையில்லாது மின்சாரம் வழங்குவதற்கான எதிர்பார்ப்பிலுள்ள 08 மின் பிறப்பாக்கி இயந்திரங்கள்
- புகையிரத்தை வெவ்வேறு பாதைகளில் நகர்வதற்கான 03 புகையிரத வலு என்ஜின்கள்
- 692 மோட்டார் வண்டிகள் (பேரூந்து,லொறி,வேன், டபிள் கப், கார்கள், முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள்)

ஆண்டினுள் 2.5 மில்லியனுக்குக் கூடிய இருபது சம அலகுகள் மற்றும் உலர் தொகை பிரிப்பு கப்பற் சரக்குகள் 3.08 மில்லியன் தொன் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் கையாளப்பட முடிந்துள்ளதோடு திட்டமிடப்பட்ட உபகரணப் பராமரிப்பு வேலைத்திட்டத்தின் நேரடி பயனாக 90% உபகரணங்கள் இருந்தமையினால் எதிர்பார்க்கப்பட்ட தடங்கல்கள் குறைக்கப்பட்டு கையாளல் திட்டமிடல்கள் மிகவும் வெற்றிகரமாகவும் நம்பிக்கையுடனும் நிறைவேற்றக் கூடியதாக இருந்தது.

திட்டமிடப்பட்ட சீர்செய்தல் பராமரிப்பு வேலைத்திட்டத்தின் ஒரு அங்கமாக ஜய கொள்கலன் முனையத்தின் வேலைத்தளங்களில் மாத்திரம் 7,114 மற்றும் சிறிய பழுதுபார்ப்புகள் 25,677 வேலைக் கட்டளைகளும் 146 விபத்துக்கள் தொடர்பில் முனையத்தின் கொள்கலன் கையாளல் உபகரணங்கள் ஆய்வு செய்யப்பட்டு கையாளல்களும் மேற்கொள்ளப்பட்டன. அதன்படி முழுப் பணிகளின் எண்ணிக்கை 32,937 ஆகும்.

மேற்குறிப்பிடப்பட்டவற்றிற்கு மேலதிகமாக போக்லிப்ட் வண்டிகள், டிரக் வண்டிகள், கட்டுமான உபகரணங்கள், நபர்களுக்கான லிப்ட்கள், டரேலர்கள் மற்றும் அனைத்து வகையிலான பாரமுயர்த்திகள், மோட்டார் கராஜ் அடங்கலான ஏனைய கப்பற் சரக்கு கையாளல் உபகரணங்களுக்குப் பொறுப்பாகவிருக்கும் பகுதியின் ஏனைய 03 பிரிவுகளிலும் ஆண்டினுள் ஒட்டுமொத்தமாக 6,279 வேலைக் கட்டளைகள் நிறைவேற்றப்பட்டன.

இதற்குப் புறம்பாக பெருந்தொகையிலான வண்டிகளின் குழாமினை பராமரித்துச் செல்லும் மோட்டார் கராஜ், டீசல் மற்றும் புகையிரத வேலைத் தளங்களின் அனைத்து 8,692 வேலைக் கட்டளைகளும் நிறைவேற்றப்பட்டன. மோட்டார் கராஜின் ஒரு பகுதியான இயந்திர உபகரண பகுதியின் போக்குவரத்து பிரிவானது உணவு வினியோகிக்கும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் நலன்புரி பகுதியுடன் இணைந்து நலன்புரி பேரூந்து சேவைக்கான மகத்தான பணியாற்றப்பட்டுள்ளது.

பகுதியின் கீழுள்ள பராமரிப்புப் பிரிவினால் செயற்படுத்தப்பட்ட வேலைக் கட்டளைகளின் எண்ணிக்கை 47,908 ஆகும்.

பகுதியின் மேற்பார்வையின் கீழ் "சமர்ஹில்" பிரதேசத்தின் எண்ணெய்க் களஞ்சியத் தொகுதியின் சகல பணிகளும் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வாடகையாக சுமார் 24.82 மில்லியன் ரூபா ஆண்டினுள் பெறக் கூடியதாகவும் இருந்தது.

அன்றாட பணிகளுக்கு மேலதிகமாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் மதிப்பிட முடியாத கப்பற் சரக்குகளின் கையாளல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆய்வு நடவடிக்கைகளுக்கான ஆலோசகர்களாக பகுதியின் உள்ளக மற்றும் வெளிவாரியான திணைக்கள தொழில்சார் வல்லுநர்களின் ஆலோசனை சேவைகள் வழங்கும் பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

பின்வரும் செய்திட்டங்கள் தொடர்பில் பகுதி தலைமை வகிக்கின்றது.

- 3M எண்ணக்கருவிற்கேற்ப தொழில்களுக்கான நியமங்களைத் தயார் செய்தல்.
- தொழில்களுக்கான நியமங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப பகுதியுடன் இணைந்து விலைத் தொகுதிக்கான மென்பொருளை தயார் செய்தல்.
- 40 முனைய டிரக் வண்டிகள் கொள்வனவு செய்தல்.
- கொள்கலன் பாரமுயர்த்திகளினது பிரதான அமைவுகளின் பழுதுபார்த்தல் பணிகளை மேற்கொள்ளல்.
- கொள்கலன் பாரமுயர்த்திகள் அடங்கலான அனைத்து உபகரணங்களுக்கும் புதிதாக உபகரணங்கள் வழங்குதலை நிறைவு செய்தல்.

இதற்கு மேலதிகமாக ஆண்டினுள் 02 டொப்லிப்ட் டிரக் வண்டிகள் (மெகா தொன் 40) மற்றும் 12 போக்லிப்ட் டிரக் வண்டிகள் (மெகா தொன் 2.5) பகுதியினால் கொள்வனவு செய்தல் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

2014 ஆண்டிற்கு தெளிவான வருடாந்த திட்டத்துடன் இலங்கை துறைமுக அதிகாரசபையின் "2020 நோக்கு" தொடர்பில் பகுதிகளின் நோக்கங்கள் நிறைவேற்றலின் தொடரான தடையில்லாத சேவைகள் மேம்படுத்தும் வேலைத்திட்டமொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## இயந்திர வேலைகள்

இலங்கை துறைமுக அதிகார சபையின் அனைத்து உருக்கு பொருத்தும் பணிகளுக்கு இயந்திர பொறியியல் பகுதி பொறுப்பாகவுள்ளது. ஜய மற்றும் ஐக்கிய கொள்கலன் முனையங்களுக்குரிய கொள்கலன்களைக் கையாளும் பாரம் தூக்கிகள், கொள்கலன்களைக் கொண்டு செல்லும் சிறிய டிரேரைகளுக்குரிய சகல சட்டப்பாகங்களின் பழுதுபாரத்தல்கள், நங்கூர கலங்கள், வழிகாட்டி, சேறுவாரி மற்றும் இழுவைக்கலங்களுக்கு உரித்தான அனைத்து பழுதுபார்த்தல் பணிகள், இலங்கை துறைமுக அதிகார சபையின் ஏனைய உருக்கு அமைவுகளை பழுதுபார்ப்பு பணிகள் போன்றவற்றில் முக்கிய பணியாற்றும் பகுதியாக இது செயற்படுகின்றது. கடலகக் கலங்கள் மற்றும் கப்பல் சரக்குகளைக் கையாளும் உபகரணங்களுக்கு தேவையான புதிய உதிரிப்பாகங்களை இயந்திர ரீதியாக சீர்படுத்தும் பணியிலும் இப்பகுதி ஈடுபட்டுள்ளது.

மேலும் சங்கிலிகள் மற்றும் கொழுக்கிகள் பரீட்சித்தல் போன்று கையாளல் தேவைப்பாடுகளுக்காக அள்ளும் வாளி உபகரணங்களினது பராமரித்தல் தொடர்பிலும் இப்பகுதி பொறுப்பாக இருக்கின்றது. கொழும்பு எண்ணெய்க் களஞ்சியத் தொகுதியின் அபிவிருத்தித் திட்டங்களும் இப்பிரிவிற்குரியதாகும். இதன்படி கொழும்பு துறைமுகத்திலிருந்து கொழும்பு எண்ணெய் களஞ்சியத் தொகுதி வரை தற்போது பயன்படுத்தப்படும் எண்ணெய்க் குழாய்களுக்குப் பதிலாக புதிதாக பெற்றொலிய எண்ணெய்க் குழாய்ப் பாதை பதிக்கும் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. கூடிய உற்பத்தி தொன் அதிக விசை கொண்டதாக மாற்றப்படும் பொருட்டு இந்த எண்ணெய்க் குழாய் தொகுதியானது 12 அங்குலம் கொண்ட ஒரு குழாயொன்றையும் கொண்டிருக்கும். திட்டத்தின் பணிகளில் 85% முடிவடைந்துள்ளது.

இவ்வாண்டினுள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக இப்பகுதியினால் பின்வரும் பிரதான பணிகளும் நிறைவேற்றப்பட்டன.

- பண்டாரநாயக்க துறைமேடை களஞ்சியசாலையின் 10 கதவுகளின் பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.
- ஆண்டினுள் F/F மேக கலத்தின் தண்டுப்பகுதியின் பிரதான பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.
- ரோ ரோ வாகன முனையத்திற்கான 575 மீட்டர் நீளமான வேலியும் ஹம்பாந்தோட்டை மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்தின் எண்ணெய்க் களஞ்சியத் தொகுதிக்கு 80 மீட்டர் நீளம் கொண்ட வேலியொன்றும் அமைக்கப்பட்டன.
- J-17, J-12, J-04, J-14, J-03, J-17, J-18, J-20, J-11. மற்றும் கன்ட்றி பாரமுயர்த்திகளின் உருக்குப் பாகங்கள் பழுதுபார்க்கப்பட்டன.
- சம்புத்த ஜயந்தி விகாரயின் வாசல் கதவுகள் மற்றும் பாலம் பழுதுபார்க்கப்பட்டன.
- நலன்புரி நடவடிக்கையாக ஊழியர்களுக்கு பசும்பால் வழங்குவதற்காக தேசிய கால்நடைகள் அதிகார சபையின் பாற்சாலையொன்று துறைமுக வளவினுள் நிறுவுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகத்தில் உருக்கு அமைவுகள் மற்றும் கமரா தூண்கள் பொருத்தப்பட்டன.
- ஜய கொள்கலன் முனையத்திற்கு 200 உருக்கு அடுக்குகள் தயாரிக்கப்பட்டு முலாமிடப்பட்டன.
- ஜய கொள்கலன் முனையத்தில் தீயணைப்பு வழிகளும் கப்பல்களுக்கு நண்ணீர் வழங்கும் வழிகளும் புனரமைக்கப்பட்டன.
- இலங்கை துறைமுக அதிகாரசபையின் பல்வேறு பகுதிகளின் பொருத்துதல்கள் சம்பந்தப்பட்ட 800 பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
- இலங்கை துறைமுக அதிகார சபையின் தீயணைப்புப் படைக்கு தீப்பம்பிகளும் இரண்டு முனைப்பம்பிகளும் முற்றாகப் பழுதுபார்க்கப்பட்டன.
- இலங்கை துறைமுக அதிகார சபையின் பல்வேறு பகுதிகளின் பிரதான 200 பணிகளும் சிறிய 950 வேலைகளும் நிறைவேற்றப்பட்டன.
- இலங்கை துறைமுக அதிகார சபையின் பல்வேறு பிரிவுகளுக்கான 45 உருக்கு வார்ப்பு வேலைகளும் செய்யப்பட்டன.

## மனிதவள பகுதி

புதிய மனிதவள முகாமைத்துவ திட்டம் பேணுதல் மற்றும் செயற்றிறன் கொண்ட நிர்வாகம் மேற்கொள்ளலின் ஊடாக திருப்திகரமான ஊழியர் படையொன்றினை பராமரித்துச் செல்வதன் மூலம் மனிதவளப் பகுதி முகாமைத்துவத்துக்கு உதவுகின்றது.

மனிதவள முகாமைத்துவ திட்டம் இலங்கை துறைமுக அதிகாரசபையின் மிக முக்கிய ஆவணமாகும். இது நிறுவனத்தின் நோக்கங்களை திறனான மற்றும் பயனான முறையில் அடைந்து கொள்ளலில் மனித வளத்திற்கு துணை புரிகின்றது. மனிதவள முகாமைத்துவ திட்டத்தின் கீழ் அங்கீகார ஆட்சேர்ப்பு நடைமுறைக்கேற்ப அநேகமான வெற்றிடங்கள் தேர்ச்சியான தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுதலின் மூலம் நிறுவனத்திற்கு ஆட்சேர்க்கப்பட்டனர். ஆயினும் தகைமைகள் பெற்ற விண்ணப்பதாரிகள் இல்லாத சந்தர்ப்பங்களில் முறையான அங்கீகாரம் பெற்றுக்கொண்டதன் பின்னர் வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள இலங்கை துறைமுக அதிகாரசபையின் அங்கீகார ஆளணித் தொகை 9,990 ஆகும். நிறைவேற்று, நிறைவேற்று அல்லாத, தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பம் சாராத தரங்களின் பணியாளர்கள் அடங்கலாக 2013 டிசெம்பர் 31 ஆ திகதி வரை இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிரந்தர ஆளணித் தொகை 9,792 ஆக இருந்தது கொழும்பு துறைமுகத்தில் 8,988 பணியாளர்களும் காலி மற்றும் திருகோணமலை துறைமுகங்களில் முறையே 378 மற்றும் 426 பணியாளர்களும் உள்ளனர்.

2013 ஆண்டினுள் சேவையிலிருந்து அகன்றுசென்ற மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை 404 ஆகும். இதில் 338 பேர் ஓய்வு பெற்றுள்ளனர். 32 பேர் சுயவிருப்பில் ஓய்வு பெற்றுள்ளதோடு கேட்டு

விலகலில் 13 பேரும் சுகாதார காரணங்களில் 02 பேரும் சேவையை விட்டுச் செல்லலில் 04 பேரும் பதவி நீக்கம் மற்றும் மரணங்கள் தொடர்பில் 09 பேரும் சேவையிலிருந்து நீங்கியுள்ளனர்.

நிறைவேற்று தரத்தில் 20 பேரும் நிறைவேற்று அல்லாத தரத்தில் 74 அடங்கலாக 94 பேர் 2013 ஆண்டினுள் ஆட்சேர்ப்பு சேய்யப்பட்டுள்ளனர்.
நிறைவேற்று அல்லாத தர பணியாளர்களின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் மீது அநேகமான பணியாளர்கள் அவர்களின் செயலாற்றுகை, நடத்தை, வருகை தரல் ஆகியவற்றிற்கேற்ப அவர்களின் அண்மித்த உயர் சம்பளத் திட்டத்தில் அமர்த்தப்பட்டனர் மேலும் நிறைவேற்று, நிறைவேற்று அல்லாத மற்றும் தொழில்நுட்ப பணியாளர்களினது தேர்ச்சிகளின் மீது தகுந்த தரங்களுக்கான வேறான பதவியுயர்வுகளின் தரங்களுக்கு உள்வாரியாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு பதவியுயர்வுகள் வழங்கப்பட்டதோடு ஒரு பகுதியினர் அங்கீகார ஆளணித் தொகையின் மீது மேலதிக தேவைக்காக எதிர்பார்ப்பு பட்டியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

உச்ச ஊழியர் பயன்பாட்டினை அடைவதற்காக 2013 ஆண்டினுள் பணியாளர்களில் பெரும்பகுதியினர் சமனான பல பதவிகள் ஒன்றிணைக்கப்பட்டு முகாமைத்துவ உதவியாளர்கள்,வேலை உதவியாளர்கள், பல்தேர்ச்சி தொழில் நுட்பவியலாளர்களாக மீள் வகையீடு செய்யப்பட்டுள்ளனர்.

நிறைவேற்று அல்லாத வகையின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் அடிப்படையில் தேசிய தொழில் தகைமைகள் (NVQ) தொடர்பில் அறிமுகப்படுத்தும் பல வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதோடு மஹபொல பயிற்சி நிலையத்தில் பல்வேறு துறைகளில் பாடநெறிகள் ஆரம்பிக்கப்படுவதற்கும் அனைத்து பகுதிகளினது தேர்ச்சியாளர்களுக்கு உதவும் பொருட்டு தேசிய தொழில் தகைமைகளில் அவர்களுக்கு உகந்த தேர்ச்சிச் சான்றிதழ்கள் வழங்கப்படுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஆண்டினுள் ஏற்பட்ட மொத்த விபத்துக்களின் எண்ணிக்கை 98 ஆகும். இடம்பெற்ற பாதிப்புகளின் அடிப்படையில் 68 பணியாளர்களுக்கு மாத்திரம் விபத்து விடுமுறைகள் வழங்கப்பட்டன.

பணிகள் மீண்டும் மீண்டும் நடைபெறுவதைத் தவிர்த்து சில பகுதிகளினது நிர்வாகப் பணிகள் ஒருமுனைப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பகுதிகளுக்கிடையில் ஆவணங்களின் தவறுகள் ஆகக் குறைந்த நிலைக்கு கொண்டுவரும் நோக்கில் விடுமுறைகள் மற்றும் வருகை தரல் விதிமிறைகள் ஒரே நடைமுறையில் மேற்கொள்ள்வதற்கு இந்த செயற்பாட்டு முறையே பின்பற்றப்பட்டது. பணியாளர்களுக்கிடையில் சம்பள முரண்பாடுகள், பிணக்குகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக சம்பள முரண்டபாடுகள் தொடர்பில் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

மேலும் இந்த அதிகாரசபையின் நிகழ்கால மற்றும் எதிர்கால தேவைப்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு தற்போதுள்ள சுற்றுநிருபங்கள் திருத்தப்படுவதற்கான பணிகள் நடைபெற்று வருவதோடு நடைமுறைகளில் திருத்தங்கள் ஏற்படுத்துவது தொடர்பில் உள்ளக மற்றும் வெளி உறுப்பினர்களைக் கொண்ட குழுவினால் கலந்துரையாடல்களும் நடாத்தப்பட்டு வருகின்றன.

## சட்டம்

இலங்கை துறைமுக அதிகாரசபையின் சட்ட அலுவலர்கள், 1979 இன் 51 ஆம் இலங்கை துறைமுக அதிகார சபைச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள (சட்டத்தில் குறிப்பிடப்படும்) விசேட துறைமுகங்கள் அதாவது கொழும்பு, காலி, திருகோணமலை, மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம், காங்கேசன்துறை மற்றும் பருத்தித் துறை ஆகிய துறைமுகங்களின் சட்ட ஆலோசகர்களாக இருப்பதோடு, அவர்கள் பணிப்பாளர் சபை, பணிப்பாளர்கள், பகுதித் தலைவர்கள் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஏனைய பிரிவுகளுக்கும் ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்.

**ஆலோசனைகள்**

2013 ஆம் ஆண்டினுள் முகாமைத்துவத்திற்கு 236 க்கு மேற்பட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக நகல் அறிக்கைகள் தயாரித்தல் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையினைத் தரப்பாகக் கொண்ட ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள், பிணைகள், உறுதிகள், குத்தகைகள், போன்றவற்றுடன் தொடர்புபடுதல் சட்டப் பகுதிக்குரிய பணிகளில் அடங்கும்.

**ஒப்பந்தங்கள் ,உடன்பாடுகள் மற்றும் பிணைமுறி, உறுதிகள்**

13 வாடகை உடன்பாடுகள், வாடகைக்கு வழங்கும் 01 உடன்படிக்கை, ஒப்பந்த உடன்பாடுகள் 05, குத்தகை உடன்பாடுகளுக்கான பிற்சேர்க்கை 01 மற்றும் ஈடுலிருந்து விடுவிக்கும் ஒப்பந்தம் 01 போன்றவை 2013 ஆண்டினுள் சட்டப் பகுதியினால் அமுல்படுத்தப்பட்டன. இந்த சட்ட ஆவணங்களுக்கு மேலதிகமாக பின்வரும் பிணை ஒப்பந்தங்கள் மற்றும் உடன்பாடுகளின் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

- கைச்சாத்திடப்பட்ட பிணை/ ஒப்பந்த பிற்சேர்க்கைகள் - 04
- வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளுக்கான சம்பளமற்ற விடுமுறை தொடர்பிலான பிணை/ ஒப்பந்த உடன்பாடுகள் - 08
- இலங்கையினுள்ளும் வெளிநாடுகளிலும் பயிற்சி மற்றும் கல்வி தொடர்பிலான பிணை/ ஒப்பந்த உடன்பாடுகள் - 13
- ஆங்கில டிப்ளோமா பயிலும் ஊழியர்களுக்கான 44 பிணை / ஒப்பந்த உடன்பாடுகள் கைச்சாத்திடப்பட்டன.
- கின்னஸ் உலக சாதனை தொடர்பிலான காப்புறுதி உடன்பாடுகள் - 01

இலங்கை துறைமுக அதிகாரசபையினை தரப்பாகக் கொண்ட அனைத்து நீதிமன்ற விடயங்கள் தொடர்பில் சட்டமா அதிபர் மற்றும் வெளி சட்டத்தரணிகளின் உதவியோடு சட்டப் பகுதியின் நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

2012 டிசெம்பர் இறுதி வரையில் மீயுயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், உயர் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், தொழில் நியாய சபைகள், நீதவான் நீதிமன்றம், தொழில் திணைக்களம், மனித உரிமைகள் ஆணைக்குழு, தொழில் நீதிமன்றம், ஆலாட்சி அதிகாரி, ஊழியர் நட்டஈடு ஆணையாளர், தீர்ப்பு மையங்களில் 276 வழக்குகள் தொடர்பான முறைப்பாடுகள் மற்றும் விண்ணப்பங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

2013 ஆண்டினுள் புதிதாக 50 வழக்குகள், முறைப்பாடுகள் விண்ணப்பங்கள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கெதிராக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. (அதாவது உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதி மன்றம், மேல்நீதிமன்றம் நீதவான் நீதி மன்றம், தொழில் ஆணையாளர், மனித உரிமை ஆணைக்குழு, தொழில் திணைக்களம், தீர்ப்பளித்தல் மற்றும் தொழிலாளர் நட்டஈட்டு விசாரணை சபை போன்றவற்றில் 06 வழக்குகள் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் தொடரப்பட்டிருந்தன. மீதியானவை இலங்கை துறைமுக அதிகாரசபைக்கெதிராக தொடரப்பட்ட. மொத்த வழக்குகளின் எண்ணிக்கையில் 326 இன் 42 பணிகள் 2013 ஆண்டில் நிறைவு செய்யப்பட்டன. இதில் 19 வழக்குகள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சார்பாகவும் 06 வழக்குகள் தீர்க்கப்பட்டு 12 வழக்குகளும் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கெதிராகவும் தீர்க்கப்பட்டு முடிவடைந்துள்ளன. ஏனைய 05 வழக்குகள் சம்பந்தப்பட்ட தரப்பினர்களினால் வாபஸ் பெறப்பட்டுள்ளன.

2013 டிசெம்பர் 31 வரையில் 282 வழக்குகள்/முறைப்பாடுகள்/விண்ணப்பங்கள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களில் விசாரிக்கப்பட்டு வந்தன.

### மீயுயர் நீதிமன்ற வழக்குகள்

2012 இறுதி வரை 10 வழக்குகள் முடிவுறாதிருந்தன. 2013 ஆண்டில் புதிதாக தாக்கல் செய்யப்பட்ட 04 வழக்குகளும் அடங்கலாக 14 வழக்குகளில் 2013 ஆண்டினுள் இதில் 01 வழக்கு முடிவடைந்து அதில் 01 வழக்கு இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சார்பாக தீர்ப்பளிக்கப்பட்டும் 01 வழக்கின் பணி முடிவடைந்துள்ளது. 2013.12.31 ஆம் திகதி வரை 12 வழக்குகளின் பணிகள் மீயுயர் நீதிமன்றத்தில் முடியுறாத நிலையில் இருந்தன.

### மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள்

2012.12.31 வரை 14 வழக்குகள் தீர்ப்பளிக்கப்படாதிருந்தன. 2013 ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கெதிராக புதிதாக 04 வழக்குகள் தொடரப்பட்டன. மொத்த 18 வழக்குகளில் 03 வழக்குகள் முடிவடைந்தன. இதில் 01 வழக்கு இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சார்பாக தீர்க்கப்பட்டதோடு 02 வழக்குகள் முறைப்பாட்டாளர்களினால் வாபஸ் பெறப்பட்டன. 2013.12.31 வரை 15 வழக்குகள் மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு வந்தன.

### உயர் நீதிமன்ற வழக்குகள்

2012.12..31 வரையில் உயர் நீதிமன்றில் 12 வழக்குகள் விசாரிக்கப்பட்டு வந்தன. 2013 ஆண்டினுள் புதிதாக 03 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. மொத்த 15 வழக்குகளில் 05 வழக்குகள் முடிவடைந்துள்ளன. 2013.12.31 வரை உயர் நீதிமன்றில் 10 வழக்குகள் விசாரிக்கப்பட்டு வந்தன.

### மாவட்ட நீதிமன்ற வழக்குகள்

2012.12.31 வரை 09 வழக்குகள் முடிவுறாதிருந்தன. 2013 ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கெதிராக புதிதாக 04 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. 2013 இல் 13 வழக்குகளில் 02 வழக்குகளின் பணிகள் முடிவடைந்து 01 வழக்கு. இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சார்பாக தீர்க்கப்பட்டது.. 01 வழக்கு சம்பந்தப்பட்ட தரப்பினர்களினால் வாபஸ் பெறப்பட்டது. 2013.12.31 வரை 11 வழக்குகள் மாவட்ட நீதிமன்றத்தில் முடிவுறாதிருந்தன.

### நீதவான் நீதிமன்ற வழக்குகள்

2012.12.31 ஆந் திகதி வரையில் நீதவான் நீதிமன்றில் 06 வழக்குகள் முடிவுறாதிருந்தன. 2013 ஆம் ஆண்டினுள் அரசாங்க விடுதிகள் (உரிமை கைப்பற்றல்) சட்டத்தின் கீழ் இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரிய விடுதிகளில் சட்டவிரோதமாக வசிப்பவர்களை அகற்றுதல் மற்றும் அரசாங்க காணிகள் (உரிமை கைப்பற்றல்) சம்பந்தப்பட்ட விண்ணப்பங்கள் அடங்கலாக 05 புதிய வழக்குகள் நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன. 2013 ஆம் ஆண்டினுள் 05 வழக்குகள் முடிவு பெற்றன. மேற்குறிப்பிடப்பட்டுள்ள வழக்குகளின் பணிகளுக்கு மேலதிகமாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களை தரப்பினர்களாகக் கொண்ட சந்தர்ப்பங்களில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள நீதவான் நீதிமன்றங்களினால் கிடைக்கப்பெறும் நீதிமன்ற அழைப்பாணைகள் தொடர்பிலும் சட்டப் பகுதியினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. 2012.12.31 வரையில் நீதவான் நீதிமன்றங்களில் 06 வழக்குகளின் பணிகள் முடிவுறாத நிலையிலிருந்தன.

### தொழில் நியாய சபை வழக்குகள்

2012.12.31 வரையில் தொழில் நியாயசபை நீதிமன்றில் தீர்க்கப்படாதிருந்த வழக்குகளின் எண்ணிக்கை 34 ஆக இருந்தது. 2013 ஆம் ஆண்டினுள் தொழில் நியாய சபைகளின் 37 வழக்குகளில் 03 வழக்குகள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கெதிராக தாக்கல் செய்யப்பட்டு அதில் 11 வழக்குகள் முடிவடைந்திருந்தன. இதில் 03 வழக்குகள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சார்பாகவும் 01 வழக்கு விண்ணப்பதாரருக்கு சார்பாகவும் தீர்ப்பளிக்கப்பட்டன.

மீதியான 07 வழக்குகளும் தீர்க்கப்பட்டன. முடிவடைந்திருந்தது. 2013.12.31 வரை 26 வழக்குகள் தொழில் நியாய சபையில் முடிவுறாத நிலையிலிருந்தன.

**மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள், தொழிலாளர் பிணக்குகள் (தீர்த்தல் தொடர்பிலான வழக்குகள்) பற்றியதில் தொழில் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் ஆலாட்சி அதிகாரியிடமும் ஊழியர் நட்ட ஈடு ஆணையாளரிடமும் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள்.**

2012 டிசெம்பர் 31 வரையில் மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட 131விண்ணப்பங்களினதும், தொழில் ஆணையாளரிடம்,தீர்வு காணல் 37 மற்றும் ஆலாட்சி அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 17 முறைப்பாடுகளினதும் மற்றும் தொழிலாளர் நட்டஈடு ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்ட 01 வழக்கும் முடிவுறாத நிலையிலிருந்தன. 2013 ஆண்டினுள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் 05 புதிய விண்ணப்பங்களும் தீர்வு காணல் தொடர்பில் தொழிலாளர் ஆணையாளரிடம் 20 புதிய முறைப்பாடுகளும் முன்வைக்கப்பட்டன.. தொழில் ஆணையாளரிடம் தொழிலாளர் நஷ்டஈடு தொடர்பிலான 01 முறைப்பாடும் செய்யப்பட்டிருந்தது. 2013 ஆண்டினுள் 02 மனித உரிமைகள் விண்ணப்பங்களினதும் தீர்வு காணல் தொடர்பான 12 விண்ணப்பங்களினதும் 02 தொழிலாளர் நட்டஈடு வழக்குகளினதும் பணிகள் முடிவடைந்திருந்தன. அதன்படி 2013.12.31 இல் ஆலாட்சி அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 134 மனித உரிமைகள் விண்ணப்பங்களினதும், தீர்வு காணலின் 45 முறைப்பாடுகளினதும் ஆலாட்சி அதிகாரியிடம் சம்ர்ப்பிக்கப்பட்ட 17 முறைப்பாடுகளினதும் பணிகள் முடிவுறாதிருந்தன.

**தீர்வுகள்**

2012.12.31 வரையில் 02 வணிகப் பிணக்குகள் கைத்தொழில் தீர்வு காணல் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 01 கைத்தொழில் தீர்வு காணலின் பணிகள் முடிவுறாதிருந்தன. 2013 ஆண்டினுள் 01 வர்த்தக தீர்வு காணலின் பணி முடிவடைந்தது. இலங்கை துறைமுக அதிகாரசபைக்கெதிராக புதிதாக 02 கைத்தொழில் தீர்வு காணல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதன்படி 2013.12.31 வரை 04 கைத்தொழில் மற்றும் 02 வர்த்தக தீர்ப்புக் காணலின் பணிகள் முடிவுறாதிருந்தன நியாய சபைகளின் 02 தீர்வு காணலின் பணிகள் முடிவடைந்திருந்தாலும் மேன்முறையீடுகள் முடிவடையாதிருப்பதனால் அவை முடிவுறாத வழக்குகளாக கருதப்பட்டு வருகின்றன.

## தகவல் முறைமை

இலங்கை துறைமுக அதிகாரசபையும் இலங்கையில் முக்கிய நிலையில் தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும் ஒரு நிறுவனமாகும். தகவல் தொழில்நுட்பம் பற்றியதிலான நோக்கம் முழுமையாக அதன் வர்த்தக நோக்கங்களோடு தொடர்புபட்டுள்ளது. துறைமுக வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் தகவல் தொழில்நுட்பத்திற்கிடையிலான சிறந்த தொடர்பானது இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு வலுவையும் நிறுவனத்தின் அபிவிருத்திக்கான சிறந்த உந்து சக்தியாக கருதப்படுவதற்கும் காரணமாகியுள்ளது. வளர்ந்து வரும் துறைமுகம் சார் வர்த்தகங்களினுள் தகவல் தொழில்நுட்பத்தின் மீதான நாட்டம் வலயத்தினுள்ள போட்டியான துறைமுகங்களினுள் இலங்கை துறைமுக அதிகாரசபை முன்னணி வகிக்கக்கூடிய ஆற்றலைக் கொண்டுள்ளது.இந்த விடயம் கவனத்திற் கொள்ளப்பட்டு இலங்கை துறைமுக அதிகாரசபையின் மூலோபாய திட்டமான 2020 நோக்கு உள்ளடக்கத்தில் இப்புதிய தொகுதிகள் நூல்கள் பயன்படாத உலகில் வரையறையில்லா தொடர்பாடல்களைக் கொண்ட இலங்கை துறைமுக அதிகாரசபை அனைத்து பொதுவான செயற்பாடுகளை ஒன்றிணைப்பதற்கான தளமாகவும் பொறுப்புக் கூறல், முகாமைத்துவம் செய்யும் ஆற்றல் போன்றவற்றின் விருத்தியுடன் முழுமையான திறந்த சூழலை ஏற்படுத்துவதாகவும் கூறப்படுகின்றது.

துறைமுகத்தின் தகவல் தொழில்நுட்ப தொகுதிகளை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு தகவல் முறைமை பகுதியின் பொறுப்பாகும். அத்தோடு துறைமுகத்தினுள் வர்த்தக நடவடிக்கைகள்

மேற்கொள்ளப்படுவதற்கான சிறந்த நவீனமயமாக்கப்பட்ட தகவல் தொகுதி செயற்படுத்தப்படும். 2013 ஆண்டினுள் மேற்கொள்ளப்படும் பணிகள் தற்போதுள்ள தொகுதிகளின் பெயரின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

**கொள்கலன் முனைய முகாமைத்துவ தொகுதி (CTMS) - ஜய மற்றும் ஐக்கிய கொள்கலன் முனையங்கள்**

நேவீஸ் (NAVIS) முனைய முகாமைத்துவத் தொகுதி நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர் புதிய / மாற்றமடையும் வர்த்தக தேவைப்பாடுகள் காரணமாக எதிர் நோக்கப்பட்ட பல சிக்கல்கள் இப்புதிய முறை தொடர்புபடுத்தலின் மூலம் வெற்றி பெறுதல் உறுதி செய்யப்பட்டுள்ளது. பாரிய எண்ணிக்கையிலான வாடிக்கையாளர்களுக்கு இணையத்தள பிரவேச மொடியூல் வசதிகள் பிரபல்யமாக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் பூர்த்தியடைதலின் பின்னர் முகவர்கள் துறைமுகத்திற்கு வரும் தேவைப்பாடு குறைவடைவதுடன் குறைந்த ஆவண நடவடிக்கைகள் ஊடாக தகவல் பரிமாற்றம் துரிதமாக்கப்படும். எக்ஸ்பிறஸ், தரவுத் தளத்திற்குரிய தகவல்கள் சேகரிக்கும் வசதியின் கூடிய பகுதி அதிகரிக்கும் தரவுப் பரிமாணங்களுக்குள் உட்சேர்க்கப்பட வேண்டியுள்ளமை இத்தொகுதிக்குரிய தடையாகும். இந்நிலைமையினை தவிர்ப்பதற்கு பர்ஜின் (Purging) மொடியூல் கொள்வனவு செய்யப்பட்டு ஆண்டினுள் உற்பத்தி தொகுதி தொடர்பில் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டுள்ளது.

**இலத்திரனியல் தரவு பரிமாற்றத் தொகுதி (EDI)**

கொள்கலன் முனைய முகாமைத்துவத் தொகுதியூடாக (CTMS) பின்வரும் இலத்திரனியல் தரவு பரிமாற்ற வசதிகள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வசதிகள் தற்போது முற்றாக செயற்படுவதோடு கப்பல் கம்பெனிகள்/ முகவர் நிறுவனங்களுக்கான பாவனையில் இது உள்ளது.

**CODECO – கொள்கலன் வாசலில் உட்புகுதல்/வெளியேறல் அறிக்கை**

ஐக்கிய நாடுகளின் EDIFACT தகவல் மாதிரிக்கமைய முகவர் நிறுவனங்களுக்கு நாள்தோறும் மு.ப.08.00 மணிக்கு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படுகின்றது.

**COARRI கொள்கலன் தறையிறக்கல்/ ஏற்றுதல் அறிக்கை**

ஐக்கிய நாடுகளின் EDIFACT தகவல் மாதிரிக்கமைய முகவர் நிறுவனங்களுக்கு நாள்தோறும் மு.ப. 08.15 மணிக்கு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படுகின்றது.

**BAPLIE துறைமுகத் திட்டம்/ அடுக்கும் அமைப்பு - தற்போது பயன்படுத்தப்பட்டுள்ள இடவசதி பற்றியதான தகவல்.**

உள்வரும் BAPLIE யுடன் முனையத்திலிருந்து வெளியேறும் அறிக்கை (TDR) கொள்கலன் முனைய முகாமைத்துவத் தொகுதியோடு ஒன்றிணைக்கப்படும். இதில் கொழும்பில் தரையிறக்கப்படும் கொள்கலன்கள் பற்றிய விபரங்கள் அடங்குவதோடு வெளியே செல்லும் BAPLIE பற்றியதில் புறப்பட்டுச் செல்லும் கப்பலில் சரக்குகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் அமைப்பு கப்பலின் முகவர் நிறுவனத்திடம் வழங்கப்படும்.

**இணையத்தள அணுகு மொடியூல்**

கொள்கலன் முனைய முகாமைத்துவத் தொகுதியின் இணையத்தள அணுகு மொடியூல் தற்போது பூரணமாக செயற்படுத்தப்படுகின்றது. வெளியே இருக்கும் கப்பல் சேவைகளின்/ முகவர் நிறுவனங்களுக்கு பின்வரும் தகவல்களுக்காக இலங்கை துறைமுக அதிகாரசபையின் தொகுதிக்கு தற்போது பிரவேசிக்க முடியும்.

- கப்பல் உப அட்டவணைகள் பற்றியதான விசாரணை
- கொள்கலன் தரையிறக்கல் ஆவணங்கள்
- கொள்கலன் ஏற்றுதல்
- EDI முறைக்கு ஒன்றுசேர்த்தல்
- இருக்கும் கொள்கலன் அளவின் விசாரணை
- உபகரணங்கள் இருக்கும் இடங்களை அறிந்து கொள்ளல் (கொள்கலன், டிரக் போன்றவை)

**கப்பல் சரக்கு முகாமைத்துவத் தொகுதி**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் வாடிக்கையாளர்களுக்கு திறன்மிகுந்த சேவைகள் வழங்கப்படும் நோக்கில் (CTMS) கப்பற் சரக்கு மொடியூலொன்று 2011 ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டது. கப்பற்சரக்கு அகற்றிச் செல்லப்படும் செயற்பாட்டின் போது இந்த முறையினால் அநேக பயனான நிலைமைகள் ஏற்பட்டன. அவற்றினுள் பின்வருவன முக்கியமான விடயங்களாகும். அதாவது வாடிக்கையாளர்களின் சேவை வேண்டுகோள் அவர்களின் அலுவலகங்களினாலேயே ஆரம்பித்தல், இலங்கை துறைமுக அதிகாரசபையின் இன்வோயிஸ் படிவங்களை வழங்குதல், இலங்கை வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் பணம் செலுத்தும் வசதி அல்லது இணையத்தள நிதிப் பரிமாற்ற வசதி மற்றும் எந்தவொரு வங்கியினதும் வைப்பு/ பற்று மூலம் இணையத்தள பயன்பாட்டில் கொடுப்பனவு மேற்கொள்ளப்படக் கூடியதாக இருத்தல்.

இந்த மொடியூல் இரண்டு கட்டங்களில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஏற்றுமதி செயற்பாடு தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதோடு இறக்குமதித் தொகுதி இரண்டாவது கட்டத்தில் செயற்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

**EDI ஊடாக இந்த மொடியூலினால் கிடைக்கப்பெறும் வசதிகள் - ஏற்றுமதி**

- ஏற்றுமதியாளரின் அலுவலகத்தினால் இணையத்தளம் ஊடாக சேவை வேண்டுகோள் முன்வைக்கப்படுதல்.
- இலங்கை துறைமுக அதிகாரசபையினால் சிட்டைகள் தயாரிக்கப்படுதல் மற்றும் அவற்றின் சரி பிழை பார்க்கப்படுதலுக்காக இணையத்தளம் மூலம் ஏற்றுமதியாளருக்கு அனுப்புதல் அதில் ஏதாவது பிழை இருப்பின் அதை நிராகரிக்க முடிவதோடு அதன் மூலம் சிக்கல்கள் மற்றும் தாமதங்களை தவிர்த்துக் கொள்ள முடியும்.
- CTMS அவ்வப்போது உடனுக்குடன் முறைப்படுத்துவதன் மூலம் தமது அலுவலகத்தினால் இலத்திரனியல் வங்கி முறையூடாக கொடுப்பனவு உடனடியாக செலுத்தும் வசதி அல்லது நாட்டின் எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் பணம் செலுத்தும் வசதி
- இணையத்தள பிரவேசம் மூலம் தமது அலுவலகத்திலிருந்து சரியாக கொள்கலன் அடுக்கி வைக்கும் தகவல் பரிமாற்றம்.
- வாடிக்கையாளர்கள் தத்தமது தகவல்களை இணையத்தளம் ஊடாக வழங்கப்படுதலோடு வாசல்களின் பணிகள் மிகவும் நவீனமாகுதல் மற்றும் துரிதமாக்கப்படுதல்.
- உடனுக்குடனான தகவல் அலுவலகத்தினால் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுதலின் மூலம் ஏற்றுமதி அலுவலகத்தில் வேகமாக பௌதீக ரீதியாக ஆவணங்கள் பரீட்சிக்கப்படும் ஆற்றல்.
- கொள்கலன் தொடர்பாக இணையத்தளம் ஊடாக ஏற்கனவே அறிவுறுத்தல் வழங்கப்படுதலின் மூலம் CTMS உடன் தொடர்புபடுதல்
- சரியான சுங்க வெளியீட்டு இலக்கங்கள் மூலம் சுங்க திணைக்களத்திற்கு உண்மைத்தன்மை கண்டறியப்பட ஒத்தாசை வழங்கல்
- மனித பயன்பாடு குறைக்கப்பட்டு ஆகக் கூடியதாக 45 நிமிடங்களுக்குள் முழு செயற்பாட்டிற்கும் செலவாகும் காலம் குறைக்கப்படுதல்.
- தன்னியக்க பரீட்சித்தல்கள் மூலம் உச்ச பிழையின்மை மற்றும் பிழையான செயற்பாடுகள் அகற்றப்படுதல்.

**ஒரகல் நிதித் தொகுதி**

மிகஉயர் மட்டத்திலான செயலாற்றுகை நோக்கமாகக் கொண்டு மிகவும் கீழ் மட்டத்தில் சேவை வழங்கல் வழங்கிய சேர்வர், பொது பேரேடு, கிடைக்கப்பெற வேண்டிய கணக்குகள் மற்றும் நித முகாமைத்துவ மொடியூல் கூடிய வசதிகளைக கொண்ட புதிய சேர்வருக்கு 2011 ஆண்டில் மாற்றப்பட்டது. இது நடைமுறைப்படுத்தலின் பின்னர் கையினால் செய்யப்பட்டு வந்த அநேக நடவடிக்கைகள் தன்னியக்கமான முறையில் நிதிப் பகுதியின் செயற்பாடுகள் எளிதாக்கப்படுதலின் ஊடாக அதன் பணிகள் திறன்மிக்கதாகவும் பிழையற்றதாகவும் நடைபெற்றன. இலத்திரனியல் வர்த்தகங்களின் பட்டியல்படுத்தப்பட்ட மற்றும் கொள்வனவு முகாமைத்துவ மொடியூல் தொடர்பில் புதிய சேர்வரின் கொள்ளளவுகள் முக்கியமானதாகும். இதுவானது 2012 ஆண்டில் சம்பந்தப்பட்ட இயந்திரத்தினுள் ஒரகல் நிதி தொகுதி உச்ச நிலையில் செயற்படுவதற்கு வழி வகுக்கும். பட்டியலிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் பெறுகையின் மொடியுல் 2013 நவம்பர் மாதம் செயற்படுத்தப்பட்டதோடு திருத்தப்பட வேண்டிய கணக்கு மொடியூலும் 2014 முதலாவது காலாண்டில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

**புதிய சம்பளப் படிவத் தொகுதி**

தேவைப்பாடுகளை ஒன்று சேர்த்தல், தொகுதிகளின் ஆய்வு, பகுப்பாய்வு மற்றும் விருத்தி போன்ற நிலைமைகள் முடிவடைந்ததன் பின்னர் 2011 இறுதிப் பகுதியில் செயற்படுத்தல் கட்டம் ஆரம்பிக்கப்பட்டதோடு 2012 ஆண்டில் அது முடிவடைந்தது. இத்தொகுதி பிரதானமாக நிதிப்பிரிவின் தேவைப்பாடுகள் நிறைவேற்றப்படுவதற்கு பயனபடுத்தப்படுவதுடன் இறுதிக் கட்டங்களில் இது இலங்கை துறைமுக அதிகாரசபையின் சகல பிரிவுகளோடும் ஒன்றிணைக்கப்படும்.

புதிய சம்பளப்படிவத் தொகுதி மனிதவளத் தொகுதியோடு ஒன்றிணைக்கப்படுவதோடு உரிய தொகுதி முற்றாக செயற்படுத்தப்பட்டதன் பின்னர் விடுமுறை/ மேலதிக நேர பராமரிப்பு மற்றும் அவ்வப்போது விண்ணப்பிக்கும் கடன் செயற்பாடு சுயமாக செய்யக்கூடியதாக இருக்கும். தற்போது இதன் சரி பிழை பார்த்தலுக்காக இம்முறை கொண்ட சம்பளப் படிவத் தொகுதியோடு பரீட்சிக்கப்பட்டு வருகின்றது.

**ஊழியர்களின் சுகாதார வசதிகள் முகாமைத்துவ தொகுதி(EHMS)வைத்திய தொகுதி**

வைத்தியப் பகுதியின் தரவுகள் ஒழுங்குபடுத்தப்படும் பணிகள் விருத்தி செய்யப்படுவதற்கான கணனிமயப்படுத்தும் செயற்பாடு 2012 ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டது. 146 கிகாபைட் (GB) 04 வன் தட்டுக்களுடனான IBM Sever X 3850 $M_2$ கொள்வனவு செய்யப்பட்டு LINUX RED HAT செயற்பாட்டு தொகுதியோடு இணைக்கப்பட்டது.

ஊழியர்களினது சுகாதார வசதிகள் முகாமைத்துவ தொகுதி LINUX செயற்பாட்டுத் தொகுதியின் கீழ் Oracle 10g தரவுத் தளத்துடன் VB.வலையமைப்பு பயன்பாட்டில் விருத்தி செய்யப்பட்டது. இதுவானது வைத்தியப் பகுதியின் அறிக்கைகள் பேணும் பணிகளை நிறைவேற்றுவதற்கு உதவுவதோடு அதனூடாக நோயாளர்களை பதிவு செய்தல், சிகிச்சைகள் மருந்து வினியோகம், நோயாளர்களினது வைத்திய பரிசோதனை அறிக்கைகள், நோயாளர்களை அனுமதித்தல் போன்ற தொடர்புபடும் பணிகளை இலகுபடுத்துகின்றது. தற்போது இத்தொகுதி இணையாக செயற்படுத்தப்படுவதற்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

**உயிரியல் ரீதியான நேர வருகை தரல் மற்றும் பௌதீக ரீதியான பிரவேச கட்டுப்பாட்டுத் தொகுதி (TAPACS)**

இத்தொகுதி 2009 ஆம் ஆண்டு பாவனையில் ஈடுபடுத்தப்பட்டதோடு இது தற்போது கொழும்பு, காலி, மாகம் ருஹூணுபுர மகிந்த ராஜபக்ஷ துறைமுகங்களில் நடை முறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இது மிகவும் வெற்றியளித்துள்ளதோடு இருக்கும் பதிப்பு இயந்திரங்கள் மற்றும் இப்புதிய தொகுதியின் பயன்பாட்டில் இலங்கை துறைமுக அதிகார சபையின் அனைத்து ஊழியர்களுக்கான ஸ்மாட் அட்டை தொழில் நுட்பத்தின் மூலம் அடையாள அட்டை அச்சிட்டு 2009 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.இலங்கை துறைமுக அதிகார சபையின் தேவைப்பாட்டிற்கேற்ப தயாரிக்கப்பட்ட மென் பொருள் Tமற்றும்A இயந்திரங்கள் பொருத்தப்பட்ட அனைத்து நிருவாக அலகுகளுக்கும் அறிமுகப்படுத்தபட்டு செயற்படுத்தப்பட்டு தற்போது ஐந்து வருடங்கள் பூர்த்தி அடைந்துள்ளன. வரவுகளைப்பேணும் கடமையில் ஈடு பட்டுள்ளோருக்கு இதன் அறிக்கைகள் பேணும் பிரிவு மிகவும் பிரயோசனமுள்ளதாகும்.இதன் தகவல்கள் பாதுகாப்பு,சம்பளப்படிவங்கள் மற்றும் மனித வளமுகாமைத்துவ பிரிவுகளினால் இத்தரவுகள் பயன்படுத்தப்படுகின்றன.

2013 ஆம் ஆண்டினுள் முதலாவது தடவையாக வழங்கப்பட்டு ஐந்து வருடங்கள் கடந்த அடையாள அட்டைக்கு பதிலாக புகைப்படம் கொண்ட அடையாள அட்டை அச்சிடல் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

சில செயற்படாத இயந்திரங்களுக்குப் பதிலாக புதிய இயந்திரங்கள் பொருத்துதல் மற்றும் மாகம் ரூஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தின் வழமையான பாவனையாளர்களுக்கான அனுமதிப்பத்திரம் (RPU) வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**மஹபொல பயிற்சி நிலையம்**

மஹபொல பாடநெறிகளில் பங்குபற்றுவோர் அவர்கள் பயிலும் பாடநெறிகளின் இறுதியில் உரிய தகவல்களை வழங்கி அவர்களின பெறுபேறுகளை அறியக் கூடியவாறு இலங்கை துறைமுக அதிகாரசபையினால் இணையத்தளத்துடனான தொடர்பு (Link) ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**இருக்கும் தொகுதிகளைப் பராமரித்தல்**

ஈடுபடுத்தும் தொகுதி செயற்பட்டதன் பின்னர் அதன் மென் மற்றும் துணை வன் பொருட்களைப் பராமரித்தல் தகவல் தொகுதிப் பகுதியின் பிரதான பொறுப்பாகும் எந்தவொரு தொகுதியொன்றும் ஸ்தாபிக்கப்படும் முழுமையான முயற்சியில் 60% அளவு தொகுதிகளைப் பராமரித்தல் தொடர்பிலாக இருக்கும் இதுவானது தொகுதிகளின் அபிவிருத்தி சுற்றின் நீண்டகால செயற்படுத்தும் பிரிவாகக் கருதப்படுகின்றது. தொகுதியின் நடவடிக்கைகள் முடிவடைவதோடு பராமரிப்புக் காலமும் முடிவடையும். தொகுதிகள் ஆரம்பிக்கப்படுதலும் பராமரித்துச் செல்லும் தகவல் தொகுதியின் பொறுப்பானதால் தகவல் தொகுதி பகுதியிடம் ஒப்படைக்கப்படும் பராமரிப்பு நடவடிக்கைகளின் அளவும் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயமாகும். மென் மற்றும் வன் பொருட்கள் உரிய நேரத்தில் பேணப்படுவது தொடர்பில் தகவல் தொகுதிப் பகுதியினால் மேற்கொள்ளப்படும். சடுதியான செயற்பாடுகள் தகவல் தொகுதி தொடர்ச்சியாகச் செயற்படுவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு ஒத்தாசை வழங்குகின்றது.

மீளாய்வு ஆண்டினுள் தகவல் தொகுதிப் பகுதியினால் பின்வரும் தொகுதிகள் பராமரித்துச் செல்லப்படுவதற்காக பொறுப்பேற்கப்பட்டன.

**FCL/LCL/ தரையிறக்கல் மற்றும் வினியோகத் தொகுதி**

சம்பந்தப்பட்ட தொகுதிகள் IBM ஆரம்ப சட்டம் கொண்ட இயந்திரங்களினால் செயற்படுகின்றன. வாடிக்கையாளர்களுக்கு தடையின்றிய சேவை வழங்குவதற்காக தேவைப்படும் பாதுகாப்பு நடைமுறைகளின் மூலம் சிறந்த முறையில் ஆற்றப்படும் சேவை உறுதிப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முதலீட்டுச் சபை, கட்டுநாயக்க மற்றும் புறக்கோட்டை ஆவணங்கள் தயாரிக்கும் நிலையங்களிலுள்ள தரையிறக்கல் மற்றும் வினியோகத் தொகுதிகள் தற்போதும் கூட ஆரம்ப சட்டம் கொண்ட இயந்திரங்களினாலேயே இயங்குகின்றன.

**கொள்கலன் கப்பற்சரக்கு நிலையம் / பேலியகொட**

தொகுதியின் ஒத்துழைப்பு மற்றும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. உரிய கரும அறிக்கைகளின் வேண்டுகோள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. சேர்வர் பராமரிப்பு மற்றும் தரவுகள் பேணப்படும் செயற்பாடுகள் மேற்பார்வை செய்யப்பட்டு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டன.

**பாதுகாப்பு கட்டுப்பாடு மற்றும் அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் தொகுதி**

துறைமுக பாவனையாளர்களுக்கு தொகுதியின் ஒத்துழைப்பு,பயிற்சி மற்றும் காலத்திற்கு தேவையான அறிக்கைகள் வழங்கப்பட்டன. சேர்வர் பராமரிப்பு மற்றும் தரவுகள் பேணும் செயற்பாடு மேற்'பார்வை செய்யப்பட்டு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

## நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள் பகுதி

இப்பகுதியினால் அதிகாரசபையின் ஊழியர்களுக்கு நிதிசார் மற்றும் நிதிசாராத பல நலன்புரி வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த வசதிகள் ஊழியர்களின் நலன்கள் கருதி அடிக்கடி திருத்தப்பட்டும் மேம்படுத்தப்பட்டும் 2013 ஆண்டில் உயர் நிலையில் வழங்கப்பட்ட நலன்புரி வசதிகள் பின்வருமாறு.

**பணியாளர்களுக்கான இலவச உணவு**

துறைமுக அதிகாரசபையில் முறை மாற்று அடிப்படையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு பகல்/ இரவு உணவு பானம் போன்று தேனீர் மற்றும் தின் பண்டங்களும் அலுவலக ஊழியர்களுக்கு இலவசமாக பகல் உணவும் வழங்கப்படுகின்றன. இதற்காக 2013 ஆண்டில் மில்லியன் 596.66 ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

**ஊழியர்களுக்கான சடுதி விபத்துக்கள் மற்றும் காப்புறுதித் திட்டம்**

2011 ஆண்டிற்கு முன்பிருந்த வைத்திய உதவித் திட்டம் 2011 ஆகஸ்ட் மாதம் 31 ம் திகதியிலிருந்து இடைநிறுத்தப்பட்டது. இதன்படி முன்னர் இருந்த வைத்திய உதவித் திட்டத்தை விடக் கூடிய அனுகூலங்களைக் கொண் புதிய காப்புதித் திட்டம் 2011 செப்டெம்பர் மாதத்தில் செயற்படுத்தப்பட்டது இதன் கீழ் முன்னரை விட கூடிய அனுகூலங்களும் சடுதி விபத்தொன்றின் போது ஒரு மில்லியன் ரூபா கொண்ட காப்புறுதியும் கிடைக்கப்பெறுவதோடு இயற்கையான மரணம் எய்தலின்போது ஒரு இலட்சம் ரூபாவுக்கான காப்புறுதியும் உரித்தாகும். இதற்கு மேலதிமாக வெளிவாரியான வைத்திய சிகிச்சைகளுக்கு வருடாந்தம் ரூபா 7500/= தொகை ஈடு செய்யப்படும். மேலும் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறுகையிள் செலவினங்களுக்கு ஒரு இலட்சம் ரூபா காப்புறுதியும் உரித்தாகும். ஊழியரொருவருக்கு தனது சுய விருப்பத்தின் மீது தனது குடும்ப உறவினர்களை இக்காப்புறுதியினுள் சேர்த்துக் கொள்ளக் கூடியதாக இருத்தல் இதன் விசேடமாகும். இதற்கு தனது மனைவி அல்லது கணவன் தொடர்பில் வருடாந்தம் 1500/= ரூபாவும் பிள்ளயொருவர் தொடர்பில் வருடாந்தம் 720/= ரூபாவும் செலுத்தப்படுதல் வேண்டும். மேலும் 2012 செப்டெம்பர் மாதம் 01 திகதியிலிருந்து இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்துடன் இணைந்து இந்த காப்புறுதித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. 2013/2014 ஆண்டிலும் இவ்வாறு இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்துடன் இணைந்து இக்காப்புறுதி திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதோடு இது தொடர்பில் பங்களிப்பு கொடுப்பனவாக ரூபா 99,507,044/= தொகை இதுவரை செலுத்தி முடிக்கப்பட்டுள்ளது.

**வழிகாட்டிகளுக்கான காப்புறுதித் திட்டம்**

மேற்குறிப்பிடப்பட்டுள்ள காப்புறுதி திட்டத்திற்கு மேலதிகமாக அதிகாரசபையின் கப்பலோட்ட பகுதியில் கடமையாற்றும் வழிகாட்டிகளுக்காக விசேட காப்புறுதி திட்டம் பேணப்படுவதுடன் இதற்கு கப்பலோட்டப் பகுதயின் கீழ் கடமையாற்றும் அனைத்து வழிகாட்டிகளுக்கும் இக்காப்புறுதித் திட்டத்தினை பெற்றுக் கொள்ளமுடியும். இக்காப்புறுதி திட்டமானது 2013 ஆண்டிலிருந்து மேற்குறிப்பிடப்பட்டுள்ள சுகாதார காப்புறுதித் திட்டத்தின் கீழ் ஒன்றிணைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இக்காப்பறுதி தொடர்பில் வழிகாட்டிகளிடமிருந்து சுமார் ரூபா 52,755/= அறவிடப்பட்டுள்ளதுடன் மீதித் தொகை துறைமுக அதிகாரசபையினால் பொறுப்பேற்கப்படும்.

**வீட்டுக் கடன் திட்டம்**

துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களுக்கு வீடொன்று வாங்குவதற்கு வீடொன்றை அமைப்பதற்கு, புதிதாக ஒரு பகுதியை சேர்ப்பதற்கு அல்லது வீடொன்றை அமைப்பதற்காக காணியொன்றை வாங்குவதற்கு ஆகக் கூடிய தொகையாக ஐந்து இலட்சம் ரூபா வரையிலான கடன் பெற்றுக்கொள்ளும் திட்டம் அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் ஒத்துழைப்போடு செயற்படுத்தப்படுகின்றது. 6% சலுகை வட்டி விகிதம் அறவிடப்படுவதோடு வருடாந்தம் இதற்காக ரூபா 50,000,000/= ஒதுக்கப்படுகின்றது. இவ்வீட்டுத் திட்டம் தொடர்பில் அரச ஈட்டு முதலீட்டு வங்கிக்கு 2013 ஆண்டினுள் ரூபா 14,975,000/= தொகை விடுவிக்கப்பட்டுள்ளது.

**புலமைப் பரிசில் திட்டம்**

அதிகாரசபையின் பிள்ளைகளுக்கு பல்கலைக்கழக மற்றும் க.பொ.த உ/த கல்வி பயில்வதற்கான இரண்டு புலமைப் பரிசில் திட்டம் நடைமுறையிலுள்ளது.

இதன்படி க.பொ.த உ/தரம் கற்பதற்காக மாதமொன்றுக்கு தலா ரூபா 750/= வீதம் 24 மாதங்களுக்கு வழங்கப்படுகின்றது. மீளாய்வுக்குட்படும் 2013 ஆண்டில் இப்புலமைப்பரிசில் தொடர்பில் ரூபா 3,276,600/= விடுவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2012 ஆண்டில் நடைபெற்ற க.பொ.த சா/தா பரீட்சையில் சித்திபெற்ற பிள்ளைகளுக்காக 261 பிள்ளைகளுக்கு க.பொ.த உ/த கற்பதற்கான புலமைப்பரிசில் விண்ணப்பங்கள் முன்வைக்கப்பட்டு அவர்களுக்குரிய நிதியுதவி வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பல்கலைக்கழக கல்விக்காக தெரிவு செய்யப்படும் அதிகாரசபையின் ஊழியர்களினது பிள்ளைகளுக்கு வருடாந்தம் ரூபா 25,000/= கற்கை ஆண்டுகளுக்களுக்கமைவாக ஆகக் கூடியதாக 05 வருடங்கள் வரை புலமைப் பரிசில் வழங்கப்படுகின்றது. இப்புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் 2013 ஆண்டில் ரூபா 3,276,000/= நிதி வழங்கப்பட்டுள்ளது.

இப்புலமைப் பரிசில் வழங்கலின் முக்கிய விடயம் யாதெனில் சென்ற ஆண்டிலிருந்து புலமைப்பரிசில் பெறுவோரின் தொகையில் துரித வளர்ச்சி ஏற்பட்டுள்ளமையாகும். இந்த ஆண்டிலும் இது தென்படுகின்றது. மேலும் இவ் ஆண்டிலிருந்து புலமைப் பரிசில் பெறுவோருக்கு அவர்களின் நிதியுதவிகள் வங்கியூடாக கொடுக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**நலன்புரி வண்டிகள்**

அதிகாரசபையின் ஊழியர்களுக்கும் அவர்களினது குடும் உறவினர்களுக்கும் உல்லாச மற்றும் சுற்றுலா பயணங்களுக்காக சலுகை கட்டணத்தில் பஸ் வண்டிகள் பெற்றுக்கொடுக்கப்படுவதோடு ஊழியர்களின் மரணங்கள் தொடர்பில் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் இலவசமாக பஸ் வண்டியொன்று வழங்கப்படும். அவ்வாறு வழங்கப்பட முடியாத சந்தர்ப்பத்தில் ஆகக் கூடியதாக ரூபா 6,500/= செலவினம் ஈடுசெய்யப்படும். மேலும் அதிகாரசபையின் ஊழியர்களுக்கு அவர்களின் சேவை நிலையங்களுக்கு இலகுவாக செல்வதற்கு துறைமுக வளவினுள் இலவச போக்குவரத்து சேவை மீளாய்வுக்குட்படும் ஆண்டிலும் தொடர்ச்சியாக பேணப்பட்டுள்ளது.

2013 ஆண்டில் நலன்புரி நடவடிக்கைகளுக்கு பஸ் வண்டிகள் ஈடுபடுத்தப்பட்டதன் மூலம் அதிகாரசபை ரூபா 3,465,502/= வருமானம் ஈட்டியுள்ளது. 2013 ஆண்டில் நலன்புரி பஸ் வண்டிகள் போக்குவரத்தின் பின்னர் சுற்றுலா தொடர்பில் மீதமான பணம் மற்றும் எரிபொருளுக்காக செலவாகிய தொகை சுற்றுலா ஏற்பாடுகள் செய்த ஊழியர்களின் மாதாந்த சம்பளத்துடன் செலுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**விசேட விடுமுறை உரித்துக்களுக்கான கொடுப்பனவு மேற்கொள்ளல்**

நோயாளியாக அல்லது சடுதி விபத்தொன்றில் தமக்குரிய அனைத்து லீவுகளும் முடிவடைந்துள்ள சந்தர்ப்பத்தில் மீண்டும் தகுதியான நிலைமைக்கு வரும் வரை வைத்திய ஆலோசனையின் மீது ஆகக் கூடியதாக 06 மாதங்கள் வரை அங்கீகார சம்பளமற்ற நலன்புரி விடுமுறை வழங்கப்படுகின்றது. 2013 ஆண்டில் இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற 85 விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டு அதன்படி 190 நாட்களுக்கான சம்பளமற்ற அங்கீகார விடுமுறைகள் வழங்குவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**நலன்புரி உண்டிச்சாலைகள்**

அதிகாரசபையின் வளவினுள் அதிகாரசபையின் ஊழியர்கள் போன்று பல்வேறு விடயங்களுக்காக துறைமுகத்திற்கு வருகை தருவோருக்கான வசதிகளுக்கு 15 உண்டிச்சாலைகள் சலுகை விலையில் உணவு பானங்கள் வழங்கப்படுவதற்காக நடாத்திச் செல்லப்படுகின்றன. வருடந்தோறும் விலைகோரல்கள் மேற்கொள்ளப்பட்டு குத்தகையாளர்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டதன் மூலம் 2013 ஆண்டில் ரூபா 8,976,589/= வருமானம் கிடைக்கப்பெற்றது.

**ஊழியர்களுக்கான ஞாபகார்த்த சின்னம் வழங்குதல்**

அதிகாரசபையின் சகல ஊழியர்களுக்கும் தமது 30 வருட சேவைக்காலம் பூர்த்தி செய்ததன் பின்னர் பெறுமதியான பரிசுகள் வழங்கப்படுவதுடன் 2013 ஆம் ஆண்டிலிருந்து பரிசுகள் வழங்கும் முறை முற்றாக மாற்றப்பட்டது அதன்படி ஓய்வு பெறும்போது சேவைக்காலத்திற்கேற்ப தங்கப் பவுண்களுக்கான உரித்து கிடைக்கப் பெறும். 2013 ஆம் ஆண்டில் 30 வருடங்கள் நிறைவு செய்த 135 பேருக்கும் 40 வருடங்கள் பூர்த்தி செய்த 02 பேருக்கும் இவ்வாறு ஞாபக பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

**கடலக நூதனசாலை**

துறைமுகம் மற்றும் கப்பலோட்டத் துறையின் வரலாற்றுக் காலங்களை சித்தரிக்கும் உருவ மாதிரிகள், விளம்பர பலகைகள் போன்று பழைய துறைமுக வளவினுள் பயன்படுத்தப்பட்ட பொருட்களும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்களுக்கிடையில் மிகவும் பிரபல்யமாகியுள்ள இந்த நூதனசாலை துறைமுகங்கள் மற்றும் கப்பலோட்ட நடவடிக்கைகள் பற்றியதில் அக்கறையுள்ளோருக்கும் பிரயோசனமுள்ள இடமாகும். 2011 ஆம் ஆண்டில் தேசிய நூதனசாலைத் திணைக்களத்தின் உதவியோடு விசேட விளம்பர பதாகைகள் பொருத்தப்பட்டன. கட்டணமின்றிய இதனைப் பார்வையிடுவதற்காக மு.ப.10.00 இருந்து பி.ப.07.00 மணி வரை திறந்து வைக்கப்படும். இந்நிலையத்தில் புத்தகங்கள், பிரசுரங்கள், வரைந்த அட்டைகள் விற்பனை செய்யப்பட்டதன் மூலம் 2013 ஆண்டினுள் 113,510/= வருமானமாகப் பெறப்பட்டுள்ளது.

**நலன்புரி விளையாட்டரங்க வசதிகள்**

அதிகாரசபையினால் நலன்புரி நிலையங்களுக்கு தலா ஒரு விளையாட்டரங்கம் வீதம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக துறைமுக அதிகாரசபையின் விளையாட்டு சங்கத்திற்கு வருடமொன்றுக்கு ரூபா 712,000/= தொகைக்குட்பட்டதாக விளையாட்டு மேம்பாட்டுப் பணிகளுக்காக வழங்கப்படுகின்றன.

**நூலக வசதிகள்**

அதிகாரசபையினது ஊழியர்களின் வாசிக்கும் ஆர்வம் அதிகரிக்கப்படுவதற்காக ஊழியர்களினால் நடாத்திச் செல்லப்படும் ஒவ்வொரு நூலகத்திற்கும் வருடாந்தம் ரூபா 45,000/= வழங்கப்படும். இவ்வாறான 19 நூலகங்கள் துறைமுக வளவினுள் உள்ளன. 2013 ஆம் ஆண்டினுள் 19 நூலகங்களுக்கு புத்தகங்கள் வாங்குவதற்காக ரூபா 200,000/= வழங்கப்பட்டுள்ளது.

**பகல் நேர பராமரிப்பு நிலையம் மற்றும் முன்பள்ளி பாடசாலை**

அதிகாரசபையின் சேவா வனிதா பிரிவினால் அதிகாரசபையின் ஊழியர்களின் பிள்ளைகளுக்காக நடாத்திச் செல்லப்படும் பகல் நேர பராமரிப்பு நிலையம் மற்றும் முன்பள்ளி பாடசாலை இவ்வருடத்தினுள் நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள் பகுதியின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. சென்ற வருடங்கள் போன்று பகல் நேர நிலைய பிள்ளைகளுக்கு இலவசமாக பகல் உணவு வழங்கப்படுவதுடன் வேண்டப்படும் சந்தர்ப்பங்களின் போது அவர்களுக்கான வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன.

**உபகரணங்கள் வழங்கல்**

ஊழியர்களின் நலன்புரி நிலைமைகள் மேம்படுத்தப்படும் பொருட்டு நலன்புரி நிலையங்களில் ஓய்வு நேரங்களை பயனுள்ள வகையில் கழிப்பதற்காக ஊழியர்களின் வேண்டுகளின் மீது தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் ஏனைய உபகரணங்கள் தொடர்ச்சியாக வழங்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

## மருத்துவம்

ஒருவரின் ஏனைய காரணங்கள் தவிர்ந்த அவரின் சுகாதார நிலை மீது அவரின் எந்தவித முயற்சியின் வெற்றி அல்லது தோல்வி தங்கியுள்ளது. அதேபோன்று ஆளணிகளின் "சிறந்த சுகாதார நிலைகள் எந்தவொரு நிறுவனமொன்றினதும் எதிர்கால இலக்குகள் வெற்றியடைதலின் பிரதான பங்கினை வகிக்கின்றது.

இந்த அடிப்படையான "சுகாதார காரணியை முன்வைத்து இலங்கை துறைமுக அதிகாரசபையின் மருத்துவ பணியாளர்கள் சுகாதார வளம் கொண்ட திருப்திகரமான ஆளணியினர் ஊடாக பயனுள்ள செயற்றிறன் மிக்க அபிவிருத்திக்காகவும் இரவு பகலாக கடமைகளை நிறைவேற்றி வருகின்றனர்.

2013 ஆண்டில் பிரதான வைத்திய அலுவலர், பிரதி பிரதான வைத்திய அலுவலர், இரண்டு வைத்தியர்கள், உதவி வைத்தியர்கள், பல் வைத்தியர், துணை வைத்திய சேவைகள் மற்றும் நிர்வாக பணியாளர்கள் வைத்திய பகுதியில் உள்ளடக்கம் பெற்றிருந்தனர்.

- சடுதி விபத்துக்கள், அவசர நிலைமைகள் மற்றும் அவசர சிகிச்சைகளுக்கு உடனடியாக சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.
- வாழ்க்கை நிலை காரணமாக ஏற்படும் நோய்களுக்கு தொடர்ச்சியாக அவதானத்துடன் இருப்பதற்காக 24 மணித்தியாலங்கள் பூராகவும் சேவை அர்ப்பணிப்பு கொண்ட அனுபவமிக்க வைத்திய பணியாளர்கள் இருப்பதனால் நோயாளர்களுக்கு தனித்தனியே வைத்தியர்களைச் சந்தித்து சிகிச்சைகள் பெறும் வசதி செய்யப்பட்டுள்ளது.
- எக்ஸ் கதிர், ஈ.சீ.ஜீ கதிரியல் மற்றும் ஆய்வுகூட வசதிகள் மேலும் விருத்தி செய்யப்பட்டுள்ளன. 24 மணித்தியாலங்கள் பூராகவும் செயற்படும் நோயாளர் காவு வண்டிச் சேவையும் உண்டு.
- பல் பிடுங்குதல், பற்கள் துப்புரவு செய்தல், நிரப்புதல், நிரந்தர மற்றும் பற்குழிகள் நிரப்புதல் அடங்கலான ஏனைய பல் சம்பந்தப்பட்ட சிகிச்சைகளும் வழங்கப்பட்டன.
- பிரதான வைத்தியசாலைகளில் பொதுவான வைத்திய பரிசோதனைகள் தொடர்பில் வேண்டுகோள் விடுக்கும் நோயாளர்களுக்கு விசேட விலைகளின் மீது விசேட கழிவுகள் பெறக் கூடியதாக இருந்தன.
- இலங்கை துறைமுக அதிகாரசபையில் பகுதிரீதியான டெங்கு ஒழிப்பு குழு உறுப்பினர்கள் மற்றும் பகுதித் தலைவர்களின் மேற்பார்வையில் ஒவ்வொரு பகுதியுடன் தொடர்புபட்ட

டெங்கு ஒழிப்புக் குழுவினால் கிழமை தோறும் துறைமுக வளவினுள் டெங்கு பெருகும் இடங்கள் பரீட்சிக்கப்பட்டன.

- ஒவ்வொரு பகுதியினாலும் மாதாந்த அறிக்கை பிரதான வைத்திய அலுவலரிடம் வழங்கப்பட்டு அவரினால் இலங்கை துறைமுக அதிகாரசபையின் மேலதிக முகாமைப் பணிப்பாளர் ஊடாக நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் செயலாளரிடம் இந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

- இலங்கை துறைமுக அதிகாரசபையின் டெங்கு ஒழிப்பு குழுவினால் டெங்கு ஒழிப்பதற்கான தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் அதில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் கலந்துரையாடப்படுவதற்கும் குழுக் கூட்டங்கள் நடாத்தப்படுகின்றன.

- மதுபானம் மற்றும் புகை பிடித்தல் தொடர்பில் வைத்தியர்களினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளும் ஆலோசனைச் சேவை மற்றும் சுவாச வெளியேற்ற காற்றில் மதுபான அளவு தொடர்பான பரிசோதனை மூலம் நல்லாட்சிக்கு பங்களிப்பு வழங்கியதோடு கடமையிலீடுபட்டிருக்கையில் ஏற்படக் கூடிய விபத்துக்களும் குறைத்துக்கொள்ள முடிந்துள்ளது.

- காச நோய்க்கான விசேட விடுமுறைகள், நலன்புரி மற்றும் சடுதி விபத்து விடுமுறைகள் போன்றவை தேவைப்பட்ட உரிய நபர்களுக்கு வழங்கப்பட்டன.

- மத்திய சமையலறையில் உணவுகளுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கான வைத்திய பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன.

- 2012 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டவாறு துறைமுக அதிகாரசபையின் வளவினுள் கட்டாக்காலி நாய்களை மலடாக்கும் மற்றும் ஊசியேற்றும் வேலைத்திட்டங்கள் 2013 நவம்பர் மாதம் 04 இருந்து 08 ஆம் திகதி வரை புளு பவ் டிரஸ்ட் எனும் நிறுவனத்தினால் நடாத்தப்பட்டன. இதற்காக ரூபா 1,67500/= செலவிடப்பட்டுள்ளது.

- தலைவரின் ஆலோசனைக்கேற்ப வைத்தியப் பகுதியின் வளங்கலின் பாவனை மிகவும் சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்யப்பட்டது.

- தகவல் முறைமைத் தொகுதியின் ஒத்துழைப்போடு இப்பகுதியின் பணிகள் கணனிமயப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
- பகுதியின் நோக்கு மேற்கொண்டு செல்லப்படுவதற்கு சகல வளங்கள்,சேவைகள் மற்றும் வசதிகளின்,மேம்பாட்டுப் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன.

## உள்ளக கணக்காய்வு

உள்ளக கணக்காய்வுப் பகுதியின் செயற்பாடுகள் வருடாந்த கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வழிகாட்டப்பட்டு மேற்கொள்ளப்பட்ட இதனை கணக்காய்வு குழு பரிந்துரைத்து பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் வருமானம் மற்றும் செலவின விடயங்களுக்கமைய உள்ளக பரிசோதனைகள், வழமையான உள்ளக கணக்காய்வு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

**உள்ளக பரிசோதனைகள்**
**வருகை**

தொழிலாளர் மற்றும் தொழிலாளர் தரத்திலல்லாத ஊழியர்கள் சேவை நிலையத்தில் பிரசன்னமாக இருப்பது தொடர்பில் திடீர் பரிசோதனைகள் அவசர சுற்றிவளைப்புக் குழுவினால் இரவு/பகல் வேலைமுறைகளில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. கடமை நேரத்தில் அனுமதியின்றி

சேவை நிலையத்தை விட்டுச் சென்ற ஊழியர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன ஊழியர்கள் சிறந்த முறையில் தமது சேவை நிலையங்களுக்கு வருகை தரல் இதன் மூலம் நடைபெற்ற பயனுள்ள செயலாகும் .

**நிதி**

காசு மற்றும் கட்டு நிதி தொடர்பில் அடிக்கடி அவசர பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு குறைபாடுகள் அறிவிக்கப்பட்டன.

**வருமான கணக்காய்வு**

வருடத்துக்கான வருமானம் ஒன்றுசேர்ப்பு தொடர்பில் கணக்காய்வு வேலைத்திட்டத்திற்கேற்ப கணக்காய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. பூர்வாங்க கணக்காய்வுப் பணிகளின் பின்னர் மிகையான செலுத்துதல்களுக்கு மீள் செலுத்துதல் நடைபெற்றது.

கடன்பட்டோர் கணக்குகள், பிணக்கிற்குரிய சிட்டைகள் மற்றும் காலாவதியான காசோலைகள் பரிசோதிக்கப்பட்டு அவைகளின் வித்தியாசங்கள் அறிவிக்கப்பட்டன. கட்டுநாயக்க, பியகம தரையிறக்கல் மற்றும் கையளித்தல் பிரிவுகளிலும் பரிசோதனைகள் இடைவிடாது மேற்கொள்ளப்பட்டன.

**செலவினக் கணக்காய்வு**

மூலதன மற்றும் மீண்டு வரும் செலவினங்களும் களஞ்சிய வவுச்சர்கள் தொடர்பிலும் ஆய்வு பரீட்சிப்புக்கள் செய்யப்பட்டன. வாகன ஓட்டக் குறிப்புப் படிவங்களும் வாகன அங்கீகாரம் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களும் பரீட்சிக்கப்பட்டு குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டன. சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் தொடர்பான தயாரித்தல்கள் தொடர்ச்சியாக கவனிக்கப்பட்டு கண்டறியப்பட்ட வித்தியாசங்கள் அறிக்கை செய்யப்பட்டன.

**களஞ்சியங்கள் பற்றியதான பௌதீக ரீதியான உறுதிப்பாடுகள் பரீட்சித்தல்**

கொழும்புத் துறைமுகத்தின் களஞ்சியங்கள் பற்றியதிலான பௌதீகரீதியான உறுதிப்பாடுகளின் பரீட்சித்தல்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு காலி, திருகோணமலை போன்ற துறைமுகங்களினது வருடாந்த இருப்பு பரீட்சித்தல்களின் போது ஒத்தாசைகளும் வழங்கப்பட்டன. பிரதான களஞ்சியங்களின் தொடர்ச்சியான உறுதிப்பாடுகள் பரீட்சிக்கப்படுகையில் களஞ்சியங்களில் இருக்கும் அடிக்கடி தேவைப்படாத பொருட்கள் அடையாளங் காணப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக வழங்கல் பகுதியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

**பரிசோதனைகள்**

தலைவர்/முகாமைப் பணிப்பாளரின் வேண்டுகோளிற்கிணங்க ஆண்டினுள் விசேட பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

**இறுதிக் கணக்குகள்**

இறுதிக் கணக்கீடுகளின் நியமங்களுக்கேற்ப அனுசரித்து நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் மற்றும் உறுதிப்படுத்தும் எண்ணத்தோடு அதிகாரசபையின் இறுதிக் கணக்குகள் பரீட்சிக்கப்படுவதில் இப்பகுதி அக்கறை எடுக்கின்றது.

**முன் கணக்காய்வு**

வைப்புக்களை மீளசெலுத்துதல் மற்றும் துறைமுக கட்டணங்களை கைவிடுதல் தொடர்பில் மீளாய்வாண்டினுள் முன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

## மஹபொல பயிற்சி நிலையம்

### பொது

துறைமுக ஊழியர்கள், துறைமுக பாவனையாளர்கள் விசேடமாக கடலகத் துறையுடன் தொடர்புபட்டுள்ள ஏனையோருக்கும் பயிற்சிகளுக்கான சந்தர்ப்பங்கள் வழங்குவதனை. பிரதான நோக்காகக் கொண்டுள்ள இலங்கை துறைமுக அதிகாரசபையின் அறிவின் மைய நிலையமான மஹபொல பயிற்சி நிலையம், இலங்கை துறைமுக அதிகாரசபையின் முக்கிய பகுதியாகும். ஊழியர்களினது அறிவு, தேர்ச்சி மற்றும் உளப்பாங்கு போன்றவற்றினை விருத்தி செய்யும் நோக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்ட விரிவுரைகள், மாநாடுகள், பயிற்சிப் பட்டறைகள், செயன்முறை நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவற்றில் கவனம் செலுத்தப்பட்டு 2013 ஆண்டின் வருடாந்த பயிற்றுவித்தல் நாட்காட்டிற்கேற்ப நிகழ்ச்சித் திட்டங்கள் இந்த நிலையத்தினால் நடாத்தப்பட்டன. துறைமுக ஊழியர்களுக்கான உற்பத்தித்திறன், குழு உணர்வு மேம்பாடு, தொழில்நுட்ப தேர்ச்சி தரமுயர்த்துதல், வாடிக்கையாளர்களின் சேவை மற்றும் தர மேம்பாடு நோக்காகக் கொண்ட பல பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. ஊழியர்களின் திறன் மட்டம் உயர்த்தப்படுவதற்கும் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளல் வரை துறைமுக ஊழியர்கள் தமது தேர்ச்சிகளை வளர்த்துக் கொள்வதற்காகவும் துறைமுக இயக்கங்களுக்குரிய தெரிவுசெய்யப்பட்ட சேவைகளில் விசேட அறிவு பெறுவதற்காகவும் மஹபொல பயிற்சி நிறுவனம் அமைப்பு ரீதியான வழிகளை ஏற்படுத்துகின்றது.

2013 ஆம் ஆண்டினுள் மஹபொல பயிற்சி நிலையத்தினால் 739,387 மனித மணித்தியாலங்கள் பயன்படுத்தப்படுதலின் ஊடாக சுமார் 7,099 பேர் (தொழிலில் ஈடுபட்டிருக்காத) பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். இது சென்ற ஆண்டுடன் ஒப்பிடப்படுகையில் 27% வளர்ச்சியாகும். இதற்குப் புறம்பாக பல்கலைக்கழகங்களில் கல்வி பயில்வோர், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஏனைய (தொழில் கல்வி நிறுவனங்களின் 287 பேருக்கு மஹபொல பயிற்சி நிலையத்தினால் தொழிலில் ஈடுபட்டிருக்கையில்) பயிற்சி வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

**2013 ஆண்டின் ஒட்டுமொத்த பயிற்சியளிப்பின் செயலாற்றுகை**

| துறைகள் | பயிற்றுவிக்கப்பட்ட தொகை | மொத்த மனித மணித்தியாலங்கள் |
|---|---|---|
| உபகரணங்கள் கையாளுதல் | 2,722 | 20,208 |
| சரக்குகள் கையாளுதல் | 54 | 814 |
| முகாமைத்துவம் | 1,675 | 569,350 |
| தகவல் முறைமை | 433 | 44,119 |
| தொழில்நுட்பம் | 289 | 26,904 |
| தீ காப்பு மற்றும் தொழில்சார் சுகாதாரம் | 993 | 47,908 |
| கடலகம் மற்றும் மாலுமி | 933 | 30,084 |
| தே.கை.ப. அதிகாரசபையின் பயிலுனர்கள், தொ.ப.அ மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகள் | 222 | 226,080 |
| பல்கலைக்கழக பட்டப் படிப்பு மேற்கொள்பவர்கள் | 65 | 93,600 |
| **மொத்தம் (சேவையிலீடுபட்டிருக்கையில்)** | **7,386** | **1,059,067** |
| **மொத்தம் (சேவையிலீடுபட்டிருக்காத)** | **7,099** | **739,387** |

**பதவியுயர்வுகளுக்கான புதிய நடைமுறையின் கீழ் இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்கள் தகைமைகளை பெற்றுக் கொள்ளுதல்**

அடிப்படை தகைமையான கா.பொ.த(சா/தரம்) தகைமைகள் இல்லாததன் காரணமாக அநேகமான துறைமுக ஊழியர்கள் பதவியுயர்வுகள் பெற முடியாமல் ஒரே பதவியில் இருக்கின்றமை அவதானிக்கப்பட்டது. 2013 ஆண்டில் 153 அபேட்சகர்கள் தொடர்பில் இவ்வாறான இரண்டு வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

மேலும் நிறைவேற்று அலுவலர்களின் பயன்பாட்டிற்காக, உயர் ஆங்கில மற்றும் துறைமுக பாதுகாப்பு தொடர்பான டிப்ளோமா வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 2013 ஆண்டில் முகாமைத்துவ தகவல் முறைமை தொடர்பான டிப்ளோமா பயிற்சிநெறியொன்றும் தயாரிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் சுழியோடுபவர்களினது ஆற்றல்கள் மேம்படுத்தப்படுவதற்கான புதிய நிகழ்ச்சித் திட்டமொன்றும் விருத்தி செய்யப்பட்டது..

**ஒட்டுமொத்த துறைமுக உற்பத்தித் திறன் மேம்படுத்துதல்**

ஒட்டுமொத்த துறைமுக உற்பத்தித் திறன் மேம்படுத்தப்படுவதற்கு துறைமுக நடவடிக்கைகள் தொடர்பிலான பல்வேறு பயிற்சியளித்தல்களின் மூலம் திறன் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மஹபொல பயிற்சி நிலையத்தினால் நடாத்தப்பட்டன, அவையாவன;

- துறைமுக நிதி சார்ந்த விடயங்கள்
- கணக்காய்வு
- கொள்வனவு செய்தல் மற்றும் நிர்வாகம்
- இலிகிதர் திறன் விருத்தி செய்தல் மற்றும் நிர்வாகம்
- மனிதவள முகாமைத்துவம்
- நன்நோக்கிலான எண்ணப்பாடுகள்
- சுகாதாரம் மற்றும் காப்பு வழிகள்
- மூலோபாய துறைமுக முகாமைத்துவம்
- UNCTAD குழுவின் நவீன துறைமுக முகாமைத்துவம்
- தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கான பொறியியல் பட வரைதல்
- மோட்டார் கட்டுப்பாட்டு சுற்றுக்கள்
- மின்சாரவியலாளருக்கான இலத்திரனியல்
- ஒட்டும் பயிற்சி

2013 ஆண்டினுள் 2,259 பேருக்கு இவ்வாறான 71 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. மேலும் கொள்கலன் முனையங்களிலிருக்கும் நபர்களினதும் உபகரணங்களினது பாதுகாப்பு மேம்படுத்துதல் தொடர்பில் 2,460 தனியார் லொறி வண்டி சாரதிகளுக்கு பாதுகாப்பு பற்றியதிலான 17 அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்பட்டன. வண்டிகள் திருப்பியனுப்பப்படும் காலம் குறைக்கப்படுதலிலும் முனைய செயற்பாடுகளின் பாதுகாப்பின் கவனம் அதிகரிக்கப்படுவதிலும் இந்நிகழ்ச்சித் திட்டங்கள் பேருதவி புரிந்தன.

**கப்பலோட்டத் துறைக்கான ஒத்துழைப்பு வழங்கல்**

கப்பலோட்டத்துறை தொடர்பான பயிற்சிப் பாடநெறிகள் வழங்கப்படுதலின் மூலம் மஹபொல பயிற்சி நிலையத்தினால் உலக கப்பலோட்டத் துறைக்கு குறிப்பிடத்தக்க ஒத்துழைப்பு பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. ஆயிரக்கணக்கான தொழில் இல்லாது செல்வாக்கற்றிருக்கும் அநேகமான இலங்கை இளைஞர்கள் இந்த வேலைத்திட்டம் ஊடாக சர்வதேச கப்பல் சேவைகளில் தொழில்களை பெறுகின்றனர் 2013 ஆண்டினுள் 1,264 விண்ணப்பதாரர்களுக்கு அவ்வாறான 44 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

**ISO 9001: 2008 சான்றிதழ்**

கப்பலோட்டிகளுக்கான IMO/STCW பயிற்சிப் பாடநெறி நடாத்தப்படுவதற்கான முக்கிய தரக்கட்டுப்பாடு தொகுதியான ISO 9001-2008 சான்றிதழ் இலங்கையின் பிரதான கல்வி நிறுவனமான மஹபொல பயிற்சி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. 2013 ஆண்டினுள் இரண்டு முகாமைத்துவ மீளாய்வுகளும் மூன்று உள்ளக கணக்காய்வுகளும் நடாத்தப்பட்டுள்ளன. நுகர்வோர் முறைப்பாடு நடைமுறை கையாளப்படுவது தொடர்பில் அவர்களுக்கு விசேடமான உரிய நடைமுறையொன்றினை மஹபொல பயிற்சி நிலையம் தன்னகத்தே கொண்டுள்ளது. நிறுவனத்தின் முன்னேற்றம் தொடர்பில் மஹபொல பயிற்சி நிலைய ஊழியர்கள் அடிக்கடி அறிவுறுத்தப்படுகின்றனர்.

**நவீன தொழில்நுட்பம் பயன்படுத்துதல்**

மஹபொல பயிற்சி நிறுவனம் அதன் செயற்பாடுகளில் நவீன தொழில்நட்பம் அறிமுகப்படுத்தலின் மூலம் நிறுவனத்தில் நடைபெறும் பயிற்சிப் பாடநெறிகளின் தரத்தினை மேம்படுத்தியுள்ளது.

- புதிதாக நிறுவப்பட்டுள்ள மெகாரொனிக் விஞ்ஞானகூடம் பயன்படுத்துதலில் 47 அபேட்சகர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.
- புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட HRIS தொகுதி பயனான முறையில் உபயோகப்படுத்துவதற்காக மனிதவளப் பகுதியின் 33 பேர் பயிற்றுவிக்கப்படுவதற்கு புதிய தரவுகள் அடிப்படையாகக் கொண்ட விருத்தித் தொகுதியொன்று பயன்படுத்தப்பட்டது.
- துறைமுகத்தின் கன்ட்றி பாரம்தூக்கி கையாள்பவர்கள் பயிற்றப்படுவதற்காக கொள்கலன் தாங்கியின் பயிற்சி மாதிரி எப்போதும் பயன்படுத்தப்படும்.
- UNCTAD நிறுவனத்தின் ஆற்றல் விருத்திசெய்யப்படுவதற்கு புதிய துறைமுக முகாமைத்துவத்திற்காக 31 நிறைவேற்று அலுவலர்கள் பயிற்சியளிக்கப்பட்டனர்.
- Advanced PLC க்காக பயிற்சியாளர்களுக்கு விசேட பயிற்சி வழங்கப்பட்டது.

**பயன்படுத்தப்படக்கூடிய ஊழியர் படையணி**

எதிர்கால தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதிலான புதிதாக அபிவிருத்தி செய்யப்படும் துறைமுகங்கள் தொடர்பில் கடமையாற்றக் கூடிய திறனான ஆளணி குழாமொன்றை பேணிச் செல்லும் செயற்பாட்டில் மஹபொல பயிற்சி நிலையம் ஈடுபட்டுள்ளது. இப்பணிக்காக 2013 ஆண்டினுள் 148 துறைமுக இயந்திரங்கள் கையாள்பவர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மாகம் ருஹூணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம் தொடர்பில் பல்வித தேர்ச்சிகள் பற்றியதில் 336 இளைஞர்கள் பயிற்றுவிக்கப்படுவதற்கான மஹபொல பயிற்சி நிலையத்தின் பயிற்சி நடவடிக்கை நிறைவு பெற்றுள்ளது.

**மொழிகள் மற்றும் தகவல் தொழில்நுட்பத் திறன் மேம்படுத்துதல்**

உலகளாவிய வர்த்தகங்களின் போது வாடிக்கையாளர்கள் திருப்திப்படுத்துவது முக்கிய விடயமென்பதால் பாவனையாளர்கள் மிகவும் திருப்தி கொள்வதற்கு ஊழியர்களினது மொழிகளின் தேர்ச்சி அதிகரிக்கப்படுவதற்கும் அவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப அறிவாற்றல் வழங்குவது தொடர்பிலும் இலங்கை துறைமுக அதிகாரசபை கவனம் செலுத்தியுள்ளது. மஹபொல பயிற்சி நிலையம் இதன் பொறுப்பை ஏற்றுள்ளதோடு அதற்காக 2013 ஆண்டில் பல்வேறு தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டங்களில் 433 ஊழியர்கள் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர். மேலும் தெரிவு செய்யப்பட்ட 114 அபேட்சகர்கள் தொடர்பில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன.

**கைத்தொழில் ஒத்துழைப்பு வழங்கல்**

அரச பல்கலைக்கழகங்கள்,கைத்தொழில் கல்லூரிகள் மற்றும் தொழில்சார் பயிற்சி நிறுவன மாணவர்களினது கற்கை பாடநெறிகள் பூர்த்தி செய்து கொள்ளும் செயற்பாட்டினுள் கைத்தொழில் பயிற்சி பெற்றுக்கொடுக்கப்படுவதன் மூலம் ஒத்துழைப்பு வழங்கும் செயலில் இலங்கை துறைமுக அதிகாரசபை ஈடுபட்டுள்ளது. 2013 ஆண்டினுள் பல்வேறு பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பினை மேற்கொண்டுள்ள 65 பேருக்கும் 37 டிப்ளோமாதாரர்களுக்கும் 120 துறைசார்ந்த வல்லுனர்களுக்கும் அவர்களினது பயிற்சிகள் நிறைவு செய்து கொள்ளப்படுவதற்கான சந்தரப்பங்களை இலங்கை துறைமுக அதிகாரசபை வழங்கியுள்ளது.

**ஈட்டப்பட்டுள்ள வருமானம்**

2013 ஆண்டில் சனவரி - டிசெம்பர் வரையிலான காலப்பகுதியினுள் மஹபொல பயிற்சி நிலையத்தின் வெளி நபர்களுக்காக நிதி அறவிடப்படும் பாடநெறிகளினால் இலங்கை துறைமுக அதிகாரசபை ரூபா 1355,2931/= வருமானம் ஈட்டியுள்ளது. இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களினது துறைமுக கையாளல் செயற்றிறன் அதிகரிக்கப்படுவதற்காக நடாத்தப்பட்ட பயிற்சித் திட்டங்களினால் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஈட்டப்பட்ட வருமானம் ரூபா 12,106,395/= ஆகும் இதன் மூலம்2013 ஆண்டில் மஹபொல பயிற்சி நிலையத்தினால் ஈட்டப்பெற்றுள்ள முழு வருமானம் ரூபா 25,659,326/ ஆகும். இதற்கு மேலதிகமாக கடல்சார் பயிற்சி நிலையத்தினால் (ஒலுவில்) ரூபா 1,609,513 வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. 2013 ஆண்டில் மஹபொல மற்றும் ஒலுவில் பயிற்சி நிலையங்களினால் நடாத்தப்பட்ட பாடநெறிகளுக்கான முழு செலவினம் ரூபா 5,310,193/= ஆகும்.

## வழங்கல் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்

**பணிகள்**

இலங்கையின் அனைத்து துறைமுகங்களினது கையாளல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக இலங்கை துறைமுக அதிகார சபைக்கு தேவைப்படும் எரி பொருட்கள், இநந்திர உபகரணங்களின் உதிரிப்பாகங்கள், எனைய பொருட்கள் கொள்வனவு செய்தல் (உள்நாடு மற்றும் வெளிநாடு ), களஞ்சியங்களில் இடுதல் வினியோகம் செய்தல் இப்பகுதிக்குரிய பணிகளில் அடங்கும்.

புதிய தன்னியக்க பொருட் பட்டியல் முகாமைத்துவ தொகுதி (ORACLE) ஒன்று வாங்கப்பட்டு 2013 நவம்பர் மாதம் செயற்படுத்தப்பட்டது.

| விபரம் | விலைகோரல் சபை கூட்டங்களின் எண்ணிக்கை | விலைகோரல் சபை அங்கீகாரங்களினது எண்ணிக்கை |
|---|---|---|
| அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட விலைகோரல் சபை (அங்கீகார எல்லை - 100 மில்லியன் ரூபாவிற்கு மேல் | இல்லை | இல்லை |
| பணிப்பாளர் சபை (திணைக்கள விலைகோரல் சபை இல - 01) (ரூபா 20 - 100 மில்லியன் வரை) | 12 | 10 |
| மத்திய விலைகோரல் சபை (திணைக்கள விலைகோரல் சபை இல - 02 ) ரூபா 250,000 இருந்து 20 மில்லியன் வரை) | 51 | 1,528 |
| "பி" விலைகோரல் சபை (திணைக்கள விலைகோரல் இல - 03) அங்கீகார எல்லை ரூபா 250,000 க்கு குறைந்தது) | 48 | 3,594 |

**2013 ஆம் ஆண்டின் உள்நாட்டு கொள்வனவுகளின் மொத்த செலவினம்**

| | |
|---|---|
| மூலதனமற்ற பொருட்கள் | ரூபா 143,792,790/= |

**2013 ஆண்டின் வெளிநாட்டுக் கொள்வனவுகளின் மொத்த செலவினம் (ஆகுசெலவு மற்றும் கப்பற் கட்டணப் பெறுமதி)**

| | |
|---|---|
| மூலதனமற்ற பொருட்கள் | ரூபா 413,275,437/= |
| மூலதன பொருட்கள் | ரூபா 165,276,477/= |

| | |
|---|---|
| திறக்கப்பட்ட கடன் கடிதங்களின் எண்ணிக்கை | 142 |
| திறக்கப்பட்ட மின்னஞ்சல் நிதிப் பரிமாற்றக் கட்டளைகளின் எண்ணிக்கை | 36 |

**2013ஆம் ஆண்டினுள் வாப்புப் பிரிவினால் அகற்றிச் செல்லப்பட்ட பொருட்கள் பற்றியதான விபரங்கள்**

| | |
|---|---|
| கடல் மார்க்க போக்குவரத்து | 81 |
| விமான மூல போக்குவரத்து | 79 |
| பொதித் தபால் | 13 |

**2013.12.31 ஆந் திகதியில் இருப்புப் பெறுமதி ரூபா. Rs. 1, 797,862,553/=**

**பிரதான களஞ்சியங்களும் மொத்த இருப்புக் கட்டுப்பாடும்**

| | |
|---|---|
| 2013 ஆம் ஆண்டினுள் பிரதான களஞ்சியசாலைகளுக்கு கிடைக்கப்பெற்ற பொருட்களின் பெறுமதி (மூலதன மற்றும் மூலதனமற்ற) | ரூபா 15,231,802,169/= |
| பயன்பாட்டிற்காக எடுத்துக்கொள்ளப்படும் பிரிவுகளுக்கு வழங்கப்பட்ட பொருட்களின் பெறுமதி (மூலதன மற்றும் மூலதனமற்ற) | ரூபா 14,257,685,945/= |

## பாதுகாப்பு

இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்படும் சகல வர்த்தகத் துறைமுகங்களினது பாதுகாப்பு பற்றியதான பொறுப்பு இப்பகுதியிடம் வழங்கப்பட்டுள்ளதோடு அதை நிறைவேற்றும் பொருட்டு 24 மணி நேரம் பூராகவும் தொடர்ச்சியான திறமையான சேவை நடாத்திச் செல்லப்படுவதற்கும். அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள்ள கொழும்புத் துறைமுகத்திற்குரிய சொத்துக்கள் மற்றும் உயிர்கள் காக்கப்படும் வகையில் நவீன அறிவு, புதிய தொழில்நுட்பக் கருவிகள் மற்றும் நுட்பங்கள் பயன்பாட்டில் இப்பகுதியானது மேற்குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான சிறந்த செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டினுள் பின்வரும் சம்பவங்கள் பாதுகாப்புப்பகுதி,அலகு/ பிரிவுக்கட்டுப்பாட்டு முனையங்கள் மற்றும் களஞ்சியங்களில் நடை பெற்றுள்ளன;

| தொ/ இல | விபரம் | எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | துறைமுகம் | ஏனையவை | மொத்தம் |
| 01 | வாகன விபத்துக்கள்(ஜ.கொ/ஐ.கொ முனையங்களினுள்) | 56 | 36 | 92 |
| 02 | வாகன விபத்துக்கள் (முனையங்களுக்கு வெளியே) | 29 | 59 | 88 |
| 03 | களவுகள் | 07 | 17 | 24 |
| 04 | மதுபான பாவனை அல்லது மதுபானம் தன்வசம் வைத்திருத்தல் | 30 | 07 | 37 |
| 05 | இலஞ்சம் பெற முயற்சித்தல், இலஞ்சம் பெறுதல்/இலஞ்சம் கொடுத்தல் தொடர்பான முறைப்பாடுகள் | 01 | - | 01 |
| 06 | தவறான நடத்தை | 33 | 18 | 51 |
| 07 | அனுமதிப்பத்திரமின்றி துறைமுகத்தினுள் பிரவேசித்தல்/அனுமதிப்பத்திர சட்டங்களை மீறுதல். | 03 | 20 | 23 |
| 08 | தனி நபர் சார்ந்த விபத்துக்கள் | 10 | 14 | 24 |
| 09 | வாகன கட்டுப்பாடு தொடர்பான வழக்குகள் | - | 86 | 86 |
| 10 | ஏனையவை | 40 | 58 | 98 |
| | மொத்தம் | **209** | **315** | **524** |

## காலித் துறைமுகம்

| வகை | கப்பல்களின் எண்ணிக்கை | இறக்குதல் மெ.தொன் | ஏற்றுதல் மெ.தொன் |
|---|---|---|---|
| கிளின்கர் | 19 | 153,193 | - |
| சிமெந்து மொத்தம் | 02 | 8,503 | - |
| சிமெந்து பொதி | 0 | 2,739 | - |
| ஜிப்சம் | 04 | 35,954 | - |
| மீள் ஏற்றுமதி கப்பற் சரக்குகள் | 02 | 344 | 6,722 |
| மொத்தம் | **29** | **207,455** | **6,722** |
| கையாளப்பட்ட மொத்த தொன் அளவு | | | 207,455 |

| | |
|---|---|
| மொத்த கப்பற் சரக்குகள் கப்பல்கள் | 29 |
| பயணிகள், கப்பலோட்டம், எண்ணெய் பெறுதல், பழுது பார்ப்புகள் போன்றவை | 64 |
| 2013 ஆண்டில் நங்கூரமிடப்பட்ட மொத்த கப்பல்களின் எண்ணிக்கை | 93 |
| நங்கூரமிடல்கள் | 68 |
| துறைமுக எல்லைக்கு வெளியே கப்பல்கள் | 10,661 |
| உல்லாச படகுகள் | 31 |

## திருகோணமலை துறைமுகம்

### பொறியியல் பிரிவு

**சிவில்**

- இல: 08 ரய்பல் கிறீன் உத்தியோகபூர்வ வாசஸ்தலம், ரீ.ரீ.ஏ இல் வழிகாட்டி அலுவலகம், சிலோன் ஜெட்டி விடுதி, உவர் மலையின் விசேட நபர்களுக்கான விடுதி (CIB) ( விலைகோரல் சபையின் அங்கீகாரம் மீது) போன்ற இடங்களின் புதுப்பித்தல் பணிகள் நிறைவடைந்துள்ளதோட, ரீ.ரீ.ஏ இலுள்ள பொறியியல் அலுவலர்களின் விடுதி அறைகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இதன் பணிகள் 2014 இல் முடிவடையும்.
- அலுமினிய பாகங்களின் மூலம் நிதிப் பகுதியின் நுழைவாயில் வேறாகப் பிரித்தல்.
- நுழைவாயில் பாதுகாப்புக் கூடம் அமைத்தல்.,போக்குவரத்துப் பிரிவிற்கான களஞ்சிய அறை நிர்மாணித்தல், இல: 07 இன் பர்மா முகாம் களஞ்சியசாலைக்கான பாதை கொங்கிறீட் இடப்பட்டு அமைத்தல்.
- பிரதி ஹாபர் மாஸ்டர் விடுதி, நலன்புரி பணிமனை,வேதனங்கள் மற்றும் சம்பள அலுவலகம், பாதுகாப்பு கட்டுப்பாட்டு அறை மற்றும் அஸ்ரப் துறைமேடையிலுள்ள பாதுகாப்பு அலுவலகங்களில் மை பூசுதல், பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்ளல். கப்பல்கள்,நங்கூரக்கலங்கள், வண்டிகள் மற்றும் கட்டிடங்களுக்கான மர வேலைகளை மேற்கொள்ளல்.

### இயந்திர பொறியியல் வேலைகள்

- பல்வேறு வண்டிகள், இல:11 வத்தை போன்றவற்றின் தண்டுப்பகுதிகளின் தகர வேலைகள், மை பூசும் பணிகள், உதிரிப் பாகங்கள் மாற்றுதல், என்ஜின் மற்றும் ஏனைய பழுதுபார்த்தல் பணிகளை மேற்கொள்ளல்.
- போக்லிப்ட் இயந்திரம் மற்றும் சிலோன் ஜெட்டி உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்கான மின்சார கம்பி இணைத்தல் டனக் கலங்களுக்கான மோதல் தவிர்ப்பு டயர் பொருத்துதல், நங்கூரமிடப்பட்டுள்ள இழுவைக் கலங்களினது குழாய்கள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள், மிதப்பிகளினது செப்பனிடும்,பழுதுபார்த்தல் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

### பாதுகாப்பு

சென்ற காலங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளவாறு கொழும்பு துறைமுகத்திலிருந்து வருகை தந்த அலுவலர்களினால் முன்னர் போன்று தீயணைப்பு செயன்முறை வகுப்பு நடாத்தப்பட்டது.

# நிதி மீளாய்வு

**வருமானம் (சகல து றைமுகங்களினதும்)**

(துறைமுக விடயங்கள் வெவ்வேறாக)
(ரூபா. மில்)

| விபரம் | 2013 | 2012 மீள் - குறிப்பட்ட. | விபரம் | 2013 | 2012 மீள் - குறிப்பட்ட. |
|---|---|---|---|---|---|
| துறைமுக செயற்பாடுகளிலிருந்து வருமானம் | 31,963 | 32,354 | கப்பலோட்டம் | 4,967 | 4,860 |
| ஏனைய வருமானம் | 4,215 | 4,055 | கப்பல் சுமை | 19,741 | 19,433 |
| | | | வாப்பு கையாளல் | 3,633 | 3,634 |
| | | | துறைமுக வசதிகள் | 2,851 | 3,682 |
| | | | ஏனைய சேவைகள் இயக்கம் | 771 | 746 |
| **மொத்த வருமானம்** | **36,178** | **36,409** | **உப மொத்த** | **31,963** | **32,354** |

**இயக்க மற்றும் ஏனைய செலவினங்கள் (சகல துறைமுகங்களினதும்)**

| விபரம் | 2013 செலவினம் | 2012 செலவினம் | (அதிகரித்தல்)/ குறைதல் | % |
|---|---|---|---|---|
| அளவு தள்ளுபடிகளுக்கு செலுத்துதல் | 1,454 | 1,466 | 12 | 1 |
| சொத்துக்களை பராமரித்தல் | 1,284 | 1,274 | (10) | (1) |
| எரிபொருள், மின்சாரம், தண்ணீர் | 3,703 | 2,103 | (1,600) | (76) |
| வெளிநாட்டு கடன் மீதான வட்டி | 3,921 | 1,710 | (2,211) | (129) |
| மேலதிக நேரம் | 3,274 | 3,260 | (14) | (0) |
| தீர்மானம் | 6,418 | 5,196 | (1,222) | (24) |
| சம்பளங்கள் வேதனங்கள் மற்றும் படிகள் | 9,870 | 10,521 | 651 | 6 |
| ஏனையவை | 2,163 | 2,190 | (26) | 1 |
| **மொத்த செலவினம்** | **32,088** | **27,720** | **(4,369)** | **(16)** |
| வெளிநாட்டு நாணய இலாபம் / நட்டம் | 2,518 | 4,567 | 2,049 | 45 |
| சு.வி.மீது ஓய்வு பெறும் திட்டத்தின் மீதான செலவுகள் | - | 600 | 600 | 100 |
| **அந்நிய செலாவணி நட்டம் சு .வி.ஓ. அடங்கலான மொத்தச் செலவினம்** | **34,606** | **32,887** | **(1,719)** | **(5)** |

**துறைமுகங்களுக்கேற்ப செயலாற்றுகை**

**கொழும்பு துறைமுகம்**

2013 ஆண்டில் கொழும்பு துறைமுகத்தினால் ரூபா 4,885 மில்லியன் கையாளல் இலாபம் வரி அறவிடப்படுவதற்கு முன் ஈட்டப்பட்டுள்ளது. 2012 ஆண்டின் வருமானமான ரூபா 35,334 மில்லியனுடன் 2013 ஆண்டின் வருமானம் ஒப்பிடப்படுகையில் ரூபா 35,388 மில்லியனாக இருந்ததோடு அதுவானது ரூபா 54 மில்லியன் குறைவாகும். வரி அறவிடப்படுவதற்கு முன் மொத்த செலவினம் ரூபா 33,432 மில்லியனாக இருந்ததோடு 2012 ஆண்டின் (மீள் குறிப்பிடப்பட்ட) செலவினம் ரூபா 31,579 மில்லியன் ஆகும். இது 6% அதிகரிப்பாகும்.




**காலி துறைமுகம்**

2013 ஆண்டில் ரூபா 96 மில்லியன் வரி அறவிடப்படுவதற்கு முன்னரான நட்டம் **காலி** துறைமுகத்தில் பதிவாகி இருந்தது. 2012 ஆண்டில் கிடைக்கப்பெற்ற மொத்த வருமானமான ரூபா 597 மில்லியனுடன் ஒப்பிடப்படுகையில் 2013 ஆண்டில் ரூபா 478 மில்லியன் வருமானம் ஈட்டப்பட்டதோடு அதுவானது ரூபா 120 மில்லியன் குறைவாகும். வரி அறவிடப்படுவதற்கு முன்னரான செலவினம் ரூபா 574 மில்லியனாக இருந்ததோடு 2012 ஆண்டின் செலவினம் ரூபா 645 மில்லியன் ஆகும். இது 11% வீழ்ச்சியாகும்.



**திருகோணமலை துறைமுகம்**

2013 ஆண்டில் ரூபா 232 மில்லியன் வரி அறவிடப்படுவதற்கு முன்னரான நட்டம் திருகோணமலை துறைமுகத்தில் பதிவாகி இருந்தது. 2012 ஆண்டில் கிடைக்கப்பெற்ற மொத்த வருமானமான ரூபா 423 மில்லியனுடன் ஒப்பிடப்படுகையில் 2013 ஆண்டில் ரூபா 366 மில்லியன் வருமானம் ஈட்டப்பட்டதோடு அதுவானது ரூபா 57 மில்லியன் குறைவாகும். வரி அறவிடப்படுவதற்கு முன்னரான செலவினம் ரூபா 598 மில்லியனாக இருந்ததோடு 2012 ஆண்டின் செலவினம் ரூபா 663 மில்லியன் ஆகும். இது 10% வீழ்ச்சியாகும்.



மீளாய்விற்குட்படும் ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஒன்றிணைந்த சமூகப் பொறுப்புக்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.

- க.பொ.த (சா/த) மற்றும் க.பொ.த (உ/த) பரீட்சைகளில் மிகவும் சிறந்த முறையில் சித்தி பெற்ற துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

- துறைமுக ஊழியர்களின் சிறார்களின் நலன்புரி தொடர்பிலான பூரண வசதி கொண்ட சிறுவர் பராமரிப்பு நிலையம் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

- நிலவும் துறைமுக வசதிகள் மற்றும் செயற்பாடுகள் போன்று இலங்கை துறைமுக அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் சிறந்த முறையில் அறிந்துகொள்ளும் பொருட்டு "தேசத்துக்கு மகுடம்" தேசிய கண்காட்சி" உட்பட பல கண்காட்சிகளில் இலங்கை துறைமுக அதிகாரசபை பங்கேற்றது.

- சகல வசதிகளையும் கொண்ட துறைமுக தீயணைப்புப் படை அதன் பணிகளில் கொழும்பு நகர சபைக்கும் கொழும்பு மற்றும் அண்டிய பகுதிகளிலும் ஏனைய அவசர சந்தர்ப்பங்களிலும் தனது ஒத்துழைப்பை நல்கியது.

- முல்லேரியாவிலுள்ள மனநோயாளர் வைத்தியசாலையின் நோயாளர் விடுதி, இலங்கை துறைமுக அதிகார சபையினால் பராமரிக்கப்பட்டு வருகிறது..

தொழில் சந்தையில் ஊழியர்களின் பெறுமதியை உயர்த்தும் தனது தொழில் மூலம் ஏற்படுத்திக்கொள்ளும் பயிற்சி மற்றும் அனுபவம் ஊடாக பெறும் ஒட்டுமொத்த தேர்ச்சிகள் மனித மூலதனமாக இனம் காணப்படமுடியும். நிறுவன சுற்றாடலொன்றில் மனித மூலதனமானது ஊழியர்களின் தேர்ச்சிகள், அறிவு மற்றும் திறன்கள் நிறுவனமொன்றின் ஆக்கவுரிமை மூலதனத்தின் ஒன்றிணைந்த பெறுமதி என அழைக்கப்படும்.

நிறைவேற்று, நிறைவேற்று அல்லாத தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பம் சாராத தரத்திலான ஊழியர்கள் அடங்கலாக 2013 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை இலங்கை துறைமுக அதிகாரசபையின் மொத்த ஊழியர் களின் எண்ணிக்கை 9,792 ஆக இருந்தது. இந்த ஆக்கவுரிமை மூலதனமானது அதிகாரசபையின் நோக்கு, பணிக்கூற்று பணி மற்றும் இலக்குகளை அடைவதற்கு தேவைப்படும். எனவே தற்போது சேவையிலீடுபட்டுள்ள ஊழியர்களின் அறிவு, திறன் மற்றும் உளப்பாங்கு விரிவாக்கப்படுதல், ஏனைய பிராந்திய துறைமுகங்களுடன் போட்டி போடும் போது தொடரும் தேவைப்பாடாகவுள்ளது. மனிதவளப் பகுதி, மஹபொல பயிற்சி நிலையம், நலன்புரி பகுதி போன்றவை இலங்கை துறைமுக அதிகார சபையின் ஊழியர்களினது மனித மூலதனம் மேம்படுத்தப்படுதலில் நேரடியாக தொடர்புபடுகின்றன.

ஊழியர்களின் அறிவு, திறன் மற்றும் உளப்பாங்கு மேம்படுத்தப்படுதலில் உள்ளக மற்றும் வெளிவாரி வளவாளர்களின் உதவியோடு இலங்கை துறைமுக அதிகாரசபையின் அறிவின் மைய நிலையமான மஹபொல பயிற்சி நிறுவனத்தினால் வருடாந்தம் விரிவுரைகள் மாநாடுகள், வேலைத்திட்டங்கள், செயன்முறைப் பயிற்சிகள் மற்றும் சேவை நிலையத்தினுடான பயிற்சிகள் ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்றன.

2013 ஆண்டில் தற்போது சேவையிலீடுபட்டிருக்கும் ஊழியர்களினது மனித மூலதனம் விருத்தி செய்யப்படும் பொருட்டு உபகரண கையாளல்கள், கொள்கலன்களின் கையாளல்கள், முகாமைத்துவம், தகவல் முறைமை தொழில்நுட்பம், தீயணைப்பு, பாதுகாப்பு, தொழில்சார் சுகாதாரம், கப்பலோட்டம் மற்றும் கடல்சார் ஊழியர் போன்ற பிரிவினர்களுக்கு பல்வேறு துறைகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

உயர் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையின் மூலம் தற்போது சேவையிலீடுபட்டிருக்கும் ஊழியர்களினது மனித மூலதனம் மேம்படுத்தப்படுதலில் துணை புரியும். அதேபோன்று தேசிய தொழில்சார் தகைமைகள் (NVQ) உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட தகைமைகளாகும். இது ஊழியர்களின் தொழில்சாரந்த முன்னேற்றத்திற்கு பெறுமதி சேர்க்கின்றது. தொடர்ந்தும் புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையானது ஊழியர்கள் ஒரே இடத்தில் தொடர்ச்சியாக பணியாற்றுவதனை முடிவுவிற்கு கொண்டுவருவதற்கு துணை புரிவதோடு பல்வேறு துறைகளில் தகைமைகள் பெறப்படுதலின் ஊடாக ஏனைய குழுவிற்கு வழிவிடும் சந்தர்ப்பமும் கிடைக்கப்பெறுகின்றது.

தேசிய தொழில்சார் தகைமைகள் தொடர்பில் விளக்கமளிக்கப்படும் பெருமளவிலான நிகழ்ச்சித் திட்டங்கள் 2013 ஆண்டில் நடாத்தப்பட்டதோடு தற்போது சேவையிலீடுபட்டிருக்கும் ஊழியர்களினது மனித மூலதனம் மேம்படுத்தப்படும் நோக்கில் நிபுணர்களின் உதவியுடன் தேசிய நிபுணத்துவ தகுதிக்கு சமனான தேர்ச்சிச் சான்றிதழ்கள் வழங்கப்படுவதற்காக மஹபொல பயிற்சி நிலையத்தில் பல்வேறு துறைகளின் பாடநெறிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பல்தேர்ச்சி தொழில்நுட்பவியலாளர்கள், முகாமைத்துவ உதவியாளர்களாக ஊழியர்கள் புதிய வகையீடு செய்யப்படுதலானது நிறுவனத்துக்கு மாத்திரமின்றி ஊழியர்களுக்கும் நன்மை பயக்கும். ஏனெனில் அதுவானது பல்வேறு துறைகளில் ஊழியர்களின் ஆற்றல் விருத்தி செய்யப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் கிடைக்கப்பெறுவதோடு இந்த நிலைமை தொழிலில் சலிப்பான தன்மை ஏற்படுவதனைத் தடுப்பதற்கும் இறுதியாக நிறுவனத்தின் செயற்றிறன் அபிவிருத்தி செய்யப்படுவதற்கும் உதவும்.

புதிய மனிதவள திட்டத்திற்கமைய மனிதவளம் உச்ச நிலையில் பயன்படுத்தப்படுவதற்காக அனைத்து நிர்வாக நடவடிக்கைகளும் மனித வள பகுதியூடாக பன்முகப்படுத்தப்படுவதற்கு

தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே அன்றாட கடமைகள் தடையின்றி செய்யப்படுவதற்கும் பிழையின்மை பேணப்படுவதற்கும் மேம்படுத்தப்பட்ட கணனித் தொகுதியொன்று அறிமுகப்படுத்தல் அவசியமாகும். புதிய தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தலின் பயனாக ஊழியர்களுக்கு அவர்களின் கணனி மற்றும் தொழில்நுட்ப அறிவு மேம்படுத்திக்கொள்ளப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் கிடைக்கப்பெற்றன.

சென்ற ஆண்டுகளுடன் ஒப்புநோக்குகையில் 2013 ஆண்டினுள் அநேக ஊழியர்கள் டிப்ளோமா, பட்டம், பட்டப் பின்படிப்பு மற்றும் அவர்களுக்குரிய துறைகளில் அங்கத்துவம் பெறுதல் போன்ற தகைமைகளைப் பெற்றுள்ளனர்.

ஊழியர்களின் ஆற்றல்கள் மற்றும் குறைபாடுகள் அடையாளம் காணப்படுவதற்காக மனிதவள முகாமைத்துவத்திலுள்ள மிக முக்கிய விடயம் ஊழியர் செயலாற்றுகை மதிப்பிடப்படுதலாகும். மனித மூலதனம் விருத்தி செய்யப்படும் பொருட்டு மதிப்பீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் முன்னர் போன்று விசேட பயிற்சிப் பாடநெறிகள், மாநாடுகள் நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவை தற்போது சேவையிலீடுபட்டிருக்கும் ஊழியர்களுக்காக நடாத்தப்பட்டன. மிகவும் உயர் பெறுபேறுகள் அடையப் பெறுவதற்காகவும் நிகழ்கால தேவைப்பாடுகளின் போது ஈடுசெய்யப்படுவதற்காகவும் மதிப்பிடல் முறை மாற்றப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

முன்னர் மேற்கொள்ளப்பட்டவாறு இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களுக்காக நலன்புரி வசதிகள் நலன்புரி மற்றும் கைத்தொழில் பகுதியினால் செய்யப்பட்டதோடு ஊழியர்களின் வாசிக்கும் ஆர்வத்தினை அதிகரிப்பதற்கும் பல்வேறு துறைகளிலீடுபட்டிருக்கும் ஊழியர்களினது அறிவு வளர்ச்சிக்கும் நூலக வசதிகள் உதவி புரிகின்றன. ஊழியர் சங்கங்களினால் இலங்கை துறைமுக அதிகாரசபையினுள் 19 நூலகங்கள் நடாத்திச் செல்லப்படுவதோடு வாசிப்பு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படுவதற்காக அவர்களின் வேண்டுகோளின் மீது வருடாந்தம் ரூபா 45,000/= வழங்கப்படுகின்றது. 2013 ஆண்டில் அவர்களின் வேண்டுகோளின் மீது ரூபா 200,000/= நூலகங்களுக்காக செலவிடப்பட்டன.

அதன் ஊழியர்களுக்கு தேர்ச்சிபெற்ற முகாமையாளர்களாகுவதற்கு வெளி நிறுவனங்களில் உயர் கற்கைகள் மேற்கொள்வதற்கான பல்தொழில்சார் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு இலங்கை துறைமுக அதிகாரசபையினால் வருடந்தோறும் அனுசரணைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் அனைத்தும் நிறுவனத்தின் செயற்றிறன் வளர்ச்சிக்கு துணை புரிகின்றது.

வர்த்தகத்துடன் தொடர்புடைய சகல தரப்பினர்களினதும் நலனுக்காக வளங்களை வெற்றிகரமாகப் பயன்படுத்தி சம்பந்தப்பட்ட நிறுவனத்தை உரிய வழிகாட்டல்களோடு நிர்வகித்து நடாத்திச் செல்லப்படுவதற்காக அந்நிறுவனத்தினால் ஏற்படுத்தப்படும் ஒட்டுமொத்த செயற்பாடு இதுவாகும். நல்லாட்சி பேணப்படுதல் தொடர்பிலான முக்கிய பொறுப்பு அதிகாரசபையின் தலைவர் மற்றும் அதன் பணிப்பாளர் சபையைச் சார்ந்ததாகும். நிறுவனத்தின் அடிப்படை நோக்கங்களை அடையும் பொருட்டு அதன் செயற்பாடுகள், நிர்வாக மற்றும் உரிய முறையில் செயற்படுகின்றமை. தொடர்பில் அவர்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டியுள்ளதுடன் இதற்கு தொழில்சார் அலுவலர்கள் அவர்களுக்குரிய செயற்பாட்டுத் துறைகளில் பங்களிப்பு வழங்குவதன் மூலம் வசதிகள் செய்தல் வேண்டும். இப்பணியினுள் உள்ளக கணக்காய்வாளர்களுக்கு நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பில் பரீட்சிப்பதற்கும் அங்கீகார நடைமுறைகளிலிருந்து வழுகிச் செல்லும் சந்தர்ப்பங்கள் இருப்பின் அது தொடர்பில் அறிக்கை செய்யப்படுதலின் ஊடாக முக்கிய பணியாற்றப்படுவதற்கான பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. ஏதாவது வழுகல் நிலையிருப்பின் விசேடமாக கையாளல் மற்றும் நிதிசார் நடவடிக்கைகள் தொடர்பில் எதிர்பார்க்கப்படும் செயற்பாடு எட்டப்படுவதற்காக அவை எவ்வாறு திருத்தப்பட வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டு அதன் ஊடாக நல்லாட்சிக்கான பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

நிதிசார்ந்த மற்றும் கையாளல் செயற்பாடுகள் அறிக்கை செய்யப்படும் உயர் நிலை மற்றும் தொடர்ச்சியான தன்மை தொடர்பில் தமக்கு வழங்கப்பட்டுள்ள பணிகள் இவ்வகையில் நிறைவேற்றப்படுகின்றதேன்பதை முகைத்துவம் பணிப்பாளர் சபையுடன் தொடர்பு கொள்ளும் தகவல்களின் உயர் நிலை, வெளிப்படையான நிறுவனமொன்றினை நடாத்திச் செல்வதற்கு அவர்களின் உயர் அர்ப்பணிப்பு இன்றியமையாததாகும். இதற்கு உயர் நிலையிலான ஒன்றிணைந்த நிர்வாகம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதற்கு அதிகாரசபை உறுதிபூண்டுள்ளது.

அதிகாரசபையின் நிர்வாகம் தொடர்பில் பணிப்பாளர் சபை பொறுப்பு வகிக்கின்றது. சிறந்த நடைமுறைகள் செயற்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான சட்டதிட்டங்கள், விதிகள், அமைப்பு முறைகள் மற்றும் செயற்பாடுகள் மேம்படுத்தப்படுதலில் குறிப்பிடத்தக்க கவனம் அதிகாரசபையினால் தொடர்ச்சியாக செலுத்தப்படுகின்றது. அதிகாரசபையினால் அதன் நிர்வாகப் பணிகள் தொடர்பான அமைப்பு முறைகள் தொடர்ச்சியான திருத்தங்களுக்கு உட்படுத்தப்படுகின்றன.

நிதி ஆண்டினுள் அதிகாரசபையினால் அனுசரித்து செல்லப்பட்டுள்ள சிறந்த ஒன்றிணைந்த நிர்வாக அடிப்படைகள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

- பணிப்பாளர் சபை மற்றும் சபையின் உப குழுக்கள்
- உள்ளக கட்டுப்பாடு
- உள்ளக கணக்காய்வு
- ஒழுக்காற்று விதிமுறைகள்
- பொது திறைசேரி, துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுடனான தொடர்பு
- சாசனம் மற்றும் நீதித் தேவைப்பாடுகளுக்கு இணங்கி செயற்படுதல்
- அரச தொழில் முயற்சிகளின் நல்லாட்சிக்கான வழிகாட்டல்கள்

நிதி அமைச்சின் அரச தொழில் முயற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் அரச தொழில் முயற்சி நல்லாட்சிக்கான வழிகாட்டல்களில் இனம் காணப்பட்ட சில சரத்துகளிலிருந்து ஒதுங்குவதற்கு துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் நிதி திட்டமிடல் அமைச்சர் ஆகியோரினால் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளுக்கு அனுமதி வழங்குவதற்கு எடுத்த அமைச்சரவையின் தீர்மானம் பின்பற்றப்பட்டு கைத்தொழிலில் உயர் போட்டித்தன்மை மற்றும் செயற்றிறன் மிக்க அரச துறை நிறுவனமொன்றாக மாறுவதற்கு தேவைப்படும் நெகிழ்வுத்தன்மையும், சுதந்திரமும் உறுதிப்படுத்தும் பொருட்டு நிர்வாகம் தொடர்பான யாப்பொன்று இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நகல்படுத்தப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையும் சபையின் உப குழுக்களும்**

பணிப்பாளர் சபை தலைவர், உப தலைவர் மற்றும் 07 பணிப்பாளர்களைக் கொண்டிருக்கும். பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் உயர் தொழில் மற்றும் தனிப்பட்ட வகையில் நீதி நெறியுடையவர்களாகவும் அதிகாரசபை ஈடுபட்டிருக்கும் கைத்தொழிலின் அனுபவம் உள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

பணிப்பாளர் சபைக்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்தல் கீழ் கண்டவாறு அமையும்.

- துறைமுக அபிவிருத்தி அல்லது துறைமுக இயக்கம் அல்லது சட்டம் அல்லது நிதி விடயங்கள் அல்லது கப்பல்துறை அல்லது வர்த்தகம் அல்லது பொறியியல் நடவடிக்கைகள் அல்லது, நிர்வாகம், தொழிலாளர் தொடர்பு சம்பந்தமான அனுபவம் மற்றும் ஆற்றலுடையோர் என அமைச்சரினால் கருதப்படுவோரில் தலைவர் உட்பட பணிப்பாளர்கள் 04 பேர் அமைச்சரினால் நியமிக்கப்படுவர்

- சரத்தின் 13:1 பிரிவின் கீழ் முகாமைப் பணிப்பாளர் அமைச்சரினால் நியமிக்கப்படுவார்.

- நிதி விடயங்கள் தொடர்பிலான அமைச்சரினால் பெயர் குறிப்பிடப்படும் பொதுத் திறைசேரியின் பிரதிநிதியொருவர்.

- சுங்கப் பணிப்பாளர் நாயகம் மற்றும் மீன்பிடி தொடர்பான விடயங்களில் அமைச்சுக்கு பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதியொருவர்.

தலைவர் தவிர்ந்த உப சரத்து (1) (அ) அல்லது (1) (இ) யின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள பணிப்பாளர்களிரொருவர் துறைமுக அதிகாரசபையின் உப தலைவராக அமைச்சரினால் நியமிக்கப்பட முடியும்.

தலைவருக்கும், உப தலைவருக்கும், முகாமைப் பணிப்பாளருக்கும் வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் தெளிவாக வெவ்வேறாக விளக்கப்பட்டுள்ளன. நிறைவேற்று தரத்திலல்லாத சகல பணிப்பாளர்களும் ஆழ்ந்த அறிவு மற்றும் முறையான அனுபவங்களின் மீது அதிகாரசபைக்கு சேவைகளை வழங்குவர். இவ்வறிக்கையின் காலப்பகுதியில் பதவி வகித்த அதிகாரசபையின் பணிப்பாளர்களின் பெயர்கள் மற்றும் விபரங்கள் 15-19 பக்கங்களில் காட்டப்பட்டுள்ளன.

**பணிப்பாளர் சபையின் பிரதான கடமைகளும் பொறுப்புக்களும் பின்வருமாறு**

- மூலோபாயமான நோக்கம், கொள்கைகள், குறிக்கோள்கள் போன்றவற்றினை ஸ்தாபிப்பதன் மூலம் கட்டளைகளை வகுத்தல்.

- நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றும் செயற்பாட்டினை மேற்பார்வை செய்தல்.

- போதுமானளவு உள்ளக கட்டுப்பாடு மற்றும் உயர் தரத்திலான நெறியினைப் பேண உத்தரவாதமளித்தல்.

- நோக்கத்தினை அமைத்துக் கொள்வதற்கான வழிகாட்டல், விதிமுறைகளை தயாரித்தல் மற்றும் அதன் செயற்பாட்டிற்கு உத்தரவாதமளித்தல்.

- சகல பிரதான வர்த்தக நடவடிக்கைகளின் இடர்பாடு நிலைமைகளை இனம்கண்டு தகுந்த போதுமான கட்டுப்பாடு பேணல் இடர்பாடு நிலைமைகள் தொடர்பில் காலத்திற்கேற்றவாறு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான அந்த நிலைமை அறிக்கை செய்யப்படும். மேற்பார்வை செயல் முறை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற தென்பதில் உத்தரவாதமளித்தல்.

பணிப்பாளர் சபை தொடர்ச்சியாக கூட்டம் நடாத்துவதோடு குறிப்பிட்ட வருடத்தில் பணிப்பாளர் சபையானது 12 முறை கூடியது. பணிப்பாளர் சபையின் செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்படுவதற்குத் தேவையான விபரங்கள் காலத்திற்கேற்ப பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. பணிப்பாளர் சபையின் செயலாளர் தலைவருடன் கலந்தாலோசித்து நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படுவதோடு ஒவ்வொரு பணிப்பாளர் சபையின் கூட்டத்திற்கு முன்னர் எல்லா பணிப்பாளர்களுக்கும் விபரமான அறிக்கை அனுப்பி வைக்கப்படும். பணிப்பாளர் சபையில் கலந்து ஆலோசிப்பதற்குள்ள ஏனைய விடயங்களில் இயக்கம், நிதிச் செயற்பாட்டு, சுட்டெண்கள் மீளாய்வு செய்தல்,பிரதான மூலதன செலவினத் திட்டம் மற்றும் பிரேரணைகள் அதன் வரையறையினுள் அங்கீகரித்தலும் அடங்கிருந்தது.

முன்வைக்கப்பட்ட எல்லா பரிந்துரைகள் சம்பந்தமாக, பணிப்பாளர் சபையின் இறுதி அனுமதி கிடைக்கப்பெறுதலுக்குட்பட்டதாக சில பொறுப்புக்கள் தொடர்பில் செயற்படுவதற்கு கணக்காய்வுக் குழுவிடமும் முகாமைத்துவ குழுவினையொத்த உப குழுக்களிடமும் கையளிக்கப்பட்டன.

**முகாமைத்துவக் குழு**

தலைவர், உப தலைவர் முகாமைப் பணிப்பாளர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர் அடங்கலாக பணிப்பாளர் சபையின் 04 அங்கத்தவர்கள் உட்பட முழு நேர 07 பணிப்பாளர்கள், ஹாபர் மாஸ்டர் ஆகியோர் முகாமைத்துவக் குழுவின் அங்கத்தவர்களாக செயற்படுகின்றனர்.

அன்றாட நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் கையாளல் நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படுகையில் செயன்முறை ரீதியான வர்த்தக நிறுவனமொன்றாக மனிதவளம் உள்ளிட்ட வளங்களின் உச்ச பயன்பாடு பெறப்படுவதற்கும் துறைமுக நுகர்வோர்களுக்கும் ஏனைய சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கும் வழங்கப்படும் சேவைகளின் தன்மை உயர்த்தப்படுவதற்கும் முகாமைத்துவ குழு பல்வேறு பாகங்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொண்டது. அதன் கூட்டங்களின் போது சகல கொள்கை சார்ந்த விடயங்கள் போன்று தீர்மானங்கள் நடைமுறைப்படுத்துதற்கு முன்னர் அவை பணிப்பாளர் சபை அங்கீகாரம் மற்றும் உடன்பாடு பெறுவதற்கு முன்னரும் துல்லியமாக பரீட்சித்துப் பார்க்கப்பட்டன. தீர்மானங்கள் முன் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டன. இச்செயற்பாடுகள் தாமதங்களின்றி வெற்றிகரமாக நிறைவேற்றும் பொருட்டு முகாமைத்துவக் குழுவினால் மாதத்திற்கு இருமுறை கூடி தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்.

முகாமைத்துவக் குழுவினால் இவ்வருடத்தினுள் ஏழு (7) கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

**கணக்காய்வுக் குழு**

பணிப்பாளர் சபையின் அங்கத்தவரான பொது திறைசேரியின் பிரதிநிதி மற்றும் பணிப்பாளர் சபையின் இரண்டு அங்கத்தவர்களையும் இக்குழு கொண்டுள்ளது. 2012.12.13 ஆந் திகதி இக்குழு மீள் நியமிக்கப்பட்டது.

கணக்காய்வுக் குழுவினால் கொள்கைகள் மற்றும் உள்ளக கட்டுப்பாடு விதிமுறைகளின் வெற்றிகரமான செயற்பாடு ஆராயப்பட்டு உள்ளக கணக்காய்வு அறிக்கை மற்றும் அரசாங்க கணக்காய்வுக் கடிதங்கள் பரிட்சித்துப் பார்க்கப்பட்டு அவைகளின் பரிந்துரைகள் பகுதித் தலைவர்களினால் அனுசரிக்கப்படும்வாறு பணிப்பாளர் சபை ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதேபோன்று பணிப்பாளர் சபையின் வழிகாட்டலின் கீழ் அதிகாரசபைக்கு நிதியினாலும் இயக்க செயற்பாடுகளினாலும் நிலவும் இடர்பாடுகள் சிறந்த முறையிலான வரைவிலக்கண செயற்பாடுகளினூடாக அடையாளம் காண்பதற்கும் அவ்வாறான இடர்கள் முகாமைத்துவம் செய்யப்படுவதை உறுதிப்படுத்தும் செயற்பாட்டை அதிகார சபை கொண்டுள்ளது.,முகாமைத்துவம், ஊழியர்கள் மற்றும் துறைமுக நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நபர்களினது நலன்களின் வினைத்திறன் மேம்படுத்தப்படுவதற்கும் வளங்களினது

உற்பத்தித் திறன் உயர்த்தப்படுவதற்குமான நிதி மற்றும் கையாளல் தொடர்பில் நிலவும் விதிகள், முறைமைகள் வலுப்படுத்தப்படுவதற்காக நாள் தோறும் பணிப்பாளர் சபைக்கு அறிக்கை செய்தல் இக்குழுவின் பொறுப்பாகும்.

**உள்ளக கட்டுப்பாடு**

எந்தவொரு அமைப்பிலும் செயற்றிறன் மிக்க முகாமைத்துவத்திற்காக திறனாக இயங்கக் கூடிய உள்ளக கட்டுப்பாடு முறையொன்று இருப்பது அவசியமாகும். அதிகாரசபையின் உள்ளக கட்டுப்பாட்டு செயற்பாடுகளின் மீளாய்வு தொடர்பான சகல பொறுப்பும் பணிப்பாளர் சபையைச் சாரும். பின்பற்றப்பட வேண்டிய கொள்கை முறைகள் பற்றியதில் விரிவான ஒழுங்கு விதிகள் அதிகாரசபையினால்தயாரிக்கப்பட்டுள்ளன. அவை அடிக்கடி மீளாய்வு செய்யப்பட்டு முறைப்படுத்தப்பட்டன. வர்த்தக ரீதியான நோக்கங்களை அடைவதற்கு இடையூறாக இருக்கும். இடர்களுக்கு முகம் கொடுப்பதற்காக செயற்பாட்டு முறை ஒன்று திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய அதிகாரசபையின் சொத்துக்களை அனுமதியின்றி பாவித்தல், கைமாறுதலைத் தவிர்த்தல், முறையான அறிக்கைகளைப் பேணுதல் மற்றும் நிகழும் தகவல்களின் பிழையின்மை தொடர்பாக தேவையான அளவு சான்றுகளையும் இக்குழு வழங்கும்.

அதிகாரசபையின் அமைப்புக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களின் மூலம் அதன் திறன் நேர்மைத் தன்மை, சீரிய நிலைமை சூழலை மற்றும் சிறந்த தொடர்பாடல் சூழல் பேணப்படுதலின் அதிகாரசபையின் அர்ப்பணிப்புடனான செயற்பாடு உள்ளக கட்டுப்பாட்டிற்கு உறுதுணையாகும்.

**உள்ளக கணக்காய்வாய்வாளர்கள்**

பூரண தகுதி வாய்ந்த பட்டயம் பெற்ற கணக்காளரொருவரினால் கணக்காய்வுப் பகுதியின் தலைமை வகிக்கப்படுகின்றது. இப்பகுதி, பூரண சுதந்திரமாக இயங்குகின்றது. தலைவருக்கும் கணக்காய்வுக் குழுவுக்கும் நேரடியாக அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

தலைவரினதும் கணக்காய்வுக் குழுவின் அறிவுரைகளுக்கும் இணங்க இப்பகுதிக்குரிய விடய பணிகள் தயாரிக்கப்படுகின்றன. விடய உற்றடக்கம் சம்பந்தப்பட்ட திருத்தங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றன. பிரதானமாக முழு உள்ளக கட்டுப்பாடு தாகுதி கணக்காய்வுப் பகுதியினால் மேற்பார்வை செய்யப்படுகின்றது. அதேபோல் கணக்காய்வுக் குழு தேவையான ஒத்துழைப்பை வழங்குகின்றது. உள்ளக கணக்காய்வானது, உள்ளக கட்டுப்பாடு முறைகளின் வினைத்திறன் மற்றும் துரிதத்தன்மை தொடர்பான குறிக்கோள்கள் வெளிக்கொணரப்பட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்காக செயன்பாட்டுத் திட்டங்கள் மதிப்பிடப்படும்.

**ஒழுக்கச் சட்ட விதிகள்**

ஏற்றுக்கொள்ளக் கூடிய உயர் மட்ட ஒழுக்க நடைமுறை பேணப்படுதலுக்கு வழிகாட்டுவதற்காக ஒழுக்க விதிமுறைகள் விதிக்கப்பட்டுள்ளன. சகல பணிப்பாளர்கள், பகுதித் தலைவர்கள் மற்றும் ஊழியர்களினால் தமது அன்றாட கடமைகள் நிறைவேற்றப்படுகையில் , தமது செயற்பாடுகளிலும் அதிகாரசபையின் புகழ் நாமத்திற்கும் தோற்றப்பாட்டிற்கும் பாதிப்பேற்படுத்தும் சந்தர்ப்பங்களில் உயர் நிலையிலான ஒழுக்க நெறியுடன் நேர்மையாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் அதிகாரசபை எதிர்பார்க்கின்றது.

**ஒழுக்கச் சட்ட விதிகளின் அடிப்படைகள்**

- சகல நடவடிக்கைகளின் போது நேர்மை நியாயம் மற்றும் பக்க சார்பின்மை பேணுதல்
- சட்டம் பற்றி அறிந்திருத்தல் மற்றும் அதற்கு கீழ்ப் படிதல்
- நிறைவேற்றப்படும் சகல நடவடிக்கைகள் தொடர்பிலும் அந்தரங்கத்தன்மை.
- அதிகாரசபைக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் அல்லது தீய விளைவுகள் ஏற்படக்கூடியவாறு செயற்படுவதைத் தவிர்த்தல்.

**அனுகூலமான திட்ட வரம்பு மற்றும் சாசன சட்ட தேவைகளுக்கு உட்படல்**

எல்லா சாசன மற்றும் சட்ட தேவைகளுக்கு ஏற்ப செயற்படுவதானது இ.து.அதிகாரசபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாகும். இந்நோக்கத்தினை முதன்மையாகக் கொண்டு அதிகாரசபையானது எல்லா சாசன மற்றும் சட்ட தேவைகளுக்கும் ஏற்ப செயற்படுவதை உறுதிப்படுத்துவதற்கு நிதி மற்றும் உள்ளக கணக்காய்வு பகுதிகள் ஊக்கத்துடன் செயற்படுகின்றன. அதற்கு மேலதிகமாக சட்டப் பகுதி அதிகாரசபையின் வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் ஏனைய கருமங்கள் சட்ட நியதிகளுக்கு ஏற்ப இடம்பெற உறுதிப்படுத்தப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கின்றது.

**நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்,கப்பற்றுறை அமைச்சு மற்றும் நிதியமைச்சின் பொது திறைசேரியுடனான தொடர்பு**

உரிய வழியில் மற்றும் மூலோபாயமான நோக்கத்தினை அடைந்து கொள்வதற்கு பணிப்பாளர் சபைக்கு வழிகாட்டும் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர், அமைச்சின் செயலாளர், மூலோபாய தொழில் முயற்சி முகாமைத்துவ (SEMA) நிறுவனத்துடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை மேற்கொள்கின்றனர். அதற்கு மேலதிகமாக நிதி அமைச்சின் பொது திறைசேரியின் தேவைக்கேற்ப மூன்றாண்டு காலத்திற்கான வர்த்தகத் திட்டம், நிதி மற்றும் ஏனைய இயக்க செயற்பாட்டு அறிக்கை உள்ளடங்கலான முழுமையான அறிக்கைகள் காலாண்டு அடிப்படையில் அதிகாரசபையினால் முன்வைக்கப்படும்.

**குறிப்பிடப்பட்ட பங்குதாரர் தொடர்பான வெளிப்பாடு**

இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் கொடுக்கல் வாங்கல்கள் செய்யும் தரப்பினர் சம்பந்தமாகவும் தனிப்பட்ட அக்கறை அல்லது உறவு தங்களிடத்தில் இல்லயென பணிப்பாளர் சபை உறுதிப்படுத்தி அறிவிக்கின்றது.

**பொறுப்பு**

இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிதி அறிக்கைகள் அதிகாரசபையின் குறிப்பிட்ட நடவடிக்கைகள் தொடர்பில் உண்மை மற்றும் நியாயத் தன்மையினைப், பிரதிபலிப்பதெனவும் அவ்வறிக்கையானது ஏற்றுக்கொள்ளப்பட்ட தேவைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளதென்பதும் பணிப்பாளர் சபையின் கருத்தாகும்.

**எதிர்காலம்**

உண்மைப் பெறுமதியுடன் ஒட்டுமொத்த திரட்டிய நிர்வாகம் நிலைத்து நிற்பதற்கு கண்மூடித்தனமான திருப்தியடையக்கூடிய முறைகள் முறை மற்றும் கொள்கைகள் போன்றவற்றில் அன்றி உண்மையான முறையில் மக்கள் நம்பிக்கையினை வெல்லக் கூடிய உயர்ந்த செயல்பாட்டுடன் நியாய முறையில் பேணிச் செல்வதன் மூலம் நிலை நாட்டமுடியும். என்பதை இலங்கை துறைமுக அதிகாரசபை நம்புகின்றது.

# துறைமுக புள்ளி விபரங்கள்

## கொழும்புத் துறைமுகம்

துறைமுக பரிமாணம்

**துறைமுக நீர் பிரதேசம்**

| | |
|---|---|
| துறைமுக தடாக பிரதேசம் | 184.6 ஹெக்டயார் |
| வடமேற்கு அலைதாங்கியின் நீளம் | 810 மீட்டர் |
| வடகிழக்கு அலைதாங்கியின் நீளம் | 330 மீட்டர் |
| மேற்கு நுழைவாயில் | 230 மீட்டர் X 16 மீட்டர் |
| வடக்கு நுழைவாய்ல் | 190 மீட்டர் X 13 மீட்டர் |

**சேவைக் காலம்**

வருடத்தின் அனைத்து நாட்களிலும் 24 மணித்தியால சேவை அடிப்படையில் கொழும்புத் துறைமுக வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| 2013 இல் கையாளப்பட்ட கப்பல் சரக்குகளின் அளவு | |
|---|---|
| கொள்கலனிலிடப்பட்டவை | 88.5% |
| பிரித்த மொத்தம் | 0.6% |
| உலர் மொத்தம் | 4.2% |
| திரவ மொத்தம் | 6.7% |

**புதிய கொழும்பு தெற்கு துறைமுகம்**

**துறைமுக நீர் பிரதேசம்**

| | |
|---|---|
| துறைமுக தடாக பிரதேசம் | 192.0 ஹெக்டயார் |
| தென்மேற்கு அலைதாங்கியின் நீளம் | 5,140 மீட்டர் |
| வடமேற்கு அலைதாங்கியின் நீளம் | 1,550 மீட்டர் |
| பிரதான நுழைவாயில் | 570 மீ X 18 மீ |

**காலி துறைமுகம்**

துறைமுக பரிமாணம்

| | |
|---|---|
| நீர் பிரதேசம் | 15.3593 ஹெக்டயார் |
| உட்பிரவேச கால்வாய் | 140 ஹெக்டயார் |
| நிலப் பிரதேசம் | 16.414 ஹெக்டயார் |
| அங்கீகார உட்பிரவேச கால்வாயின் நீளம் | 130 ஹெக்டயார் |
| அங்கீகார ஆழம் | 7.3 ஹெக்டயார் |

**வேலை நேரங்கள்**

மே தினம் நீங்கலாக வருடத்தின் சகல நாட்களிலும் காலி துறைமுக வேலைகள் 24 மணித்தியாலய வேலை அடிப்படையில் இடம் பெறும். கப்பல் பயணங்கள் பகல் காலங்களில் மட்டுமே இடம்பெறும்.

**வழி விலகும் காலம்**

கிழக்கிலிருந்து மேற்கிற்கு விழும் பிரதான கடல் மார்க்கத்திலிருந்து எமது பயணக் காலம் எதுவுமில்லை.

**நங்கூர வசதிகள்**

மொத்த கரையோர நங்கூரத்தளங்கள் - 05

| நங்கூரத்தளம் | முழு நீளம் (மீட்டர்) | கரையோர ஆழம் (மீட்டர்) |
|---|---|---|
| குளோசன்பேர்க் ஜெட்டி | 420 | 8.9 |
| புதிய பாலம் | 162 | 8.9 |
| புதிய பாலம் (குறுக்காக) | 84 | 8.9 |

**களஞ்சிய வசதிகள்**

| பெயர் | சராசரி உயரம் (அடி.) | பரப்பளவு (ச.அ) | கொள்ளளவு (கியு. அடி) | அடுக்கும் உயரம் (அடி) |
|---|---|---|---|---|
| இல. 01 | 23 | 13,333 | 306,667 | 10 உயரம் |
| இல. 02 | 23 | 40,000 | 920,000 | 10 உயரம் |

**திருகோணமலை துறைமுகம்**

**துறைமுக பரிமாணம்**

| | |
|---|---|
| நீர் பிரதேசம் | 1630 ஹெக்டயார் |
| உட் பிரவேச கால்வாய் | 500 மீட்டர் |
| நில பிரதேசம் | 2254 ஹெக்டயார் |

**நங்கூரத்தள வசதிகள்**

**இலங்கை துறைமுக அதிகார சபையின் நங்கூரத்தளங்கள்**

| நங்கூரத்தளம் | முழு நீளம் (மீ) | கரையோர ஆழம் (மீ) |
|---|---|---|
| அஷ்ரப் இறங்குதுறை | 250 | 12.5 |
| பக்க துறைமேடைகள் (அஷ்ரப் இறங்குதுறை) | 90 X 2 | 8.5 |
| மட்கோ துறைமேடை | 45 | 3.5 |
| ரீரீஏ துறைமேடை | 190 | 2.0-4.0 |
| சிலோன் துறைமேடை | 50 | 2.5 |
| நகர துறைமேடை | 50 | 2.5 |
| வீஎஸ்ஓ துறைமேடை | 25 | 1.5 |
| பழைய நகர துறைமேடை | 60 | 2.0 |

**வேலை நேரங்கள்**

திருகோணமலை துறைமுகத்தில் மே தினத்தில் மாத்திரம் கையாளல் மேற்கொள்ளல் தவிர்ந்த வருடத்தின் அனைத்து நாட்களிலும் 24 மணித்தியால வேலை அடிப்படையில் கருமங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. கப்பல் பயணங்கள் பகல் காலங்களில் மட்டுமே இடம் பெறும்.

**ஏனைய துறைமேடைகள்**

| நங்கூரத்தளம் | முழு நீளம் (மீ) | கரையோர ஆழம் (மீ) |
|---|---|---|
| பிரிமா துறைமேடை (உள்ளக) | 122 | 5.9 |
| பிரிமா துறைமேடை (வெளியக) | 227 | 13 |
| பிரிமா துறைமேடை (பல்வித) | 179 | 10 |
| டோக்கியோ சீமெந்து துறைமேடை | 155 | 9.3 |
| எரிபொருள் துறைமேடை (பெற்றோலியம்) | 200 | 9.75 |

**குதங்கள் பற்றிய விபரங்கள் - ரீரீஏ**

| குதம் | பரிமாணம் (அடி) | சராசரி உயரம் (அடி) | பரப்பளவு (ச.அடி) | அடுக்கும் உயரம் (அடி) | கொள்ளளவு (அடி) |
|---|---|---|---|---|---|
| இல. 02 & 03 | 90 X 70 | 15 | 6,300 | 12 | 75,600 |
| இல. 04 | 190 X 95 | 19 | 18,050 | 14 | 252,700 |
| இல . 05 A | 150 X 110 | 25 | 16,500 | 15 | 247,500 |
| இல. 05 B | 150 X 80 | 15 | 12,000 | 12 | 144,000 |
| இல. 06 | 300 X 110 | 20 | 24,000 | 15 | 360,000 |

**மாகம் ருஹுனுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம் - கட்டம் 1**

**துறைமுக பரிமாணம்**

**துறைமுக பிரதேசம்**

| | |
|---|---|
| நீர்த் தடாகப் பகுதி | 55.5 ஹெக்டயர் |
| மேற்கு அலைதாங்கியின் நீளம் | 988 மீட்டர் |
| கிழக்கு அலைதாங்கியின் நீளம் | 312 மீட்டர் |
| பிரவேச கால்வாய் | 210 மீட்டர் * 16 மீட்டர் |
| திருப்பும் வட்டம் | 600 மீட்டர் |

**துறைமேடையின் நீளம்**

| | |
|---|---|
| பொதுவான கப்பற் சரக்கு துறைமேடை | 600 மீட்டர் |
| சேவைத் துறைமேடை | 105 மீட்டர் |
| எண்ணெய் துறைமேடை | 610 மீட்டர் |

| | |
|---|---|
| நீர்த் தடாக ஆழம் | 17 மீட்டர் |
| கப்பல் வடிவம் | 100,000 DWT |

1505 போர்த்துக்கேயரினால் கடற்படைத்தளமாக / துறைமுகமாக உபயோகிக்க ஆரம்பிக்கப்பட்டதுடன் மேற்கு உலகிற்கு கொழும்பு பற்றித் தெரிந்து கொள்ளக் கிடைத்தமை.

1875 7 ஆம் எட்வெட் மன்னரினால் டிசெம்பர் 09 ஆந் திகதிதென் மேற்கு அலைதாங்கிக்கான அடிக்கல் நாட்டப்படல்.

1882 கொழும்புத் துறைமுகத்தின் நிர்வாகப் பணிக்காக "ஹாபர் போர்ட்" என்னும் பெயரில் சபையொன்று நிறுவப்படல்.

1885 1285 மீட்டர் நீளமான தென்மேற்கு அலைதாங்கியின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல்

1898 335 மீட்டர் நீளமான வடகிழக்கு அலைதாங்கியின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல்.

1899 உலர் துறைமேடையின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படல்.

1906 814 மீட்டர் நீளமான "ஐலன்ட்" அலைதாங்கியின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல்.

1906 உலர் துறைமேடையின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியாக்கப்படல்

1909 உலர் துறைமேடைக்கான 250 மீட்டர் நீளமான வழிகாட்டிப் பாலத்தின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல். (ஆழமான நீரில் அமைந்த முதல் கரையோர நங்கூரத்தளம் இதுவாகும்.)

1912 தற்போது ஜயகொள்கலன் முனையம் அமைந்திருக்கும் பிரதேசத்தில் நிலக்கரி இறக்கும் 18 துறைமேடைகளின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல்.

1912 தென்மேற்கு அலைதாங்கியின் பகுதி 550 மீற்றர் வரை நீடிக்கப்படல்.

1913 துறைமுக அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக துறைமுக ஆணைக்குழு அமைக்கப்படல்.

1922 பெற்றோலிய எண்ணெய் வழங்குவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு பூர்த்தி செய்யப்படல்.

1950 9 முதல் 11 மீட்டர் ஆழத்துடன் கூடிய 15 கரையோர நங்கூரத்தளங்கள், 7.5 மீட்டர் ஆழமான நீரில் 02 நங்கூரத்தளங்கள், 55,800 சதுர மீற்றர் கொண்ட அண்மித்த களஞ்சியங்கள் மூலம் மேலும் குத வசதிகள் ஏற்படுத்தப்படுவதற்கான வசதிகள் வழங்கப்படுவதற்கான நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல்.

1954 தென்மேற்கு அலைதாங்கியின் கரையோர நங்கூரத்தளத்தின் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு 02 ஆம் எலிசபெத் இராணியினால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டதனால் அது "எலிசபெத் இராணி இறங்குதுறை" எனப் பெயரிடப்பட்டது. அதில் நங்கூரமிடப்பட்ட முதல் கலம் இங்கிலாந்து அரசுக்குரிய"கோதிக்" எனும் கப்பலாகும்.

1956 17கரையோர நங்கூரத்தளங்கள் அண்மித்த களஞ்சியங்கள் மற்றும் குதங்கள் நிர்மாணிக்கப்படல்.

1958 கொழும்புத் துறைமுகத்தின் கப்பற் சரக்கு கையாளும் நடவடிக்கைகள் அரசமயமாக்கப்பட்டு துறைமுக (கப்பற் சரக்கு) கூட்டுத்தாபனம் ஸ்தாபிக்கப்படல்.

1964 காலி துறைமுகத்தின் கப்பற் சரக்கு கையாளும் நடவடிக்கைகள் அரசமயமாக்கப்படல்.

1967 துறைமுக ஒத்துப்பார்த்தல் மற்றும் பாதுகாப்பு சேவைக் கூட்டுத்தாபனம் நிறுவப்படல்.

1967 திருகோணமலைத் துறைமுகத்தின் கப்பற் சரக்கு கையாளும் நடவடிக்கைகள் அரசமயமாக்கப்படல்.

1979 துறைமுக ஆணைக்குழு, துறைமுக (கப்பற் சரக்கு) கூட்டுத்தாபனம் மற்றும் துறைமுக ஒத்துப்பார்த்தலும் பாதுகாப்புக்குமான சேவைகள் கூட்டுத்தாபனம் போன்றவற்றினை ஒன்றிணைத்து இலங்கை துறைமுக அதிகாரசபை நிறுவப்படல்.

1980 ஜப்பான் நாட்டின் உதவியுடன் கொழும்புத் துறைமுகத்திற்கான பாரிய திட்டமொன்று தயாரிக்கப்படல்.

1980 எலிசபெத் இராணி இறங்குதுறையின் புதிய முனையம் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல்.

1982 முதலாவது “கன்ட்றி” பாரம் தூக்கியான “ரன்கோ 80” சேவையில் ஈடுபடுத்தப்படல்.

1982 ஜப்பானின் வ/ப பென்றாஓசன் வக்கச்சிக்கு” ஒன்றிணைந்த வியாபாரத்துடன் புதிய கொள்கலன் முனையமொன்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடல்.

1983 சகல அங்கங்களுடன் கூடிய கொள்கலன் முனையத்தின் 01 ஆம் கட்ட நிர்மாணப் பணிகள் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல்.

1984 சகல அங்கங்களுடன் கூடிய கொள்கலன் முனையத்தின் 02 ஆம் கட்ட நிர்மாணப் பணிகள்வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல்.

1984 ஹிற்றாச்சி வகையின் 04 றான்ஸ்பர்பாரம் தூக்கிகள் எலிசபெத் இராணி இறங்குதுறை நங்கூரத்தளத்தின் சேவையில் ஈடுபடுத்தப்படல்.

1985 ஜய கொள்கலன் முனையத்தின் 01 ஆம் கட்ட வேலைகள் வைபவரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படல்.

1987 இலங்கை துறைமுக அதிகாரசபையின் மஹபொல பயிற்சி நிலையம் வைபவரீதியாக அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படல்.

1987 ஜயகொள்கலன் முனையத்தின் II ஆம் கட்ட வேலைகள் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல்.

1988 கப்பல்களைக் கட்டிவைப்பதற்கு நீரில் அமைந்துள்ள ஒருமுனை மிதவை நங்கூரத்தளம்அமைத்து சேவையில் ஈடுபடுத்தப்படல்.

1994 புதிய துறைமுக உட்புகு பாதையின் வேலைகள் பூர்த்தி செய்யப்படல்.

வருடந்தோறும் இயக்க காசுப் பாய்ச்சல் மற்றும்( மீண்டு வரும்/ வரவு செலவு) மூலதன வரவு செலவுகளின் முன்மொழிவுகள் தயார் செய்யப்படுகின்றன. இயக்க தேவைப்பாடுகளுக்குப் போதுமான நிதி அதிகாரசபையில் உள்ளதென்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு மீண்டு வரும் வரவு செலவு மற்றும் மூலதனம் ஆகிய இரண்டும் ஒப்புரவு தேவைப்பாடுகளும் நிதிப் பகுதியினால் கண்காணிக்கப்படுகின்றது. அறிக்கைகள் தயாரிக்கப்படும் காலப்பகுதியின் இறுதியில் ரூபா 9,625,791,186 (2012 : ரூபா 8,358,716,838) விற்கு அதிகாரசபையினால் காலத்திற்கேற்ற வைப்புக்கள், குறுகிய கால அரசாங்க பிணைமுறிகள் மற்றும் ஏனைய ஒப்புரவு சொத்துக்கள் பேணப்பட்டு வந்தன.

உடன்பாடுகளின்படி முதிர்வடையும் திகதியில் அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் இறுதி நாளின் கால எல்லை அடிப்படையாகக் கொண்ட அதிகாரசபையின் நிதிசார் பொறுப்புக்களினது முதிர்ந்த பகுப்பாய்வுகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன. கழிவு கிடைக்கப்பெறாத உடன்பாட்டின் மீதான காசுப் பாய்ச்சல்கள் அட்டவணையின் பெறுமானங்களில் தெரிவிக்கப்படுகின்றன.

| நிதிசார் பொறுப்புக்கள் | 31 டிசெம்பர் 2013 | | | 31 டிசெம்பர் 2012 | | |
|---|---|---|---|---|---|---|
| | வருடத்திற்குக் குறைந்த | வருடத்திற்குக் கூடிய | மொத்தம் | வருடத்திற்குக் குறைந்த | வருடத்திற்குக் குறைந்த | மொத்தம் |
| கடன் பெறுதலகள் - அரசாங்கம் | 12,135,994,848 | 176,489,531,501 | 188,625,526,349 | 6,477,929,305 | 134,887,281,927 | 141,365,211,232 |
| கடன் பெறுதல்கள் - நிதி நிறுவனங்கள் | 1,654,574,656 | 5,496,655,307 | 7,151,229,964 | 1,610,566,021 | 3,825,094,300 | 5,435,660,321 |
| வர்த்தக மற்றும் ஏனைய கடன் உரிமையாளர்கள் | 1,184,875,130 | - | 1,184,875,130 | 1,161,128,806 | - | 1,161,128,806 |
| **மொத்தம்** | **14,975,444,634** | **181,986,186,808** | **196,961,631,443** | **9,249,624,132** | **138,712,376,227** | **147,962,000,359** |

3 **சந்தை இடர்பாடு**

அதிகாரசபையின் வருமானத்திற்கு அல்லது நிதிசார் ஆவணங்களில் கொண்டு வரப்பட்ட தடுத்து வைக்கப்பட்டுள்ள பெறுமானத்திற்கு தாக்கமேற்படுத்தும் வெளிநாட்டு பரிமாற்ற விகிதங்கள் மற்றும் வட்டி விகிதங்கள் போன்ற சந்தை விலைகள் மாற்றமடையும் நிலை சந்தை இடர்பாடாகும்.

3.1 **நிதி இடர்பாடு**

அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியினுள் இலங்கை மத்திய வங்கியானது அ.டொலருக்கு சார்பாக இலங்கை ரூபாவினை மிதக்க இடமளித்தலின் பின்னர் இலங்கை ரூபாவிற்கு சார்பாக அ.டொலரின்

பெறுமதியின் ஏற்றத்தாழ்வினால் அதிகாரசபைக்கு நிதி இடர்நேர் நிலைக்கு முகம்கொடுக்க வேண்டியேற்படும்.கம்பெனியின் அநேக கொடுக்கல் வாங்கல்கள் அதில் பயன்படுத்தப்படும் நிதி அலகான இலங்கை ரூபாவினால் நடைபெறுகின்றன. ஆனால் துறைமுக விரிவாக்கல் திட்டங்கள் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் சில வங்கிகளினது நிலுவைகள்,கப்பல் முகவர்களிடமிருந்து பெறவேண்டியவை (வ/ப APL இலங்கை தனியார் நிறுவனம்) போன்ற வட்டியுடனான கடன் பெறுதல் வெளிநாட்டு நாணய (யப்பான் யென் மற்றும் அமெரிக்க டொலர்) பயன்பாட்டில் நடைபெறுகிறது.

அமெரிக்க டொலர் மிதப்பதன் பயனாக 2012 ஆண்டின் அறிக்கை செய்யப்படும் காலப் பகுதியில் அமெரிக்க டொலருக்கு சார்பாக இலங்கை ரூபா தேய்வடைந்ததனால் கையாளல்களுக்கான தாக்கம் ரூபா 2,517,525,036/= ஆக இருந்ததோடு இதுவானது வ/ப APL இலங்கை தனியார் கம்பெனிக்கு வழங்கப்பட்ட சேவைகள், இன்வோயிஸ் இடுதல் மற்றும் பெறப்பட்ட கடன் மீழ்செலுத்தப்படுதலில் ஈட்டப்பட்டது. ஆனால் ஒரேயோரு நிதி அலகு ஊடாக நடாத்திச் செல்லப்பட்ட நிதி வைப்புக்கள் மூலம் மீள் செலுத்துதலின் பெறப்பட்ட கடன் மீள் செலுத்துதல் மற்றும் நிதியோட்டத்தின் தாக்கம் குறைக்கப்படுவதற்காக அதிகார சபையினால் ஒரேயோரு நிதி அலகு பயன்படுத்தப்படுகின்றது.

வட்டியுடனான கடன் மற்றும் வெளிநாட்டு நாணய மூலம் காட்டப்பட்டுள்ள கடன் பெறுதல் பற்றியதான தகவல்களுக்கு தயவு செய்து நிதி கூற்றின் பக்க இல.21 மற்றும் 22 ப் பார்க்கவும்.

### 3.2 வட்டி இடர்நேர்

அரச முறிகள், வங்கி வைப்புக்கள் நிலையானதும் தொடர் வட்டியுடனான கடன் பெறுதல் தொடர்புபடும் சந்தை வட்டி விகிதத்தின் வித்தியாசங்கள் அதிகார சபையின் வட்டி இடர்நேருக்கு உட்படும்.

ரூபா 9,499,264,363/= (2012. ரூபா 8,971,662,529 ஆகும்) அதிகார சபையின் வட்டியுடனான கடன் மற்றும் பெறுதல்களின் வட்டிகளினது வீகிதங்களுக்கேற்ப கணக்கிடப்படுவதுடன் ஏனைய நிதியான ரூபா 186,277,491,950/= (2012 ரூபா 137,277,491,950/=) இன் வட்டி நிலையான வீகிதத்திற்கேற்ப கணக்கிடப்படும்.

அரச வங்கிகள் மற்றும் அரசுடனான வைப்புக்கள் அடங்கலான நிதி மற்றும் வங்கி மீதிகள் அதிகாரசபைக்கு உண்டு. அதிகாரசபையினால் முனைப்பாக வட்டி விகித நகர்வுகள் மேற்பார்வை செய்யப்படுதலின் ஊடாக வட்டி வீழ்ச்சி இடர்பாடு கண்காணிக்கப்படுகின்றது.


மொத்த வருமானம்
25,000
20,000
15,000
10,000
5,000
-
2012
2013
கப்பலோட்டம்
கப்பல சுமை
வாப்பு கையாளல்
துறைமுக வசதிகள்
ஏனையவை


சேவைகளில்லிருந்து கிடைக்கப்பெற்ற வருமானம் - 2013
14%
14%
8%
10%
54%
கப்பலோட்டம்
கப்பல சுமை
வாப்பு கையாளல்
துறைமுக வசதிகள்
ஏனையவை


இயக்க மற்றும் ஏனைய செலவினங்கள்
40,000
35,000
30,000
25,000
20,000
15,000
10,000
5,000
0
-5,000
ரூபா மில்லியன்
வேதனங்கள்,சம்பளங்கள்,கொடுப்பனவுகள்
மேலதிக நேரம்
எரிபொருள், மின்சாரம் ,நீர்
சொத்துக்களின் பராமரிப்பு
ஏனையவை
ஊ.லி.பேரில் ஓய்வு பெறும் செலவின
வெளிநாட்டு கடன் மீதான வட்டி
அந்நிய செலாவணி பரிமாற்றம்
தேய்மானம்
பரிமாண அளவுக்கான கொடுப்பனவு
வரிக்கு முன்னரான மொத்த செலவினம்
செலவினம்
2013செலவினம் ரூபா மில்லியன்
2012செலவினம் ரூபா மில்லியன்
அதிகரிப்பு/ (குறைவு)
%

சகல துறைமுகங்களிலும்






ரீ சீ/பீ/எஸ்எல்பீஏ/எப்ஏ/2013 2015, ஏப்ரல் 08

தலைவர்,
இலங்கை துறைமுக அதிகாரசபை

**இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2013 திசெம்பர் 31 இல முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) சீ பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று காசோட்டக் கூற்று மற்றும் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின்ன் கணக்காய்வு 1871 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுகங்கள் தொடர்பான அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 33 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14 (2) சீ பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கையொன்று அதிகாரசபையின் தலைவருக்கு 2014 ஒக்தோபர் 01 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவ பொறுப்பு

இந்த ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமகாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்வற்றிக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்களி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில்

கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளக்க் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்திலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வுவு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வுநோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் லெக்க நிதியதிகாரச் சட்டத்தினந் 13 ஆம் பிரிவினது (3 ) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிவு அதிகாரத்தை வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றிணை வழங்குவதற்கு போதியளவு பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 துணை மற்றும் இணைக் கம்பனிகள்

இலங்கை துறைமுக அதிகாரபையின் 100 சதவீத உரித்துடைய துணைக்கம்பனியாக வரையறுக்கப்பட்ட ஜயகொள்கலன் கையாளல் கம்பனி மற்றும் மகாம்புர துறைமுக முகாமைத்துவக் கம்பனி, இணைக் கம்பனியாக 39.97 சதவீத உரித்துடைய வரையறுக்கப்பட்ட துறைமுக முகாமைத்துவ மற்றும் ஆலோசனைச் சேவைக் கம்பனியாகக் காணப்பட்டது. இந்த மூன்று கம்பனிகளினதும் கணக்காய்வு பிரசித்த கணக்காளர் தொழிற் தகைமையில் ஈடுபட்டுள்ள பட்டயக் கணக்காய்வுக் கம்பனியால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 1.5. முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - கம்பனி**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தனைத் தவிர்த்து இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையுடம் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் காசுப் பாய்யலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது. என்பது எனது அபிப்பிராயமாகும்.

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - அதிகாரசபை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை துறைமுக அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது. என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமம்**

பின்வரும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்வு பரசோதனையுன் போது வெளிப்படுத்தப்பட்டதன் படி கொழும்புத் துறைமுகத்தை விரிவுபடுத்தும் செயற்திட்டத்திற்காக கடன்பெறல் கிரயமாக (Borrowing Cost) ரூபா 1,112.75 மில்லியன் மூலதனமாக்கப்பட்டிருந்த போதிலும் இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 23 இன் பிரகாரம் கடன்பெறல் கிரயம் (Borrowing Cost) மற்றும் கடன் வட்டி வீதம் கணக்குகளுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் காலி மற்றும் திருகோணமலை துறைமுகத்திற்காக வருடாந்த செயற்பாட்டு விளைவுகள் தனியாக கணிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அம்பாந்தோட்டை மற்றும் ஒலுவில் துறைமுகங்களின் வருமானம் மற்றும் செலவினம் தனித்தனியாக இனங்காணக்கூடிய வகையில் கணக்குகள் பேணப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காப்புறுதிப் பெறுமதி ரூபா 597,854,000 தொகையான செயற்பாட்டுச் கட்டிடம் மற்றும் ரூபா 1,646,000 தொகையான மின்சார மற்றும் இலத்திரனியலம் உபகரணங்கள் இலங்கை மெரைன் தனியார் சேவைக் கம்பனியால் 2008 யூலை மாதத்தின் போது துறைமுக அதிகாரசபைக்கு கையாளிக்கப்பட்டிருந்தது. அச்சொத்துக்களை ஏற்றுக்கொண்ட மதிப்பீட்டாளரைக் கொண்டு மீள் கணிப்பீடு செய்யாமல் காப்புறுதிப் பெறுமதிக்கு கணக்கு வைத்திருந்தார்.

(ஆ) 51/2 வருடங்களுக்கு முன் வரிசை அமைச்சின் பிரதி அமைச்சரின் பதவியணியினரின் பாவனைக்கு வழங்கப்பட்ட ரூபா 2 மில்லியன் பெறுமதியான வாகனம் விபத்துக்குள்ளாகியமையின் காரணமாக மீளவும் பாவனைக்கு எடுக்க முடியாத வகையில் அழிவடைந்திருந்தது. அந்த வாகனத்திற்காக ஏற்பட்ட நட்டத்தை காப்புறுதியின் மூலம் மீளளிப்புச் செய்வதற்கும் புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வழங்கல் முற்பணத்தின் மூலம் ரூபா 1,590,058 பேறுமதியான பொருட்களும் சேவைகளும் பெறப்பட்டிருந்த போதிலும் அவற்றின் செலவினமாக கணக்கு வைப்பதற்குப் பதிலாக 04 வருட காலமாக முற்பணமாக காட்டப்பட்டிருந்தது.

(ஈ) வருட ஆரம்பத்தின் போது ரூபா 2,218,812 தொகை கடன் பட்டோராக் காணப்பட்ட துறைமுக மற்றும் விமான சேவைகள் அமைச்சின் மீதி, மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 5,016,594 தொகை கடன்கொடுத்தோராகக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இது தொடர்பாக மேலும் பரிசீலனை செய்தபோது துறைமுகம் மற்றும் விமான சேவைகள் அமைச்சிற்கு வழங்கப்பட்ட ரூபா 7,235,406 தொகையான எரிபொருள் உரிய களஞ்சியக் கணக்கில் குறிப்பிடப்படாமை அதற்கான காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் படி ரூபா 5,016,594 தொகையான பிழையான கடன் கொடுத்தோர் மீதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) துறைமுக செயற்பாடுகளிலிருந்து உழைக்கப்பட்ட இலாபத்திற்காக 05 வருட வரி இடைவெளி வழங்கப்பட்டிருந்த்துடன் அதனைக் கருத்திற்கொள்ளாது முன்னைய

ஆண்டின் வரிப்பொறுப்பாக ரூபா 1,196,144,225 தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அந்தத் தவறையும் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்து போதிலும், நிதிக் கூற்றுக்களில் முற்காலத்தில் சீராக்கம் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக முன்னைய ஆண்டின் வரிக்குப் பிந்திய இலாபம் ரூபா 1,196,144,225 இனால் குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளயாள்வாண்டின் வரிக்கு பிந்திய இலாபம் அப்பெறுமானத்தினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

2.2.3 **பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதி முறையே ரூபா 2,669,820,553 தொகை மற்றும் ரூபா 4,867,617,729 தொகையாக இருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க பாதுகாப்பு சேவை பிரிவுகளிலிருந்து 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதியில் ஒரு வருடத்தினை விட பழைய அளவிட வேண்டிய மீதி ரூபா 10,383,625 ஆக இருந்தது.

(ஆ) சட்டரீதியான நடவடிக்கைகளுடன் தொடர்புடைய கப்பல் முகவர் கடன்பட்டோரின் 2013 ஆந் திகதியில் உள்ளவாறான மீதியில் ஒரு வருடத்தினை விட பழைய அறவிட வேண்டிய மீதி ரூபா 339,119,108 ஆக இருந்தது.

(இ) அரசாங்க நிறுவனங்களிலிருந்து 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அளவிட வேண்டிய மீதியல் 01 வருடம் முதல் 04 வருடங்களுக்கு இடையே பழமையான மீதி ரூபா 2,815,143 தொகையும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய அறவிட வேண்டிய மீதி ரூபா 38,171,938 ஆகவும் இருந்தன.

(ஈ) முற்பணம் வழங்கப்பட்டதன் பின்னர் கூடிய விரைவில் அம்முற்பணம் தீர்க்கப்பட வேண்டிய போதிலும மூலதனச் செலவினத்திற்காக ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2013 திசெம்ரை 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்படாத 5 வருடங்களை விஞ்சிய மீதி ரூபா 1,732,070 ஆகும்.

(உ) வியாபார ரீதியற்ற கடன்பட்டோரின் கீழ் காணப்படுகின்ற அதிகாரசபையால் ஆதனங்கள் மற்றும் நலன்புரி சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்காக வழங்கப்பட்ட இடங்களின் மின்சாரப் பயன்பாட்டிற்காக 2013 திசெம்ரை 31 ஆந் திகதியில் உள்ளவாறு பேறவேண்டிய ரூபா 136,443,949 தொகையான மீதியில் 5 வருடங்களை விஞ்சிய மீதி ரூபா 3,165,872 ஆகும்

(ஊ) வியாபார ரீதியற்ற கடன்பட்டோரின் கீழ் காணப்படுகின்ற அதிகாரசபை தமக்குச் சொந்தமான இடத்தை வாடகைக்கும் குத்தகைக்கும் வழங்கியதற்காக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய வாடகைப் பணம் மற்றும் குத்கை வருமான மீதியில் 5 வருடங்களை விட பழமையான அறவிட வேண்டிய மீதி ரூபா 48,732,576 ஆகும்.

எ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத ஏல விற்பனைக் கணக்கிற்கு உரித்தற்ற பொருட்களின் பெறுமதி முறையே 2 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 7,132,052 தோகையும், 03 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 32,510,865 தொகையும் , 04 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 2,254,000 தொகையும் இருந்தன.

(ஏ) துறைமுக இழப்புக்களாக அறவிடும் தொகை முறையே 2 வருடம் முதல் 4 வருடங்களுக்காக ரூபா 113,372,891 தொகையும், 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 276 612,781 தொகையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

மேற்கூறப்பட்ட விடயங்களைக் கவனத்தில் கொள்ளும் போது அதிகாரசபையின் கடன் அறவிடுதல் மற்றும் கடன் செலுத்துதல் செயற்பாடுகள் மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டன. இந்த நிலைமை அதிகாரசபையின் திரவத் தன்மையை பாதமான நிலைக்கு இட்டுச் செல்லும் என்பதைத் தவிர்க்க முடியாதிருந்தது.

**2.3. சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2000 இன் 38 ஆம் இலக்க உள்ளநாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 111 (அ) பிரிவு | இலங்கை துறைமுக அதிகாரசபையின் உத்தியோகத்தர்களால் அவர்களின் சம்பளம் மற்றும் ஏனைய உழைப்புகளுக்காக உழைக்கும் போது செலுத்தும் வரிக் கொடுப்பனவு தனிப்பட்ட சம்பளத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும், 2008 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரையான 06 ஆண்டுகளுக்காக ரூபா 2,395 மில்லியன் கூட்டுத் தொகையான உழைக்கும்போது செலுத்தும் வரித் தொகை அதிகாரசபையின் நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டுருந்தது, |
| (ஆ) 2008 யூன் 26 ஆந் திகதிய 14/2008 ஆம் இலக்க பொது நிருவாக்க் சுற்றுநிருபம் | i. சுற்றுநிருபத்திற்கு முரணாக உத்தயோகபூர்வ வாகனங்களுக்காக உரித்தற்ற 32 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 40,000 படி மாதாந்த படி செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் அவ்வாறு செலுத்தப்பட்ட மொத்தப்படி ரூபா 15,360,000 ஆகும். |
| | ii. சுற்றுநிருப ஆலோசனைகளுக்கு முரணாக உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக உரித்துடைய 05 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 30,000 தொகையான மாதாந்தப் படிக்குப் பதிலாக ரூபா 40,000 படி செலுத்தப்பட்டிருந்தது. மேலதிகமாகச் செலுத்தப்பட்ட தொகை ரூபா 600,000 ஆகும். |
| | iii. சுற்றுநிருபத்திற்கு முரணாக உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்தற்ற 20 உத்தியோகத்தர்களுக்கு |

| | | |
|---|---|---|
| | | தனிப்பட்ட வாகனங்களுக்காக மாதாந்தம் 150 லீற்றருக்கு 180 லீற்றருக்கும் இடைப்பட்ட எரிபொருள் அளவு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது மாத்திரம் வழங்கப்பட்ட எரிபொருளின் பெறுமதி ரூபா 13,487,480 ஆகும். |
| | iv. | இலங்கை துறைமுக அதிகாரசபையில் உத்தியோகத்தர் ஒருவரின் தனிப்பட்ட வாகனத்திற்காக மாதாந்தம் எரபொருள் வழங்கப்பட்டிருந்தும் அந்த உத்தியோகத்தர் கடமை நிலையத்திலிருந்து சொந்த வீட்டிற்குச் செல்வதற்காக குழாம் வாகனம் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாய்ண்டிற்காக கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலுருந்து வரிக்குமுன் தேறிய இலாபம் ரூபா 1,625.3 மில்லியன் பெறப்பட்டிருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து வரிக்கு முன் தேறிய இலாபம் ரூபா 3,612.6 மில்லியன் பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா 1,987.3 மில்லியனால் வீழ்ச்சிடைந்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு செய்யப்பட்ட நிதி மீளாய்வு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய மூன்று வருடங்களுக்கான தொகுதியின் ஒப்பிடப்பட்ட தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | ஆண்டு | | | |
|---|---|---|---|---|
| | 2013 | 2012 | 2011 | 2010 |
| ஒருமெற்றிக் தொன்னுக்கான தேறிய இலாபம் ரூபா மில்லியன் | 67.22 | 61.59 | 3.13 | (28.48) |
| மொத்த வருமானம் ரூபா மில்லியன் | 35,240 | 35,526 | 31,287 | 28,506 |
| மொத்த செலவினம் ரூபா மில்லியன் | 33,615 | 31,913 | 30,965 | 29,702 |
| வரிக்கு முன்னரான தேறிய இலாபம்/ (நட்டம்) ரூபா மில்லியன் | 1,625 | 3,613 | 329 | (1,196) |
| வருமான வரி ரூபா மில்லியன் | 1,198 | (1,185) | 207 | 157 |
| வரிக்கு பின்னரான தேறிய இலாபம்/ (நட்டம்) ரூபா மில்லியன் | 2,823 | 2,478 | 122 | (1,032) |

மீளாய்வாண்டினதும் கடந்த மூன்று ஆண்டுகளினதும் தொகுதியின் ஒப்பிடப்பட்ட விகிதமும் சில சதவீதங்களும் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | ஆண்டு | | | |
|---|---|---|---|---|
| | 2013 | 2012 | 2011 | 2010 |
| புரள்விற்கு வரிக்குப் பின்னரான இலாபம்/நட்டம் சதவீதத்தில் | 7.59 | 11.16 | 0.39 | (3.62) |
| நீண்டகால கடன்களுக்கு உரிமை மூலதனம் சதவீதத்தில் | 2.29 | 1.79 | 1.55 | 1.33 |
| சொத்துக்கள் புரள்வு சதவீதம் | 0.12 | 0.12 | 0.14 | 0.14 |
| தொழில்படு மூலதன விகிதம் | 1:2..48 | 1:2.25 | 1:1.19 | 1:1.34 |
| விரைவு விகிதம் | 1:2.39 | 1:1.06 | 1:0.78 | 1:1.13 |
| கடன் உரிமை மூலதனம் | 1:2.46 | 1:1.89 | 1:1.64 | 1:1.21 |

தொழிற்படு மூலதனம் மற்றும் திரவ விகிதம் என்பன உச்ச நிலையில் காணப்பட்ட போதிலும் கடன் மூலதன விகிதம் சீராக வீழ்ச்சியடைந்திருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

அதிகாரசபையால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயற்பாட்டு நடவடிக்கைகளுக்குரிய புள்ளி விபரங்கள் மற்றும் அறிக்கைகள் என்பவற்றை பகுப்பாய்வு செய்த போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**கொழும்புத் துறைமுகம்**

**(அ) கப்பல்களின் வருகை (கப்பல்களின் எண்ணிக்கை)**

| ஆண்டு | | | | | |
|---|---|---|---|---|---|
| **கப்பல்களின் வகை** | **2013** | **2012**<br>**கப்பல்களின் எண்ணிக்கை** | **2011** | **2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டின் அதிகரிப்பு / (குறைவு) சதவீதம்** | **2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டின் அதிகரிப்பு / (குறைவு) சதவீதம்** |
| கொள்கலன்கள் | 3,142 | 3,092 | 3,187 | 1,61 | (2.9) |
| மரபுரீதியான வை | 38 | 52 | 68 | (26.92) | (23.5) |
| ஏனையவை | 487 | 726 | 869 | (32,92) | (16.4) |
| | **3,667** | **3,870** | **4124** | **(5.24)** | **(6.2)** |

2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வ்வாண்டில் கொழும்புத் துறைமுகத்திற்கு வருகை தந்த கப்பல்கள் 5.24 சதவீத்த்தால் குறைவடைந்திருந்தது.

(ஆ) **கொள்கலன் கப்பல்களின் வருகை**

| | ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|
| **கப்பல்களின் வகை** | **2013** | **2012 கப்பல் களின் எண் ணிக் கை** | **2011** | **2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டின் அதிகரிப்பு / (குறைவு) சதவீதம்** | **2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டின் அதிகரிப்பு / (குறைவு) சதவீதம்** |
| இலங்கை துறைமுக அதிகாரசபை | 2,084 | 1,972 | 2,103 | 5,67 | (6.23) |
| தெற்காசிய இறங்குதுறைக் கம்பனி | 1,011 | 1,120 | 1,084 | (9.73) | 3.32 |
| கொழும்பு சர்வதேச கொள்கலன் இறங்குதுறைக் கம்பனி | 42 | - | - | - | - |
| | **3,142** | **3,092** | **3,187** | **1,62** | **(2,98)** |

2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் துறைமுக அதிகாரசபையக்கு கொள்கலன் கப்பல்களின் வருகை 112 இனால் அதாவது 5.67 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அவ்வாறே அதற்கு இணையாக கொழும்புத் துறைமுகத்தில் போட்டியாக செயற்படும் தனியார் கம்பனிக்கு கப்பல் வருகை 9.73 சதவீத்தால் 109 கப்பல்களால் மீளாய்வாண்டின் போது குறைவடைந்திருந்தது.

(இ) கையாளப்பட்ட கொள்கலன்கள் (இருபது சம அலகுகள்

| ஆண்டு | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 2013 | 2012 கொள்கலன்களின் எண்ணிக்கை | 2011 | 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டின் அதிகரிப்பு / (குறைவு) சதவீதம் | | 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டின் அதிகரிப்பு / (குறைவு) சதவீதம் | |
| கொழும்புத் துறைமுகம் | | | | அளவு | சதவீதம் | அளவு | சதவீதம் |
| உள்நாட்டு | 1,031,977 | 1,020,255 | 1,046,886 | 11,722 | 1.15 | (26,631) | (2.54) |
| மீள் கப்பலேற்றுகை மற்றும் பொதியிடல் | 3,274,229 | 3,166,865 | 3,216,001 | 107,364 | 3.39 | (49,136) | 1,52) |
| | **4,306,206** | **4,187,120** | **4,262887** | **119,086** | **2.84** | **(75,767)** | **(1.77)** |

2012 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்தபோது மீளாய்வாண்டில் கொழும்பு துறைமுகத்தின் மொத்த கொள்கலன் மற்றும் பொருள் கையாளல்களில் 2.84 சதவீதம் அதிகரித்திருந்தது.

| ஆண்டு | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2013 | 2012 கொள்கலன்களின் எண்ணிக்கை | 2011 | 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டின் அதிகரிப்பு / (குறைவு) சதவீதம் | 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டின் அதிகரிப்பு / (குறைவு) சதவீதம் |
| **இலங்கை துறைமுக அதிகாரசபை** | | | | | |
| உள்நாட்டு | 676,973 | 665,291 | 647,485 | 1.75 | 2.75 |
| மீள் ஏற்றுமதி | 1,779,882 | 1,584,985 | 1,583,195 | 12.29 | 0.11 |
| ஏனையவை | 45,044 | 66,573 | 68,769 | (32.34) | (3.19) |
| மொத்தம் | **2,501,863** | **4,187,120** | **2,299,446** | **7.98** | **0.75** |
| **தெற்காசிய இறங்கு துறைக் கம்பனி** | | | | | |
| உள்நாட்டு | 341,510 | 354,964 | 399,404 | (3.79) | 11.12) |
| மீள் ஏற்றுமதி | 1,385,552 | 1479,782 | 1,540,633 | (6.36) | (3.94) |
| ஏனையவை | 19,740 | 35,525 | 23,404 | (44.43) | 51.79 |
| மொத்தம் | **1,746,802** | **1,870,271** | **1,963,441** | **(6.60)** | **(4.74)** |
| **கொழும்பு சர்வதேச கொள்கலன் இறங்குதுறைக் கம்பனி** | | | | | |
| உள்நாட்டு | 13,530 | - | - | - | - |
| மீள் ஏற்றுமதி | 42,683 | - | - | - | - |
| ஏனையவை | 1,328 | - | - | - | - |
| **மொத்தம்** | **57,541** | **-** | **-** | **-** | **-** |
| **மொத்தக் கூட்டுத் தொகை** | **4,306,206** | **4,187,120** | **4262,887** | **-** | **-** |

(i) இலங்கை துறைமுக அதிகாரசபை கொழும்புத் துறைமுகத்தில் கொள்கலன் மற்றும் பொருள் கையாளல்களின் அளவுடன் ஒப்பீடு செய்த போது 2011 இற்கு ஒப்பாக 2012 ஆம் ஆண்டின் போது 0.75 சதவீத அதிகரிப்பைப் பெற்றிருந்ததுடன் 2012 இற்கு ஒப்பாக 2013 இன் போது 7.9 சதவீத அதிகரிப்பைப் பெற்றிருந்தது. அவ்வாறே போட்டியாக செயற்படுகின்ற தனியார் நிறுவனமும் 2011 இற்கு ஒப்பாக 2012 இன்போது 4.74 சதவீதமும் 2012 இற்கு ஒப்பாக 2013 இன் போது 6.6 சதவீத வீழ்ச்சியைக் கொண்டிருந்தது. எவ்வாறாயினும் அவற்றில் கொழும்புத் துறைமுகத்தின் மொத்த கொள்கலன் கையாளல்களில் 40 சதவீதத்திற்கு கிட்டிய அளவை உரித்தாக்கிக் கொண்டது.

(ii) இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு ஆகக் கூடிய வருமானம் மீள் கப்பலேற்றுகை மற்றும் மீள்பொதியிடல் அடிப்படையில் அறவிடப்படுகின்ற துறைமுக கட்டணங்களிலிருந்து பெறப்பட்டமையால் மீள் கப்பலேற்றுகை அதிக அளவில் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு பெற்றுக்கொள்வதற்கு மேலும் கூடிய கவனம் செலுத்துதல் முக்கியமானதாகும்.

(ஈ) **கப்பல் சரக்குகளை கையாளல் (மெற்றிக் தொன்களில்)**

| கப்பல் வகை | 2013 (மெட்றிக் தொன்) | 2012 (மெட்றிக் தொன்) | 2011 (மெட்றிக் தொன்) | 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டின் அதிகரிப்பு / (குறைவு) சதவீதம் | 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டின் அதிகரிப்பு / (குறைவு) சதவீதம் |
|---|---|---|---|---|---|
| கொள்கலன் | 56,195,460 | 53,404,467 | 54,108,976 | 5.0 | (1.11) |
| ஏனையவை | 7,286,492 | 8,165,087 | 7,906,369 | (10.7) | 3.27 |
| கூட்டுத்தொகை | 63,481,952 | 61669,554 | 62,015,345 | 293 | (0.55) |
| நிறுவனத்தின் படி இலங்கை துறைமுக அதிகாரசபை | 35,013,312 | 32,128,290 | 31,587,516 | 8.97 | **1.71** |
| தெற்காசிய இறங்குதுறைக் கம்பனி | 23,551,366 | 24,802,379 | 25,996,790 | (5.04) | (4.59) |
| இலங்கைபெற் றோலியக் கூட்டுத்தாபனம் | 4,172,208 | 4,738,885 | 4,431,039 | (11.95) | 6.9 |
| கொழும்பு சர்வதேச கொள்கலன் இறங்குதுறைக் கம்பனி | 745,066 | - | - | - | - |
| **மொத்தம்** | **63,481,952** | **61,669,554** | **62,015,345** | **2.93** | **(0.55)** |

கப்பல்க சரக்குகளைக் கையாளல்மெட்ரிக் தொன்களில் கருத்த்திற்கொள்ளும் போது இலங்கை துறைமுக அதிகாரசபை 2011 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2012 ஆம் ஆண்டின் போது 1.7 சதவீதத்தினாலும் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் 8.97 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும் தனியார் கம்பனியொன்று 2011

ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டில் 4.59 சதவீதத்தினாலும் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகின்றபோது 2013 ஆம் ஆண்டில் 5.04 சதவீதத்தினாலும் வீழ்ச்சிடைந்திருந்தது.

**(உ) கையாளப்பட்ட கொள்கலன்களின் மொத்த தொன் அளவு ஒரு கப்பலில் சராசரியாக**

| | 2013 | 2012 | 2011 |
|---|---|---|---|
| இலங்கை துறைமுக அதிகாரசபை | 37,887 | 36,836 | 33,994 |
| தெற்காசிய இறங்குதறைக் கம்பனி | 37,417 | 38,976 | 37,643 |
| கொழும்பு சர்வதேச கொள்கலன் இறங்குதுறைக் கம்பனி | 57,319 | - | - |

இலங்கை துறைமுக அதிகாரசபை மீளாய்வாணடின் போது கையாளுகின்ற கொள்கலனிடப்பட்ட கப்பல் சரக்குகளின் அறவு சராசரியாக ஒரு கப்பலுக்கு அண்ணளவாக 37,887 தொன் ஆக இருந்த போதிலும், தனியார் கம்பனியால் கையாளப்பட்ட கப்பல் சரக்குகளின் அளவின் சராசரி ஒரு கப்பலுக்கு 37,417 தொன் ஆக இருந்தது. அதன்படி அதிகாரசபையினை விட தனியார் நிறுவனம் ஒரு கப்பலுக்கு கையாளப்பட்ட கப்பல் சரக்குகளின் அளவில் சராசரியாக 470 தொன் இனால் குறைவான அளவைக் கொண்டிருந்தது. எவ்வாறாயினும் தனியார் நிறுவனம் அதிகாரசபைக்கு அதிக போட்டியை வழங்கியிருந்தது. அவ்வாறே வேறு தனியார் கம்பனியிலிருந்து கப்பலுக்கு கப்பல் சரக்கு கையாளப்படுகின்ற அளவு 57,319 தொன் ஆக இருந்ததுடன் கொழும்புத் துறைமுகத்திற்கு வருகை தருகின்ற அதிக கொள்ளவினையடைய கப்பல் மூலம் கொள்கலன் கையாளல் அக்கம்பனிக்கு அனுப்பப்பட்டிருந்தது.

**(ஊ) ஒரு கப்பலுக்கு கப்பல் பொருட்களைக்கையாளலின் சராசரி (இருபது அலகுகள்)**

| | 2013 | 2012 | 2011 |
|---|---|---|---|
| இலங்கை துறைமுக அதிகாரசபை | 1,200 | 1,175 | 1,093 |
| தெற்காசிய இறங்குதறைக் கம்பனி | 1,728 | 1,670 | 1,811 |
| கொழும்பு சர்வதேச கொள்கலன் இறங்குதுறைக் கம்பனி | 1,224 | - | - |

இலங்கை துறைமுக அதிகாரசபையால் மீளாய்வாண்டின்போது கையாளப்பட்ட கொள்கலன்களின் அளவு (இருபது அலகுகள்) சராசரியாக ஒரு கப்பலுக்கு 1,200 வரையில் தனியார் கம்பனி கையாண்ட கொள்கலன் அளவில் (இருபது அலகுகள்) சராசரியாக ஒரு கப்பலுக்கு 1,728 ஆக இருந்தது. அதன் பிரகாரம் கொழும்பு துறைமுகத்த்திற்கு வருகை தருகின்ற அதிக கொள்ளவினையுடைய கப்பல்களில் கொள்கலன் கையாளல் தனியார் கம்பனிக்கு அனுப்பப்பட்டிருந்தது.

**திருகோணமலை துறைமுகம்**

**(அ) கப்பல்களின் வருகை**

| | 2013 | 2012 எண்ணிக் கை | 2011 | 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டின் அதிகரிப்பு / (குறைவு) சதவீதம் | 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டின் அதிகரிப்பு / (குறைவு) சதவீதம் |
|---|---|---|---|---|---|
| சரக்குக் கப்பல் | 113 | 139 | 114 | 18.70 | 2192 |
| ஏனைய கப்பல் | 21 | 22 | 12 | (4.5) | 5.9 |
| **மொத்தம்** | **134** | **161** | **126** | **(16.77)** | **27.77** |

சரக்கு கப்பலின் வருகை 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் அண்டில் 18.70 சதவீதத்தாலும் ஏனைய கப்பல்களின் வருகை 4.5 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தன.

**(ஆ) கப்பல் சரக்குகளை கையாளல் (தொன்)**

| | 2013 | 2012 எண்ணிக்கை | 2011 | 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டின் அதிகரிப்பு / (குறைவு) சதவீதம் | 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டின் அதிகரிப்பு / (குறைவு) சதவீதம் |
|---|---|---|---|---|---|
| மொத்த இறக்குதல் | 2,275,794 | 2,645,965 | 2,336,672 | (13.99( | 13.23 |
| மொத்த ஏற்றுதல் | 159,460 | 213,362 | 236,979 | (25.26) | (9.96) |
| **மொத்தம்** | **2,435,254** | **2,859,327** | **2,573.651** | **(14.83)** | **11.01** |

2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது 2012 ஆம் ஆண்டில் கப்பலில் சரக்குகளை இறக்குதல் 13.23 சதவீதத்தால் அதிகரித்திருந்தபோதிலும் கப்பல் சரக்குகளை ஏற்றுதல் 9.96 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. 2012 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2013 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2013 ஆம் ஆண்டின் போது இறக்குதல் மற்றும் ஏற்றுதல் முறையே 13.99 சதவீதத்தாலும் 25.26 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்திருந்தது.

**காலித் துறைமுகம்**

**(அ) கப்பல்களின் வருகையும கப்பல் சரக்கு கையாளல் நடவடிக்கைகளும்**

| | 2013 | 2012 | 2011 | 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டின் அதிகரிப்பு / (குறைவு) சதவீதம் | 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டின் அதிகரிப்பு / (குறைவு) சதவீதம் |
|---|---|---|---|---|---|
| கப்பல்களின் வருகை | 36 | 69 | 73 | (47.8) | (5.47) |
| கப்பல் சரக்கு கையாளர் (தொன்) இறக்குதல் | 199,848 | 421,665 | 463,519 | (52.6) | (9.02) |
| ஏற்றுதல் | 6,692 | 8 | 253 | - | (96.83) |
| மொத்தம் | **206,540** | **421,673** | **463,772** | **(51)** | **(9.07)** |

2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் கப்பல்களின் வருகை 47.8 சதவீதத்தாலும கப்பல் சரக்குகளை இறக்கும் நடவடிக்கைகள் 52.6 சதவீததாலும் குறைவடைந்திருந்தன.

**மாகம்புர மஹிந்த ராஜபக்ஸ துறைமுகம்**

| | |
|---|---|
| **கப்பல்களின் வருகை** | **2013** |
| சரக்குக் கப்பல் | 136 |
| யோட் கப்பல் | 03 |
| **மொத்தம்** | **139** |

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டின் இறுதிவரை 136 சரக்குக் கப்பல்களும் 03 யோட் கப்பல்களும் ஆக 139 கப்பல்கள் வருகை தந்தன. 2010 நவம்பர் மாதத்தில் இந்தத் துறைமுகம் திறக்கப்பட்ட சந்தர்ப்பம் முதல் 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் மிகவும் குறைவான கப்பல்கள் வருகை தந்தமையால் துறைமுகத்திற்கு கப்பல்களை வரவழைப்பதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்தல் துரித தேவையாகக் கருதி கவனம் செலுத்த வேண்டியிருந்த்துடன் துறைமுகத்தின் கையாளல் நடவடிக்கைகளைகளை துரிதப்படுத்துவதற்கு பாரந்தூக்கிகளை மிகவும் திரிதமாக பொருத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பாரந்தூக்கிகள் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

**சகல துறைமுகங்கள்**

சகல துறைமுகங்ளையும் 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2011 ஆம் ஆண்டின் மொத்த கப்பல் சரக்கு கையாளல்களின் அதிகரிப்பு 3,667,471 மெட்ரிக் தொன் ஆக இருந்ததுடன் அது 4.3 சதவீத அதிகரிப்பாகும் 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2012 ஆம் ஆண்டில் மொத்த கப்பல் சரக்கு கையாளல்களின் அதிகரிப்பு 1,631,416 மெட்ரிக்தொன் ஆக இருந்த்துடன் அது 1.8 சதவீத அதிகரிப்பாகும்.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிர்மாணச் செயற்பாடுகளை மேற்கொண்டு கையளித்தல் அடிப்படையில் (Built Operator and Transfer) அதிகாரசபையால் 35 வருட காலத்திற்காக தனியார் கம்பனிக்கு குத்தகைக்கு வழங்கும் போது குத்தகையாளரால் ஆதனவரி செலுத்த வேண்டியமை நிபந்தனை உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாமையால் குத்தகைக்கு வழங்கப்பட்ட இட அளவிற்கும் அவ்விடத்தில் பொருத்தப்பட்ட உபகரணங்களுக்காகவும் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது 6,776.000 தொகையான ஆதனவரி அதிகாரசபையால் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) காங்கேசன்துறை துறைமுகத்தில் நீர்த்தடுப்பை பழுதுபார்க்கும் நடவடிக்கைக்களுக்காக மகநெகும நிறுவனத்திற்கு ரூபா 4,715,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதில் எவ்வித நிர்மாண நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) கொழும்புத் துறைமுகத்தை விரிவாக்கும் செயற்திட்டம் 2010 ஒக்தோபர் 31 ஆந் திகதி முடிவுறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அத்திகதியின் பின்னர் 2 சந்தர்ப்பங்களின் போது செயற் திட்டத்தை அமுல்படுத்துகின்ற கால எல்லை நீடிக்கப்பட்டிருந்த்து. ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து பெறப்பட்ட ரூபா 110.78 மில்லியன் கடன் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்த போதிலும் அதற்காக 1.2 சதவீத வட்டி கடன் பிணைமுறிக் கட்டணம் (Commitment Charges) ஆகச் செலுத்தப்பட்டிருந்தன. செயற் திட்டத்தின் இலக்கிடப்பட்ட காலத்தில் பூர்த்தி செய்ய முடியாமையின் காரணமாக இந்த செலவினங்களைச் செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது.

(ஈ) கப்பல் முகவரிடமிருந்து குறிப்பிடப்பட்ட பிரகாரம் தாமதமின்றி பணத்தை அறவிடாமல் சேவையினை வழங்கியமையின் காரணமாக திருகோணமலை துறைமுகத்தில் கப்பல் முகவர் நிறுவனங்களிலிருந்து மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 31,686,580 தொகையிலிருந்து ரூபா 9,827,479 தொகை அதாவது 25 சதவீதம் அறவிடமுடியாத மற்றும் ஐயக் கடன் ஏற்பாடாக ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பின்வரும் கப்பல் முகவர்களிடமிருந்து அறவிடவேண்டிய பணத்தில் 100 சதவீதம் அறவிடமுடியாக் கடன் மற்றும் ஐயக் கடனுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது.

| வகை | அறவிடவெண்டிய தொகை | அறவிடமுடியாத மற்றும் ஐயக்கடன் ஏற்பாட்டின் சதவீதம் | அறவிடமுடியாத மற்றும் ஐயக்கடன் ஏற்பாட்டுத் தொகை |
|---|---|---|---|
| 01. தற்போது செயற்படாத கப்பல் முகவர் | 2,322,036 | 100 | 2,322,06 |
| 02. சட்டத்திற்கு தொடர்புபடுத்தப்பட்ட கப்பல் முகவர் | 586,981 | 100 | 586,981 |
| 03. அரசாங்க திணைக்களம் மற்றும் நிறுவனங்களிலிருந்து கிடைக்கவேண்டியவை | 6,892,826 | 100 | 6,892,826 |
| | | | **9,801,843** |

அறவிடமுடியாக்கடன் மற்றும் ஐயக் கடனுக்காக ரூபா 9,801,843 தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இத்தொகையை அறவிடுவதற்கு போதியளவு நடவடிக்கை எடுப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.3. செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2001 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டின் இறுதி வரையிலான காலத்தின் போது கொழும்பு துறைமுகத்தில் அதிகாரசபையின் கொள்கலன் கையாளலின் இயலளவை மொத்த கொள்கலன் கையாளலின் சதவீதமாகக் கருத்திற் கொள்ளும் போது 86 சதவீதம் முதல் 59 சதவீதம் வரை துரிதமாக வீழ்ச்சியடைந்திருந்தது. எவ்வாறாயினும் கொழும்பு துறைமுகத்தில் போட்டியாளராக செயற்படுகின்ற தனியார் கம்பனி அக்காலத்தில் கொள்கலன் கையாளலின் இயலளவில் துரித அதிகரிப்பை உரித்தாக்கிக் கொண்டிருந்தது. அதிகாரசபையின் கடந்த பன்னிரண்டு வருடங்களில் பின்வரும் முறையில் ஒழுங்குமுறையாக கொள்கலன் கையாளல் வீழ்ச்சியடைந்திருந்தது.

| ஆண்டு | கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன்களைக் கையாளும் தனியார் கம்பனி | சதவீதம் | அதிகாரசபை | சதவீதம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2001 | 229,670 | 19 | 1,396,946 | 81 | 1,726,616 |
| 2002 | 558,025 | 32 | 1,206,694 | 68 | 1,764,717 |
| 2003 | 624,439 | 32 | 1,334,900 | 68 | 1,959,339 |
| 2004 | 899,720 | 41 | 1,320,845 | 59 | 2,220,565 |
| 2005 | 931,526 | 38 | 1,523,794 | 62 | 2,455,300 |
| 2006 | 1,335,411 | 43 | 1,743,669 | 57 | 3,079,078 |
| 2007 | 1,546,497 | 46 | 1,834,734 | 54 | 3,381,231 |
| 2008 | 1,739,668 | 47 | 1,747,670 | 53 | 3,687,338 |
| 2009 | 1,749,809 | 51 | 1,714,488 | 49 | 3,464,297 |
| 2010 | 1,970,268 | 48 | 2,167,173 | 52 | 4,137,441 |
| 2011 | 1,963,441 | 46 | 2,299,446 | 54 | 4,262,887 |
| 2012 | 1,870,270 | 45 | 2,316,849 | 55 | 4,187,120 |
| 2013 | 1,746,802 | 41 | 2,501,863 | 59 | 4,248,655 |

அதன் பிரகாரம் துறைமுகத்தின் பிரதான பணியான கொள்கலன்கையாளல் செயற்பாடுகளில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பங்களிப்பு கடந்த கிட்டிய 05 வருடங்களில் 49 சதவீதம் முதல் 59 சதவீதத்திற்கிடையிலான வீச்சில் காணப்பட்டது. அந்நிலைமை ஏற்படுவதற்கு 35 வருட காலத்திற்காக நிர்மான நடவடிக்கைகளை மேற்கொண்டு கையளிக்கும் (Built Operator and Transfer) முறையின் கீழ் இரண்டு தனியார் கம்பனிகளுக்கு கொழும்புத் துறைமுகத்தில் உள்ள சிறந்த மிகவும் ஆளமான 06 கப்பல் தரிப்பிடங்களுக்கு மேற்பட்ட எண்ணிக்கையில் வழங்கப்பட்டமை காரணமாக இருந்தது.

(ஆ) ஒரு கொள்கலன் தளத்தினால் கையாளப்பட்ட கொள்கலன்களின் அளவு கொழும்புத் துறைமுகத்தில் 416,976 ஆக இருந்ததுடன் தெற்காசிய இறங்குதுறைப் பிரிவினால் 582,267 கொள்கலன்கள் கையாளப்பட்டிருந்தன. அது கொழும்புத் துறைமுத்தை விட கொள்கலன் தளத்தில் 165,291 கொள்கலன்கள் அதிகரித்திருந்ததுடன் அது கொழும்புத் துறைமுகத்தில் கையாளப்பட்ட கொள்கலன் அளவில் 40 சதவீதமாகும்.

(இ) ஒரு பாரந் தூக்கியின் மூலம் கையாளப்படுகின்ற கொள்கலன்களின் அளவில் சராசரி, துறைமுக அதிகாரசபையின் 108,776 அலகுகளாக இருந்ததுடன் தெற்காசிய இறங்குதுறைக் கம்பனியில் 145,576 அலகுகளாக இருந்தது. அதன் படி தெற்காசிய

இறங்குதுறைப் பிரிவில் பாரந்தூக்கி மூலம் துறைமுக அதிகாரசபையை விட கொள்கலன் அலகுகள் 36,791 படி கையாளப்பட்டிருந்தது. இது அதிகாரசபை கையாளண்ட கொள்கலன் அளவில் சராசரியாக 34 சதவீதத்தை விட அதிகரித்த அளவாகும்.

(ஈ) திருகோணமலை மற்றும் காலித் துறைமுகத்தில் செயல் நடவடிக்கைகள் மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டமை மற்றும் குறைந்த எண்ணிக்கையில் கப்பல் வந்தமை தொடர்ச்சியாக நட்டமடைவதற்குக் காரணமாக இருந்தது. எவ்வாறாயினும் , கடந்த சில வருடங்களில் பெறப்பட்ட நட்டம் முறையாக குறைந்து காணப்பட்ட போதிலும் காலித் துறைமுகத்தில் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 47 மில்லியநன் வரை குறைவடைந்து காணப்பட்ட நட்டம் மீண்டும் மீளாய்வாண்டின் போது ரூபா 96 மில்லியன் வரை அதிகரித்திருந்தது.

| ஆண்டு | நட்டம் ரூபா மில்லியன் | |
|---|---|---|
| | திருகோணமலை துறைமுகம் | காலித் துறைமுகம் |
| 2007 | 405 | 275 |
| 2008 | 379 | 279 |
| 2009 | 319 | 299 |
| 2010 | 383 | 345 |
| 2011 | 318 | 147 |
| 2012 | 240 | 47 |
| 2013 | 232 | 96 |

(உ) மகாம்புர மஹிந்த ராஜபக்ஸ துறைமுத்தில் 20008 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட அதன் முதலாவது கட்டம் 2010 நவம்பரில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. துறைமுக நிர்மாணத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது கட்டடித்திற்காக சீனாவின் எக்ஸிம் வங்கியில் (EXIM BANK) ரூபா 98,079 மில்லியன் கடன் தொகை உள்ளடங்கலாக ரூபா 105,109 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. நிர்மாணிக்கப்பட்ட துறைமுகத்தின் பாரந்தூக்கி பொருத்தப்படாமையால் கொள்கலன் கையாளல் மேற்கொள்ள முடியாதிருந்ததுடன் இதனால் அனேகமாக மோட்டார் வாகனங்களைக் கொண்டுவரும் கப்பல் மாத்திரம் இத்துறைமுகத்திற்கு வருகை தருவது மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் துறைமுகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் போதியளவான வருமானம் உழைக்கப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்த முடியாதிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட கடனுக்கான வட்டியாக 2012 ஆம் ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் முறையே ரூபா 2,208 மில்லியன் தொகையும் ரூபா 2,479 மில்லியன் தொகையும் செலுத்தப்பட்டிருந்தன.

(ஊ) டென்மார்க் கடன் வழங்கும் நிறுவனத்தின் ரூபா 6,029 மில்லியன் கடனையும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் ரூபா 444 மில்லியனையும் செலவிட்டு நிர்மாணிக்கப்பட்ட ஒலுவில் துறைமுகம் மீளாய்வாண்டின் முன் அரைப்பகுதியில் திறக்கப்பட்டிருந்த போதிலும் இவ்வறிக்கை வழங்கப்படுகின்ற திகதி வரையிலும் ஒரு கப்பலேனும் அத்துறைமுகத்திற்கு வருகை தரவில்லை. ஒலுவில் துறைமுத்திற்கு 08 மீற்றர் ஆழமான சிறிய கப்பல்கள் மாத்திரம் வருகை தரமுடியுமாக இருந்தமை அதற்கான பிரதான காரணமாக இருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டில் ஒலுவில் துறைமுகத்தின் செயற்பாட்டுச் செலவினமாக ரூபா 72,342,554 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**4.4. சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கோள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் சேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும்போது கொள்வனவு நடைமுறைகளுக்கு புறம்பாக இலங்கை துறைமுக முகாமைத்துவம் மற்றும் ஆலோசனைச் சேவைக் கம்பனியின் ஊடாக நடவடிக்கைகளை மேறகொள்வதற்காக தரகாக ரூபா 22,594,876 தொகையான மேலதிக செலவினம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியின் கீழ் கொழும்புத் துறைமுகத்தை செயற்தினாக்குவதற்காகவும் துறைமுகத்தை விரிவாக்குவதற்காகவும் ஆலோசனைச் சேவை ஒப்பந்தத்திற்காக ரூபா 1,199 மில்லியன் தொகை ஆசிய அபிவிருத்தி வங்கியும் அதிகாரசபையுனம் சேர்ந்து செலவிடப்பட்டிருந்த அதில் ரூபா 399 மில்லிய்ன் கொழும்புத் துறைமுகத்தை செயற்திறனான அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்டதன் பின்னரும் திட்டங்களை அமுல்படுத்துதல் மீளாய்வாண்டு வரையிலும் கைவிடப்பட்டிருந்தது.

(இ) தெற்காசிய இறங்குதுறை தனியார் கம்பனிக்கு கையளிப்பட்ட பாரந்தூக்கிகளுக்காக கிடைக்கவேண்டிய ரூபா 141,632,944 தொகையான பங்கு அதிகாரசபைக்குக் கிடைக்கப் பெறாதிருந்ததுடன் அது கிடைக்க வேண்டிய பங்காக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அரசியல் கட்சியொன்றுக்குரிய தொழிற்சங்கத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 5,000,000 முற்பணத்திலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் தீர்க்கப்படாத ரூபா 4,499,996 தொகை மூலதன நிர்மாணங்களுக்கான முற்பணமாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(உ) கொழும்புத் துறைமுகப் பகுதிகளுக்கிடையே கொள்கலன்களைக் கொண்டு செல்லல். இடம்மாற்றுதல் தனியார் போக்குவரத்துக் கொள்கலன் கம்பனிக்கு கையளித்திருக்கும் போது இலங்கை துறைமுக அதிகாரசபையின் முகாமைத்துவம் மற்றும் ஆலோசனைக் கம்பனியால் மேலும் ஒரு தனியார் கொள்கலன் கம்பனியுடன் கொள்கலன் கொண்டு செல்வதற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. எனினும் அந்த உடன்டிக்கைக்கு முரணாக இலங்கை துறைமுக அதிகாரசபையில் முகாமைத்துவத்தால் துறைமுகத்திற்கிடையே கொள்கலன்களைக் கொண்டு செல்வதற்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பம் இழக்கப்பட்டமையால் அக்கம்பனி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டதன் காரணமாக இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரிய தனியார் கொள்கலன் போக்குவரத்துக் கம்பனிக்கு இழப்பீடு செலுத்துவதற்கு ஏற்படுகின்ற நிலைமை உருவாகியது. இந்த நிலைமையனை அடிப்படையில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் கணக்குகளிலட் ரூபா 276 மில்லியன் தொகை செலுத்த வேண்டிய இழப்பீடாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சகல வசதிகளுடன் கூடிய முழுமையான ஒலுவில் கப்பல் பயிற்சி நிறுவனத்தை நடாத்திச் செல்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 71,197,529 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அதில் ஒரு பாடநெறியேனும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கோல் கம்பனியின் 2008 ஆம் ஆண்டில் 200,000 பங்குகளுக்காக ரூபா 2,000,000 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் எவ்வித பிரதிபலனும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அதிகாரசபைக்கு கிடைத்திருக்கவில்லை.

(இ) பகிரங்க கேள்வ கோரலின்றி இலங்கை துறைமுக அதிகாரசபையால் இலங்கை துறைமுக முகாமைத்துவம் மற்றும் ஆலோசனைக் கம்பனி ஊடகா சந்தைப்

பெறுமதியை விடக் குறைந்த பெறுமதியில் பழைய இருப்பு விற்பனை செய்யப்பட்மையின் காரணமாக 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 18,720,471 தொகை மற்றும் ரூபா 35,700,092 படி மொத்த நட்டம் பெறப்பட்டிருந்தது.

**4.6 இனங்காணப்பட்ட நட்டம்**

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) மீள் ஏற்றுமதிக்காக கப்பல் முகவரால் எடுத்துச் செல்லப்பட்ட 3,515 கன மீற்றரான (CMB) 04 படகுகள் 112 நாட்களாக துறைமுகத்தில் வைக்கப்பட்டதன் துறைமுகக் கட்டண விபரத்தின் (Tariff) பிரகாரம் களஞ்சியம் / நலக் கட்டணமாக ரூபா 67,233,290 தொகை அறவிட வெண்டியிருந்த போதிலும் துறைமுக செயற்பாட்டுப் பிரிவில் உயர் பதவி நிலை உத்தியோகத்தரால் பிழையாக கட்டணம் குறைவாக் கணிப்பீடு செய்யப்பட்டமையின் காரணமகாக துறைமுக அதிகாரசபைக்கு ரூபா 55,2113,465 தொகையான நிதி நட்டம் ஏற்பட்டிருந்தது

(ஆ) அதிகாரசபைக்கு அறவிட வேண்டிய கட்டணத்தை அறவிடுவதிலுள்ள நலிவுகளின் காரணமாக 2006 ஆம் ஆண்டு மிதல் 2009 ஆம் ஆண்டு வரை அறவிட வேண்டிய ரூபா 105,491,139 தொகையான கட்டணம் திறைசேரியின் அங்கீகாரமின்றி கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

(இ) பாதுகாப்புப்ப பிரிவின் மூலம் வணிக அடிப்படையில் நடாத்தப்படுகின்ற கப்பலொன்றுக்காக அதிகாரசபையால் வழங்கப்பட்ட சேவைக்காக 2007 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை கிடைக்க வேண்டிய ரூபா 5,659,734 தொகையான மொத்த தொகையையும் திறைசேரிய்ன் அங்கீகாரமின்றி வருமானத்திற்கு எதிராகப் வதிவழிக்கப்பட்டிருந்தது.

**4.7 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

2008 ஆம் ஆண்டின் போது அதிகாரசபையால் ரூபா 444,008,647 தொகை செலவில் 02 "லெவல் லைன் போடல்" பாரந்தூக்கிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த பாரந்தூக்கிகளைச் செயற்பாடுத்துவதற்குத் தேவையான பீலி தயாரிக்கப்படாமையால் 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. இது தொடர்பாக கணக்காய்வில் சுட்டிக் காட்டியதன் பின்னர் பாரந்தூக்கிகளை செயற்படுத்துவதற்காக தேவையான இரும்பு பீலிகளுடன் ஓடக் கூடிய பாதை தயாரிக்கப்பட்ட போதிலும் இந்த இரண்டு பாரந்தூக்கிகளும் எவ்வித கப்பல் பொருள் கையாளல் செயற்பாட்டிற்காகவும் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் எவ்வாறான வகையிலான பாரந்தூக்கிகளின் தேவை தொடர்பாக சாத்தியவள ஆய்வு அதகாரசபையால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் தூரநோக்கின் (Vision) பிரகாரம் 2015 அளவில் ஆசியாவில் பிரதானமான கப்பல்களைக் கையாளும் துறைமுகமாக இலங்கை துறைமுக அதிகாரசபை நியமிக்கப்பட்டதாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அதிகாரசபையின் நிதி நிலைமை, கொள்கலன் கையாளல் நடவடிக்கைகள் மற்றும் கப்பல்களின் வருகை தொடர்பான தரவுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்து பார்த்தபோது செயற்திறனை மேலோங்கச் செய்வதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையின் உன்னத நோக்கின் கீழ் காண்பிக்கப்படுகின்ற காலி துறைமுகத்தை பிராந்திய துறைமுகமாக அபிவிருத்திசெய்தல் மற்றும்கொழும்பு துறைமுகத்தில் கையாளப்படுகின்ற வணிகரீதியான கப்பல் சரக்குகளைக் கையாள்வதற்கான மாற்றுவழித் துறைமுகமாக அபிவிருத்தி செய்தல் காண்பிக்கப்பட்டிருந்தும் 2008 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான தரவுகளை இணக்கஞ் செய்தபோது காலித் துறைமுகத்தில் கப்பல் வருகை குறைவடைந்தமையாலும் காலித் துறைமுகம் தொடர்ச்சியாக நட்டத்தை பெற்றதன் காரணமாகவும் இந்த உன்னத நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது அதிகாரசபையின் தலைவருக்கு தெரியப்படுத்தப்பட்டது. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(இ) முதலீடுகள்
ஈ) இருப்புக் கட்டுப்பாடு
(உ) சொத்துக் கட்டுப்பாடு

**டப்ளியூ பீ சீ விக்ரமரத்ன**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)**

**பெயர்**

இலங்கை துறைமுக அதிகாரசபை

**நிறுவனத்தின் நிலைமை**

1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டவிதிகளின் பிரகாரம் கொழும்பு துறைமுக ஆணைக்குழு துறைமுக கப்பல் சரக்கு கூட்டுச்சபை துறைமுக ஒத்துப்பார்த்தல் மற்றும் பாதுகாப்பு சேவைகள் கூட்டுத்தாபனம் என்பவற்றினை ஒன்றிணைத்து 1079 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி துறைமுக அதிகாரசபை நிறுவப்பட்டது.

**அமைப்பு விதியிலுள்ள அம்சங்கள்**

தேசிய பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பினை வழங்கும் நிறுவனமாக இலங்கை துறைமுக அதிகாரசபை விளங்குகின்றது. வருமானத்தினை ஈட்டிக்கொள்ளல் மற்றும் சேவைகளை வழங்குதல் போன்ற செயல்பாடுகளில் முதன்மை நிலையிலுள்ள நிறுவனம் என்ற வகையில் அதிகாரசபை ஆற்றும் பணியின் மூலமாக உயர்நிலை சேவையில் பூரணமாக தனது பங்களிப்பினை அது செலுத்துகின்றது. பல்வேறு வகைகளில் அதனுடன் பங்களிப்புச் செய்யும் நிறுவனங்கள் மற்றும் துறைமுக பாவனையாளர்களுடன் காணப்படுகின்ற முனைப்பான தொடர்பு அதன் இயக்க வளர்ச்சிக்கு முக்கிய காரணியாக அமைகின்றது. இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரிய தொழிற்பாட்டு அம்சங்கள் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- ✦ நிலைத்திருக்கும் தன்மை
- ✦ காலத்திற்கேற்றதும் பிழைகளற்றதும்
- ✦ சாதனைக்குரிய உத்தரவாதம்
- ✦ குழு உணர்வு
- ✦ அர்ப்பணிப்பு
- ✦ உற்பத்தித்திறனை அடையாளங் காணுதல்
- ✦ பூரணமாகன செயலாற்றுகை

மேற்குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்கள் அதிகாரசபையின் அனைத்து ஊழியர்கள் தொடர்பிலும் பராமரித்துச் செல்லல் பிரதான நிறைவேற்றுநராக முகாமைத்துவப் பணிப்பாளரினதும் சிரேட்ட முகாமைத்துவ ஆளணியினரினதும் பொறுப்பாகும்.

**தலைமை அலுவலகம்**

**கொழும்பு துறைமுகம்**

இல : 19, சைத்திய வீதி
கொழும்பு - 01
தொ.பே. இல : (+94 11) 2421201, 2421231
தொ. நகல் : (+94 11) 2440651

**காலி துறைமுகம்**

கிலொசன்பார்க் இறங்குதுறை
மாகாலி
காலி
தொ.பே.இல (+94 91) 2232213, 2234936

**திருகோணமலை துறைமுகம்**

புதிய நிர்வாக கட்டடம்
சீனக் குடா
திருகோணமலை
தொ.பே.இல : (+94 26) 2222460

**வங்கியாளர்கள்**

இலங்கை வங்கி (பிரதான வங்கி)
மக்கள் வங்கி
ஹற்றன் நஷனல் வங்கி

**கணக்காய்வாளர்**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,
இல:306/72,பொல்துவ வீதி,
பத்தரமுல்லை.

**இணையத்தளம்**

**www.slpa.lk**

இல. 19, சைத்திய வீதி,
கொழும்பு - 01